வேளாள புராணம்

உ

சிவமயம்.

மரபாள புராணம்

என்னும்

வேளாள புராணம்.

இது

வீராச்சிமங்கலம் மகாவித்வான்

கந்தசாமிக் கவிராயர் அவர்கள்

இயற்றியது.

தாராபுரந்தாலூக்கா பொன்னிவாடிக் கிராமம்

எல்லப்பாளையம்

சி. வெள்ளியணகவுண்டர்

அவர்களின் பொருளுதவியால்

காங்கயம் கொங்கார்பாளையம் ஆயுர்வேதபாநு

சித்திர கவிச்சிங்கம்

நா. முத்துச்சாமிப் புலவர்

அவர்கள்

ஈரோடு

S. கல்யாணசுந்தர நாயடு

அவர்களின்

நித்யகல்யாண சுந்தரம் பிரஸில்

பதிப்பித்தனர்.

Copy-right Registered.

இதின் விலை] 1907. [ரூ. 2—0—0

சிவமயம்.

முகவுரை.

திருக்கைலாய பாரம்பரியமாக வந்த சந்தானாசாரியர் நால்வருள் மெய்கண்ட தேவர்முதல்வ ரென்பதும் வேளாளரென்பதும் சைவ சித்தாந்த முதனூலாகிய சிவஞான போதத்தைத் திருவாய்மலர்ந் தருளினாரென்பதும் அவரிடத்திற் சகலாகம பண்டிதரென்கிற அருணந்தி சிவாசாரியாருபதேசம் பெற்றனரென்பதும், இவர் தாஞ்செய்த வழிநூலாகிய சிவஞானசித்தியாரின் மெய்கண்ட தேவரை வணங்கியிருக்கிறா ரென்பதும் பிரசித்தமல்லவா. அப்படி முதனூலாகிய சிவஞானபோதத்திற்கு மகாபாஷியஞ்செய்த சிவஞான முனிவர் வேளாளரென்பதும் சமயாசாரியர்களில் அப்பர் சுவாமிகள் வேளாளரென்பதும் சங்கப்பலகையிலிருந்தவரிற் சிலர் வேளாளரென்பதும் தாயுமான சுவாமிகள் சடகோபாழ்வார் முதலிய மகான்கள் வேளாளரென்பதும், சமிழிதிகாசங்களைக் கேட்ட சடையப்பனுட் கொண்டான் முதலியவர்கள் வேளாளரென்பதும் சுப்பிரமண்யராற் புகழ்ந்த பாடலைப் பெற்ற பொய்யாமொழிப்புலவர் புகழேந்திப்புலவ ரத்தினையோபேர் வேளாளரென்பதும், எங்கும் பிரசித்தமாய் விளங்குகிறதல்லவா. இன்னுமிலக்கணங்கள், காவியங்கள், தர்க்கம் புராணங்களளவற்ற நூல்களைச் செய்தவர்கள் வேளாள ரென்பதும், இன்னும் ஒளவையார் கம்பர் முதலியபேர்களாற் பாடல் பெற்றவரநேகர் வேளாளரென்பதும், எவர்களுக்குந்தெரிந்த விஷயமே. இப்படியிருக்க மற்றைச்சாதியார், பிறந்தகுலந்தனைவிட்டுப் பெரியகுல மென்றெடுத்துப் பேசப் பொறாமையின்றிச் சும்மாவிருந்தோம், அங்கனமிருக்க, சமையாபிமானமும் விட்டு வேளாளரை நிந்திக்கவாரம்பிக்கவே வேளாளருடையபெருமை விளங்குதற்பொருட்டு இப்புராணத்தை யிபற்றிச் செய்யுட்களுக் கிடையிடையின் மேற்கோள்களு மரும்பதங்களுக்குரையு மெழுதப்பட்டுள்ளது.

கந்தசாமி

வீராச்சிமங்கலம்

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

இன்ஸ்பெக்டிங் இஸ்கூல் மாஸ்டர் பென்ஷனராயிருந்த

விராட்சிமங்கலம் தமிழ்ப்புலவர்

மகா-ள-ள-ஸ்ரீ, தி. சிவன்பிள்ளையவர்களியற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆதிமறைப் பொருடெரிந்த சமயசந்தானாசாரியாராம்வே
ளாண், சாதிமரபினை யெடுத்துப் புராணநூல் வழிமுறையைத்
தழுவிச்சால, ஓதியபன்னான்முறையை யொருங் கோர்ந்து தொ
டர்நிலையா யுரைத்தல்செய்தான், கோதில் கவிச் சிங்க மெனுங்
கந்தசா மிப்புலமைக் குரிசிருனே.

கோயமுத்தூர்

ம-ள-ஸ்ரீ மகாவித்வான் கந்தசாமிமுதலியாரியற்றியது.

நேரிசைவெண்பா.

சாற்றுபுகழ் மேவு தமிழ் நாடெனும்பொருப்பில்
ஏற்றுமொரு தீபமென வேற்றினான்—நாற்றிசையுந்
தாளாண்மை யாற்கந்த சாமிக் கவிராயன்
வேளாண் மரபுவிளக் கம்.

கோயமுத்தூர் நேட்டீவ் ஸ்கூல் தமிழ்முன்ஷியாரா யிருந்த

பவானி பிரம-ஸ்ரீ பாலபாரதி முத்துச்சாமிநாவலர்

இயற்றியது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அம்புவியிற் கவிஞனெனக் கம்பனுக்குங் கும்பனுக்கு மா மோ பேர்தான், இம்பரெலாம் வியப்பிக்க வேளாளர் நற்சரிதை யியம்பல் செய்த, கம்பரவு தண்பணைவீ ராட்சிநகர்த் தமிழ்த் தலைமைக் கந்தசாமி, நம்பியெனுந் திடகவிஞ னம்புவியின் முன் புளனே னவிலு வீரே.

சேலம் கலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ம-௱-ஸ்ரீ சரவணப்பிள்ளையவர்க ளியற்றியது.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நீர்ம லிசடிலப் பரமனு ருதவு நெல்லிரு நாழிகொடு லகின், பேர்மலிய றங்கள் வளர்த்தரு ளிறைவிபிள்ளைகா ளென விளித் திடு மெய்ச், சீர்மலி வேளாண் மரபியலனைத் துஞ்செறித் தொரு காப்பிய நடையிற், பார்மலி மகிழ்கூர் தரவினி தளித்துப் படியி லாப் புகழ்படைத்த னனுல்.

தங்கமிக் கொலியா தென்பதற் கிலக்கந் தானெனும் பெற் றியிற் சமைந்தோன், சங்கையில் கல்விகேள்வி யாலான்ற தகை பெறு முதுக்குறை வாளன், கொங்க நன்னாட்டு வீரையம் பதி யிற் குலவிய சிறப்பொடு வாழ்வோன், பங்கமில் கந்தசாமி யென் றொருபேர்படைத் திடும் புலவர் சேகரனே.

பெங்களூர் ஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும் திருப்பாண்டிக்

கொடுமுடி தமிழ்த்தலைமைப்புலமை

ம-ா-ஸ்ரீ கவிராய சந்தனம்பிள்ளையவர்க ளியற்றிய து

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நெல்லாரும் பெறவருளும் வேளாள ராலுலக நிலையிற் றென்று, சொல்லாமே யுணர்ந் திருக்கக் கந்தசாமிப்புலவன் சொன்ன வாற்றால், வல்லார் நற்கவிஞர் தலையாற்கொள்ளு முழுவர் கவிமா நிலத்தில், எல்லாருங் கைக்கொண்டா ரென்பதற்குக் கையொப்ப மிடுகின் றாரே.

சேற்றூர்ச் சமஸ்தான வித்வான்

ம-ா-ஸ்ரீ கணபதிக்கவிராயரவர்க ளியற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கவியனந்தஞ் சொலும்புலவோர்க் கிசைந்திட வீராச்சி மங்கைக் கந்தசாமி, திவியனந்தங் கவியரசன் செப்பிய வேளாளர் சரித்திர நூலோர்ந்து, சவியனந் தங்கியகரத்தன் மனையவன்றனுலடங் குந்தகைய ளாகப், புவியனந்தன் மண்சுமக்கப் பொதிய முனிகுறுகியதும் புதுமை தானே.

முன்னூர்புதூர்

ம-ா-ஸ்ரீ முத்துராயக்கவுண்டரவர்களியற்றியது.

நேரிசைவெண்பா.

வேளாண் மரபை விளங்க வுரைத்ததமிழ்
தாளாண்மை பெற்ற தரும்பாண்டி—வேளாளன்
சந்தசாமிக்க தமிழ்க்கவிதை வல்லவனும்
கந்தசாமிக் கவிஞன்காண்.

மொஞ்சனூர்ப் பசுபதிபாளையம் மகாவித்வானும்

நூலாசிரியர் மாணாக்கரி லொருவருமாகிய

ம-ா-ஸ்ரீ பெரியசாமிக்கவுண்டரவர்க ளியற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பூவயன் றேவிநா விற்புகுந் துரைத் தனளோ வென்ன
சேவுழு புகழ்வே ளாளர் சிறந்த நற்சரித் திரத்தை
காவியந் தமிழாற் செய்தான் கனக வீராச்சி மங்கை
நாவலன் கந்தசாமி நவகவிப் புலவரேறே.

காங்சயம் டிவிஜன் இந்துதேவஸ்தானம் கமிட்டிமெம்பர்

கண்ணபுரம் ம-ா-ஸ்ரீ மு.பழனிக்காங்கயக்கவுண்டரவர்கள்

இயற்றியது.

நேரிசைவெண்பா.

கவிக்கந்த சாமிசொலுங் காவியத் திற்கொக்க,
செவிக்கின்ப மாய்ச்சிறப்புச் செய்வன்—புவிக்குள்
நவம்பெருகச் செந்தமிழி னுமகள் போலாகத்
தவம்பெருகச் செய்த பின்னைத் தான்.

திருப்பாண்டிக் கொடுமுடி பாரம்பரிய வித்வான்

மா-ா-ஸ்ரீ ஞானசிவ ஓதுவாரவர்களியற்றியது.

கலிவிருத்தம்.

கம்ப னுவினள் காருணியத் தருள்
கம்ப னுவலியற் றுக்க லங்கிட
கம்ப னுவலத்தார் கதைபாச் செய்தான்
கம்ப னுவலனுங் கந்த சாமியே.

முன்னூர்ப்புதூர் வித்வான் மா-ா-ா-ஸ்ரீ

செல்லப்ப கவுண்டரவர்கள் குமாரனும் நூலாசிரியர்

மாணுக்கரிலொருவருமாகிய மா-ா-ஸ்ரீ செல்லப்பகவுண்டரவர்கள்

இயற்றியது,

நேரிசைவெண்பா.

தொல்கலைக ளாய்ந்து தொகுத்தெடுத்துக் காராளர்
நல்வழியைக் காவியமாய் நாட்டினுன்—பல்வளஞ்சேர்
வீராச்சி யம்பதியின் மேவுகந்த சாமியெனும்
ஆராய்ச்சி நூல்வல் லோனும்.

குறிச்சிக் கண்மலியம்பட்டி மேற்குவளவு

மா-ா-ஸ்ரீ செல்லப்பகவுண்டரவர்களியற்றியது.

கலிவிருத்தம்.

இருந்தகண் மலியூர் மேலையே ரம்பன்
வரந்தந்திட் டகின்வண் கந்த சாமியே
விரைந்து செய்திட்ட வேளாண் புராணமுட்
கரைந் துவக்கக் கவியரங் கேற்றினுன்.

நூலாசிரியர் மாணாக்கரும் கண்மலியம்பட்டியிலிருக்கும்

பழனிச்சாமிக் கவுண்டரவர்கள் குமாரனுமாகிய

மா-ஸ்ரீ முத்துச்சாமிக்கவுண்டரவர்க ளியற்றியது.

நேரிசையாசிரியப்பா.

திருவளர் சசிமுடித் தேவும் பரவைதோள்
மருவிய வடியனு மாறென்றோதி ச
சினத்த நாயனார் சனித்த கொங்கில்
வத்திரம் புரையு முத்தமத் தென்கரைத்
திலத மென்னுஞ் சலவாணிக் கரை
வாளை பாயப் பாளைத் தெங்கின்
பழமிறப் பலவின் பழங்கனிந் துடைந்ததேன்
சிந்திக் கழனிச் செந்நெல் வளர்க்கும்
கச்சப வெரிநின் மெச்சிட நள்ளி
கண்படு மினைய பண்படு பல்வளக்
காராட்சி யுறுபொழில் வீராச்சி யம்பதி
சிறக்கத் தோன்றுங் குணப் பெருங்குன்றம்
கண்டி கைநீறு கவினத் தோன்றும்
தொண்டர்ப் பராவுந் தூயனென் னுசான்
பஞ்சலக்ஷ ணப்பாற் கடலயின் றோன்
இயல்பெறு தர்க்க மிசைக்கும் பெரியோன்
தொல்காப் பியமுந் தொல்காப் பியமும்
பல்காப்ப யின்ற பண்பன் கல்வி
வனப்புக் குணம்பேர் வளர்கந்த சாமியென்
றுனக்கருப் பணவே ளொண்டவத் துதித்தோன்
மேழிசெங் குவளை மேவுகொடி மாலையன்
திருமயி லேப்பள் திருக்கை வழக்கம்
மரபாள சூடா மணியே ரெழுபது
இன்னும் பன்னூன் மன்னுமா தாவின்

காராண் வாழ்க்கை வேளாண் புராணம்
மன்னு முன்னூர்க் குறிச்சி
ஆன்றகோத் திரசபை யரங்கேற் றினனே.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

முன்னாளி லகஸ்தியருக் குரைத்த வியாகரண முறையாக வந்து, பின்னாளி லிறந்துவிடு மென்றுன்னி வசுமதியிற் பெருமை யாகத், தன்னுமை மறிவித்துச் சத்தசாஸ் திரத்தை நிலைநிறுக்கச் செய்து, கன்னட் டுமெக்கரம் போற்கா ராளர்கா வியத்தைக்கழறி னானே.

குறிச்சிக்கிராமம் நூலாசிரியர் மாணாக்கர்

கண்மபியம்பட்டி ம-ா-ஸ்ரீ இ. இராயகவுண்டரவர்கள்

இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

ஆர்கலி யுடுத்த பார்மிசைச் சிறந்த
கொங்கி னேருறு தென்கரை நாட்டிற்
றெங்கின் கொங்கையர் தெளிபுன லாட
நயனமி தழையு நாணி நோக்கி
கயனுந் துப்புங் கலங்கி மறையும்
அன்னங் கண்படுந் தண்பணைத் தடஞ்சூழ்
மன்வீ ராட்சி மங்கல மாட்சி
செய்கருப்பண வேண் மெய்த்தவத் துதித்தோன்
பஞ்ச லட்சண நெஞ்சி லுணர்ந்த
கந்த சாமிச் செந்தமிழ்க் கடலோன்
நயவே ளாண் மரபியலே ரேழுபது
திருக்கை வழக்கந் திருமயி லைப்பள்

மரபாள சூடாமணி நூற்பு ராணம்
நனைதீ னைதிக வினைமுத லாய்வழி
குவளைத் தாரணி புகழை யிகழும்
படமகர் நாணப் புடவியிற் பரவ
வேளாண் புராணம் விளங் கவிபற்றி
தன்னிக ரில்லா முன்னூ ராந்தை
மரபி லுதித்த மங்கையர் மதனன்
செங்குவ ளைத்தார் தங்கிய புயத்தன்
மேழிக் கொடியை விளங்க நாட்டினன்
தரணியர் மதிக்கும் பெருமை தங்கினன்
நம்பின வர்களுக் கன்பு செய்திடும்
இராமசாமி நாயந் தரித் தோன்
தன்கிளை கூட்டி யன்புடன் கேட்ப
தண்மலி பொழில்சூழ் கண்மலி நகரின்
மேலைக் கணபதி யாலயம தனில்
மறைபவர் மாமறை வாழ்த்த
அறிஞர் மகிழவ ரங்கேற் றினனே.

தாராபுரம் தாலூகா மூலனூரைச் சேர்ந்த மேடைநகரம்

ம-ா-ஸ்ரீ சின்னச்சாமிக் கவுண்டரவர்கள் புத்திரரும்

நூலாசிரியர் மாணாக்கருமாகிய

ம-ா-ஸ்ரீ சிதம்பரசாமிக்கவுண்டரவர்களியற்றியது.

நேரிசையாசிரியப்பா.

கார்நனி முகக் குமார் கலியுடுத்த
சீர்நனி மிகுக்கும் பார்தனி லிலகும்
நல்வளத் தொளிரும் பல்வளக் கொங்கின்
நண்புள நிறுவிய பண்புளர் மருவிய
பொன்கரை காட்டுந் தென்கரை நாட்டிற்

ருழை சூழ்ந்தொளிர் மாழை மாந்தி
வாளைக டாவ வண்டெங் கின்பழம்
சிதறக் கதலி சிதைந்த மதுவும்
பலமுறு தேமா பலவின் றேனும்
பன்னிற மணியும் பானிற முத்தும்
தன்னிரை கொல்லெனத் தாக்கவ ரன்றிக்
குரம்பி லோடிக் கரும்பை வளர்க்கும்
வலம்புரி வயல்சூழ் நலம்புரி செந்தமிழ்
வீருட்சி கொண்டுயர் வீருட்சி மங்கலம்
நாடருங் கருப்பண வேடவத் துதித்தோன்
சரசவுலா சௌதா ரதிவா கரன்
தரவிசு வாசதயா ளசுபா கரன்
சங்கம் மெங்குந் தங்குஞ் சிங்கம்
சம்பம் மின்பந் தங்குந் துங்கன்
தாரணி புகழூ மேரணி விசயன்
எண்டிசை புகழூமிய லிசைவ லவன்
கண்டிகை நீறிசை கந்த சாமி
முன்னூர்க் குறிச்சி மன்னே றனைய
ஆந்தை கோத்திராதி பரமை வுடன்கேட்ப
தாளாண் வாழ்க்கை வேளாண் மாக்கள்
நண்புறு புகழெனு மம்பர மதிலோர்
கதிர்பெறு விண்மணி யுதயஞ் செய்தெனத்
தென்றமிழ் முடியெனத் தேன்கட னிமிர்ந்தென
வேளாண் புராண மேலாய்க் கூறிப்
பொன்மலிந் தொளிருங் கண்மலி நகரிற்
காலனை வென்றவன் காலென வந்த
மேலை யைங்கர னாலயம தனில்
அற்புதக் கலைஞர் பற்பலர் புகழ
அருமறை நுதல்பவ ரொருமுறை மகிழ
அந்தணர் வா அழி யறைய
யாவரும் புகழ வரங்கேற் றினனே.

குறிச்சிச்சின்னம்மன் கோவிற்பாளையம்

மகாவித்வான் காசியுடையான் சின்னத்தம்பிக்கவுண்டர்

பௌத்திரரும் ம-ா-ஸ்ரீ சுப்பராயக்கவுண்டர் புத்திரரும்

நூலாசிரியர் மாணாக்கருமாகிய

ம-ா-ா-ஸ்ரீ வித்வான்

குழந்தைசாமிக்கவுண்டரென் றழைக்கிற

சுப்பராயக்கவுண்டரவர்க ளியற்றித்து.

கலிவிருத்தம்.

வந்தசாமி கரமணம் வாய்ந் திடில்
அந்தசாமிசத் தொப்பதற் கியா துண்டோ
சந்தசாமிக் குழவர் தரும் புகழ்
கந்தசாமியின் காவிய மன்னதே.

திருவாவடுதுறை ஆதீனத்து முத்தமிழ்க்கவிராஜ சிங்கமாகிய

ம-ா-ஸ்ரீ சரவணஓதுவாமூர்த்திகள் குமாரராகிய

ம-ா-ஸ்ரீ சுப்பிரமணிய ஓதுவாமூர்த்தியவர்க ளியற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

நாவாரக் கலைபயின்றும் நன்குணர்ந்து மரும் பொருளை நன்றுயாய்ந்தும், பாவாணர் பசியகலா திருப்பதெ னப்பலநூ லின்பயங்க டேர்ந்து, பூவாள் வேளாளர் குலப்பெருமை யமுதைப் புலவர் புதிதாமென்று, நாவாரக் கொளவுரைத்தான் றமிழ்க் கந்தசாமி யெனுநாவ லோனே.

சேலம் கம்பராமாயணப் பிரசங்கம்

ம-ா ஸ்ரீ வெங்கட்டராமணபிள்ளையவர்க ளியற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

யாழிசை சேர் வீராட்சிக் கந்தசாமிக் கவிஞனி னிமையாக, மேழியர் தங்குலப் புகழைப் பஞ்சலட்சணக் கவியாய்மிழற்றக் கேட்டுக், கோழி நெடுங் கொடியுடையான் முகமாறு யிருந்தனி னிக் குவலயஞ்சூழ், ஆழியடங் குங்கரத்தான் குன்றி ஞன்றலை குனிந்தானனந் தனன்றே.

வீராட்சிமங்கலம் பாரம்பரிய வித்வான்
ம-ா-ஸ்ரீ கந்தசாமிக் கவிராயர் குமாரரும்
இங்கிலீஷ் பாண்டித்தியருமாகிய திருஞானசம்பந்தப்பிள்ளை
அவர்களியற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கல்விமிகு மெங்கள்கவி ராயகந்தசாமி வள்ளல் கவிதை கேட்டால், கல்லுருகு மிரும்புருகு முருக்குருகு மரமுருகுங் கானில் வாழும், வல்லமைசேர் மிருகமன முருகுமெனிற் புவியி லுள்ள மாந்தர் கேட்டுச், சொல்லமுடி யாதசுகம் பெறுவதற் குத் தடைபேது சொல்லு வீரே.

ஈரோடுதாலூகா லோ. ப. சப். ஓவர்சீயர் ம-ா-ஸ்ரீ
வித்வான் நா. அங்கப்பபிள்ளை யவர்களியற்றியது

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்,

ஆழியெனுங் கலைமேவும் புவியி னரரடுபசி யாலலையா வண்ணம். மேழியெனுங் கொடியேந்தி யுணவளிக்கும் வேளாளர் விளங்குஞ் சீர்த்தி, ஊழியெலாம் விளங்க நவரசகவியாற் புராணமொன்றை யுரைத்தான் பண்ணே, சூழியல்பு வீராச்சி நகர்க்கந்த சாமியெனுஞ் சொல் வல்லோனே.

இலக்குவநாயக்கன்பட்டி ம-௱-ஸ்ரீ முத்துச்சாமிக்கவுண்டர்

குமாரனும் நூலாசிரியர் மாணாக்கருமாகிய

ம-௱-ஸ்ரீ துரைச்சாமிக்கவுண்ட ரவர்களியற்றியது.

பேருட்சி மங்கலங்கையானை வென்றவன் பேணுதங்கை
நாருட்சி மங்கலங்கா தூர்பவடனடனம் வென்றோன்
காருட்சி மங்கலமென்ற கற்போர்கள் கணக்கிலரே
வீருட்சி மங்கலங் கந்தசாமிக் கிணைவேறெவரே,

வீராட்சிமங்கலம் ம-௱-ஸ்ரீ அருணாசலம்பிள்ளை குமாரரும்

நூலாசிரியர் தௌத்திரரும் மாணாக்கருமாகிய

ம-௱-௱-ஸ்ரீ விசுவநாதபிள்ளையவர்க ளியற்றியது.

நேரிசையாசிரியப்பா.

மாவடி சனன மாகிப் பிங்கல
வழியா யொழுகி வான்சண் முகநதி
உள்ளுறக் கூட வுடன்கல் லோலம்
இருகரை பொன்கொழித் தெங்கும் பாய்ந்து
வளனுறு தென்கரை மருவுங் குறிச்சியூர்
மன்னா ரெல்லாம் பின்னா ரென்னப்
பொன்னூர் கமல முன்னூரி ரண்டு
காணியாந் தைக்கா ராளர் கேட்ப
கண்மலி யூரிற் கவிச் செல்லப்பன்
திருப்பணி யாலயம் விருப்புட னிருந்து
கணபதி சந்நிதி கவியரங் கேற்றினன்
திருமயிலைப் பள் திருக்கை வழக்கம்
எரேழுபது மற்றவை யிதுவுள் ளவும்
ஐதீகவளவு மனைத் தையுஞ் சேர்த்து
மாபாள புராண மென்றொரு பெயரிட்டு

சிவனடி யார்க டிருக்கதை யாதலில்
யாவருங் கொள்வர முண்டா மென
மந்தண வீராட்சி மங்கை
கந்தசா மிக்கவி நாவலனே

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சீருடைய வளமருவு வீராட்சி யம்பதியிற் சேர்ந்து வாழும், தாருடைய செங்குவளை யணிகந்த சாமியெனுந் தமிழில் வல்லோன், பாருடைய மகன்காதைப் பரப்பை யொரு வழிப்படுத்திப் பண்பதாக, ஏருடைய வார்த்தை குலத்தியல் பெரியோர் சபையிலரங் கேற்றினுனே.

பரமத்திகாளிபாளையம்ம-ா-ஸ்ரீ அப்பியாக்கவுண்டரவர்கள்

குமாரரும் நூலாசிரியர் மாணாக்கருமாகிய

ம-ா-ஸ்ரீ பழனிச்சாமிக்கவுண்டரவர்க ளியற்றியது.

நேரிசைவெண்பா.

திங்களணி செஞ்சடையான் சீர்பாதந் தங்குமனக்
கங்கைகுலக் காராளர் காதைதனை — இங்கிதமாய்
அந்தசா மிக்கவக லக்கவியு ரைத்தான்
கந்தசா மிக்கவி ஞனும்.

திருநெல்வேலிஜில்லா சிவகிரி சமஸ்தான வித்வானும்

நூலாசிரியர் மாணாக்கருமாகிய இராயகிரி

ம-ா-ஸ்ரீ அருணாசலக்கவிராயர் அவர்களியற்றியது

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சந்தனந் தங்கிளை வாளிற்றடவு நல்வீராட்சி மங்கைக் கந்த சாமி, சந்தனந் தன்கிளையுடைய சரிதமதை யினிமையுடன் றமிழாற் செய்தான், சந்தனந் தந்தமிழ்ப் புலவர் கொண்டாடி யிது வினிமை சாலவேர, சந்தனந்த மென்றாடிக் களித்திட்டார் செழித்திட்டார் தமிழ் வலலோரே.

குறிச்சிக் கண்மலையம்பட்டி ம-ா-ஸ்ரீ பெரியதம்பிக்

கவுண்டரவர்கள் குமாரரும் நூலாசிரியர்

மாணாக்கருமாகிய செல்லப்பகவுண்டரியற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பலதுளிகள் சேர்ந்து பெருவெள்ள மானாற்போல பலநூற் கண்ணே, இலகிய வேளாண் பெருமை யெடுத்தொரு காவியமாக வியம்பினானல், நிலவளமு நீர்வளமு நிறைந்து புவிமகன் முகமாய் நிகழ்த்தத்தக்க, நலமருவு வீராட்சிக் கந்தசா மிக்கவிதை நாவல் லோனே.

கூடலூர்த் திருமங்கலம் ம-ா-ஸ்ரீ திருமலை குப்பண கவுண்டர்

குமாரரும் தேவஸ்தானம் கமிட்டிமெம்பருமாகிய

ம-ா-ஸ்ரீ திருமலைசாமிக்கவுண்டரியற்றியது.

நேரிசைவெண்பா.

கந்தசாமிக் கவிஞன் காராளர் காவியத்தை
விந்தையதாய்க் கோர்த்து விளம்பினான்—முந்து
கடைபட்ட தேனமுதைக் காட்ட மனந்தான்
தடைபட்டுத் தத்தளிக்குந் தான்.

காங்கயம் வடவேலை அய்யாவுருவுத்தர் பாடியது.

சாற்றுக்கவி.

மணிதாங்கு மெழின்மாடம் மலிரிமெழில் வீராட்சிமங்கலத்தில், பணிதாங்கு மகன் ஞாலமுழுதேத்த வந்ததிகபாவலோரின், அணிதாங்குங்கவி கந்தசாமியெனும் நாவலவனன் பின் சீர்த்திக், கணிதாங்குங்கு வளைமலர்க் காராளர்குலப்பெருமை கதிக்கவேண்டி.

சொன்னோக்கும் பொருணோக்குந் தொடைநோக்கும்
நடைநோக்குந் தொடராவின்பத்
தென்னோக்கு நன்னோக்கா யிசையுமிலக்
கணமுறையி லேயுமன்பான்
முன்னோக்கும் புலவரவர் தந்நோக்குந்
தந்நோக்காய் மொழியநாளும்
பன்னோக்கு மார்ந்திடும் வேளாளர்
புராணத்தை யிங்குபணித்துத்தந்தான்
அன்னதனை யச்சிலிட வறமோங்குந்
தனமோங்கு மரியகொங்கிற்

றென்னகராம் மெல்லைநகர்ச் சின்னணவேள்
தவபாலன் நித்ததவாய்மைச்
சொன்னகரா வெள்ளையண துரையளித்த
பொருளதனுற் றாயநேசத்
தின்னகரா மனமுடையா மெழின்முத்துச்
சாமியச்சிலி யற்றினனே.

இந்நூலாசிரியரது மாணாக்கராகிய ஈரோடு தமிழ்ப்பண்டிதர்

பிரம்மஸ்ரீ ஜகந்நாதய்யரவர்களியற்றியது.

வெண்பா.

எழுத்துமுத லைந்து மெனக் கேற்பவியைந்
வழுத்துறுமைங் காவியத்தின் வாஞ்சை—பழுத்தபுகழ்க்
காராளர் காவியத்தாற் கண்டித்தான் கந்தசாமிப்
பேராளப் பெற்றோ னுயிர்க்கு.

கலித்துறை.

சேய்பேரடைந் தானிவன்றந்தை சீதர னுருயிர்த்த
சேய்பே ரடைந்தானின் செய்தவ மென்றெவருந் துதிசெய்
சேய்ப்பே றடைந்துள சேப்படையாளர் புராணமதன்
சேய்பேருலகிற் கடைதிரிந்து சிறக்க மணந்ததுவே.

சிவமயம்.

மரபாள புராணம் என்கிற

வேளாள புராணம்.

கடவுள் வாழ்த்து.

விநாயகர் துதி.

பூத்தான முற்றேனும் பூத்தானம் பெற்றேனும் புரமட்டோனும், காத்தான முற்றேனுங் காத்தானங் கருமமெனக் கழறுந் தேவன், கூத்தானச் சுதற்காழி கூத்தானங் கொடுத்ததிறற் கொண்டபோரான், மூத்தான மொழுகவரு மூத்தானஞ் சரண்பணிந்து முன்னிவாழ்வாம். (க)

விகடசக்கர விநாயகருக்குஞ் சிவனுக்குஞ்சிலேடை.

உலகுபர விடுந்துதிக்கை யுடையானைக் கங்கையா றுடையோன்றன்னைச், சொலவெழுதற் கரியகயி லாயகோட் டானையுருத்தோன்மேலானை, இலகுநரை யாகுவா கனத்தானை யொருகொம்பர்க் கிடவாயானைத், தலைமையுறுமத்தகத்து விகடசக்கரன் பாதந் தலைமேற் கொள்வாம். (உ)

வாழ்த்து.

பத்தினுக் கொருமழை வளம்பலிக்குக பலிக்க
வித்தகத்தவம் விளங்குக விளங்கிடச் செங்கோல்
உத்தமத்தர சோங்குக வோங்கிட வுழவோ
டெத்தலத்தினுஞ் சைவத்தோ டோங்குக வென்றும் (௩)

நூற்பயன்.

நின்றவைக் கன்பின ரில்லராய் நிற்பார்
என்றனக் கன்பின ரில்லராமெனக்
கொன்றையஞ் சடையனக் குபேரற் கோதுசொல்
நின்றது மருகன் காதைக்கு நேர்ந்துடன் (௪)

ஆரணஞ் சிறந்த சித்தாந்த மாவிக்கும்
பாரண முடலுக்கும் பாலிக்கின்றவக்
காரணங் கண்டவர் கங்கை மைந்தரின்
பூரண விசையினைப் போற்றிக் கொள்வரால் (ரு)

பரமசிவன் றுதி.

தன்வயம் விசுத்த தேகமோர் வியற்கை சருவஞானம் மியல்பாக, மன்வருபாச நீங்கல்பே ரருளே வரம்பிலா வலியன வின்பம், என்பனவெட்டு முடையனை யிருக்கி லிருக்கினு மிருப்பறியானை, அன்பொடு வணங்கி யென்புடலுருகி லடுத்திடுமவனை யஞ்சலிப்பாம். (சு)

விசுவநாதர் துதி.

முருகுதரு கடுக்கைவிரி முடிமிசையி லெடுத்து வைத்தும்
தருதிவிய திருக்காத றணியாது கங்கைதனைப்
பெருகுவிசா லாட்சியெனும் பெண்ணரசி யூடல்கொள
அருகணைத்த விசுவேச னடிமலரென் முடிமிசைய (எ)

ஏகாம்பரர் துதி.

காவடியன் முதலமரர் கனகநிற முறுசிறைய
சேவடிய னத்துவசன் சிறுகுறளா யுலகளந்த
மூவடியன் புகழுவற முற்றும்வளர்த் தாடமூவு
மாவடியன் பூவடியென் வளருமுடி மிசைபடிய (அ)

அம்பலவாணர் துதி.

அதம்பர சமயங்க ளடையத் திக்கொடு
புதம்பரப் புலியதள் புனைந்த புங்கவன்
பதம்பர விடப்புலி பணிகள் காத்திடுஞ்
சிதம்பர தேவன்றாள் சிரசின்மேற் கொள்வாம் (கூ)

அளகேசர் துதி.

ஏற்றானைப் பறவைநக ரேற்றானை யிறைவியிடப் பாகமென்னும், கூற்றானை வெகுண்டுவருங் கூற்றானை யுதைத்தபெருங் கோனையார்க்கும், தோற்றானை யுரித்தபெருந் தோற்றானை யுடையானைத் துகிரேய்வேணி, ஆற்றானை யடியரிட ராற்றானை யளகேசவரனைத் தாழ்வாம். (௰)

மரகதேச்சுரர் துதி.

சுருதிவண் டலம்புஞ்சோலை சூழ்வேங்கல நன்னாட்டில்
வருமிடைப் பூசன்முன்னார் மரகதேச்சுரன் பொற்பாதம்
விருமலர் சிரமேல்வைப்பா ரெழிலடித்துக ளொன்றேனும்
தருவது கோடாகோடி தவபலப் பெருமையெல்லாம் (௰௧)

மரகதவல்லி துதி.

சுரகத நிரைநிரை சொன்ன வாகனன்
சரகத நலிவுறத் தளர்ந்து மாரதம்
குரகதம் படைமுடி கொண்டு மென்பயன்
மரகத வல்லியை வழுத்துவீர்களே (௰௨)

சத்தி துதி.

கைகாட்டி வழிகாட்டிக் கதியுடையார்க் குரைப்பதுபோல்
தைகாட்டி யநற்பிறைபோற் சமன்காட்டி யனுபவம்பின்
பொய்காட்டி யவற்றையெலாம் புளிப்பாகத் தான்காட்டி
மெய்காட்ட விழிகாட்டும் விமலைமல ரடிபோற்றி (௰௩)

காமாட்சி துதி.

விண்ணான்கின் வியாபித்த விதம்போலக் கிழக்கிருந்த
பெண்ணான்கின் வியாபித்த பெருமாட்டி காமாட்சி
கண்ணான்கி னொன்றுவிட்ட கம்பனரு ளூரிநாலால்
எண்ணான்கும் வளர்த்தவட னீரடியை மறவேமால் (௰௪)

வேளாளபுராணம்.

பொன்னாட்சியம்மன் துதி.

தன்னாட்சி யுலகமெனத் தழைத்தோங்கிச் சரிபாதி
அந்நாட்சி வனங்குதவ வருத்தஞ்சொற் போற்பிரியா
தென்னாட்சி தடனெனையு மென்றுகொண்ட பெருந்தேவி
பொன்னாட்சி யம்மையிரு பூஞ்சரணந் துதிப்பேமால் (௰௫)

சின்னம்மன் றுதி.

சொன்னமு மணிகளுந் துலங்கு பூண்செறி
அன்னமென் னடையின ளனைத்து மீன்றவள்
தன்னதா லயப்பதி தழைக்க வந்தவள்
சின்னம்மன் பதமலர் தினமும் போற்றுவாம் (௰௬)

அகிலாண்டவல்லி துதி.

மாவடி பிறந்தேயாறு வதனமா நதியுங்கூடித்
தாவடி யாயிராமன் றம்பிப் பேரூர்பால் மேவுந்
தேவடி வான்பொருந்தந் திகழகி லாண்டவல்லி
பூவடிவணங்கி யேத்திப் புந்தியிற்பொருத்தி வாழ்வாம் (௰௭)

ஏழுபேரம்மை துதி.

ஆழிசூழுலகந் தன்னடியைப் போற்றவும்
ஊழிதோ றுருவம் வேருற்ற தோற்றத்தார்
தாழிருங் கூந்தலந் தாய்களாகிய
ஏழுபேரம்மைக ளினிது காக்கவே (௰௮)

செல்வியம்மன் துதி.

கல்வியின் பயனிது கருவிற் றோன்றிய
நல்வினைப் பயனிது வென்று நாடியே
பல்வித வளங்களும் பரவுமா முன்னூர்ச்
செல்வியம்மன் பதந்தினமும் போற்றுவாம். (௰௯)

விநாயகர் துதி.

தம்பிக் கையாநல் கறட்சணத்துனை
நம்பிக்கை யானுற்றே னல்கென் றூனளி
யம்பிக்கை யானடை வதுமெய் யன்பினத்
தும்பிக்கை யானடி சூழ்ந்து வாழ்த்துவேன் (௨௰)

மேலைவிநாயகர் கீழைவிநாயகர் துதி.

களியளி மலர்க்குறிச்சிக் கண்மலி யூரின்மேலை
வளமுறு மனைச்செல்லப்பன் மகன்முறை வேலப்பன்பொன்
மிளிர்திருப் பணியின்மேலை விநாயகன் பதமுமவ்வூர்த்
தெளிவுறு கிழக்குமேய சிந்துரனடியுங் காப்பாம் (௨௧)

சுப்பிரமண்ணியர் துதி.

தானான கங்கைமகன் றமிழ்கேட்டுத் தான்விரும்பிக்
கானான விழுந்ததுளிக் கவிசொல்லுங் கவிவலனைத்
தேனான தமிழ்முனிவன் றேடரிய பெருங்குருவை
நானான நெறிபரவி நாத்தழும்பத் துதிப்பேனே (௨௨)

முன்னூர்மலை வேலாயுதன்றுதி.

தன்னூர்கொளு மருணன்வரு தகையாமென வொளிரும்
மின்னூர்வசி முதலாடிட விண்ணோர்நடு வுறைவோன்
பொன்னூர்தரு கமலக்குழு பொலியுந்தட வளமார்
முன்னூர்மலை வேலாயுத முருகன்பத நினைவாம் (௨௩)

நந்தீச்சுரர் துதி.

ஆலடியார் நாலடியார்க் கன்றுமறை விரித்தவர்முன்
றோலடியா ரன்னத்தின் றுவசமுதற் பெருந்தேவர்
சாலடியார் நெருக்ககலச் சன்னிதியி னடமாடு
நாலடியார் பூவடியார் நவிலாதா ரடியாரே (௨௪)

சரச்சுவதி துதி.

நனியுடலந் தான்வெளுத்தாள் நாவினிடந் தனக்கீந்தோர்
மனவழுக் கெக்காலத்து மாறிவிடத் தான்வெளுத்தாள்
புனையுமணி யணிவெளுத்தாள் பொருவிலுடை களும்வெளுத்தாள்
கனிமதுவெண் கமலத்தாள் கமலத்தாள் காப்பாக (௨௫)

சம்பந்தசுவாமிகள் துதி.

வாளார்கண் செந்துவர்வாய் வண்பாட்டு மறைவாக்கால்
வேளாளர் தமைப்புகழ்ந்த வேதியர்கோன் காழிமுனிக்
காளாகநின்ற திருவடியாரி னடியெழுந்த
தூளாகம் பட்டிடுமேற் றுன்பமெலாம் பட்டிடுமால் (௨௬)

அப்பர் சுவாமிகள் துதி.

அறந்தழைத்திட வுடற்கெலாங் களைகணு யமைந்தார்
சிறந்தவான்றம ரெனச்சொலுஞ் சீரினுஞ் சிறந்தோன்
உறைந்ததென்மறை யுயிர்க்கெலாங் களைகணுயுதவப்
பிறந்த மூவரின் முன்னையோ னடிமுடி பெறுக (௨௭)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி.

நந்தரங் கொடையென நவிலக் குண்டையூர்
வந்தரனடியற்கே வழங்குமோர் கிழான்
மந்தர நிகர்தரு வரிசைக் கொள்குறட்
சுந்தரனடிமலர் தொழுது வாழ்த்துவாம் (௨௮)

மாணிக்கவாசக சுவாமிகள் துதி.

இருக்கதாதி நால்வேதமு மென்றும் பல்முகமாய்ப்
பெருக்க வோதினும் பிரதிபாத் தியப்படானென்ன
அருக்கனுதி முக்கண்ணனை யாடல்வெம்புரவித்
திருக்கணுக்கிய தூயவனடியலர் தொழுவாம் (௨௯)

அடியார்கள் துதி.

முண்டிகையு நீட்டுகையு முதிர்காவி யம்பரமுங்
குண்டிகையுந் தண்டுமிவை கொள்ளினுங் கொள்ளாவிடினும்
எண்டிகையி லுள்ளவரி லெக்குலத்தா ராயிடினுங்
கண்டிகையும் வெண்ணீறுங் கண்டக்கா லடிபணிவாம் (௩௰)

குருவணக்கம்.

மீசுரமா றுதோது மேன்மைபெறு சடையபர
மேசுர பண்டித குருவின் விளங்குமல ரடிகளையும்
பூசுரரி லைசைவ புரந்தர பண்டிதர்தாளும்
பாசுரங்கொண் டேபாடிப் பல்காலும் வணங்குவமால் (௩௧)

அவையடக்கம்.

என்கவி யெனக்குமோர் வியப்பை யீகலாப்
புன்கவியேனு நற்பொருளைக் காட்டுமால்
நன்கவிப் புலவர்க ளுவினுட்டிடு
மூன்கவி யனைத்திற்கு முதன்மை காட்டலால் (௩௨)

அன்னமிட் டவரகத் தசடராயினும்
கன்னமிட் டிலரென வளவை கண்டதில்
என்னமிட் டுளதென வெண்ணி மேழியர்
வன்னமிட் டிடுகதை வழுத்தினே னரோ (௩௩)

வேறு.

அதுதானோ விதுவோ வென்னு மையமுமில்லை னித்தை
உதுதானோ வென்னக்காணும் விபரிதவுணர்வு மில்லேன்
முதுபேதை யாதலாலென் மொழியிடைக் களங்கம் வல்லோர்
இதுதானென் றெடுக்கலாற்று ரிருந்தையிற் களங்கம்யாதே (௩௪)

கண்ணிலார் விலகிடிற் கண்ணுளா ரருள்
பண்ணிலா ரிலர்வழிப் படுத்துக் காட்டுவார்
எண்ணிலா ரெழுத்திலா ரெதிரென் பார்களுள்
மண்ணிலா ரென்கவி வழிப்படுக்கிலார் (௩௫)

பாயிரம்.

பூவசியத்தொடு பொருந்து முத்தொழில்
ஏவரு மகிழ்ந்திட வியற்று மேழியர்
காவியங் கேட்டவர் கவிதை பாடினோர்
யாவரென் றெண்ணுவோர் யாருங் கேட்பிரால் (௧)

பங்கண லேழ்தலம் பாடல்பெற்றதும்
அங்கணன் கைலையில் லண்ணல் சென்றதும்
எங்கணற் குலவிறன் மீண்டரேயதும்
கொங்கண மிருகையுங் குவிக்கத் தக்கது (௨)

ஓங்கிய விற்கொடி யுதியன் வாழ்ந்தது
பாங்குள பொருனைசண் முகமும் பாய்வதோ
டாங்கறு படையினி லாவினங் குடிக்
கோங்கண முத்தமிழ்க் கூற்றிலொன்றது (௩)

கோவளந் தருவதுங் கொல்லி வெற்பதும்
பாவலர் கம்பனுற் பட்டம் பெற்றதும்
ஏவகை யுணவுமங் கின்பஞ் செய்வதும்
கோவில தாவது நுவன்ற கொங்கணம் (௪)

நன்கரை யன்னஞ னலஞ்செயக் கொங்கிற்
பொன்கரை கொழித்திடும் பொருனை மாநதி
யின்கரை யிருபத்து நாலி லொன்றதாம்
தென்கரை யென்பதோர் செல்வ நாடது (ரு)

வேறு.

கற்றனக ராமலகங் கடுப்பவுணர் கவிபுகழ
முற்றநக ராமுழங்கு முன்றில்வே ணுவுடையான்
தெற்றநக ராதியைந்துஞ் செபிக்கின்ற சிவபத்தன்
கொற்றநக ராதிபதிக் கோவாழுங் கொங்கணமே (சா)

இலத்தாலு மூராலு மெண்மூன்று நாடாளும்
வலத்தாலு மதியாலு வளமைபெறுங் கொடையாலும்
குலத்தாலும் வேணுடன் கொளும்பெருமை யனந்தனுக்கும்
சொலத்தாலும் போதாதேல் சொல்வதெவ னொருநாவால் (எ)

வேறு.

அப்பிர புவினரு ளமைந்த தானதும்
எப்பெரு நகரினு மிசையப் பெற்றதும்
துப்புடை யாக்கையிற் றோன்றி னேருக்கும்
திப்பிய வாழ்வது திகழ் குறிச்சியூர் (அ)

வேறு.

வாசிநகுலன் மரபாள மரபின் வந்தோன் பிரதாபன் [தோன்
தேசுதிகழுஞ் செந்தமிழின் றிறங்கண் முழுதுந் தேர்ந்துணர்ந்
காசியுடையான் சின்னத்தம் பிக்கற்பதாரு பிறந்ததனால்
பேசவுளதோ குறிச்சியைப்போற் பெருமைபெற்ற பிறிதோரூர் ()

திக்குவிசையஞ் செய்தவல்ல செல்லப்பன்பே ரறியார்யார்
தக்ககுறிச்சி காணியெனத் தன்வல்லமையாற் கொண்டதனை
ஒக்குமென முன்னூர்க்காசி யுடையானைக் கொண்டிக்குறிச்சி
வைக்கும் பெரியோன் வாழ்ந்த தென்றால் மற்றாருளவோ
[குறிச்சியைப்போல் (ய)

ஆதிக்காணி யானமுன்னூ ராந்தைகுலத்தோ ரக்குலத்தில்
நீதிக்கணியாங் குறிச்சியூர் நிலைத்தமாந்த ரெல்லோருஞ்
சோதிக்குலத்துப் பகீரதனுஞ் சோமன்குலத்துப் பின்னோருஞ்
சாதிப்பெருமை கேள்வியுற்ற தன்மையாவு மாராய்ந்து (௰௩)

சாதியான முஞ்சிறந்த சமயமான முந்துறந்த சன்னியாசிக்கும்
வாதியா ததுவலவேல் மரபறியா துலகினிடை வாழ்வேதென்று
நீதிமானந் தகுதி யூக்க முதலிய நிறைந்த நீர்மையாலே
ஆதிமா மரபியலு மரனடிமைத் திறத்தினையு மறிவான்வேண்டி ()

நேரொத்த தியாககசை யாலலங்கா ரங்களெல்லா நிறையப்பெற்றுத், தூரத்துஞ் செலற்குரிய கவிக்குதிரை யூரோமேற் சொல்லும்பட்டப், பேரெத்தி னடக்குமினிப் பெரியதமிழ் நாடெல்லாம் பேர்விளங்க, யாரொத்த கவிசொலுவா ரென்னிலிவ னுமெனவானனத்தை நோக்கி (௰௩)

பின்னுமம் புகழ்நிலைக்கப் பெரியபிர பந்தமதைப் பேணிக்கேட்டுத், தந்நாம நிறுத்தினர்கள் சடையன்முத லானவர்கள் சாட்சியன்றோ, வின்னுமமெந்நாம நிலவுலகி னீடூழிநீற்கக் கொத்துங், கன்னுமமெனவுழவர் காதைதனைக் கழறுகென்ற கரணத்தானும் (௰௪)

பிறந்தகுலந் தனைவிடுத்துப் பெரியகுல மென்றெடுத்துப் பேசவாளா, வுறைந்தன மப்படியிருக்க வுதவனமு னியாமலூத்தைவாயைத், திறந்தபடி யாலுமிவர் திறனறியா விதத்தாலுஞ் செகதலத்தி, விறந்தபின்னும் வாய்க்குதவு மேராளர் பத்தியல்புமிபைய வாய்ந்து (௰௫)

கதைக்குடையான் பெயர்க்கூடா மணிகம்ப னெழுபதுகை வழக்கமற்று, மிதற்குடைய புராணபிர பந்தமெலா மொருங்கெண்ணி யியல்பிணைய்ந்து, பதிப்புடைய வைதீக வளவையொடு பரமசிவன் பாதப்போதிற், துதிப்புடைய வேளாளர் சரிசத்தைத் தொல்லுலகிற் சொல்லினுனல் (௰௬)

நீராளுஞ் சோணாட்டு நிருபனென தலையிருந்து வினையாநே ராற், சீராளுங் குடிகளைநீ சிறப்பிப்ப தெவனென்று செப்புங் காலே, யேராளர் தமைப்புகழ்ந்தவென்னூலின் மேல்வாரை யிசை யாதென்றக், காராளர் தமைப்புகழ்ந்த கம்பனுக்குப் பின்வந்த கம்பனேனேன் (மஎ)

வளநாடு தனக்குவதின் மாணிபமும் வாரணத்தின் மழுகன் றுக்கே, வுளநாடு சிவிகைபிற வரிசையெலாம் பெருமுசித னுயர் ந்தகல்விக், கிளைநாடு கவிவாணன் கிளைபாடு மளிகண்மலர் கிளரத் தாது, தளநாடு வீராச்சிப் பதிக்கந்த சாமியெனுந் தமிழ்வல் லோனே (மஅ)

வேறு.

உகிரதனத்தால் பொன்பே ருடையனை யந்திக்காலை
வகிரதஞ் செய்தமாலை வாகனமாகக் கொண்ட
மகிரதன் பத்தனுங்கண் மலியூரி னிராமசாமி
பகிரதனிற் கேள்கூட்டிப் பாவரங் கேற்றினனே (மகூ)

ஆயிரத்தின்மே லரியநற் கவிகணக் கமைய
மீயிரத்தின மெனச் சொன்ன வித்துவானுக்குச்
சேயிரத்த நற்குவளையன் செந்தமிழ்க் குடையான்
பாயிரத்தினைப் பகர்ந்தன னிராசகோபாலன் (உம)

பாயிரம் முற்றிற்று. ஆ விருத்தம் ருரு.

க-வது நாட்டுப்படலம்.

வேங்கடம் வடக் காம்விரி நீர்த்திரை
யாங்கடல் கிழக்காம் பெண்ணை தெற்கிலாந்
தாங்குடஞ்செம் பவளச் சைலயாந்
தேங்குடம்புரை தொண்டையைச் செப்புகேன் (க)

வேறு.

திருமழை யுழவர் குலமதாந் தெய்வ நதியினின் வெளுத்த ேனார் சீர்த்திப், பரவெனக் ககனம் பரந்துபா ருடுத்த பாய்திரை க்கருங்கடற் பயமுண், டுருவிரி மணியினி னங்கொழியமுனை யுத் தமி யுருவெனத் திரும்பி, யிருநிலமதனைக் கொழுமுனை காக்க வெழுந்தன வெண்டி சாமுகமும் (௨)

கத்திய மூகில்கள் கருவடை கிடக்குங் கனிதரு சோலைசூழ் சாரற், பொத்திய நந்திவரை முதல்யாவும் புட்கரி லிங்கமே யாக, எத்திசையிலு நீண்மின்னன் மீன்றுள்ள விரைப்பொடு பர வைபோ லெழுந்து, பத்திவெண்டாரை பொழிந்தன வெள்ளம் பரந்தன குளிர்ந்தன பரப்பே (௩)

அம்பகம் பெருக நடநவில் கலாப மவிர்தரு மஞ்ஞைமேற் கொள்ள, உம்பரிற்கோழி யலைதரமுடிக ளொளிரவள் ளிக்கொடி படர, வம்பிய றெய்வக் குன்றமாங் குறிஞ்சி வானவன் றேடுயல் கின்ற, பம்பியதவள வுத்தரீயத்தின் பான்மையை யொத்தன வருவி (௪)

சுப்பிரமண்யருக்குங் குன்றத்திற்குஞ் சிலேடை.

வேறு.

பலகையாடிப் பரந்து வருதலால்
இலகுபன்முக மெய்ந்து விளங்கலால்
உலைவில் பூங்கடம் பொள்ளுரத் தேற்றலால்
விலகிவில்லுமிழ் வேலனை யொத்ததால் (௫)

வென்றசீர் மரபாளன் விலங்கல்போற்
றுன்று கொங்கை துயல்வரக் காதலில்
அன்று தாரணி யாவதி மார்பிடும்
மன்றன் மாலையை மானு மருவிநீர் (௬)

சாடியோடு மருவித் திரள் கண்மஞ்
சாடியோடு மருவிப் புயலலைச்
சாடியோடிபக் கோட்டலைக் கையர்தேன்
சாடியோடு மருவியுஞ் சாய்த்தமே (௭)

ஆரங்கோங்க மருப்பலந் தள்ளியே
ஆரங்கோங்க வணியணி யாய்க்கொடு
வேரங்கோடி யெடுத்து விரிதரு
வேரங்கோடிக் கரைத்து விழுத்துமால் (௮)

அந்தமால மரிதகி தாங்கிநீ
றந்தமால மடியொடு சாய்தரத்
தந்தமாலத் தலைய ரிடித்திடுந்
தந்தமாலந் தழீஇக்கொடு சாய்த்ததே (௯)

துலங்கு பூவொடந் தோடுமருவியே
அலங்கல் போல்விழுந் தோடு மருவியே
குலுங்க முட்டலி னாலங் குதிக்குமே
உலம்ப லோடலி னாலங் குதிக்குமே (௰)

அத்தத் தோடமை யாரங் குலாவுமே
கொத்துக் கோங்கையி லாரங்குலாவுமே
மொய்த்த மேகத்தி னோடு முழக்குமே
ஒத்த மேகத்தி னோடு முழக்குமே (௰௧)

கொண்டிடித்த கொடிச்சியர் மாசுணம்
வண்டலிட்டது வாரிய மாசுணம்
வெண்டெனக் கமிதந்தன மாசுணம்
அண்டர் சொற்கு மரிதெனின் மாசுணம் (௰௨)

மாதங்கங் கொடு வேங்கை வரன்றியும்
மோதங்கங் கொடு வேர்முதன் முட்டியும்
ஓதங்கங் கொடு முள்ளளைப் பற்றியும்
மீதங்கங் கொடு வெற்பி னிழிந்ததே (௰௩)

அடை யிருப்பையும் புள்ளு வரம்பையும்
அடை யிருப்பையும் புள்ளு வரம்பையும்
துடிபடக் கொண்டலைத்துத் துரத்துமால்
துடிபடத்துளி தூவிடும் வெள்ளமே (௰௪)

கூறை முற்றுமிக் கள்ளியுஞ் சூழ்ந்துழல்
சூறை முற்றுமிக் கள்ளியுந் தூர்த்தது
பாறை யாட்டிப் படமெனப் போக்கிலன்
பாறை யாட்டிப் படர்ந்தது பாய்புனல் (௰௫)

வெறிவிடத்தேர் விலகு விரைந்துபோய்
வெறிவிடத்தே ரடித்து விழுத்தியும்
குறுமை யையத்தின் கூவல் நிரப்பியங்
குறுமை யையடி கூடியொருவிற்றே (௰௬)

குருந்தந் தாவிப்பல் கோடிவரன்றியும்
பிருந்தங் கோட லுடன்பெயர்ந் தாடியும்
பொருந்தும் வெண்ணெ யம்மானுடன் போக்கலால்
இருந்த மாதவ னேயுமவ் வாரியே (௰௭)

உறியைத் தேடி யுயர்ந்தநெய் தேடியான்
தறியைத் தேடித் தகைபடற் றேடியும்
மறியைத் தேடியம் மால்பதந் தேடியும்
வெறியைத் தேடு மருதம் விரைந்ததே (௰௮)

அடியசைந்தவ் வரம்பைக ளாடலால்
உடல் வெளுத்திடும் வாரண மூர்தலால்
மிடைதருங் கவரித்திரண் மேவலால்
இடியெடுத்திடு மிந்திரன் போலுமால் (௰௯)

தெங்கு பாய்ந்து செறிய வளர்கமு
கங்கு சேர்ந்து கதலியடைந்து தேன்
கொங்கு சார்ந்த வருக்கையிற் கூடியங்
கெங்குமாய திரைந்த பெரும்புனல் (௨௰)

குளநிரப்பி வண்கூவ நிரப்பிவீ
தளநிரப்பிய தண்டலை தண்பணை
வளநிரப்பிநீர் வாய்வழி யோங்கவும்
பளநிரப்பும் பனிக்கடல் பாய்ந்ததே (௨௧)

கொண்டல் சாயக் கொடுஞ்சினை யார்புனைக்
கண்டல் சாய்த்துக் கலந்திடு மூப்புடைக்
குண்டல் சாய்த்துக் குளிர்தரு மாற்றுநீர்
வண்டல் சாய்த்த கல்வாரி மடுத்தவே (௨௨)

திணைமயக்கம்.

வேறு.

போதுக்கு ளுயர்ந்த கஞ்சப் பூப்புகுஞ் சுரும்பரம்பொற்
றாதுக்குண் முழுகிப்புன்னை சாரவம் மணத்தாற் பெண்பேடன்
வாதுக்கு நிற்கநெய்தல் வரியினால் வசியமாய
வேதுக்கு முருகாவேனு மிசைக்குரு காதவுண்டோ (௨௩)

கோலவண் கமலப்போதிற் குறிஞ்சியைப் பாடிநீங்கி
ஏலும்வண் புனையில்முல்லை யிசைபட நூரன்றுகூடி
மாலைவண் கோங்கிலின்ப மருதத்தை வழங்குந்தும்பி
காலமுமிடனு மென்ன கள்ளுண்டார்க் காவதம்மா (௨௪)

வண்டயி ராயமாதர் மதனஞ்செய் யொலிதன்சாதி
கொண்டவார்ப் பென்றுசெய்யிற் குழூவொடு மரற்றுந்தேரை
மண்டிய மள்ளமாதர் வளனூறு குரவையாயர்
பண்டருவே யென்றெண்ணிப் பசுக்கண மகிழுமுல்லை (௨௫)

குருந்தினி லேறிமேயுங் கோவறிசிறார் கட்காங்கே
விருந்துப சரித்தவன்றே விரிதலை தெங்குகாயால்
பொருந்திய வலையிற் போனார் புகும்வழி புன்னையேறித்
தெரிந்திடு சிரார்க்குத் தேமா தீங்கனி விருந்துசெய்யும் (௨௬)

தடமருப் பெருமைபாயத் தாவியவாளை தெங்கின்
மிடறுக வொடியப்பாய மேற்கவி மருதம்பாய
அடைகிளி மாவிற்பாய வக்குயி லிணங்கு மின்ன
நெடுவெள மங்கஞ்சுற்று நின்றுநோக் கினுமுற்றுதால் (௨௭)

சாலியின் கேள்வனேவுந் தரத்தது வளங்கொணந்திப்
பீலியின் மேலதேத்தும் பிராணுக்கைக் தருள்வமேதாங்கும்
வாலிது மடியினின்றும் வழிகின்ற வமுதந்தன்னால்
பாலியென் றுரைப்பரந்த நதிவளம் பகர்வார் யாரே (௨௮)

வேறு.

அம்பிகை யாதியை யணைக்க வோங்கிய
கம்பையு முகரியுஞ் சேயுங் காமர்பூங்
கொம்பரு கோங்கிய பெண்ணை யுங்கொளும்
பம்பையும் போலவே பணையு மார்த்தவே (௨௯)

கிணைகளிற் கூடினர் கிளம்பி மள்ளர்கள்
துணைவருந் தெய்வதந் தொழுது துள்ளிய
அணைகளி னுதையுநீ ரங்குமிங்குமாய்ப்
பிணைதருங் காலெலாம் பெயர விட்டனர் (௩௰)

வேறு.

வெள்வளைக் குலங்கள் வயிறுளைந்தீன்ற விரிகதிர் மணிவில க்காக்கி, எள்வரை விலகா வைரக்கா றேற்று மெழிற்பொல நல நுகந் தொடுத்துத், தெள்விளிச் சுரும்பர் செறியும்வண் கமலஞ் செங்குமு தங்களுஞ் சிதையக், கள்வடி கடைவாய் மள்ளரே ருழுகுங் கவினுறு வளர்த்தது கழனி (௩௧)

வேறு.

உரம்படைத் துரியமள்ள ருறுபிடிக் கொட்டிற் கொத்தி
வரம்படி திருத்திச்சேறு வளப்படுத் தொப்பங் கொள்ளப்
பரம்படித் ததற்குத்தக்க பருவமும் விதையு நோக்கிக்
கரம்படித் தமைந்தவாறு கழனியில் விளைவிப்பாரே (௩௨)

விதைப்பன விதைப்பா ரேற்ற விதங்கண்டு மெல்ல மெல்லப்
பதிப்பன பதிப்பா ரொத்த பக்குவந் தெரிந்தவாரே
புதைப்பன புதைப்பார் நஞ்செய் புன்செயென் றிரண்டி னூடுந்
திதிப்பன திதிப்பார் செய்யுந் திறந்தெரி மள்ளமாக்கள் (௩௩)

தேனெங்கு முழவங் கெங்குந் திருவெங்குங் கமலமெங்கும்
ஆனெங்குங் கடாக்களெங்கு மளறெங்கும் வளைகளெங்கும்
கானெங்கு மலர்களெங்குங் கரும்பெங்குங் கமுகங்கெங்கும்
மீனெங்கும் மருதவைப்பில் வெற்றிட மங்கொன்றில்லை (௩௪)

ஊலுறு மிடங்க டோறுங் கழிசிறப் பெழுந்து தோன்ற
பாலுறு மணியின் மூரற் பவளவாய் பதுமத்துண்ட
ஆலுறு கயற்கணோடு மகமிகப் பூரித்தன்றே
மேலுறு வளங்குன்றுமல் விரும்பக்கா லீன்றவன்னே (௩௫)

நெல்லெலா முத்தமோடு நீரெலாஞ் செந்தேனுற்ற
கல்லெலா மணிகள் பாயுங் காலெலா நதிகடொல்லை
யல்லலாந் திரண்டதன்ன தணிதரு சோலையெல்லாஞ்
சொல்லெலாந் தெரிந்த பேர்க்குஞ் சொல்லலாந் தரத்ததன்றால் ()

மண்குத்துங் கோழுக்காரம் வான்குத்தும் வாட்கண் மள்ளப்
பெண்குத்து நாற்றெழுந்து பிறைகுத்தும் பெருவாய்வாளை
விண்குத்துங் குரும்பை குத்தும் வில்கொளி மணிகள் காந்திக்
கண்குத்து மள்ளமாதர் கனதன முகத்தோ டாங்கே (௩௭)

அடர்மழை யொலியதென்று மாற்றணை யொலியதென்று
மடையதி ரொலியதென்று மள்ளரார்ப் பொலிய தென்றுங்
உடைகழை யொலியதென்று முறுகிணை யொலிய தென்றுங்
கடைசியர் குரவையென்றுங் கருங்குயி லென்றுந்தேறும் (௩௮)

சோலையஞ் சேலைவாழைத் தொடைமுள ரிக்கையாடுஞ்
சேலையி ணைக்கநீலச் செவ்விழிக் கமுகக் கண்டப்
பாலயிலனப் போக்காரப் பல்லணி மருதமாது
காலையங் குயில்வாயாலக் கம்பளர்தமை யழைக்கும் (௩௯)

பலவரம்பைக் குழாங்கள் பாங்குறக் கவரிக்கூட்டம்
இலகுறத் தொய்யில் வெள்ளை வாரண மியையத் தோன்ற
குலவுமம் பகப்பெருக்கின் கொள்கையாற் கமுகுசூழ்ந்த
சலமுறு மருதமாண்டைத் தைவதம் போன்றதன்றே (௪௰)

படர்தரு விளைவினுள்ளும் பலன்களை மறைவதாக
அடிதரும் விளைவினுள்ளு மணிதரமேலை நோக்கும்
மிடைதரு விளைவினுள்ளும் வேற்றுமை யுணர்தல்கூடா
கொடைதரு பலனைநோக்கிக் கொழுமைவிட் டறிதல்வேண்டும் ()

மாவகங் குயில்களகூவு மராளங்கள் வனசந்தங்கும்
காவக மயில்களாடுங் கரம்பகஞ் செந்தேன் சேரும்
பூவகம் வண்டுபாடும் புனலக மீன்களாடும்
நாவகங் கவிகளோடு நடையக மொழுக்கங் கூடும் (௪௨)

சேற்றுழு மோதையாலே திரிப்பொலி யணையின் மோதும்
ஆற்றுறு மோசைபேரை யதட்டிசை மடைநீர் பாயத்
தோற்றுறு மரவங்கூடித் துவன்றலாற் கழனியிற்சொல்
சாற்றினர்க்குந் தோற்றுது சைகையா லயலார் தேர்வார் (௪௩)

நடையொன்று சாயலொன்று நன்மொழியொன்றலாமல்
அடையவு மில்லையந்த வனமயில் கிளிக்கென் றெண்ணிக்
கடைசிய ரிவரேயென்று கண்டனர் மயங்கிலார்மண்
படையொடு திரியுமள்ளர் பைங்களை களையுங்காலை (௪௪)

அடைதரு மிடத்தையோரா தடைந்தவர்க் குறுதியுண்டோ
மிடைதரு குவளைநெய்தல் விரிமலர்க் கமலமாதி
தடைதரு மென்றுசெய்யிற் சடையொடு மழலைமென்சொற்
கடைசியர் களையக்கண்ணீர் கசிந்துநைந் தழுகுமாதோ (௪௫)

தழைந்தன கருவைக்கொண்ட தள்ளின விளஞ்சூன்முற்றிக்
குழைந்தன மணிபழுக்கக் கொய்திடும் பருவங்கண்டார்
விழைந்தன வொன்றுபோக்கி மனுவிதி யைந்துங் கொண்டு
பழங்குடி மாந்தரைந்து பாலினும் பாலிப்பார்கள் (௪௬)

கவிகள்கூத் தாடுங்காதிற் கமலை கூத்தாடும் வீட்டில்
அவிகள்கூத் தாடுந்தீயி லணிகள் கூத்தாடும் பாட்டிற்
புவனிகூத் தாடுஞ்சொல்லிற் போகங்கூத் தாடுமென்றிற்
றுவனிகூத் தாடுமோத்திற் சுரதங்கூத் தாடும்பெண்ணில் (௪௭)

கொக்கினிற் குயில்கடோன்றுங் குயின்மிசை வாளைதோன்றும்
இக்கினிற் கம்புதோன்று மியலுறுப் பைந்தடக்கத்
தக்ககூர் மத்தைக் கத்துந் தாமரையூரும் வண்மை
அக்கைதை மேனெற்றோன்று மற்புதமழகிற் றம்மா (௪௮)

மெய்யினுஞ் சிறந்த சொன்மை விதியினுஞ் சிறந்தநன்மை
மொய்யினுஞ் சிறந்த திண்மை மூனையினுஞ் சிறந்த கூர்மை
கையினுஞ் சிறந்த வண்மை கவியினுஞ் சிறந்த சீர்மை
துய்யினுஞ்சிறந்த தண்மை துலையினுஞ்சிறந்த தொண்மை (சகூ)

வாட்டின மருங்கையென்று மறுத்தன நுணுகிநோக்க
மூட்டின வூடலேற முனிந்தன முத்தக் கோர்வை
சூட்டுடைக் காலங்காட்டி குப்பையைத் துளைக்கச் சுற்றித்
தாட்டுணைப் பிணிப்பவேயுஞ் சமரிடை வீரந்தாழா (ருய)

மீனநாட் டவருஞ் செல்வம் விறிய வஞ்சியாளும்
வானவ ரம்பனுட்டு மாந்தரும் பொன்னிசூழ்ந்த
ஏனைநாட் டவருமின்றே ரெய்திய வொழுக்கம் வேண்ட
வானுடன் ருமுங்கூடி வண்மையிற் சிறந்துநிற்பார் (ருக)

காறுறு மளகச்சாந்து கரைதரு நான நீர்போய்
ஆறுறப் பரவையாதி யளவர்மீன் களமீறுக
நாறுறு மென்றுனல்லோ ரல்லரை யணுகிலன்னுர்
தேறுறு வார்தந் தம்மைச் சேர்ந்தவ ரோடுமுண்மை (ருஉ)

நாடிய தூயதன்மை நன்மனமே பெஞ்ஞான்றுங்
கூடியவெறி கொண்டாட்டங் குளிர்மலர்க் காமர்வண்டே
தேடுதீவினை செய்வார்கள் சிறந்தவிப் பிரரேநாட்டிற்
கூடுறுகள வெனுஞ்சொற் குளிர்தரு விசேடமேயால் (ருந)

பொன்னுவிளையும் பூவிளையும் புகருனியநற் பயறுமற்றும்
என்னவிளைய வேண்டுகினு மெல்லாம்விளையு மறிவுமுண்டாம்
மன்னுதவமே யிப்பூமி வாழ்க்கைபெற்று வாழ்வதென்றால்
உன்னுபோக பூமியினு முயர்வென் றுரைத்தாற் குறையென்னே

காலியா மணவுசெம்பு களம்புலி படுபையீது
வேலெனூர் பலவெண் குன்றம் விரியூற்றீக் குளஞ்செங்காடு
பால்சிறு காரைகுன்ற பத்திரம் நிலவுகன்னல்
எனும்வேங் கடமேதாம லெயில்புழ லின்னைக் கோட்டம் (ருரு

வேறு.

ஆறுநாறு மவரணி சாந்தங்கள்
காறுகாறுங் கமலக் கடிமணம்
நாறுநாறு நறுமது வின்மணம்
சேறுநாறுமச் செங்கழு நீரரோ (௫௬)

எட்டு மூன்றுகோட் டம்பிறை வன்றலம்
அட்ட நான்கொன் றழிந்தவெண் பான்பொழில்
நட்ட நூறிரண் டாயிர நத்தமாம்
சிட்டர் வாழுந் திருத்தொண்ட மண்டலம் (௫௭)

விளைநிலத்தது வெம்பிணி யில்லது
வளமிகுத்தது செல்வ மலிந்தது
வெளிறறுத்தது மேவுசெங் கோலது
தளிதழைத்திடுந் தண்டகத் தொண்டையே (௫௮)

சூதராதியர் துத்தியஞ் செய்ததும்
வேத மெய்யர்செய் வேள்வி யிடத்ததும்
யீதல்கல்வி யிசைமை தறுகணன்
கோதரும்புக ழுற்றதுந் தொண்டையே (௫௯)

வன்கரை மோதலெ வையத்தின்றமி
ழின்கரை கண்டவ ரிருடி கோத்திரர்
பொன்கரை யொதுக்கிடும் பொருனை மாநதித்
தென்கரை யொத்தது சிறந்த தொண்டையே (௬௰)

அறந்தனு லருத்தமு மருத்தத் தாலறஞ்
சிறந்ததா மெனப்புகழ் சேர்த்துக் கோடலால்
பிறந்தவான் கவிப்பரி பெரிது மூர்ந்துசுற்
றுறைந்தநா டெங்கணு முலாவு சீரது (௬௧)

கார்வள நீர்வளங் கனிய நிற்குமால்
ஏர்வள நீர்வள மிசையு மெங்கணும்
ஆர்வளந் தருமுடிக் காவிலொன் றுதந்
தோர்வள முங்குறை யாதவூர்தொறும் (௬௨)

நிலமெலா பொன்விளை நிலநன் னீர்கொளும்
கலனெலா முபருரை கடவுள் வைகின்ற
தலமெலா மகத்துவஞ் சதுர்த்த தோற்றத்தின்
குலனெலா மொழுக்கமே குடிகொண் டோங்கிடும் ()

நிழன்மர மதரெலா நிறைந்த தேன்சுவை
பழமர மரியெலாம் பலவும் பண்ணலாந்
தொழின்மரங் குறையெலாஞ் சோதிதாளினில்
பொழிசதுர் மலர்மணப் புறத்தெலாமுள (௩௪)

சான்றவர்க் கிடமிது சாட்சி பௌவையால்
ஈன்றவே ழுக்கவி யிதனின் மேலுண்டோ
தேன்றமி ழிரதமாந் தேவருண் சுதை
தோன்றவே சொல்வது தொண்டை யல்லவோ (௩௫)

ஆ விருத்தம். ௱௨௰

உ-வது நகரப்படலம்.

இருந்திடு நிழலினீர்மை எதிர்முது வேனிலூடே
திருந்திடிற் றெரியுமன்றே தெய்வமாப் புலவராய
பெருந்தவ ருரைத்த வண்மை பேதையே னுரையிற்போத
தெரிந்திடு மென்று கச்சித் திருநகர் செப்பலுற்றேன் (க)

பூரியான் மணியான் வெள்ளைப் பொன்னிறாற் பிறவற்றாலும்
வாரியான் வளைந்தபூவின் மற்றுளநகரிற் றேர்ந்து
சீரியசிற்ப முற்றுந் திருநகர் வட்டத்தூடே
ஓரிலே யளகை யொக்கி லொண்ணக ருரைப்பார் யாரே (உ)

பரவை யாழியம் பரமக ராலயம் பகரும்
குரவை யோதங்கார் கோண்மூதற் கூறிடும் பெயர்கள்
திருநகர்ப்புற வகழிக்குச் சிறந்தன வேனும்
உரியகாரண விடுகுறி யாய்க்கடற் குறுமால் (௩)

கும்பனுவிலுங் கும்பமாச் செவியனைக் கொன்றோன்
அம்பினுவிலு மடக்கரி தவனடி மைக்கும்
உம்பர்தாவிடப் பெரும்பய மாகியொண் ணகரோ
டெம்பிரானையும் வலம்பட வளைந்ததிவ் விருநீர் (ச)

ஆண்டு கூவிடும் யானையைப் பற்றுமாண் கராவும்
வேண்டி னீண்மறை வெங்கராச் சினையதின் விடாம்
தோண்டு மாழமுஞ் சகரர்க்குந் துணிவதற் கரிதாம்
ஈண்டிருந்தமீ னிசைமறை தந்தமீ னெனலாம் (ரு)

அயனு மாலுமவ் வடிமுடி தெரிவதற்கரிய
துயரும் பல்மணி முடியின தொண்சுதை நிறத்த
தியலுங் காரெனு நீலகண்டத்ததா மெண்ணில்
பயினு நீற்றொளிப் பரமனை பொத்ததவ் வெயிலே (சா)

வே று.

விண்ணகன் பரப்பை யளவறுத்தாடும் விரிகொடி வெயிலினை மறைப்ப, எண்ணரக் குயின்ற மாமணிச்சுடர்க ளிளவெயி லென த்திசை யெறிப்ப, கண்ணகன் ஞாலம் புகழ்தர விளங்குங் காஞ் சியம் பதியினுற் புறளும், மண்ணள வருத்த தடிமுடியுயரம் வான ளவறுத்தன மதில்கள், (எ)

இனமணி யிழைத்த வரமியத் தலங்க ளியல்கதிக் கேற்ற மாகையினுல், தினகர னிருந்த திருமணிப் பொலந்தேர் செலுத் துறு மருணனுல் விரைந்து, மனவலி படைத்துக் குதிகுதித்தோ டி வழங்கலால் வாம்பரி தம்மை, கனகதி படைத்த கொய்யுளைப் பாய்மா கந்துக மென்றினம் பகர்வர் (அ)

வே று.

அம்பரத்தினும் புவியினும் யாங்கணுமாயில்
வம்பு சொல்வதென் வணக்கமே மேனில வழுத்தும்
நம்புடைப் பொருள் வேண்டிய தரமிகத் தாழ்வார்
உம்பருக்குமே லுயர்ந்திடு மேனில யுள்ளார் (கூ)

மாடமாளிகை வளங்களு மகரதோரணமும்
கூடகோபுரக் காட்சியுங் கொடிகளி னெருக்கும்
நீடுமாவண நித்திலப் பந்தரு நேரில்
ஆடரங்கமு மணியறச் சாலையு மடரும் (௰)

ஆனநற் றவத்தினோ யாதினோ கற்பம்
போன மாடக்கொடி பொங்கும் வானதி
ஞானஞ்செய் தெழுவது நாடுங்காலையில்
ஏனைநா ளுலகமும் ஏறவெண்ணியோ (௰க)

பூணெலாம் விலையற்றது புடைவையி னூறுநூல்
காணலாம் விலையாயிரம் பொன்கட லுலகிற்
சேணெலாம்புகழ் திருவளர் காஞ்சியம் பதியில்
ஆணெலா மதன் பெண்ணெலா மிரதியே யழகில் (௰உ)

வேறு.

மலருதாரமும் வண்டு முயற்சியும்
பலசொலாமற் பலனை யளித்தலும்
கலமறைப்பினுங் காமுறு செவ்வியும்
குலவக் காட்டுமக் கோட்டத்தர் கொள்கையில் (௰௩)

வேறு.

பொன்னிறப் புங்கவன் புவியி லேற்றமென்
றுன்னிய செய்வினை யொழித்த தோமிலை
இந்நகர் பொன்னக ரிரண்டுந் தூக்கினால்
மென்னகர் பொன்னகர் மேலதாகுமால் (௰௪)

நிலவுமேற் புயலில நிசமவ் வானனம்
விலகொளி மின்னலின் மெய்யு மெய்யென
செலுமவர் தெருவிடைத் திகழுமாடமேல்
அலம்வரு மையத்தை யகற்றிக் கொள்வரால் (௰௫)

வேறு.

படிந்தன தரைமணிக் கற்படுத்தன
வடிந்தன வழகுடை மணியுலோகத்த
முடிந்தன பூண்பன முதல வூடலிற்
கடிந்தன வொளிர்வன கஞ்சன் மேடதே (௰௬)

கலையிடை வந்தவள் கனிந்த நாவிடை
அலையிடை வந்தவ ளவர்த மில்லிடை
மலையிடை வந்தவள் வண்கை மேதியின்
றலையிடை வந்தவள் சார்பு தோளிடை (மஎ)

மெய்க்குறை விடமென விளங்குஞ் சால்பினாற்
பொய்க்கரி மதியனைப் புகுத்தத் தக்கவர்
எக்குறை களுமிலா திலங்குஞ் செல்வத்தால்
முக்குபே ரற்குமேன் முதிரும் வாழ்வினர் (மஅ)

பாதிவான் பிறையணி பரமன் காசிதான்
கோதிலா முதலெனக் கூறத்தக்கதே
ஆதியோ டந்தமு மமையப் பேணுங்கால்
நீதிசேர் காசியே நிமலக் காஞ்சியே (மகூ)

உலைவருங் கஞ்சியி னோங்கி நின்றிடுந்
தலைமையி னமலையு மமலை சார்கின்ற
இலகிய மெய்யுமீங் கியைய வாழ்தலால்
நிலைமை யின்பத்தினை நிகழ்த்த வேண்டுமோ (உம)

இஞ்சியு மகழியு மியைந்த மாநகர்
நெஞ்சிடை நினைப்பவர் நிலைமை கூறலென்
கஞ்சியுட் கொள்கிலாக் காலம் போதுமின்
அஞ்சுவ ரழிவென வனுபவத்தினே (உக)

விண்மணி யொளிகெட விளங்கு மாடங்கள்
கண்மணி மழுங்குறக் காந்தி நிற்றலால்
பெண்மணி யன்னவர் தனத்திற் பேர்மறு
குண்மணி யாடவர்க் குரிமை மாறுமால் (உஉ)

மாவல விலமல வண்குயிற் பெருங்
காவரை யலவல கலாப மாமயில்
பூவடி யணங்கல பொருந்தா மன்பினால்
தேவிய ரிவரெனத் தெளிவ ராடவர் (உரு)

நீண்மறுகிற் செல்வோர் நிறமவ் வீதிவாய்
வாண்மணி நிறங்களான் மாறு மாண்பினால்
காண்மணித் தோற்றத்திற் காமரூபிகள்
பூண்மணி யுருவெனப் பொலிந்து தோன்றுமால் (௨௪)

சிறுமிய ராதனச் சிற்றில் மாறுகொண்
டெறிதரப் பட்டவை யெனக் குனக்கென
உறுசிறு வில்லினுக் குண்டையாக் கொள்வர்
வெறிமலர்ச் சிறார்களவ் வீதிதோறுமே (௨௫)

எங்கணு மிரதங்க ளிவுளி யீட்டமா
தங்கமுன் பின்வருந் தணிவில் கொட்பினால்
பொங்கிய விழாவணி புடை மயங்கலால்
சிங்கநோக் கினர்களத் தெருவிற் செல்பவர் (௨௬)

பேண லுற்றுன்கதிர் பிறர்தண் வெண்சுடர்
மாணிழை யவர்விழி வனச மொக்குமால்
காணவர்க் கியாதொன்றுங் கரவில் லென்னினும்
பூணினிற் கரப்பர்தம் பொற்பு நன்மையே (௨௭)

மந்திர நாவினர் வன்னிக் கையினர்
முந்திய குலத்தவர் முகோத யத்தவர்
நந்துமுந் நூலினர் ஞாலத் தேவர்கள்
அந்தணர் தெருவினுக் களவுண்டோ விலை (௨௮)

உள்ளுநூல் புறமுறா லுற்ற பெற்றியர்
ஒள்ளுநீ ரெண்பணி ரண்டுமீபவர்
கள்ளு மூனுங்கலி மகத்திற் கைதொடார்
விள்ளும் வேதியர் தெருவேத கானமே (௨௯)

தம்மனு நீதத்தர் சதுரு பாயத்தர்
வெம்மையின் வீரத்தர் வீழ்ந்த கன்றுக்கா
அம்மக னுயிர்கொடுத் தருளைப் பெற்றவர்
செம்மையின் வளவர்கள் தெருவனந்தமால் (௩௰)

அலவமான் மகரமான் அச்சுறும்வலி
புலிகணீண் மேடையில் போடும் பந்தடி
கலைபடு தழும்பெனக் காணுந் தோற்றத்துச்
சிலைபடு புயமனர் தெருவை யென்சொல்வேன் (௩௧)

பேணிகம்பரம் பிசகாத பெற்றியர்
வேணிக முடையனை விரும்பும் பத்தர்கள்
காணிகபடஞ் செயாக் கணக்குச் செய்பவர்
வாணிகஞ் செய்தெரு வளங்கள் பற்பல (௩௨)

இடபகேதனன் முடியின்னுந் தேடுவோன்
முடியவர் மொய்ம்பவர் முன்னிச் செய்கின்ற
தொடையவ ரிவர்தெருத் தொலைவிலாதன
அடியவர் தெருவுக்கு மவதியில்லையால் (௩௩)

உச்சியி னுகப்பல வுள்ளவோவல
விச்சுவா மித்திரன் விரித்ததோவென
அச்சணி மாடகே தனத்திலையுறும்
விச்சவே ளாளர்கள் வீதிபற்பல (௩௪)

மூவசியத் தொழில் முழுதுமூலத்தே
ஆவசியத்தினி லடையத் தக்கதாம்
பூவசியத்தினர் புராரிக் கன்பினர்
பாவசியத்தினர் பரப்புக் கெண்ணில (௩௫)

சோதி யெலாமொரு தொகையிற் பட்டென
வீதி யெலாம்விடி விளக்கஞ் சானுமால்
நீதி யெலாமொரு நிலையில் நிற்றலால்
சாதி யெலாந்தவ ராஅதர்மமே (௩௬)

புகல்பட்சங் குறியுதா ரணத்திற் போலியாம்
பகையறப்பெய ரிலக்கணம் பரீட்சையின்
வகையுற நூல்கொடு வாதஞ்செய்யுமின்
தகதகவென மொளி தயங்கு மன்றமே (௩௭)

வேறு.

கமைப்பரும் பாதிதாங்குங் காறலைக் குயர்ந்த வென்னில்
தமைப்பல மதிக்கவாசை தாங்கிய கரிகளென்னும்
அமைப்பரு மிலக்கணத்த வணியுறப் புனைகோலத்த
சமைப்பருந் திறத்ததான தந்தியை யுடையவீதி (ருஅ)

அறுபது கடிகைக்குள்ளா லம்மலை சூழுங்காலம்
பெறுகதி வேறொன்றில்லீர் பெருமைமீச்செலவாமென்னில்
உறுநிலங் குரம்படாம லோடுதும் யாமுமென்று
துறுகதி விசேடங் காட்டுந் துரகத்த தொலைவில்வீதி (ருகூ)

சினத்தினை யளவையுந் தேட்டில் விட்டிடார்
சினைத்தினைத் தருமன்பாற் சேர்க்குஞ் சாந்தத்தர்
இனத்தினைச் சுட்டில ரிலாததின்மையால்
தனத்தினை யுடையவர் சார்பங்காடியே (சய)

பாரியங் குவற்கொரு படியம் பாரிமேற்
காரியங் குவற்கொரு படியக் கந்துக
நேரியங் குவற்கொரு படியங் நீண்டதேர்
ஆரியங் குவற்கொரு படியங் காடியே (சக)

வேறு.

காண்டிட வானோர் வேந்தைக் களித்திடக் கவிகேட்பாரை
தாண்டிட வாயுவேந்தைச் சமைவதிற் றந்தைதாயை
யீண்டிடப் பரவநாக வேந்தலைக் கிரயமீந்து
வேண்டிட வளகை வேந்தை வேண்டுமங் காடிவீதி (சஉ)

பெற்றிடு சுகத்திற்காகப் பிறிதொரு விலையீயாமல்
மற்றிடு சுகத்திற்காக வரும்விலை வாங்கத் தக்கார்
உற்றிடு காமக்குட்டத் துலாவிடு மினையமீன்கள்
பற்றுகண் வலையைவீசிப் படுப்பவர் தெருவோர்பாலே (சங)

யாவர்க்கு மன்னையெங்க ளையைகா மாட்சியோடும்
தேவர்க்குந் தேவனெல்லாத் திருமறைகட்கு நாதன்
மூவர்க்கு முதல்வனெங்கண் முக்கணெம் பெருமான்மற்றை
யேவர்க்குந் தலைவன் வாழ்ந்தா லென்னவுண் டென்னவில்லை ()

நன்மையுண் டறிவுமுண்டு நயமுண்டு புகழுங்குண்டு
வன்மையுண் டுக்கமுண்டு வலனுண்டு கல்வியுண்டு
தன்மையுண் டெம்மான்பத்தி தானுண்டு சாற்றுங்காலை
இன்மையே யின்மையன்றி யாவிருப்பவை யங்குண்டால் (சரு)

வேறு.

அஞ்சியஞ்சி யருங்கவி வாணர்முன்
கஞ்சிகஞ்சி யென்றூற்கன் மனங்களும்
விஞ்சிவிஞ்சி யுருகுமென்றே மிளிர்
இஞ்சிசூழ்நக ரேத்தின ஞனரோ (சசு)

பித்தவென்னப் பிறங்கு பிரான்வரம்
தத்தமிட்டது தான்றெரி பாவலீர்
பத்தமோடு பழிச்சின ஞதலால்
சுத்தமாநகர்த் துத்தியங் கொள்விரால் (சஎ)

ஆ விருத்தம் கசுஎ.

நவதூ புராணவரலாறு.

முன்னைய பின்னையவென்று மொழியுமிரண் டெச்சவும்மை முறையேபோல, என்னுளறி வின்மைபட நகர்வளமு மியம்பின ஞ லிந்தக்காதை, சொன்னவர்க ளிவர்கள்செவி கொடுத்தவர்க ளிவர்களெனத் தோற்றுமூலம், பின்னவர்க ளறிதரவென் பேதைமை பின்னரும் விளங்கப் பேசுவேனே (க)

அன்னமகத் துவத்தலத்தி னருமையெவ ருரைப்பவரத் தலத்தைக் காணப், பன்னுமறை முனிவர்குழாம் புடைசூழ நீற்றி னெளி பரவக்காதிற், துன்னுரக படமனைய குண்டலமக் கழுந் துலங்கத் தூயமுந்நூல், உன்னியிடு நெஞ்சிருக்கு முன்னூலின் மேலுலவச் சூதனூற்றுன் (உ)

இத்தலத்தைக் கண்டவுட னிருகையுஞ் சிரமேற வின்பமே றப், பத்திசெய்மந் திரத்தொலியம் பரமேற மனம்பரமன் பாத மேற, வைத்தவன்பு வழிந்தேற மதில்வாயிற் படியேறி மணி பொன்னாற்செய், சித்திரவா லயத்துறையுஞ் சிவனுமையை யடி பணிவான் சிந்தைகூர்ந்து (௩)

மூத்தமக வடிவணங்கி நந்தியருள் விடைபெற்று மூலலிங் கம், ஆத்தசபா பதிசோமக் கந்தர்பரி வாரர்முத லானதானத், தேத்துமம்மை சண்டேசர் பைரவரிவ் வியன்முறையா லிறைஞ்சி யேத்திப், பாத்தகொடி நிலைக்கண்ணும் படியுமா படிந்துவலம் படரவெண்ணி (௪)

நிகளவடி நிறைசூலி நிறைதல கடஞ்சிரசி னெகிழாவண் ண, நகர்வதென வேகம்ப னடிநிறுவு முரமிருகை நண்ணவைந் தாஞ், சிகரமுத லக்கரத்தைச் செபவடத்தா லலகிட்டுச் செபித் தோர்சாமம், புகரில்வல மொற்றைபடப் பலவந்து புகுஞ்சிரமம் போகவுன்னி (௫)

அந்தமகா லயத்துக்கு ளருகிருக்கு மணியணிமண் டபத் தையண்மி, வந்தமுனி வரர்சூழ மலியுடுவின் மதியிருந்த மாண்ப தேபோல், சிந்தைமகிழ் புலியதளி லிருந்துசிவ னடிநினைந்து சிர மம் போக்கிப், பந்தமறு முனிவரரை வினவுவான் பழங்கதை கள் பழுத்தவாயான் (௬)

இத்தலமே தலமூர்த்தி யிவரேயித் தீர்த்தமே யினியதீர்த் தம், உத்தமரிங் குறைவாரே யுமைசெயற மியற்றிநம்மோ டுலக த்தோர்க்கும், தத்தமது நெறிக்கிடையாத் தகையுதவும் கங்கை குலந் தன்னில்வந்தோன், எத்தலத்தி லித்தகைமை கண்டனி ரென் றெதிரிருந்தோர்க் கியம்புங்காலை (௭)

கமலனுருட்டிய தருப்பை விழுந்தவிடம் நாமிருக்குங் கால ந்தன்னில், அமலமிகு சிவகதைக ளனந்த மருளினையந்த வமலற் கன்பர், நிமலமிகு மித்தலத்தி லெய்தியது மிவர்பிறப்பி னெறியு நீண்ட, துமிலமிகு கடற்புவியி லிவர்சிறப்புஞ் சொல்கவெனத் தொழுதார் நீத்தோர் (அ)

என்றவர்கள் பின்வரப்போய் நேமிவனஞ் சேர்துமென வேகியாங்கு, நன்றுரிவை மீதிருந்து நாறுகுழன் மலைமங்கை நாதன்றாளி, லொன்றலபல் புகழ்பாடி யடியர்புகழ் உரைப்பதுவு முரித்தென் றெண்ணி, அன்றுவின வியகாதை கேண்மினென மாப்பெயரா னன்புகூர்ந்து (கூ)

அரனடியர் கங்கைமைந்த ரரியவதா ரத்தில்வந்தோ ரவனி பாலர், வரன்முறைக ளெடுத்துரைக்க மாண்பினவா மெனமூனி வன் மனத்திலுன்னிப், பரமனந்திக் கந்நந்தி மார்க்கண்டர்க் கவன்வேத பராசன் மைந்தர்க், குரைதரவன் னவன்றனக் கன்றுரைத்தபடி யாயவருக் குரைந்தான் மன்னோ (ய)

அன்னனசொ லாரிடத்து மறிஞர்களாங் கமைதிகொளா ரிடத் தொப்புள்ளும், கன்னபரம் பரையுள்ளுங் கற்றனகேட் டனகந்த சாமியென்போன், துன்னுபுகழ் குறிச்சிமுன்னூ ராந்தைகோத் திரத்தார்கள் தொகையாய்க் கேட்ப, முன்னுளவா தரவினொடு மொழிந்ததிது வரலாற்றின் முறைமைமாதோ (யக)

ஆ விருத்தம் ௱எஅ.

ச-வது திருக்கைலைப் படலம்.

புயலையுங் காத்தவர் புகழ்ப் புராணத்தின்
சுயவரலாறிது சுருக்கிச் சொல்லுங்கால்
வெயில்வலம் வருமலை வில்லிநேன்மலை
முயலுநா வெடுக்கவே முடிவென் றாகுமோ (க)

மாயிருந் திசைகளின் வடாது மண்முதல்
வியினுந் தன்னிலை வீவின்றா மஃ
தாயிரத் தெட்டெனு மமலன் வாழ்திருக்
கோயிலி லுயர்ந்தது கைலைக் குன்றமே (உ)

நத்தொளிர் கையனு நான்கு மாமுகக்
கத்தனுங் காவுடைக் கற்பவேந்தனும்
அத்தனுக் கடியுறை யாக்கும் பன்மணி
முத்தெனத் தன்னொளி முடுக நிற்பது (ங)

விண்ணுளான் மலரினன் வேலையான் றமிழ்
பண்ணினன் வந்துதன் பான்மை சார்தலான்
வண்ணமா வன்னம்வன் கலுழன் வான்மயில்
கண்ணினு லவருருக் காணநிற்பது (௪)

பரியிபம் வயினன்பா லன்னம் பாயுமான்
அரியவன் முதலோகா ரானரிட்டம் வெள்
ளெருதெலி மயிலிவை யிறைவ ரோடுசேர்ந்
தரகர வென்பதை யதுவுஞ் சொல்வது (௫)

முன்னரிற் றாயராய் முன்னர் நீங்கிய
பின்னரிற் றீமையைப் பேணுவா ரெனத்
தன்னில களங்கவிந் தாகித் தன்னைவிட்
டன்னிய விடந்தலை யறவுஞ் செய்வது (௬)

தள்ளரு மாந்தைகோத் திரத்தர் தன்னெஞ்சி
னுள்ளுறை சிவனுறை போங்க ணேக்குறின்
வெள்ளியும் பின்னதும் விளங்கும் வேற்றுமை
உள்ளதிவ் வுலகிடை யுளவெளுப்பெலாம் (௭)

ஒளிக்குயர் வெண்மைசேர்த் துரைக்கும் பொன்மலை
வளைக்கிற வொளிக்குளால் வந்தயாவையும்
உளுக்கொரு குணத்தரா யுலக மொப்பவே
வெளிக்கொரு குணத்தினர் வேடம் பூணுமால் (௮)

நான்முக னமரர்க ளாரதன் றவர்
பான்மிசை யன்னமூர் பணவர் பட்சிகள்
தான்மிளிர் விடைவரு சதுட் பதங்களாய்ப்
போன்மிளி ரும்படி பொலியச் செய்வது (௯)

கவியிடை மறைபொருள் காண்பர் வல்லவர்
அவிவர முடையவர் அரிதற் பாலரோ
உவியடி வரைவிழுந் தொருங்கு சேரினும்
செவியினி லருவியைத் தெரிந்து கொள்வரால் (௰)

புல்லிய தென்றுநாம் புகலுவோ மந்த
வில்லியைத் தாங்கிய வெற்பி தாதலால்
சொல்லறி தமிழ்முனி கரஞ்சு மக்கலாக்
கல்லிணைக் கழறலென் கனக மேருவும் (௰க)

செருக்கிலா ராயினுஞ் சிரங்கிழக் குளார்
வெருட்கொளா ராயினும் விழிதிறக்கிலார்
மரிக்கிலா ராயினுஞ் சுவாச வாழ்விலார்
சரக்கெடாப் பையனூர் தவஞ்செய் சார்பது (௰உ)

பரவுலாஞ் சுகமெலாஞ் சுகனுப் பாகும்பல்
அரவெலாம் பதஞ்சலி யாகும் வன்கொடு
வரியெலாம் புலிப்பத னாகும் வான்படர்
தருவெலாங் கல்வட மாகுஞ் சார்பது (௰௩)

சிரந்தரை யார்களாய்த் திகழ்விண் காலரும்
கரந்தரை யார்களாய் காயக் காலரும்
உரங்குவி கையரும் உச்சிக் கையரும்
சரந்தணிப் பவர்களும் தவஞ்செய் சார்பது (௰௪)

வேறு.

இக்கிரியின் பெருமைநம்மா லெடுத்துரைக்குந் தரமல்ல விப்பூவேந்துஞ், சக்கிரியா யிரமுகத்தாற் சாற்றரிதாய் நின்றதிதிற் றழைக்குஞ் சோதி, தொக்கிருந்த தெய்வமணிச் சொக்கநவ கனகமிகத் தொடுத்துச் செய்த, மிக்குயர்ந்த வாலயமொன் றுள்ளதுவிண் மணியையுமின் மினிபோற் செய்யும் (௰௫)

உயிரிணையு முடலிணையும் பொருளிணையு முன்கையடை யென்றொப்பித்து, மயலறுநற் பத்தியுள வடியவர்த மனமேயோ மாசிலாத, கைலமலைத் திருமுகமோ வெனப்பார்ப்பார் கண்கூசக் களுலுஞ் சோதி, வெயில்விரியு நவரதன கசிதவிர ணியம்விளங் கும் விமலன் கோயில் (௰௬)

வேறு.

தன்னுளே யிருந்தவன் ருங்கக் கைப்படும்
சொன்னமோ பெரிதன்று துங்கமோவல
அன்னமு மேனமு மறிகலா முதல்
பொன்னடி முடியினைப் புறத்துப் போர்த்தலால் (௰எ)

கிளர்மணி யழுத்திய கேசரிப் பிடர்
மிளிரொளி யாதனம் வீற்றிருந்தனன்
உள்வில வென்னவே யோது தத்துவத்
தளவிலெப் பொருளிலு மமர்ந்த வெம்பிரான் (௰அ)

நேத்திரம் புகல்கிலா நெருக்கிஞ னந்தி
தோத்திரத் தவர்களைத் தூரநின்மென
வேத்திரத் தடிதர மெய்யன் பான்மதிக்
கோத்திரச் செழியனைக் கொதித்து வைவரால் (௰௯)

சடசட வென்னமெய்த் தாருவீழ்வரை
இடவிட நிறைவிலா விந்த வாழ்க்கையில்
கிடகிட வென்னவே கிடத்து மாய்கையை
கடகட வெனக்கடி முரசங் காட்டுமால் (௨௰)

வேறு.

அரவணை யான்கண்டுவே வயன்பல மலர்கடுவே
உருகுமா னந்தக்கண்ணீ ருறுமடி யார்கடுவே
பரமனைப் பாடுவார்வாய்ப் பங்கயமதுவுந் தூவச்
சுரர்பதி தருப்பூத்தூவத் தூவென முளங்குஞ் சின்னம் (௨௧)

கூட்டுவா னுடலைக் கூட்டிக் கொண்டமு வினைகட்கேற்க
ஊட்டுவா னுறைக்கியற்றி யூட்டிய தெவிட்டுங்காலை
காட்டுவா ன்றன்னையந்தக் காலத்தின் வரையிவ்வாறாய்
ஆட்டுவா னவனேயென்ன வரம்பைய ராட்டங்கொள்ள (௨௨)

சிந்தைகூ ரியனைமுன்னாட் டேவரை வில்லிதன்னை
தந்தமுக் கணன்பாற் கொள்ளும் சதுட்டயப் பாதியாதி
வந்தமே வா வங்குற்றார்க்கு மருவிய வாடிப்பொன்னும்
சொந்தமி லிரவல்வாங்கும் சுடர்மணி ஒளிப்பூண்போலும் (௨௩)

வலவிழி விலிக்கஞ்சாது வாமநோக் கணிக்கஞ்சாது
அலைவறு கைநாற்காலி யாடையைக் கண்டஞ்சாது
பலமுறு மத்தந்தாங்கி பகிரதி கண்டஞ்சாது
தலைவன தாண்மை கண்டாற் சார்ந்தவர்க் கச்சமுண்டோ (௨௪)

மலிகரோ டியினைச் சார்த்தி வருந்தின தகன்றான் வேதன்
கலுழடி யருச்சித் தேத்திக் கணத்தினி லகன்றான் கண்ணன்
அலைவிலா துயரமின்றி யழுதன ரானந்தத்தால்
உலைவிலா சுகதுக்கங்க ளொப்பெனற் கிதுசான்றாமே (௨௫)

பஞ்சவன்முக மடிக்கடி பைரவி பார்க்கும்
வெஞ்சினக்களி றடிக்கடி பார்க்கும்விண் வேந்தன்
செஞ்செ விச்சரண் ணடிக்கடி பார்க்குந்தென் றிசைக்கோன்
அஞ்சு வார்க்குறுந் துணிவுண்டோ வாயுங்காலத்தில் (௨௬)

கருடர் கின்னரர் சித்தர் வித்தியாதரர் கணகிம்
புருடர் சூரிய சந்திரர் போகபூ மியர்கள்
உரகராதிய ரோம்மர கரவெனு மோசை
முரசவோதையை முதுகுகண் டதுமிக முடுகி (௨௭

வேறு.

விண்ணோடிப் படர்கின்ற மேருமலை யுட்புகுந்தான் மிகுநா டேடிக், கண்ணோடி யறியவரும் பரப்புடைய வக்கோயிற் கண் மூன்றாக, மண்ணோடி யளப்பவனும் மலரோடி யிருப்பவனும் மணிக்கண் மெய்யில், எண்ணோடி யிருப்பவனு மேவல்செயக் காத்திருப்பா ரெம்மான்பக்கல் (௨அ)

தாங்காலை மரைமலரைச் சயனமெனக் கொள்ளிருவர் தரு க்கித்தேடிப், போங்காலை முபற்சியெலாம் புல்லர்செவிக் கவிபோ லப் போனவன்றே, ஓங்காலை யுயர்முடியை யுளூற்றுமற் கண்டா ர்க ளுலகினூடே, ஆங்காலை யாவதன்றி யடுத்தடுத்து முயன்றாலு மாவதுண்டோ (௨௯)

மத்தளம் வேய்ங் குழறுள முருடுபெம்பை வளைகோட வதி யென்றுப, உத்தமவாத் தியத்திரெலி யூழியெழுங் கடலொலியை யுண்டுவிஞ்சச், சித்திரமே யனையவெழிற் றெய்வவரம் பையராடத் திருவுமேத்த, வித்தகநா ரதரொடுதும் புருவரிசை மிகப்பாடும் விநோதந் தன்ன (நய)

ஆனைமுகன் மடியிருப்ப வாறுமுக னூடல்கொள வதனைத் தேற்றி, மானைபெதிர் விழியுமையா டன்பங்கின் மடியேற்ற வந் தசிவர்க், சேனையுள பாசமெலா மிற்றேறப் பதியாமென் றிசை யக்காட்டித், தானவைக் கன்னிபமாகி யவையாகி யிருக்குமந்தத் தருணவானை (நக)

ஆண்டவனை யகிலாண்ட மாண்டவனை யணிகளழ கார்வத் தோடு, வேண்டவனை யுடற்பாகம் வேண்டவனைக் குதவியமெய் யன்பினானைத், தாண்டவனை மறைமுடியைத் தாண்டவனைத் தனை நோக்கித் தாழ்வாருக்கு, மாண்டவனை யாதருளு மாண்டவனை பெவற்றினுமோர் வரம்பிலானை (நஉ)

சங்கரனை வன்கரனைத் தடிகரனை வலமாக்கிச் சரியதாகப், பங்கரனை தங்கரனைப் பணிக்கரனைத் தனைப்பாடிப் பரவசங்கொ ள், அங்கரனை வருங்கரனை நமஸ்கரனை அழிவுகாப் பாக்கற்கே ற்ற, செங்கரனைத் தண்கரனை வெங்கரனைத் திருக்காக்குந் தேவ ன்றன்னை (நந)

வேறு.

சிந்தவே தண்டஞ் செறிய மூள்வானைத் திகழும்வே தண் டம் வாழ்வானை, வெந்து முப்புரநீ றெழும்ப வேற்றானை வெண் ணிறப் பெரியவேற்றானை, வந்தவம் புலியை மருங்கசைத்தானை வளருமம் புலிதரித்தானை, அந்தவார் சடையி லமுங்க வாற்றானை யடியர்க ளழுங்க வாற்றானை (நச)

முப்பரம் பொருளை மூலமந்திரத்தை முடிவிலாக் கருணைவா ருதியைச், செப்பரும் வரத்தைத் தெவிட்டிடா வமுதைச் சீவர்க ட்கொளிதரும் விழியை, அப்பனைபாண்டு மொப்பிலாதவனை யடி யவர்க் கெளிவரு மன்பைத், திப்பியஞானச் சிவமெனு முதலைத் திருமறைக் கெட்டிலாத் தேவை (நரு)

பார்த்தனர் பணிந்தார் குதித்தனர் நினைந்தார் படித்தனர் நடித்தனர்ப் பனிப்பூக், தூர்த்தனர் வியந்தார் சூழ்ந்தனர் வீழ்ந் தார் துதித்தன ரெழுந்தனர் கண்ணீர், வார்த்தனர் புளகித் துரு கினர்தம்மை மறந்தன ரானந்த மகிழ்வால், தீர்த்தன் தருள்பெற் றடிநிழ லடைந்தார் தேவர்மா தவராரிபிரமர் (௩௫)

மதகயத்தினையும் வாயின்பல்லினையும் வருஞ்சுவை நாக்கை யும் வாவும், குதிகொளற்குரிய மானையும் வணங்குங் கொத்து டைத் தலையையுங் கொள்ளும், மதிதரற்குரிய கண்ணையு மார்பின் வளமையு மற்றவு முடையோர், அதுவதற் கடைந்த துன்னில ரஞ்சா ரானந்தக் கள்ளுண்ட களிப்பால் (௩௭)

வேறு.

ஆங்குறைபு மரிமுதலா மனைவர்மல ரானனத்து மாடாகின்ற, வீங்குசிறை வீசாத விழிபளிக ஞன்முகத்தில் வீழ்தலாலே, தேங்குதிரு மறைமோதுந் திறத்தாலுங் கலைமகள்வாழ் திறத்தி னுலும், ஓங்கறிவின் மிகையாலு முரையாட வல்லனென்ப துறு த்தலோடும் (௩௮)

நோக்கின்றும் பார்ப்பவனைச் செவியின்றுங் கேட்பவனை நகருமனை, வாங்கின்றுஞ் சுவைப்பவனை வடகமின்று மென்ப ரிச வகைகாண்பானை, மூக்கின்று மணப்பவனை முடிகாணு னடிக ண்டான் முதிர்ந்த தேவர், காக்கின்ற பெருஞ்சபையிற் கையெடு த்தான் வாடெடுக்கக் கருதியம்மா (௩௯)

ஆ விருத்தம் உ௩எ.

௫-வது பிரபஞ்சப் படலம்.

மூகைகருக் துரையினல முன்னத்தி னறிவான்போன் முத ல்வன்வாழு, மாகைல வளமித்தின வல்லோர்க ளறிதரயான் வழுத்தினேனல், வேகவலை சுளைவிசி மீட்டுமுள்ளே வாங்குகின்ற விரைபோலத், தோகையிடத் தவன்சமுகந் தோன்றிமறை பிர பஞ்சச் சுருக்கஞ் சொல்வாம் (௧)

கருமமெனும் பசிக்களவாய்ப் போகமெனுங் கட்டமுது கட்டித்தந்து, தருபுவன வழிநடக்கத் தாபமுன் றவைதகிக்கிற் சரணமென்னுந், திருநிழலிலே யடைந்து சிரமந்தீர்ந் திடக்கருணைசெய்யுந் தேவே, யரியளிக்க வரன்றுடைக்க யான்விதிக்க நீவிதித்த வமைப்பினாலே (௨)

என்முகத்தி லறத்திறையுங் கால்விரலிற் சிறுவிதியு மெண்ணந்தன்னிற், பன்மரிசி புலத்தியனங் கிரன்புலகன் கிரதுசன பதியேயத்திரி, யென்னுமெழு வருமார்பிற் பிருகும்வர மரீசிகாசிபனையீன்றான், சன்மமனுச் சதருபைபா லளித்தபிர சூதிதோடக்கன் சேர்ந்தான் (௩)

பெருகுமவன் புதல்வியரிற் கியாதிபிருகினைச்சேர்ந்தாள் பின்சம்பூதி, மரீசியையத் திரியையன சூயைபுலகனைக்கமைசன்னதிமா தந்தக், கிரதைவசிட் டனையூர்ச்சை யங்கிரசை மிருதியங்தக் கிளர்பிரீதி, சருது புலத்தியற் சேர்ந்தார் பின்னர்பதின் மூவரைக் காசிபன் கைக்கொண்டான் (௪)

அன்னபதின் மூவரிலே யதிதிவிண்ணோ ரைப்பயக்க வதற்கிரட்டி, மன்னுதிதி தைத்தியரைப் பெறத்தனுத்தா னவரையெல்லாம் வயிறுவாய்க்கக், கன்னிமதி மனிதரையுஞ் சுரபியோ தேனுடன்கந் தருவமாதி, பின்னவையுங் குரோதவசை கழுதைமரையொட்டைபிற பெற்றுளன்றே (௫)

வினதையிடி மின்னருணன் வயினனிசா சரியாதி விகிரமீன்றாள், இனையதாம் பிரைசிவலூர்க் குருவிகுறும் பூழாதியிவற்றைத்தந்தாள், புனைகழையச் செடிகொடிக ளாதியுங்கத் துருபாய்ப்ம்பொலியத் தந்தாள், அனையசுதை யொருதலையா முரகமெனத் திரிவவெலா மளித்தாளன்றே (௬)

அவ்வருட்டை யோந்தியுடும் பணிகள்முத லானவுமவ் விழையோ நீரிற், செவ்வனுள சலசரமும் பெற்றனளான் மற்றுள்ள சிறுவர்தம்முட், கவ்வையிலாப் புலத்தியன்வா னரர்நிருதர் கின்னரரைக் கண்டான் மற்றை, யெவ்வமிலங் கிரரோடு சனபதிக்குக் காந்தருவ ரிறங்கினரால் (௭)

புலகர்சில விலங்கினையுங் கிம்புருடத் தொகையினையும் பொ ழிந்தாரந்த, இலகியநற் பிருகுவென்பான் சுவிசவுனன் றிருவினை யுமீன்றான் பின்னும், வலியசன பதிவசுவை வழங்கிடச் சூரியன் மருத்தை வழங்கவெல்லா, வுலகமுநின் னுடைத்தாகி யொடுங்கு கையி னின்னிடத்தே யொடுங்கா நிற்கும் (அ)

இத்தகைய தேவருக்கு மசுரருக்கும் பிறவுயிர்க்கு மின்ப மாக்கக், கத்துகடற் புவிமீதென் முகத்திடத்தும் புயத்திடத்துங் கவானின் கண்ணும், வைத்தவெந்தன் பாதத்தும் வந்தநாற் குல த்தார்கண் மரபுக்கான்ற, பத்தியுள தருப்பணநற் பலியவியா தியி ற்றிருத்தி பண்ணவைத்தாய் (௯)

ஆங்கவராங் கியற்றுதலுக் கருமையென வயர்கின்ற ரதனு லத்தை, வாங்கிமன மகிழுகின்ற வானவரும் பிறருமெல்லா மய ங்கா நின்றார், வீங்கரவ மந்தரத்திற் பிணித்துவலித் திடவந்த விடத்தாலஞ்சி, யேங்குமெமக் கபயமென நஞ்சுண்டா யிக்காலு மிரங்கவேண்டும் (௰)

என்றுதொழு மமரர்குழாத் தெதிர்நின்ற பிரமனைப்பார்த் தெவற்றை யுங்கண், ணின்றியுந்தேர் சருவஞ்ஞ னறியான்போல் வினவுகின்றான் யாதிஞலத், துன்றுகடற் புவியிலுளோர் கருமத் திற் கிடையூறு தோன்றிற் றென்ன, அன்றுதலை பறித்தவனுக் கன்றுதலை மிகவணக்கி யறைகுவானால் (௰௧)

தேவர்குறை முடிப்பதற்குத் தேவர்க்குந் தேவரெனச் செய் தவெங்கண், மூவர்குறை முடிப்பதற்கு மும்மலத்தின் முழுகியெ ழுமுயற்சி செய்யுஞ், சீவர்குறை முடிப்பதற்குஞ் செயற்குரிய செய்வதற்குந் தேகங்கொண்ட, எவர்குறை முடிப்பதற்கு மெம் பெருமா னின்கடைக்க ணிருப்பதாலும் (௰௨)

வென்றாளுங் காத்தாளும் விதித்தாளும் வேறன்றி விளங்கு நின்னான், முன்றாளும் பின்கோளு முடிவதன்றி யாராலு முடியா தென்றே, கன்றாளும் பசுவனைய கருணைமர கதவடிவக் கன்னி யான், மின்றாளு நின்றாளு மென்றாளு மெனமனத்தின் விரும்ப லாலும் (௰௩)

அன்றைவரை யாண்டவனு மடியேனு நெடுங்கால மமைவ தாகப், பின்றைவரை யாடிவரைப் பேரிரவும் பகலுமெனப் பிழைக்கின்றோரும், இன்றைவரை நின்சரண கிரணவிர ணியதருண விருபூமீது, கொன்றைமுத லருச்சித்த குறைவில்பலன் கைகூடிக் கொண்டதாலும் (௰௪)

மறையாலு மென்னாலும் வாக்காலு மனத்தாலு மறிபெருத பிறையாலுந் திருமுடிநின் பிறங்குமல ரடியின்று பெற்றதாலே, குறையாது நினைத்தவெலாங் குறையாது முடியுமெனக் குறையைச் சொல்வேன், நிறையாதெவ் வுயிர்களுக்கு நேருதரந் தனை வளர்த்து நெறியிலாமல் (௰௫)

வேறு.

ஒருஞ் சிவனின் போகத்திற் குறையுளா முடலம்
தேருங் காலதற் கன்னமா தரவது தேரிற்
பாருளா மந்தப் பாரினைப் பலன்றரப் படுத்தும்
நேருளா ன்றனை யின்றியெக் கருமமு நேரா (௰௬)

ஆனதாலவர் கருமங்க ளறமுடி யாமல்
ஈனமாதலா லெங்கட்குந் திருத்தியிங் கில்லை
ஞானநாயக நானிலத் தவரெலாம் பிழைக்குந்
தானமாகிய தொழிலுடை யவன்றனைத் தாராய் (௰௭)

என்னுங் காலையி லீசனு மதற்குடன் பட்டான்
முன்னர் நின்றவம் மான்முக நோக்கினன் மொழிவான்
உன்னதாகிய கூளையினி லொன்றுபோ யுலகின்
மன்னு கங்கையின் மகனெனத் தீரத்தில் வருக (௰அ)

என்ற வெம்பிரான் சொல்லினுக் கெதிருண்டோவென்று
நன்று நன்றென நாரணன் பணிந்தனன் யாரும்
இன்று தொட்டுநற் றிருத்திக ளெய்துவ மென்னக்
குன்ற வில்லிபால் விடைபெற்றூர் தம்பதிகூட (௰௯)

காக்க வந்திடிற் கரியதன் றலைவனற் றொழிலுக்
காக்கம் வந்ததா லலைவறு மவனலை வரவே
தூக்க நின்றவென் றோளலை வருமெனத் துள்ளி
யூக்க மோடுகொண் டோடுறுந் துள்ளுறு முவணன் (௨0)

சலத்தை வேண்டிய தொழிலுடை யவன்சனிப் பதிலென்
குலத்து ளோரெலாங் குறையற வாழுவ ரென்றோ
வலத்து நீரிறை வெரிநுற மகிழ்ந்துவா னதியிற்
பலத்து நீங்கின தோங்கின தொருபெரும் பகுவாய் (௨௧)

சென்று வானலந் திருத்திய தசனதி வருவான்
துன்று நீர்க்கடல் குடித்தவர்க் குரைத்தவென் சுவாமி
தென்ற மிழ்ச்சொலுக் குரியவ னென்பது தெரிந்தோ
குன்ற ழித்தவேற் குமரனை மஞ்ஞை கொண்டாடும் (௨௨)

மலிதரச் சதுர்த்தியெம் மன்னைப் பூசனை
பொலிதர நடத்துமிப் புகழன் றேன்டில்
கலியிலை யுழுதிடி லெமக்கு மென்னக்கண்
டெலிபெடுத் தாடின வேந்தல் யானையை (௨௩)

எய்பெய ருலகிடை யெங்கு மாக்கவே
நம்பிய தொழிலுடை நாதன் கங்கையில்
அம்மதோன் றுவனெனு மாசையோ வனம்
தம்மிறை யவனைக்கொண் டாடித் தாவுமால் (௨௪)

என்பெயர்ப் பயிற்சியி லியைந்த நாவினன்
பின்பெயர் கல்விமா னென்னும் பேறுளன்
நன்பெய ரான்மிக நண்ப னென்றுகொண்
டன்பொடு காலெடுத் தாடும் வன்கலை (௨௫)

எம்முது காற்றிட விருந்த வீர்ம்புனல்
மைம்முகி றழைக்குமா றேற்ற வண்பிணை
இம்மர புதிப்பவர்க் கியைந்த தென்னவோ
கைம்மலை யிறையைக் கொண் டாடிக் காமுறும் (௨௬)

வேறு.

இன்ன வன்றொழி லிலாவிடி லெம்மிறை யவர்க்குப்
பின்னை யுண்டிவே றிலையென வறிந்ததோ பேசும்
அன்ன வன்றமர்க் காதரவாமென வறிந்தோ
தன்ன முற்கிறை வெரிநுறத் தகர்குதித் தாடும் (உஎ)

எங்கு லத்தினைக் காப்பவ னிருநிலத் துதிப்பான்
கங்கு லம்பக லெமரைக்கை தொழுமெனுங் கருத்தோ
அங்கு துன்றுவார் நெருக்கற வேத்திர மெடுக்குஞ்
செங்கை யானுநற் றிமிலைசைந் திடநடஞ் செய்தான் (உஅ)

பொங்கு செல்வமுன் னூரினிற் குறிச்சியிற் புகுந்து
தங்கள் வெங்குறை சாற்றினர் சாரும்வாழ் வைப்போல்
அங்கணன் கைலைப்பதி யடைந்தவ ரெல்லாந்
தங்கள் வன்குறை தீர்ந்துதந் தானநண் ணினரால் (உகூ)

ஒற்றை நல்விடை யானிட முற்றவ ரெல்லாம்
பற்றினர் கணல் விடையினைப் பணிந்தனர் போனார்
அற்றை மாதவன் கருமலை பொன்மலை யபரம்
பெற்ற தாமெனப் பெருந்திரைப் பாற்கடல் பெயர (ஙய)

ஆவயிற்கன மூர்தரு மரிநக ரடைந்து
பூவயிற்புகும் புனிதபோ தாயனன் புலவர்
வாவலிற் றவம் வைகினும் வழங்குதற் கரிய
நாவியிற்கவி வல்லவ னூரணற் கண்டான் (ஙக)

தூவாத சத்திரு நாமங்க ளுவுறத் துணைக்கை
அவாவி னிற்சடை முடியுற வானந்தம் பெருக
உவாவு கண்டுநீ ரொழுகுகல் லெனவிழி யுகுப்ப
திவாநி சம்பல செய்தவ மென்னெனத் திகைப்பான் (ஙஉ)

ஆடுவானுடல் புளகிதங் கொளவங்கு மிங்கும்
ஓடுவான்கிடந் துருளுவா னுவகையம் பெருக்கால்
பாடுவானிது பண்ணுத லென்றறி யாது
தேடுவான் றனைத் தெரிவறி யான்மகிழ்ச் சியினால் (ஙங)

ஐயனேயெம தன்னையே யரும்பெறற் குருவே
செய்யனே சிவநேசனே திருவளர் மருமத்
துய்யனேமறை துறந்திடு நீசரைத் தொலைக்கு
மொய்யனே கரிமூலமென் றழைத்திட்ட முதலே (௩௪)

கரியனேபிர மாதியர் தம்மையுங் காக்கும்
பெரியனே யரும்பெற லின்பம் பிறங்கும் வைகுண்ட
புரியனே யெமைப் போலியர்க் குப்புலப்படுத
லரியனே திதிக்குரியனே யடியருக் கன்பே (௩௫)

தேவனே யெனக் கெளிவந்த திறமறி யேனென்
றுவலாற்றனைத் துதித்தவ னடிதொழ லோடு
மேவதுன் கருத் தீருவனிசையென விசைத்தான்
காவலாற்றிடுங் கருணையங் கருமுகில் வண்ணன் (௩௬)

ஆங்குரைத்தலு மடியனேன் கருதியதாயிற்
றோங்குநல்லறம் வேள்வியோ டுலகுயி ரனைத்துந்
தீங்கிலாதவை யாயின வெனத்தெளி வுளத்தின்
வீங்குகின்றவன் வினைதசெய்க் கொடியனே வேண்டும் ()

இல்லறத்தினர் கந்தமூ லங்கள்கொண் டினைத்த
வல்லறத்தினர் போன்றன ரவர்துணை யாற்செய்
நல்லறங்களும் வேள்வியு நழுவின வதனால்
வல்லமாரியு மாறின செய்வதென் மண்ணில் (௩௮)

காக்கநின்றனே குலந்தவங் கல்விதாளாண்மை
ஊக்கமான மோர்வறங்களு மினையவு மொக்கப்
போக்க நின்றது பசியதைப் போக்குமா புவியை
நோக்க வென்றவ னிரத்தலு நுவலுவா னிமலன் (௩௯)

நீக்கில்வேத நித்திய நைமித்திக நெறியாவு
நாக்கொண் டேசெயு மறையவ ரனுதின நம்மைப்
பூக்கொண் டேமிகப் போற்றினர் புகலடைந் ததற்குக்
காக்கொண் டோங்கிய கங்கையி லெங்கணுக் காணும் ()

அன்னவாறெனத் தங்கிசத்தா லவதரித்தோற்
குன்னுமாமர பியல்பத்து மொருங்குகைக் கொளலாற்
மன்னுமாமர பாளனென் றொருபெயர் வழங்கி
நின்னையாங்கவன் புரோகித னாகவு நேர்வாய் (௪௧)

ஆதிநீமுத லனைவரு மியற்றுபூ சனைக்கோர்
சோதியெங்களை யமையொரு நரனெனத் தோற்றிப்
போதிபூவினைக் காத்திட வென்றனன் பொருப்பாள்
பாதிமேனிய னருளன்றிப் பலித்திடா மையினால் (௪௨)

என்னசெய்வ தென்றறிகிலன் கங்கையி னிடையே
முன்னமூழ்கி னன்பாதலத் திடைத்தவ முயன்று
ஞின்னகாலையிற் றவப்பய னியைந்ததி னாலும்
பின்னர்யாவரும் பிழைக்கவோர் பெருந்தொழிலெடுப்பான்

தேவர்கோ னுக்குஞ் சிவனுடைத் தோழற்கு மருக
னுவனன்னவற் காவன வறைதியாக் குதியா
னுவலாயென மறைந்தன னறுபூந் துளவக்
கோவை மாலைகொள் குருமணிக் கௌத்துவக் கோமான்.
(௪௪)

ஆ திருவிருத்தம் உ௬௧.

௬-வது மரபாளனுற்பவப் படலம்.

மாற்றத்தி னெனக்குள வலிமட்டாகவே
தோற்றத்தின் சுருக்கத்தைச் சொல்லினே னினி
சேற்றத்துங் கங்கையின் செல்வன் றேற்றத்தி
னேற்றத்தை யியம்புவா னெடுத்துக் கொண்டனன் (௧)

புரத்தினை யெரித்தவன் புகழ்முத் தேவர்க்கும்
வரத்தினை யருள்பவன் மார்க்கண்டர்க் கெம
னுரத்தினி லுதைத்தவ னுரிமை யாயவன்
சிரத்தினி லிருப்பது தெய்வக் கங்கையே (௨)

கவனமாக் கலுழனூர் காவற் றேவுட
னவன மூர்தரு மயனுதி யாகவே
புவன மூன்றையும் பொடி பொடித்துப் பூசிய
சிவனிற மாவதுந் தெய்வக் கங்கையே (௩)

ஏந்திய நர்ன் மருப் பியானை மாமகள்
காந்தனைக் குறமகள் காதனுதனை
யாந்தமிழ்க் காதியா சிரியனுகிய
சேந்தனைத் தந்ததுந் தெய்வக் கங்கையே (௪)

பரிதியின் குலம்வரு பகிரதன் றவத்
துருகிய சிவன்றர வுயிர்கள் வாழ்ந்திட
விரிதிரைப் புவிமிசை விரையுங் காலையிற்
றிரிவித மாவதுந் தெய்வக் கங்கையே (௫)

வாவுறுங் குதிரையால் வந்த சீற்றத்தர்
மூவுலகத் தின்கீழ் முற்றச் சாம்பராய்
வீவுறுஞ் சகரர்கள் விமோசனம் பெறத்
தேவுல குய்ப்பதுந் தெய்வக் கங்கையே (௬)

யாரிது பெற்றவ ரருளுந் தந்தைக்கா
தாரமற் றூல்விடேன் சமரஞ் செய்யெனும்
வீரனை வென்றுதன் விரதங் காத்தநற்
றீரனைத் தந்ததுந் தெய்வக் கங்கையே (௭)

பாட்டினி லுறும்புகழ் பரவு மேழியர்
தேட்டினிற் செலவினிற் சிறந்த தென்கரை
நாட்டினி லுயர்ந்திடு நாகரீகம்போ
லூட்டுறு நதிகளி லுயர்வாங் கங்கையே (அ)

பெரிய வானகத்திலும் பிளிறு தண்கடற்
றரணிமா நிலத்திலுஞ் சர்ப்பம் வாழ்வதற்
குரியபா தலத்தினு முள்ள சீவர்க்குந்
திருவமு தாவதுந் தெய்வக் கங்கையே (௯)

காவிரிவாணி காளிந்தி காமர்கோ
தாவிரி நருமதை தவிழுங் கன்னிவண்
பூவிரி யிறைநடன் பொருந்தி யெழுதாய்த்
தீவிய மாவதுந் தெய்வக் கங்கையே (௰)

வேறு.

என்றபுற் புதவண் கொங்கை யெறிவளைத் திரைக்கை யாடு
மின்றிகழ் விழிவெண் முத்த வெண்ணகை யவடன் பாவி
லான்றமு வேணிசங்க மவதரிப் பிடமென் றெண்ணி
மூன்றுகாலமு முணர்ந்த முனிவர்கள் முதல்வன் வந்தான் (௰௧)

வரன்முறை கங்கையாடி மங்கையா யிரநாமத்தைப்
பரமவெஞ் ஞானத்தோடு பழிச்சனு முவந்து வந்தாள்
சரண்மலர் வீழ்ந்தானாசி சாற்றிட வெழுந்தான் ஞான
மருவுபோதாய னன்றாய் மலரடிக் கறிவிப்பானால் (௰௨)

வேளினை யெரித்தோன் கூறு மெய்வர முடியிருந்தாய்
கேளென லென்னை காவற் கிருபையங் கடலாங் கண்ணன்
றுளிடை யிருந்தா யன்னோன் சாற்றிய கேளென்றோதல்
மூனுடை மிகையதன்றோ முனமெலா முணர்தேவிக்கு (௰௩)

ஆதலா லறைவ தென்னே யன்னோநின் வயிற்பிறக்குங்
காதலன் கனகநாட்டைக் கதுமென வடையும் வண்ணம்
நீதர வேண்டுமிந்த நெடுவர மென்று தாழ்ந்தான்
போதமு மயனமுஞ்சேர் புனிதசூத் திரத்துநாதன் (௰௪)

விரைமலர்க் குழலாளிந்த விடையொடு வரமும் பெற்றான்
றரையினை நீங்கியேகித் தருமிழற் பெருமான் பக்கல்
வரன்முறை யெறிந்தாழ மகிழ்ந்தவ னாசிகூறி
யிருவென விருக்கை காட்ட விருந்தவம் முனியை நோக்கி (௰௫

என்னிவன் வருகையென்ன வீசனாருளாற் கங்கை
மின்னிடை யுதிப்பா னென்னான் விருத்தியே விருத்தியார்க்குந்
தன்னுடைக் கலையனென்று சாற்றினன் கமல நண்பன்
என்னவ னிங்குப் புக்கா லாதரிப்பது நின்பாரம் (௰௬)

அனையவன் றேன்று மேற்ற மருந்தவமென் றெல்லார்க்கும்
நினைவிடை யிருக்கவேயு நின்சொலு மதின்மேற் கூடில்
சனகவி மணமும் பெற்ற களிப்பன்றோ கடமையன்றோ
தனையனைத் தந்தை தாயர் தாங்குதல் சாற்றலென்னே (௰௭)

இங்கவன் புகுந்தகாலை யிமையிலீ ரென்முன் காட்டி
தங்கிடங் கொடுத்துப் பின்னைத் தவமுனி போதுங்காறுங்
சங்கையின் புதல்வ னுங்கள் கையடை யென்றுகூறப்
புங்கயாதவ னுந்தாழ்ந்து போயினன் விடையினோடும் (௰௮)

அங்கிவற் குருவங்காட்டு மன்னையு நதியுட் புக்காள்
கங்கியன் மஞ்சுவைத்துக் கருவிழி மீன்களாழ
வங்ககட் டழுங்க லெய்த வமுதவாய் வெளுப்பக் கங்கை
மங்கையுங் கருப்பங் கொண்ட மாதரைப் போன்றுளன்றே (௰௯

எழுமுறைவைந் திரட்டி யிருபத்தேழ் பதினொன் றென்பான்
வாழுமீ ராறிலேற்ற வலிபெறக் குணங்கள் வேலை
சூழுமே ழோரையாதி சுபம்பெறு மிலக்கினத்திற்
கேழுநீர்க் கங்காதிரங் கீண்டிட வுதித்ததன்றே (௨௰)

வேறு.

அக்கர வம்புனை யமலற் கன்பினோ
னக்கர வலத்தின னரிய வைந்தெனு
மக்கர வஞ்செப வாயனுரிய
னக்கர வொழிப்பவ னுங்குத் தோன்றினான் (௨௧)

எம்மர புதிக்கினு மிவனிலா விடிற்
றம்மர பில்லெனச் சமய யாவரு
மம்மரங் கொழித்திட வரத்தின் மேன்மையா
லிம்மர பாளனங் கெழுந்த காலையில் (௨௨)

கங்கையங் கன்னியங் கெழுந்து காதலைச்
செங்கையி லெடுத்தனள் சென்னி மோந்தன
டங்கயற் கண்ணரு டகைய நோக்கின
ளங்கனி வாய்திறந் தறைய லுற்றனள் (௨௩)

இந்நிலத் திருந்துனை யெடுத்து யர்ந்தவான்
பொன்னுல கத்திடைப் புகுத்துவே ணதிற்
சின்னநா ளிருப்பையேற் சிறப்பெலாம் வரு
மன்னையென் சொல்லினுக் கமைதி யென்றனள் (உச)

வடித்த மாதாவுரை மறுப்பனோ நினக்
கடுத்தது செய்கென வன்பிற் கோடலு
மெடுத்தனள் கைகளா லிருநிலத்தை விட்
டுடுப்பதிக் குயர்ந்தபொன் னுலகுள் ளிட்டனள் (உரு)

கண்டனர் வானவர் கங்கை மைந்தனைக்
கொண்டனர் போயினர் கொற்ற வேந்தன்பா
லண்டர்தம் பெரும்புக ழமையுஞ் சால்புடை
விண்டல வேத்தவை வியந்து நோக்கினன் (உசா)

மேனகை யுடைவள வேயை வென்றுமே
வானகை யடப்பை யேந்திட வரம்பையாம்
பூனகை மாதுமுன் புறநடித்திட
மாநகைத் திலோத்தமை கவரி மாறவே (உஎ)

ஊரினில் வந்தவ ளொருத்தி தும்புரு
நாரதர் யாழுட னயந்து பாடவும்
பூரண கலசநற் புனித ரேந்தவு
மாரண முனிவரோ டமரர் வாழ்த்தவும் (உஅ)

எண்ணரு மரம்பைய ரினிய வாசநெய்
புண்ணிய தீபமின் புதையத் தாங்கவுங்
கண்ணகல் வாயடி கடிப்புத் துந்துபி
விண்ணுல கத்தின்மேல் விம்மி யோங்கவும் (உகூ)

பிடித்திடற் கரியவான் பிறங்கு பேரொளி
யிடிக்கொடி பழுபமென் றிமைத்து நிற்கவும்
நெடித்திடுந் தருநிழல் நிலவுற்றுலென
குடைக்குரு நிறத்தொளி குலவி வீசவும் (ஙய)

சூரர மகளிராஞ் சனஞ் சுழற்றவும்
வேர்வெறி யாலவட் டங்கள் வீசவுஞ்
சாரரி சந்தனத் தரு வழங்கின
சீரிய பரிமளந் திகந்தஞ் செல்லவும் (௩௧)

சுனகமா மலைமிசைக் கார்மி னேடுறைந்
தெனவரி யாசனத் திந்திராணியோ
டநகநற் றருநினைந் ததையளிக்கவும்
புனைமணி முடியினன் பொலிந் திருந்தனன் (௩௨)

சுவர்க்க லோக்கிய வழித் தோன்று மற்புத
மெவர்க் குறைத் திடவரு மேனையோர் பதம்
நவர்க்கமே போலுமா னுடிப் பார்த்திடிற்
பவர்க்கமே போன்மிதைப் பார்த்த கண்கட்கு (௩௩)

சோமனே முக்தியர் சுகிக்கக் காமுறுங்
காமனே யனையவன் கண்ணுக் கற்றைநாட்
பூமனை யிந்திரை பொருந்த வாழ்வுறு
மாமனை நிகர்த்தனன் வான வேந்தனே (௩௪)

ஆனையநற் காட்சியோ டமரர் சூழப்போய்ப்
புனைகழற் காறலை பொருந்தத் தாழ்தலு
மனமகிழ்ந் தாசிகள் வழங்கி வாசவ
னினமணி யாசனத் திருத்திக் கூறுவான் (௩௫)

திருத்தி யாவர்க்குஞ் செய்ய வந்தனை.
விருத்தி நின்குல மேவச் சில்பக
விருத்தி யிச்சபை யினிதென் றியாவர்க்கு
மருத்தி யென்றன னவனு நேர்ந்தனன் (௩௬)

ஆ. திருவிருத்தம் ௨௱௭.

எ-வது மயனுடன்படு படலம்.

தொழிலெ லாந்தனுந் றேன்று மாசெயு
முளவு கொள்பவ னுற்பவஞ் செ ஞேம்
வழுவில் சிற்ப நான் மயன் முரண்டினைக்
கழுவுமா செய்த கதையுங் கூறுவாம் (௧)

காறு கொண்டுழுங் கங்கை மைந்தனவ்
வாறிருந்தபி னமரர் வான்சபை
யேறநோக்கின னினிய கற்பக
நாறுமாலையா னவிலு வானரோ (௨)

எண்டிசா முகத் தெழிலி போலிவ
னுண்டெனுவிடி னுண்டி யில்லையால்
பண்டி கொண்டெழும் பசி தணித்திடு
முண்டி யில்லையே னுலக மில்லையால் (௩)

மாண்படுந் தொழிலாதி வாங்குறும்
நாண்படுந் தொழி லளவு நாடுங்கா
லூண்படுந் தொழி லுழுவ னில்லையேல்
வீண்படும் படும் மேலுங் கேட்பீரால் (௪)

கொழுந் தருப்பையின் கோடு நேரென
வழுந்தி ருக்குமவ் வறிவினு னினைங்
குழுந்தொ ழிற்குமே னுண்டொன் றென்றிடி
லெழுந்தி ருப்பிரா லியம்பி யேறவே (௫)

புயலி னூர்தியப் புலவர் கோமக
னயலி ருந்தவர்க் காங்குரைத்தனு
மிபனு மைந்தொழிற் கெதிருண்டோ வென
மயனெ ழுந்தனன் வாய் துடிக்கவே (௬)

கலிவிருத்தம்.

சூரறுத் தவனெனச் சொல்லும் வெற்றியு
மூரறுத் தவனென வுரைக்கு மூற்றமும்
பேரெடுத் தாழியான் பெற்ற தோற்றமு
மாரியற் றியபடை யதனி லாயது. (௭)

அலையிடை வாழ்வோ னலரின் வாழ்வோன்
மலையிடை வாழ்வோன் மற்றும் வாழ்வோர்
நிலையிடை தராதுசெய் நிபுணத் தெந்தொழி
லுலையிடை வராரெனி லுய்யு மீட்டரோ. (௮)

விண்மணி வெம்மையான் மெலிந்து கூறிய
பெண்மணி மனுமகள் சமிக்கைப் பேருடைக்
கண்மணி யேதுவாற் கடைய மண்டலத்
தொண்மணிக் கதிரெட்டி னென்று தேர்ந்ததால். (௯)

சிந்துசூழ் புவியிடைச் சிந்து சின்மையால்
வெந்திடுஞ் சக்கரஞ் சிவிகை சூலம்வேல்
முந்துள பிறவுமம் முராரி பிங்கல
னந்திவண் ணன்முரு காதிக் கிந்தனன். (௰)

வனிதையார் கழுத்திடை மதிக்கு மெங்களாற்
புனையலாந் தாலிபோய்ப் புகாத காலையின்
மனைவியார் கணவனார் மக்க ளார்வரு
மெனையவாழ் வுண்டுரை யிடமுண்டாயினே. (௰௧)

எய்யெறி குத்துவெட் டிறையுண் கத்தரி
நெய்யரி மழுதுளை நிறுசெ துக்குழு
தைபெழு தறுமுக தாளி யாதியாச்
செய்யெனி லவர்பாற் செலாம லோடுமோ. (௰௨)

தளையினுங் கடையினுஞ் சருவ வூரினும்
வளைதரு கடலினு மன்ன ரில்லினும்
விளைதரு நிலத்தினும் வீட்டி னும்மடுக்
களையினுங் கரையினுங் கருவி யெம்மதே. [௰௩]

தேவர்க்கு முங்கள்ளை சிவக்கக் கூப்புறு
மூவர்க்கு மைந்தனு முத்தி ரைக்குள
வேவர்க்கு மைமவரா மெங்களா லன்றிச்
சீவிக்கு மாறுண்டோ தெரிய வெண்ணுங்கால். [௰௪]

கலிநிலைத்துறை.

வயிற்றை யாள்வது விளைவந்த விளைவினை மரபான்
முயற்சி கூட்டுறு முயற்சியுங் கருவியான் முற்று
மியற்று மக்கரு விக்கெலாம் யாங்களே யென்றாற்
கயக்கி லேர்தொழி லாளர்மே லெவருளர் காட்டீர். [௰௫]

நெற்குத் தானலா மலுங்கொழு நெட்டல முதனால்
கற்கு மெம்முடைக் கருவியுங் காரண மன்றோ
கொற்குத் தானென்றே பிறவிலை யென்பல கூற
னிற்கு நேரிலை யைவரெந் தொழிற்கு நேரிலையே. [௰௬]

பெருமை மிக்குள விலிங்கமே முதலிய பிறவா
முருவு மிக்குள தேவரு மெங்கணாற் பத்தி
குருவளித் திடென் றுரைத்தலுங் கொடுத்திருந் துவட்டா
வொருவ னைவரு ளொருவனே யென்பது முணர்வீர். [௰௭]

ஒற்றை யாளியந் தேரினை யமைக்கவு முருக்
கற்றை வெண்மதி விமானத்தைக் கணிக்கவுங் கடலிற்
பிற்றை நாளினிற் சேதுவை யமைக்கவும் பெரிதாச்
சற்றும் யோசனை செய்கிலேம் பிறர்துணை தாங்கேம். [௰௮]

வில்லு வேழமா யுலகொரு மூன்றையும் வெல்லும்
வல்ல மாரனுஞ் சூரனு மிலங்கை மன்னவனு
மெல்லி யுங்கன மாதல ரெனப்படு மிசையேஞ்
சொல்லு சுற்றத்தின் மிசையினே வுழவனைத் தூக்கல். [௰௯]

என்று தற்புகழ்ந் தைவரின் மயனெழுந் திருக்க
நன்று சொல்லினை நுந்தொழி னயமிலை யென்ப
தன்று நான்சொல்வ தியார்தொழிற் பயனின்றேற் பஞ்சந்
துன்று மென்பரத் தொழிலன்றோ வுடலினைச் சுமக்கும். [௨௰]

ஆகை யானுமுந் தொழிற்குநீ ரன்றியும் விருத்தி
யோகை யாற்செய்வர் யாவரு முடன்படல் வேண்டு
மீகையாற் செய்து கெடுமனை விடுதி யீங்கிவனுக்
கீகை நன்றிவன் றனையழைத் தேகுதி யென்றான். [உக]

சொல்லு மிப்புரா ணத்தினைத் தொடர்ந் தரங்கேற்றும்
வல்ல ராமசா மித்துரை செல்லப்பன் மைந்தன்
சொல்லை யாவருந் தலைமிசைச் சுமப்பது போல
வல்ல வென்றுரை யாதமைந் தான்மய னங்கே. [உஉ]

எம்மை யிந்திர னிகழ்கல னுழவனுக் குளவு
மெய்ம்மை யேசொனான் மேலினி யவன்சொலை மறுத்தல்
செம்மை யன்றெனத் தெரிந்தவ னுடன்படத் தேவர்
வெம்மை யற்றமா தவர்புக ழுழவன்வாய் விரும்ப. [உங]

செவியுற் றோர்களுக் கினியதாய்த் திகழ்சதுட் டயத்தி
லவிய மற்றசா மத்தினுக் கேற்றதா யழகார்
கவியி னுற்றவொண் பொருளினுக் கிணையதாய்க் கணக்கோர்
திவியந் திவ்விய மென்னவாய் மலர்ந்தனன் செல்வன். [உச]

ஏற்ப டைக்கல வலிமையுங் கூர்மையு மெடுத்து
வெற்பு மொய்ம்பவன் விறலினை விளக்குமா போலச்
சிற்ப நூலினன் றற்புகழ்ச் சியிற்சொல் கொற்புகழ்ச்சி
பெற்பு கழ்ச்சியே யென்றனன் மயனுக்கு மினிக்க. (உரு)

என்ற வாசகங் கங்கையின் கான்முளை யியம்ப
வென்ற சொல்லின தாழமுஞ் சுருக்கமும் வியந்தா
ரொன்று சொல்வதே னுழவனுக் குறையுளோன் றியற்றி
யின்று தொட்டுநீ சேர்ந்தமை யென்றன ரெலாரும். (உசு)

கலிவிருத்தம்.

விடுதிபொன் றியற்றினன் விமானம் போலவே
சடிதியின் மயனுமுந் தலைவன் பார்சொலக்
கடிதின்வந் தனர்மற்றைக் கம்பர் நால்வரும்
வடிவிலா வமரரு மகிழ்ந்தங் கெய்தினார். (உஎ

துலங்கிய முகிற்பரி சுமந்து செல்லவு
மிலங்கையூ ரழித்தவ னிவர்முன் செல்லவும்
கலங்கலி றங்கணங் கலந்து சூழவு
மலங்கொ ழும்படையனை யழைத்தங் கெய்தினர் (உஅ)

பொருந்துமா தவத்தனின் புரோகி தன்மறை
திருந்துநா வினனிங்கு சேரு வானவன்
பரிந்தவா சகப்படி படரென் றேகினு
ரருந்தபோ தனர்மிக வாசி கூறியே. (உகூ

விடுதிவிட் டைவரும் விடைகொண் டேகினர்
மடிவில் வானோர்களும் வரந்தந் தேகினர்
புடவியாண் மகனுமப் புரோகி தத்தவ
னடையு நாளிதுவென வாங்கிருந்தனன். (௩௰

மயனுடன்படுபடலம் முற்றிற்று.
ஆ திருவிருத்தம் ௩௨கூ.

எட்டாவது

உபயசர்ப்பிணிப் படலம்.

கலிவிருத்துறை.

ஊட்டு மோர்த்தொழில் விருத்திக்கு மயனுடன் படவே
கூட்டி வான்பதி யுழவனங் கிருந்தவா குறித்தா
மீட்டு போதமார்க் கத்தவ முனிவர னிவற்குக்
காட்டு சர்ப்பிணி யிரண்டையுங் கண்டவா கரைதும். (க)

இருந்த பூமிபா லகனிட மிக்குலத் தவர்க்குத்
திருந்து மாமறைப் புரோகிதன் றிருச்சடை முடியன்
பொருந்து கண்டிகை மாலையன் புண்ணிய நீற்ற
னருந்த வத்தின னனபோ தாயன னடைந்தான். (உ)

முன்னர் மாதவர் மிக்குலப் புரோகித முனிவன்
றுன்னு வானவன் சொற்படி நடத்திநீ யென்று
ரன்ன மாதவ னேயிவ னென்பதை யறிந்தான்
சென்னி மேற்கரங் கூப்பின னெழுந்தெதிர் சென்றான். (௩)

எதிர்கொண் டான்பணிந் தான்மணி யாசனத் திருத்தித்
துதிகொள் கங்கையின் சுத்தநீ ராலடி துலக்கி
மதுவி ரிந்திடு மலர்கடூய்த் தூபதீ பாதி
யிதமி குந்திடு பணிவிடை யியற்றின னேந்தல். (௪)

அன்ன வன்றனக் காசிக னன்பினோ டருளி
நின்ன னுங்குலப் புரோகித னெனமுன னேர்ந்தே
யென்ன தாதலி னவன நினக்குநா னறைய
மன்னு பூதலம் விட்டிவண் வந்தன னென்றான். (௫)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆண்டவன் குருநீ தந்தைநீயாய்நீ யாவன வெனக்கிவ னுரைக்க, வேண்டிவந் தனையென் மேலினித் தவமென் மேதினி மன்பதை யெல்லா, மீண்டிய வலிய ரோவென முனிவ னியம்புவா னெழிலியொன் றேபல், லூண்டர மாட்டா துன்றொழிற்கூடி யுதவக் காராளனென் றுற்றாய். (௬)

அவ்வித நின்னூற் காரினாற் பிழைக்க வமைந்திருந் தார்கணிங் கிருந்தாய், குவ்வயி னுள்ளோர் மாரிகா ரியமாங்கொழுவளம் விரும்பின ரென்ன, வொவ்வுமென் றொழிற்கே யுரிமையம் மழையே லோரிரண் டானசர்ப் பிணியை, யிவ்வயின் விளங்க வுரையென வணங்க விளவற்கு முனிவர னியம்பும். (௭)

ஆதிமுன் னாளிற் புதன்கவிகூடி லதிமழை யவற்றின்பின் மூன்றிற், போதுறிலில்லை பூசங்களாயிற் புகுந்திடி லற்பம் பின்னேழி, லோதுறிற் சிலவா மனுடமே முதலா மொன்பதிற் புகிலநா விருட்டி, தீதறவந்த திரண்டினிற் கூடிற் றேசம்வாழ் பெருமழை யாமால். (௮)

கைம்முத லைந்து பரிசெங்கை யிரண்டு காகப்புள் ளாதிமூன் றிவற்றில், வெம்முது மகனூற் றுலுஞ்சே யுறினும் விரும்பிய மழைபெயு மென்ப, விம்மரபன்றி யிரேட்டோ டொன்றி லிருவரி லொருவர் நின்றாலுஞ், செவ்வையி லிருவர் நிற்பினு மந்தத் தேயத்தின் மழையிலை தெளிக. (௯)

முச்சலராசியிற்குசன் றனிக்கின் முதிர்மழை மற்றைபொன் பானி, விச்சைநீட் டிக்கின் மழையிலை மன்னியீங்குமி னெள்ளள வில்லை, மச்சத்தின் கடையின் மாட்டுடை முதுகின் வருப்புலித் தலையிற் சுன்மருவி, னச்சத்திற் படுக்குஞ் சிறுவிலைக்கால மவ னியிற் பெருகுமென் றறிக. (௰)

கும்பம் வில்லாடு துலைவிடை பெண்சேர் குருமழை பொழி யிடங் காட்டான், வெப்புலி கன்னி தனுசொழி யிடத்தில் வெள் ளிரன் மழைதருஞ் சனிக்குப், பம்புமூன் றைந்து பதினொன் றில ரசன் மழையின்றிப் பஞ்சத்திற் படுப்பா, னம்பிரு குக்கேழிட நின்ற குருவு மவனியின் மழைவிழ வொட்டான். (௰க)

பச்சைசுக் கிரனுக் கிடையினி னின்ற பானுமத் தியத்திலக் கதிருக், கச்சணி செவ்வாய் கூடிமுன் னிற்கி லனுவிருட்டி யாற்பெ ரும்பஞ்சம், மச்சம்வில் லரிதேண் மாட்டில் வக்கிரித்த மங்கலன் சுன்மழை காட்டா, னுச்சிதப் பொனுக்கே ழிராகுசேய் சனியி லொருவனு மழைதரான் பஞ்சம். (௰உ)

அன்னவர் குருவைக் கூடினும் பஞ்சமாரலோ டருஞ்சனி யாதன், மன்னிரா காதல் கூடினும் வறட்சி மன்னிய பஞ்சமாங் கேது, சுன்னிரா கரச னல்வரு மாறித் துன்றிடின் மழைபற்ப மிவருண், மன்னிரு வருக்குப் பத்தினின் மற்றவ் விருவரி லொரு வனும் வறள்வான். (௰௩)

மீனரி குடங்தேள் விடைதுலை யிவற்றில் விளம்புமங் நால்வ ருமிருக்கி, லீனமாம் பஞ்ச மிந்தவா றிடத்தி னின்குச ஞேடு சேர்ந்திருக்க, வானநால்வருக்குள் யாவர்சேர்ந்திடினு மழையிலை யரும்பஞ்ச மடுக்கும், வானநன் மதிய முச்சலராசி மருவிய யோக நன் மழையே. (௰௪)

புகர்க்குநா லெட்டிற் சனிவரின் மழைபாம் புன்மையோர் நடுவுறி லிலைபாம், மிகுத்திடுஞ் சோதி முறம்பனை கிழக்கும் வே ட்டுவன் முதலைந்து மேற்கும், வகுத்தசுக் கிரற்கு மழையிலை மாறின் மழைபுண்டு சுக்கிரோ தபமும், பகுத்தபொன் னத்தமா னமு மழையைப் பாரினிற் காட்டுமென் றோர்வாய். (௰௫)

கவிமதி பொன்னிம் மூவருங்கூடிக் கடகந்தேண் மீனத்திற்
கவிந்தாற், புவிமழை யுண்டு பொன்குசன் றிங்கள் புணர்ந்துநிற்
கினும்பல னுண்டா, மவிர்கதி ரவர்க்கு முன்கவி யோடிலா
மழை யைப்பசித் திங்கள், நவின்முதற் றினத்தி னுதயத்தின்
மழையே னன்மழை யவ்வருடத்தே. (௰௬)

சிங்கமா மாதந் துலாத்திங்கண் முதலேழ் தினத்திடி முழ
க்கமின்னுதல், பொங்கிடிலந்த வருடநன் மழைகள் பொழிந்திடு
மிவையறிற் பொழியா, வெங்கிர கணமா கேந்திர முறினும்
வெள்ளிபொன் றிங்களின் மேடத், திங்களூற்றதிலே சோதிபஞ்
சமிகள் சேர்ந்திடின் மழைமிகச் சிறக்கும். (௰௭)

தாவிடவந்த கிரகண காலத் தண்மழை நன்மழை காட்டும்,
பாவவாரத்திற் றுலாந்தனு மாதம் பற்றுறவரின்மழை பலிக்கும்,
மேவுமந் திரியாஞ் சித்திரை முதனாள் வெம்புத னுகிலோ காற்
று, மோவியசுபவா ரம்மழை ஞாயி றுறைபற்பஞ் சேய்சனி யொ
ழிவே. (௰௮)

மந்திரி வாரத் துவாவிட்டி யிருத்தை மன்னுமட் டமிமழை
யில்லை, யிந்திர வின்னீர் மதுலைகையா மூனுட மெலிவிளக் குத்தர
மெழுந்தால், வந்தநா ளெட்டுண் மழைவரும் கடக மாதத்தினுத்
தராடத்தி, னுந்திய வடந்தை பெருமழை காட்டு முருத்திரர்
காற்றவான் மழையே. (௰௯)

வாயுவின் காற்றுத் தம்மதாங் காற்று வலம்பட வீசினுன
ன்மை, யோய்விலக் காற்றிற் பூரணைகூடி யுதயவெங் கதிர்ப்புயன்
மறைப்பும், பாயும்விற் பறப்பு மதிமழை யாங்கே பாயுங்காற் றடி
த்திடவாடி, யாயமா தஞ்சுக் கிலபக்கஞ் சோதி நவமியு மடுத்திடி
லற்பம். (௨௰)

ஆங்குமந் தார மழையின்ன லொன்றே யடுக்கினு முன்ம
ழைதசமி, வாங்கிய சுளகு கூடவிக் குறியே வருமழை நடுவிலா
மனுடந், தாங்குறு மேகா தசியுடன் கூடத் தருங்குறி பின்மழை
யழைக்கும், பாங்கினம் மாதம் பூருவ பக்கம் பஞ்சமி ஞாயிறே
வற்பம். (௨௧)

வரும்புதன் காற்றும் வளர்சுப வாரம் வருமழை சேய்சனிக் கில்லை, விரும்புமத் திங்க ளபர பக்கத்துத் தசமியே காதசி விமானம், பெரும்புயன் மூடம் பெருமழை காற்றிற் பிரிபுத ஞெழி சுப வர்ர, மரும்பியபூர மடைமழை காட்டு மலாதவா ரம்வரினழி வாம். (உஉ)

ஆனியின் மூல மாடியுத் தராட மாங்கெழு வில்லுமேற் கெழூந்தா, லினமவ்வருட மழையிலை யிரவி லெரியுடு வீழினுமுதய, பானுவைப் பாவ சகிதசந் திரனைப் பரிதிசூ ழினும்பல னில்லை, வானுறு கதிர்சேய் முன்செல வெள்ளி மாறிப்பின் செலின்மழையில்லை. (உங)

பண்பினுத் தரகீ ரோடினுங் கவரிப் பண்பென விரிந்தெவ ணுறினு, நண்பகற் கதிரை வட்டமுற் றுறினு நண்ணிய மாலை வெண்மதியை, யெண்படப் பரிவே டிக்கினு நன்மை யியம்பிய வட்டங்க ளெல்லா, மண்படச் சுருங்கிற் பின்மழை யகலி லடுத்ததா மழையெனவறிக. (உச)

குடமுத லுன்கிற் கதிரின்முன் சென்றுங் கூறுதண் டாதி நான் கிணைந்து, மடைதருந் துலாதி நான்கிற்பின் னருமா யனுவழி சென்றிடின் மழையாம், நடைதனின் மாறின் மழையிலை வியர்வு நண்ணுருப் பமுமழை நவிலு, முடையநற் பருவம் வருடமாதமும்வா னுறுவது மறுவது முரைக்கும். (உரு)

உதயமுன் கூவிக் குக்குடந் தெரித்த லுண்மை ண்டுமண்டுக, முதிரெறும் புளருங் காற்றுமின் முதலா முற்படுங்குறியினு முணர்க, புதைபடமேக மண்டலந் தணிந்த காட்சியிற் பொலிவன பொய்யா, விதுசெலு மாசி மகத்துமீன் வடக்கில்விட் டவ்வ ளவதாம் விளைவே. (உசா)

மீன்மறித் திங்க டென்முனை யுயரு மேலெட்டும் வடமுனை யுயரு, மான்மதிகும்ப மதியிந்த விரண்டும் வருபிறை சமனிவை மாறில், வான்மழை மாறுஞ் சேண்மதி யளவே மலிஇடைமதுவள வென்று, லேன்மலிர் தூரைப்ப திருங்கிர கத்தி னியைந்திடும் வலியினை யெடுத்தே. (உஎ)

பெற்றமந் தார மல்லதூ ரேனும் பெறிற்றனுக் கருப்பம்பூ ராடத், துற்றிடுங் கதிர்சே யத்தொகைக் காலத் தொன்றுக்கி ரேழ்மடங் கடங்காச், சொற்றிடு மானிக் கொன்றணர யதன்மேற் சொலுமைந் துக்கொன்பது கால. முற்றம்விற் கொருநா ளாதி ரை பரிதி முடுகுநா ளதுமுதன் மழையாம். (உஅ)

இரவிற்சங் கிரம மினிதொரு பக்கத் திருகிர கணமுல கழிக்கும். பரிதிமுன் புதனே காற்றினைக் கொடுப்பான் பார்தரு சேயவன் றடுப்பான், மருவிய சனியே கொடுமையிற் படுப்பான் மற்றநல் லவர்மழை யளிப்பார், திருவடி யார்கள் சினங்கொளச் செய்யிற் சேட்செலு மழையது திண்ணம். (உகூ)

கலிநிலைத்துறை.

கதலித் தோட்டிற்கீழ்க் கீழுடார்ந் துயர்ந்தகந் தரமே
னுதலிப் பெய்வதென் றக்குறி நுண்ணிதி னுணர்வாய்
முதலிற் கார்நடு வினில்வெள்ளை முடிவினிற் சிவப்பேல்
வதிலு ரைத்திடேன் மழைவந்த தென்றுநீ வழுத்து (௩௰)

காலை யுச்சிசா யங்களிற் கந்தரம் பிரதி
கூல மத்திம முத்தம மெனநிரை கொள்க
மாலை யாமம்வை கறைபெறின் மழைவிப ரீத
மேலு மேபெரும் பாலுமிக் குறியென வெண்ணு. (௩க)

கலிவிருத்தம்.

பனிபுயல் குளிர்ச்சியிற் பரவு மாறுபோல்
வனமணன் மழையறும் வறட்சி வாய்தலாற்
சினைமர முதலிய சீத காரண
மெனமொழி வவ்வள விதுவு மேகுமால். (௩உ)

மண்ணிடை யுட்டணம் வானஞ் சீதமென்
றெண்ணிய வாலிவந் திங்குச் சொல்லலாற்
பண்ணிய மரக்குளிர் பயனின் றேயெனிற்
கண்ணிய காற்றின்றிக் காய்வ தாமது. (௩௩)

காலையிற் பொதியமென் காலுங் காணவே
மாலையில் வடதிசை மாலு மத்தியிற்
கோலிய காற்றினாற் கொளாத மேகமு
மாலியின் பிறப்படை யாள மாகுமால். (நச)

ஆதிமைந் திரென்று மறியும் பல்லுயிர்ச்
சோதனைப் பயிற்சியாற் சொல்லு வார்குறி
யேதுவொன் றிலாமலே யெங்குங் காரியம்
போதரு தென்பது புந்தி வைப்பையால். (நரு)

எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இன்னவா றுலகின் கருவியா மழைதா னிலையுள வென்பதை யெண்ணி, முன்னமே தெரிய வுரைத்ததன் குலத்து முதன்மை சேர் புரோகித முனியைப், பின்னரும் வீழ்ந்து வணங்கியிற் கறி யாப் பிறவுள வோவெனத் துதித்தான், மன்னிய மழைதன் றெழிற்குரித் தென்னும் வழியுண ருழவர்தம் பெருமான். (நசு)

உபயசர்ப்பிணிப் படலம் முற்றிற்று.

ஆ செய்யுள் நசுஉ.

ஒன்பதாவது

இன்றியமையாப் படலம்.

(*)

கலிநிலைத்துறை.

ஏர்க்கு மூலமா மழையுற லறலிவை முன்னே
பார்க்கு மாகில பழமையிற் பட்டன பகர்ந்தாங்
கார்க்கு நேர்தருந் தொழிலிஃ தெனக்கடைப் பிடிக்க
யார்க்கு மேரின்றி யமைகலா வளவைபு மெடுப்பாம். (க)

மழையின் கொள்கையின் வாக்கினு லறிந்தனன் மழையு
முழவும் பூவுல கத்தினுக் குறுதுணை யென்றுப்
விழியெ னக்குநீ விளம்பென பேழியன் வேண்டக்
கொழுவின் மேன்மையைக் கூறுமக் குணப்பெருங் குன்றம் (உ)

மோருண் டாதற்கு முதலினிற் பால்பிறை வேண்டு
மோரிரண் டினி லொன்றிலை யாயினு மில்லை
*நீரின் றேனுல கியலிலை நீரினு னிக்ழு
மோரின் றேனுல கியலிலை யென்பது மியையும். (௩)

வழுவின் மாமணி மாற்றுயர் கனகம்வா கனங்க
ளெழுது மோவிய மாடமா ளிகையிரும் பூண்கள்
விழையும் வாசனைத் திரவிய முதலிய வேண்டல்
கொழுவின் வந்ததைக் குறைவற வுண்டவர் கொள்கை. (௪)

பழுதி றுனிய முதிரைகள் பஞ்சுகாய் கனிக
ளழையுஞ் சர்க்கரை பரைப்பன கரைப்பன தைல
மழிவில் கௌவிய மாதிவந் தனவெனு மளவோ
வுழவின் வந்தனள் கமலையு மெனிலொழி வெவனோ (௫)

வில்வந் தாகிய வேந்தர்சால் செல்வமும் வினைஞ்
சொல்வந் தாதலைச் செவிவழி யாற்றுணர்ந் தோரு
மில்வந் தாகிய செல்வத்தோ டிசைதரு †மேழிச்
செல்வங் கோழையிற் படாதென்றார் செயலெலா மோர்ந்து. (௬)

யாருந் தாஞ்செயுந் தொழிலெலா மடைவினி லெண்ணி
யோருங் காலையில் வயிற்றைவிட் டொருவின வில்லை
சேரு முவைந்து பொதுச்சிறப் புத்தொழி றேறி
னேரின் பால்வந்து நுழையுமே மற்றையே மிரட்டி. (௭)

கொழுத்தி ருந்திடு மார்க்கமே குவலயத் துள்ளோர்
கொழுத்தி ருந்திடும் வழியெனக் குறளொடே ரெழுபான்
விழுத்தி ருக்கர வழுக்கொடு வேறுபாற் றிடத்தும்
பழுத்த வித்தொழில் வளமிகப் பார்ப்பவர் பார்க்க. (௮)

---

*நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.
என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார்.
†"மேழிச் செல்வங் கோழை படாது" என்றார் ஔவையாரும்.

உழவென் ருனுப லக்கணை யானிலங் காலந்
தொழிலின் வாய்ந்திட வித்தல்காப் பறுப்பொடு தொகுத்த
லழிவி லாப்பசு முதலிய காத்தனு னளவிற்
செழும விற்றலாற் சீவனத் திரயமுங் கிடைத்த. (௯)

வன்னிக் கையினர் மறைகளின் மன்னர்செங் கோலின்
முன்னிச் செய்யுமெண் குணத்தவ ரீட்டலின் முதுகே
வன்னிக் கின்றதென் னவருமு காவிதி மன்னர்
பின்னர்ச் செல்கின்று ரன்னத்தின் முன்னின்ற பெரியார். (௰)

இன்னந் தேடியு மாலய னறிகலா னிணைப்பூம்
பொன்னின் பாதத்தைப் புகன்முதற் குலத்தவ ரேனு
முன்னம் பூசிக்கு முறையெலா முடித்துணும் பொழுதி
லன்னம் பூசிப்பா ரஞ்சுவார் மண்சுத மென்று. (௰௧)

மாடை யாமணி யுண்ணுமேல் வலியிரும் புணுமேற்
கூடை யுண்ணுமே லுலோகமண் கொள்கல முணுமே
வீடும் வேட்பித்த லுண்ணுமே னிலமுற்று முணுமே
லாடை யுண்ணுமே லவனவ னுற்புக ழடைக. (௰௨)

கருவி யின்றியோர் காரிய மிலதெனக் கருதி
மருமிருப்பரார் கூடையு மதிப்பவர் மதிக்கத்
தருமமேயென வன்னமிட் டவன்றனைத் தள்ளிப்
பொருவி லாதென மூழையும் புகழ்பவர் புகழ்க. (௰௩)

நாவென் செய்திடு நல்லுவ ருண்டியே னன்மை
யாவ தாமஃ தல்லதே லல்லதென் றவர்மேற்
போவ தாங்குறை யென்றெணிப் புரைபடப் புகலிற்
கோவென் பண்ணிய தராக்குற்றங் குற்றமோ பாவில். (௰௪)

முந்து காதெங்கே விழியெங்கே மூக்கெங்கே மொழியி
னிந்த வாயெங்கே யுடலெங்கே யிவனுண்டி யின்றி
யந்த மானிடர் யாவரு மதுவழி யாம
வெந்தொ ழிற்பல மென்பது மிவர்தொழிற் பலமே. (௰௫)

தென்றி சைக்குளார் வானவ ரதிதிசேர்ந் தார்தா
னன்றி மூவரோ டற்றவ ராதர வற்றார்
பொன்றி னூர்பதி னொருவர்க்கும் பொருநர்க்கு மிவர்சீ
ரின்றி யாவையு மமைகலா வமைதர வெண்ணில். (யசு)

டஞ்ச மென்பதற் கெதிர்மறைப் பொருளுமூம் பயனே
லெஞ்சி நின்றிடுந் தொழிலெலா மெவன்செய லென்னிற்
கஞ்ச மேமுதன் மலர்களுங் கயன்முதன் மீனும்
விஞ்சு நீர்வளங் காட்டல்போ லேர்ப்பயன் விளக்கும். (யஎ)

கலிவிருத்தம்.

வளரர சாதியா மற்றுஞ் செய்தொழிற்
றளர்வினைப் பஞ்சமாத் தான்கொள் வார்களோ
களமர்க ளுழவது கடைசெ லாவிடிற்
கொளுவர்கா ரணவிடு குறியிற் கூறியே. (யஅ)

மண்டிய கலப்பையால் வந்த வூணுண்டு
கண்டிகை மாலையர் கங்கை வேணியன்
றொண்டர்கண் மேழியர் சரிதந் தாடிக்கி
லுண்டவிற் கிரண்டக முனூற்றும் பாவமாம். (யகூ)

கொல்லிட்டார் முதலியோர் குடிமை யாகவே
சொல்லிட்டார் மேழியர் சரிதந் தாடிக்கி
னெல்லிட்டா ரெனுநன்றி நினைக்க லாதுபின்
கல்லிட்டா ரெனும்பழங் காதை காட்டுமால். (உ0)

தொண்டரை வணங்கிலார் சுவாமி யோடினிக்
கண்டிதம் புறமென்ற குலத்தர் காதையை
வண்டரிற் பழிப்பவர் வருண மூர்த்தி
கொண்ட தெய் வதமுமாங் குறுதல் கூடுமால் (உக)

மெய்யைக்காப் பாற்றுவார் மேழி தாங்கிய
கையைப் பார்த் திருந்திடக் கடவ ரன்மையான்
மையைப்பார்த் திருப்பரோ மணசெய் வேண்டினோர்
தையிர்ப்பார்த் திருப்பரோ வெண்ணெய் தள்ளியே (உஉ)

வைத்தபல் லுயிர்க்கெலாம் வரவுக் காம்வித்துத்
தத்தம துடலது சமயத் தோர்ந்திடி
வித்தனை யெனச்சொலா வியல்பி னத்தனை
வித்துக்கும் வித்துயர் மேழிக் கண்ணது. (உ௩)

இவர்தொழி லாலுயி ரிருத்தி யேயவு
ரவர்தொழி லாலஃ தாகு மென்பவர்
நவரசங் கொடுத்தகை நவில்க லாதுநாக்
சுவர்தரக் கொடுத்ததங் கையை மெய்ச்சுவோர். (உ௪)

சோரருங் கண்ணனைச் சொல்லிக் காட்டினாற்
சீரது வென்றுநாஞ் சிந்தை கொள்வமோ
பாரமுந் தூரமும் பார்த்துச் சொல்லுமி
னோரது பெருமைமற் றெவற்றிற் குள்ளதே. (உ௫)

கந்தையை வெளுத்தலிற் கைசி ரைத்தலில்
வந்தது சுகமெனின் மாட்சிப் பாலவோ
வெந்தொழி லிலையெனில் யாவுண் டாமெனத்
தந்தொழில் புகழ்வதுந் தகுமுண் டாயினே. (உ௬)

அச்சிலை யுழுந்தொழி லிருக்க வாமென்று
மெய்ச்சிலை வீணென்று விளம்பி னான்மதன்
கைச்சிலை தின்பவன் கழித்தெ றிந்திடு
மெச்சிலைத் தினிப்பின்றென் றேச னோர்வதே. (உ௭)

மான மேகுலங் கல்வி வண்மையே
தானமே யூக்குணர் தாண்மை யாதிய
வானநா ரியர்மய லாஞ்சி ரூரிவர்
வானநீள் பௌத்திர ருழவர் மைந்தர்கள். (உ௮)

கொட்டில மிருப்புமுட் கோலைத் தாங்கிடி
லொட்டிடுங் குறைநிலத் தொழிக்கு மூக்கத்தா
லெட்டினுக் கிரண்டுய ரியல்பி னார்தொழி
லட்டதின் னாருக்கு மன்ன சத்திரம். (உ௯)

தசரதன் மகனிடைச் சடைய னிற்கிறான்
கசிமுகிற் கொருவன்கை தவன்மு னிற்கிறான்
மிசையெழு பதுங்கையும் வேறு நிற்கிறா
ரிசையிலா ரேறமுச் செறிந்தென் னையது. (௩௰)

முக்கிய சைவமுத் தமிழ்சென் முந்நில
மிக்கிடு முன்சுடர்ப் பெயரின் வேதியன்
புக்கிட முதற்சிவ போதம் பெற்றவ
னிக்குலத் தானெனி லியம்ப வேண்டுமோ. (௩௧)

துணையெனுங் காரணந் தோற்று விப்பது
மிணைமுதற் காரண மெனவதென் றாக்கலுங்
கணிதரு நிமித்தமாய்க் காண நிற்பது
மணிதரு முழவன்றி யல்ல தொன்றுண்டோ. (௩௨)

பிறந்தபின் னாகிலும் பெரிதும் யோசிக்கி
லிறந்தபின் னாகிலும் யாதை வேண்டும்வா
யறந்தரு முழவர்க ளாக்குந் தண்டுல
மறந்தவ ரிருமையு மறந்த மாந்தரே. (௩௩)

அலைக்குளு மஞ்சிலர் தனிமை யாற்றுநர்
கொலைத்தொழி லானலங் கொள்ளக் காக்குநர்
நிலைக்குரி மகமுத னெறிசெய் விப்பவ
ருலைக்கரி சியைத்தர வுழவின் வேறுண்டோ. (௩௪)

போவதும் புகுவதும் புறத்தொ ழிற்கணே
யாவது மழிவது மஃதி யார்கணே
போவதும் புகுவது முழவிற் போதரிற்
போவதும் புகுவதும் புறத்தெல் லார்க்குமே. (௩௫)

பொய்யைமெய் யெனச்சொலும் பொய்மல் வாசகஞ்
செய்யமங் கலமன்றோ தேக முன்னினால்
வையகத் துழவினு மற்று மோர்தொழி
லுய்யவுண் டெனிலதோ ருட்கு ருத்தது. (௩௬)

உழுதுண்டு வாழ்வரே யுயர்வர் மற்றையோர்
தொழுதுண்டு வாழ்வரென் றறிஞர் சொல்லினர்
முழுதுண்டு நிலமென முடிகொ ளாளுக்கு
விழுதுண்டென் றமைவன பேழிக் கைகளே. (௩௭)

மையைப்பார்ப் பதும்மதன் வழியி லேகருஞ்
செய்யைப்பார்ப் பதுமிவர் செயல்க ளின்னவர்
கையைப்பார்ப் பதுமிகக் களித்துண் டேயெனப்
பையைப்பார்ப் பதுந்தமைப் பாடு வார்தொழில் (௩௮)

வானிடு மழைபல வளமி லம்பல
தானிய மழையிலை தரச்செய் கிற்பதோ
வானிய மறிந்துழு முழவி னல்லதோன்
றேனைய துண்டென வியம்ப லாகுமோ. (௩௯)

இலகிய கூலியோ டியைந்த வென்றிதந்
தலைவனைச் சார்ந்ததன் றனையு ருதபோற்
குலவிய குடிமைகள் கூடிச் செய்தொழிற்
றலைவனைச் சார்ந்தன தக்க கூலிபால். (௪௰)

அன்னத்திற் பிரித்திடி லாதிச் சாதியோர்
தன்னத்தை யேமிகத் தக்க தென்றன
ரென்னத்திற் பிழைப்பவ ரேற்றன் மேலதோ
வின்னத்தைப் பழிப்பவ ரெதையுண் டார்களோ (௪௧)

பழமனு வுழுமலப் படையிற் பற்றிய
கொழுமுனை யாற்பெருழில் கொடிய தென்றனன்
கழுமுள்வன் முனையினுற் காக்கு மாநிலங்
கொழுமுனை காப்பது கொடிய பாவமே. (௪௨)

கார்வளந் தருமிடங் காலங் கைக்கொடு
தீர்விடங் காலமுஞ் சிந்தை பற்றலா
லோர்வில்வன் கொடுமன முடைய வாணிக
மேர்வளந் தருந்தொழிற் கெதிரும் வன்பகை. (௪௩)

இடைகடை யடியரு மிவரைப் போலவே
யுடைதரு பவர்களு முயர்வுளு ணலாம்
மடைதரல் போலவே மற்று மேருழும்
படைதரன் மறதியிற் பறந்த காலையே. (௪௪)

அடிப்படுஞ் சுதந்தர மாதி யோர்த்தொழில்
படைப்பதுங் கொடுப்பதும் பழிச்சத் தக்கதே
நடுப்படுஞ் சுதந்தர நண்ணக் கோடலிற்
கொடுப்பதிற் சிறக்குமோ கூறும் வாணிகம். (௪௫)

வியர்வையா னுழைத்ததை விசிறி யானது
பெயர்வுறத் தழைப்பது பெரிதென் றெண்ணியே
யுயர்வுளா ரடிபணிந் துய்யுங் கோப்பணி
நயமிலார்க் குயர்ந்தது நமர்க்குந் தாழ்ந்தது. (௪௬)

நூலெனிற் கோல்கெடு நுயமெ னிற்பொரு
கோலெனிற் குடியெனக் கூறு மௌவைதா
னூலெனக் கிளைத்தவே ளாளர் யாருக்கு
மேலென விளம்பினள் வேந்தன் முன்னிலை. (௪௭)

எல்லரு நல்லரே லெவன்கொல் சேவகத்
தல்லரை யடக்கவே யமைந்த தாங்கது
நல்லவ ரெல்லரு மான நாளையும்
வல்லுழ வன்றியோர் வாழ்வுண் டாகுமோ. (௪௮)

தழைத்திடு மாறிடத் தன்மை யாமன்றோ
முழுப்பெருந் தன்மையின் முதிர்ந்த வெள்ளையார்
வழக்கினுட் டண்டத்தை மதிக்கும் பெற்றியீர்
பழித்தவாற் றங்கரைப் பாட்டைப் பார்மினோ. (௪௯)

தந்திரி யாதற்குந் தக்க நீர்மையான்
மந்திரி யாதற்கு மரபின் மாண்புண்டா
லிந்தவே ளாளருக் கென்பர் மேலையோர்
பிந்துறு சேவகர் பெருமை கூறிலென். (௫௰)

உன்னுவ தோவிவ ருண்டி யூக்கியே
பெண்ணுவ தோதமை யேற்ற கூலியாற்
பண்ணுதல் சேவகம் பலர்க்கும் நன்மைசெய்
புண்ணிய முண்டெனிற் புகழு தாங்கதுய். (௫௧)

ஈட்டும்வன் பதாதிக ளிரதம் வாம்பரி
கோட்டுவன் கரிகளைக் கொண்ட வேந்தர்க
ளோட்டுசெங் கோலினை நடத்துங் கோல்வலே
ரோட்டும்வன் கோலென வுலகஞ் சொல்லுமால், (௫௨)

கொடுத்துணைத் தருமிது கொண்டி ணைத்தரு
படுத்திடுந் தொழிலெலா மதனை நோக்கியே
பிடித்திடச் சுழன்றுமேர்ப் பின்ன தாமெனப்
படித்தனன் வேதவாய்ப் பகவன் மைந்தனும். (௫௩)

தன்னுயிர்க் குறுதியுந் தழைத்த யாங்கில
மன்னுயிர்க் குறுதியு மற்றை யோர்தொழிற்
குன்னரு முறுதியு முடைய வித்தொழிற்
கென்னெதி ரிபதொழி லியப்ப லாகுமோ. (௫௪)

நீற்றைவிட் டுணவ னியல னிற்றுதி
யாற்றைவிட் டுணவ னறத்தி லாந்துதி
யூற்றைவிட் டுணவ னுடைமை யிற்றுதி
சோற்றைவிட் டுணவன் றுதிடவ் வேரிலாம். (௫௫)

ஐந்தெழும் பூதமு மனைவர்க் குப்பொது
வெ.. ணினு நிலஞ்சல மிரண்டுங் கைக்கொடு
மன்னவன் கோலின்கீழ் வழுவு றுமலே
பின்னைய பூதமுந் தொழிலும் பேணுவார். (௫௬)

சருமனும் வருமனுஞ் சார்ந்த குத்தனும்
பிரிவுள தாசனும் பேர்க ளாய்ந்தன
பரைதரு பிள்ளைப்பேர் பரிதி மன்னவ்
னுரைதரு முதலிடபே ரோய்விளைதன. (௫௭)

இங்கிவர் குலப்பெய ரீசன் மேலது
தங்கிய சுசியது தன்னி தாயதோ
டங்கமை பெயர்களா யிரங்க ளான்றது
மங்கல முடையது மறத்தை வெல்வது. (௫௮)

கம்பனும் புகழ்கரங் கன்னி யத்தன
வெம்பிக லொழிதர மெழி தாங்கின
நம்பினர்க் குதவிசெய் நன்ன லத்தன
வம்புவி தனிலன்றி யமைவி லாதன. (௫௯)

எண்பெற வரசிய லாதி யியுங்கை
கண்பெற விரப்பது கடைய தாகலை
மண்பெற வளர்ந்தவர் வளர்த்த தானிய
முண்பதிற் பிறந்தன வொழிந்த பல்வினை. (௬௰)

சாதியின் மேலெனச் சாற்றும் வேதிய
ரோதலை பிறருட லுயிருங் கூற்றமி
றிதிலா வுழுந்தொழி றிருமு றைக்கிலை
யேதுள வெவருக்கு மிரண்டுந் தாங்கலால். (௬௧)

அன்னமே யுடலென வளவ றுத்தலாற்
பின்னதைப் புகழினும் பெருமை யங்கிலை
மன்னிய வுழுந்தொழின் மறந்த மாந்தர்தாம்
பன்னுதம் முடனவை மறக்கற் பாலரே. (௬௨)

ஒன்றினுக் காயிர முழவி னூறினு
மன்றற மென்பவ ரவனி மீதிலை
நின்றபஃ றொழிற்பயன் முதலி னீட்டுமேற்
கன்றுவா றுறங்கடை கலந்த தாமென. (௬௩)

நன்றற முப்பதி னிரண்டி னச்சனை
வன்றரா ணருணெலாங் கட்டமை செய்துமேற்
றன்றனிக் கருணைபாற் றனயிர் கொண்டிமென்
றன்றருள் வினைகயினு லறமின் னோறம். (௬௪)

மழையின்றி மன்னுயி ரில்லை யம்மழை
யழிவறு தவமின்றி யில்லை யத்தவம்
விழுமிய வேந்தின்றி யில்லை வேந்தனு
முழுநர்க ளில்வழி யில்லை யுண்மையே. (௬௫)

உண்பன தின்பன வுடுக்கற் பாலன
வெண்படப் பருகுவ வேர்த்தி நக்குவ
கண்பட மினுக்குவ கடைவி ரிப்பன
பண்படு முழவினுட் பகுதிக் கெண்ணில. (௬௬)

மழைவர வுழவெழ மற்றை யோர்தொழி
லுழவதைச் சூழ்வர வுலகம் வாழ்வுறும்
வழிவழி மரபிது மறந்த மாந்தர்க
ளொழுதுணுந் தொழிலையுந் துதித்துக் கொள்வரால். ( )

எப்பொரு ளால்விலைக் கேற்றுண் டோந்தரு
முப்பெருந் தானியத் துயர்வெ னென்றிடிற்
குப்பிடு முதற்பல கூலி யாயினுந்
தம்பெரு மான்வரந் தாழ்வுண் டாகுமோ. (௬௮)

பண்டித ரேதலும் படையின் வாழ்தலுந்
தெண்டிரைக் கடலிடைச் சென்று தேடலு
மெண்டரும் பிறவுமீங் கியம்ப லேர்தரு
முண்டியை யுண்டபி னுண்டென் றோதலாம். (௬௯)

மூவரி னருளினுன் முத்தொ ழிற்செயப்
பூவரு மிவர்தொழிற் போலுண் டென்பிரே
லோவுமவ் வவரதை யுண்டென் முன்னரின்
மேவுயிர் தருக்கிக்க வேண்டி நின்றனன். (௭௰)

உயிரையு மீர்ந்திட வுற்ற காலையின்
மயிரென நினைப்பரால் வண்மை பூண்டவர்
வயிறதை நினைப்பினும் வானி னைப்பினுஞ்
செயிரறு தக்கிணை சிறுமைப் பாலதால். (௭௧)

உஞ்சிடக் கொலைகள வுஞற்றும் பாதகர்க்
கஞ்சுவ ரஞ்சலா லவர்க்கு மேன்மையோ
னெஞ்சினி லிரக்கமி னீசர்ச் சேவக
ரஞ்சிடச் செய்வதா லவர்க்கொப் பாவரால். (எ௨)

ஆணுள பெண்ணுள வறிவு முள்ளன
பாணுள நடமுள பலவு முள்ளன
வூணுள வெனிலுள வுலகி லெண்ணுங்கா
லேணுள வுழவன்றி யெவற்றி னூண்வரும். (எ௩)

செவிவரு கேள்வியுந் தென்பு லத்தர்க்குப்
புவியிடைக் கடனிறப் புகட்டுஞ் செய்கையு
மவிமுத லாகிய வனைத்து நோக்குங்காற்
கவிதரு மேழியின் காரி யத்தன. (எ௪)

அழகிலை முடியிலை யாண்மை யில்லைகல்
விழவிலை தொழிலிலை வேண்டு நாணிலை
முழுதிலை யுலகிடை முன்னுங் காலையி
னுழவிலை யெனினிஃ துண்மை யோருக. (எ௫)

இரவதுந் தருபவர்க் கிசையக் காட்டலா
லொருதொழி லும்பல னொருங்கி லாததி
லரியவன் றொழிலெதென் றுயி னோர்த்தொழில்
கருமுதன் மறுமையுங் கைத ரத்தரும். (எ௬)

போக்கிய போகங்கள் புறத்தெல் லாருக்கு
மாக்கிய வழியிதென் றறைய வேண்டுமோ
வோக்கிய போதத்தை யுதிக்கச் செய்வது
நோக்கிய வுழவன்றோ றனிக்குங் காலையே. (எஎ)

காட்டுகை யோட்டுகை காக்கை முத்தொழி
வாட்டுகை யிக்கையே யுவன்கைக் கேற்றமென்
றீட்டுகைப் பிரமனு மெண்ணி யீங்கிவ
ரூட்டுகைக் கொண்டன்றோ வுலகை யாக்குவான். (எ௮)

ஐவருக் குதவிட வைத்துங் கொண்டனர்
செவ்வையின் மனுவிதி தெரிந்து கொள்ளுக
வெவ்வர்க் குதவிட வெவற்றைக் கொண்டன
ரவ்வுரை யுளவெனி லவைக்கு வம்மினே. (௭௯)

மேய்ப்பவன் மாடெனின் மேலுங் கீழுமாய்த்
தோய்ப்பவன் றலையெனிற் றாங்க வெட்டியே
சாய்ப்பவன் மரமெனிற் றலைவர்க் கின்றெனிற்
பாய்ப்பவ னீரெனிற் பலரும் பேசுக. (௮௰)

ஆட்படை குடிமையாங் குடியவ் வாய்பொரு
டாட்பொரு ளமைச்சுதன் றொழிலைச் சார்ந்தனால்
சேட்படு நட்பெலாந் தேறு வேலியே
கோட்படு மாணுழுங் கோவுக் கங்கமே. (௮௧)

எண்ணிய தவமக மாதி யீங்குள
கண்ணிய வுழவொன் றேகழற லென்னெனின்
மண்ணிடைர யுழவால் வந்த போனக
முண்ணுபு நாபிற வுயர்த்த நாணுமால். (௮௨)

பித்தனுந் தன்னடை பிறிதன் றுமென
வொத்தன றுதலி னுலகின் வாழ்பவர்
துத்தம தொழில்களைத் தாங்கி யேயவர்
துத்தியஞ் செய்குவர் சொல்லி னேறுமோ. (௮௩)

உழவின வோரதி கார மோதிய
வழுவிலா நாயனார் வசியர்க் கங்கனே
யெழுதில ரெனிலிதற் கிணைய தாகிய
தொழிலுள வென்பது சொல்லச் சாலுமோ. (௮௪)

பரவிடப் பண்ணிய பயிரிற் புண்ணியந்
தெரியுமென் றளவைசொற் சிறுக வோதினள்
பரவளம் பிறர்வளம் படுக்கும் பாவமென்
றுரையருத் தாபத்தி யுண்மை தோன்றவே. (௮௫)

நீர்வள நிலவள நிறைந்த நாடெனப்
பேர்வளந் தரும்படி பேசு வோரெலா
மாவளம் பேசின ராயுங் காலையி
லேர்வள மேயஃ திசைக்க வேண்டுமோ. (௮௬)

அன்ன தான மகிலந்ற் றானமே
கன்னி தானங் கபிலையின் றானமே
சொன்ன தான முதலிய தோற்றங்க
ளின்ன தான வினையி னெழுந்தவே. (௮௭)

விலையி னார்தரு மேதினி யுள்ளவர்க்
கிலகு வல்லல் வியம்பி லருமையே
தலைமை சேரன்ன தான மெளியதோ
ரலமு ளோர்க்கும தெண்மைய தாகுமே. (௮௮)

ஆறி லொன்றிறை யண்ணலுக் கீவதும்
வேறு மீவதின் மேற்கொள நிற்பதுங்
கூறு கின்ற கொழுத்தொழி னேருமோ
மாறி யுண்ண வருந்தொழில் யாவையும். (௮௯)

கங்கை வாட்டுங் கடற்புவிக் கண்ணிரு
செங்கை யாற்றொழில் செய்பவர் யாவரு
மங்கை பார்க்க வுயைந்தில துண்டிதாந்
தங்கை பார்க்கத் தருந்தொழி லித்தொழில். (௯௰)

கலித்துறை.

பயிரைத் தாங்குவார் தகத்திடை வருசெங்கோல் பகையைப்
பெயரத் தாங்குவார் பெருங்கட லிடையெலாம் பெயர்ந்து
மயர்வற் றோங்கிய வாணிகர் தாங்குவார் மற்று
முயிரைத் தாங்குவா ருடலினைத் தாங்குவா ருண்டேல் (௯௧)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

இணைவழிசின் றழிந்தோர் தமைநிறுத்திக் கைக்கடன்க
ளாற்றித் தாய்போற், காறுயனைக் கசிவினரா யெக்கைப்போற்
றுதவுடன்கை யோவா தூக்கி, வேளுடையன் னிறைதந்
தொற் றுண்டைகொண்டு விருந்தோப்பி யொழுக்க மேவி, யேனு
டைய டக்கிஇயல்பு மிகைத்தவே ளாளர்க்கோ ரிணையா வாரே. ()

ஆணைவழி நிற்படக்க மழிந்தவர்க்காப் பாண்மையத்தக்
கடன்க ளாற்றல், பூணுமுண்மை யகக்கசிவு தருமமொக்கல்
போற்றல்நலம் பூண்ட மானம், மாணழிவின் முயற்சிகுடி செய
லிறைவ னிறையிகை மதிப்புக் காட்டு, மேனும் விருந் துபசரி
த்த லிற்பயனார் திருந்தொழுக்க மிருமைக் கேது. (௬௩)

கோவியர்தட்டார் தச்சர்கொல்லர் கன்னார் குயவரொடு
பள்ளர் பாணர், நாவிதர்வண்ணார் வலையர் சிவிகைபரி வருணத்
தார் நவில்லை பெண்ணெய், வாவுமிலைப் பெயரடை கொண் மூவ
ணிகர் வெட்டியார் மாலைக்கார, ரேவியவே டாவியெனப் பதி
னெண்மர் குடிமக்க ளேர்வாழ் வார்க்கே. (௬௪)

கங்கைச் சேய் மதகுரவர் சந்தான குரவர்படிக் காசன் கம்
பன், கொங்குக்கோ முதலான முக்கோக்க ளௌவை பொட்
டக் கூத்தன் கூறுஞ், சங்கத்தார் புகழேந்தி சனியூர ணிரட்டை
யர்கள் சைநர் மற்றுந், துங்கத்தார் புகழ்ந்ததிவர் தொழி லென்
று மிதன்பெருமை சொல்லப் போமோ. (௬௫)

அடுக்குதல் வெட்டல் விசலடித்தல்வா ருதன் முகத்த
லெடுக்குதன் மூடல் கட்ட விசைத்தலேற் றுதலிறக்கல்
றொடுக்குத றடித்தல் சீத்தல் தோண்டுதல் கொழித்தல் பாத்த
லொடுக்குதன் முதலாஞ் செய்கை யுழவினி லளவுண் டாமோ. ()

ஆட்டுக்கும் பெற்றத் துக்கு மசுவத்தோ டெருமைக் கட்கும்
பாட்டுக்கு ளான வாட்டும் பதினெட்டுக் குடிமை கட்கும்
மேட்டுக்கு ளடங்கா தான வெவ்வுயிர் கட்கு நாய்க்கு
மூட்டற்கு நசுப்பு கட்கு முழவினுஞ் சிறந்த துண்டோ. [௬௭]

ஈட்டா லிவரேர் பூட்டிடி னல்லா லிரவி யுந்தேர்
பூட்டா னெனவிது போன்றநற் பொருள்சேர்ந் தவன்புகழ்ச்சி
பாட்டா லுபர்கம் பன்சொலப் பணிந்தே யகமகிழ்ந்தே
கேட்டார் பலநாட் டாரிதுகேளா தவர்க ளெலாம் வதிரே (௬௮]

ஆறிரண் டருக்க ராதி யவ்வாசி யுத்தர மாறுலுங்
கூறுசொற் றவறு வார்த்தை கோத்திரக் கல்வி மாண்க
ளேறிய வவைக்க ளத்தி லேர்த்தொழிற் கெதிர தாக.
மாறெருந் தொழிலுண் டென்னில் வாய்திறப் பீர்காண் வந்து. ()

கலிவிருத்தம்.

யாதுள தியாமிலே மென்னி தென்றிதோ
ரேதுவின் வாதுகொண் டிழிக்குங் கூலிகள்
பாதமற் றவயவம் பரிக்குந் தன்மையான்
மீதுள மெனத்தகு தி மேவுந் தன்மைபோல். (௱)

இன்றியமையாப் படலம் முற்றிற்று.
ஆ. செய்யுள் ௪௯௨.

பத்தாவது

ஏர்ப் படலம்.

கலிநிலைத்துறை.

ஈட்ட மாகிய தொழிலெலா மித்தொழி லின்றி
யாட்ட மில்லையென் றறைந்தன மாருயி ரடைந்த
கூட்ட மெத்தனை யத்தனைக் குங்குறை யாம
லூட்ட மின்றவல் லேர்த்தொழி லிலக்கண முரைப்பாம் (௧)

இன்ன பல்சிறப் பேர்த்தொழிற் குளவெனி லடிகே
ளன்ன வித்தொழி லடத்துதற் கிலக்கண நவில்கென்
றுன்ன ரும்பல வுயிர்களை யூட்டுதற் கமைந்தோ
னன்ன மீதவ னடிமலர் முடியுற வணிந்தான். (௨)

இத்தொ ழிற்குள விலக்கண நெறிபல வெனினுஞ்
சுத்த வின்குல சுபாவத்த வாதலாற் சுருக்கி
யத்த னுக்குமென் பிரைபென வறைகுவ னதனாற்
கைத்த லத்துறு நெல்லியங் கனியெனக் காண்டி. (௩)

எந்தக் காலுமோ ரியற்கையிற் செயற்கையு மிணங்கி
வந்துற் றுற்பொனின் மலர்மண மலிந்தது போலா
முந்தக் கேட்பது முறைமையே யாயினு முன்னி
னந்தத் தாரியி னடப்பதே யரும்பல னமையும். (௪)

பந்த வாழ்க்கையைப் பாலர்க ளாதிபாப் படிப்பாஞ்
சொந்த வாழ்க்கையைச் சொல்கவி யால்வின வுவர்போ
லிந்த வாழ்க்கையோ வேர்முதல் விளைதற்கேற் றமையான்
முந்த வைகறை கோவளம் பார்ப்பது முறையே. (௫)

ஆர்க்கு நற்றெய்வம் பசுவெனு மாகம மறைக
ளோர்க்கு நற்றெய்வ மிதனினாங் கில்லையா மெண்ணி
நீர்க்கும் புற்குநன் னிழலுக்கு நேரமுன் னியற்றிப்
பார்க்குந் தன்றொழில் பிற்படி னுழுத்தொழில் பலிக்கும். (௬)

நீர்.

இடைகி டத்தலும் வண்டல்கூ டலுங்கெடு கந்த
முடைய தாதலுஞ் சுடுதலுந் தாமுழக் குதலு
மடைவ டாதிக ளழுகலு மடையிலக் கேடு
மிடற முந்தலு மிகக்குனிந் தருந்தலும் விடுக்க. (௭)

மன்னு முதநா சுவரொரு புறத்ததுண் மட்டத்
தெண்ணு யர்ந்துறுந் தூம்பினே டிழிதுளைத் தென்றா
மூன்றொ ளைவிறப் பினதுயர் வகலநேர் பேர்ப்ப
தன்ன லங்கொழுக் கூவத்துக் கணித்துநீர்த் தொட்டி. (௮)

ஆறு காலுள வென்னினு மடர்மழை யாற்சே
றேற லாலங்கு மியம்பிய தொட்டியேற் றதுவா
முறு பன்னல்வித் தாதியூட் டிடுமெனப் பானம்
வேறும் வேண்டுமோ தாகத்துக் கியற்றுதன் மேதை. (௯)

ஆதி யிற்றொழிற் கல்லன பூதத்தா னேயென்
றோதி னாவற் றுள்முத கங்கொளற் குரிய
னாத லாலதை யகலமா யுரைப்பதென் னவிவாற்
றீதி லாதநற் சலத்தினைத் தேர்ந்தெனிற் றூட்டு. (௰)

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஆவுண்ட வுணவின் சார மருந்துநீ ரான்மிக் குண்டு
நாவுண்டு தாக முண்டு நல்லநீ ராசை யுண்டென்
றோர்வுண்டே மறந்து நீட்டித் தாறுகணீ ராற்செய் யற்க
கோவுண்டு களித்திட் டாலுங் கொடுமைசெய் வதுநன் றன்றால்

புல்.

கலித்துறை.

நன்செய் புன்செய்வல் லேற்றுநீர்ப் பாயுநன் னிலங்கண்
முன்செய் புண்ணிய முடையவர்க்கிம் மூன்றும்வந் தடைந்து
மென்செய் கிற்பதோ வெருதின்றே லவ்வெருத் தினையும்
பின்செய் புல்லினைப் பேணியென் றப்புலைப் பேசும். (மஉ)

பொன்னி லந்தனிற் புரந்தரன் போற்புவிக் கெல்லா
மன்ன னாகினு நீதியின் றேல்வலி யழிவா
னென்னி லங்களும் பலவுளா னெனுமீ டேற்றும்
புன்னி லங்கொளான் பொலிவெலாம் வையமுல் போலும். (மங)

குறையும் பாலுமே கோக்களைப் பெருக்குவ வென்ன
விறையு மெண்ணில னிரண்டிலும் பிறபய னேற்றின்
முறையில் வட்டிவேட் டரும்பெறன் முதலினை யிழக்கு
மறிவி லாளனே யவனுமுக் தொழிற்குள னாகான். (மச)

நாம்ப லன்கொடு கழித்ததுங் குறைப்புலு நக்கி
மேம்ப டுந்தொழிற் குதவலாற் பிறவற்றின் மிகுவித்
தோம்பு நல்விலை யடையல னெனினுமு வின்க
ணாம்பெ ருஞ்செல வாலடை யரும்பய னென்றும். (மரு)

கலிவிருத்தம்.

இரும்பொருள் வினைவொன்று லெய்தச் சாலுமோ
வரும்பொரு டருவதற் கமைந்து நின்றது
பெருங்குறை யதுதரும் பேறுகோ ளின்றேற்
பெருங்குறை யேயதிற் பிறிதெ னுதியம். (மசா)

பொற்குறை பசுக்குறை புருவை யின்குறை
நெற்குறை பாறயிர் நெய்யெ ருக்குறை
சொற்குறை யாவையுந் தொடர்ந்து சூழுங்காற்
புற்குறை யிலாமையிற் புகுந்த வன்குறை. (௰௭)

மூண்டக முதலிய மூடும் புற்குறை
யுண்டில னுதவில னுலுத்தன் கைப்பொருண்
மிண்டிய புல்லினு மிகுத்த காலிக
டிண்டிற லிலாதவன் சென்னி வண்சுமை. (௰௮)

கலிநிலைத்துறை.

நெல்லை யேபெரி தென்பவ னெற்றா நின்ற
வல்ல காரண மறிகிலென் வருய்வழி யறிவான்
புல்லை யேபெரி தென்பவன் புற்றராப் பலன்றே
தில்லை யாதலி னிதைமறந் தானுழ விழந்தான். (௰௯)

மாட்டுக் காகலா வயிற்றினுக் குழைத்திடி னவற்றின்
பாட்டுக் காகவு மிரும்பல னிற்பகிர்ந் தெடுத்த
தாட்டொக் கால்னிலை யெத்துணை யத்துணை சரியா
பூட்டற் காவன விலைகொண்டேட் டுணவுள வேரும். (௨௰)

பகைத்தெதிர்ந் திடிற் கருவியா யுதவுதல் பாரான்
மிகுத்த வன்படை விரயமென் றேசெல விட்டான்
வகுத்த பூர்வசா தனமென மனத்தினி லடையான்
இருத்த தின்விற்கச் சேவிற்பா னிருவருஞ் சமடர். (௨௧)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

உற்றபுற் கயிற்றி னாலே யுழவெனும் பதுமை யாடு
மற்றதென் றூலோ விழு மறுதியென் றுறுதி யோர்வாய்
மற்றுநான் சொல்வ தென்னே மாட்டினு லிலாபங் கொள்ளச்
சொற்றபுற் சூழ்ச்சி யன்றோ சுக்கினிற் சுக்கம் போல. (௨௨)

கலிவிருத்தம்.

துவரைகொள் கடலைகள் சொன்னன் மாடங்க
ளவரைக ளாதியி லகறும் போக்கெலா
மெவையுமொன் றுக்குவி யேற்ற காலத்தி
லவைமறி யாதிகட் கரிய தீனுமாம். (உ௩)

உற்றவோ ராண்டினுக் கூக்கும் புல்லினுண்
மற்றையோ ராண்டுக்கும் வரவுண் டாக்குதி
தெற்றென வேர்க்கறு மொழியச் சேர்த்துவாய்
துற்றுறு சுறைப்புலுந் தொகுமி குந்தகேல். (உ௪)

இலக்கணப் பசுக்கள்வை யிவைக்கு நேரதாய்ப்
புலைக்கண்வை யவைக்குநேர் பொருந்த மாங்குறை
நிலக்கண்வை நேத்திரம் நிரம்ப லாகச்சே
விலைக்கண்வை யுன்குறை விடியுங் காலமே. (உ௫)

உண்டுடன் கழிக்குநின் னுணர்வு போலலக்
கண்டுடன் கழிக்குமக் காலியாகையாற்
றிண்டியிக் கிட்டிடே நின்ற பின்புலைக்
கொண்டுணை விடுவையேற் குமைக்கு மாறிலை. (உ௬)

இடையிடை மெலியினு மெழுநற் புல்லையுண்
டெனுடல் பொலியுமென் றேம்ப லீரெனின்
மடமையப் பொலியுடல் வலியி லாமையா
லுடையில விடையழ லொத்து நோயுறும். (உ௭)

நனைகுதல் காய்குத லனிவன் காற்றினு
லினைகுதல் பசியுட னிருத்த லீர்நசை
வினைசெய விவைகளின் மிகுதி கொள்வனே
லனையவென் பசுக்களை யடர்க்கும் வெங்கையே. (உ௮)

வளர்ச்சியி லலைச்சலில் வயிரங் கொட்டலுந்
தளர்ச்சியில் வியாதியிற் றடியின் பூசையுங்
குளப்புக ணீளுறக் குறுக்கிக் கட்டலும்
விளிப்பன காலிக்கு மிருத்து மூவைசை. (உ௯)

பிள்ளைகள் பிறவுணல் பேண லெண்ணியே
தள்ளைகண் முலைதராத் தன்மை யுண்டுகொல்
கொள்ளுறும் பான்மிகிற் குற்ற மில்லையாற்
றுள்ளறக் கட்டலாற் சுருங்குந் தீனியே. (௩௰)

வாயிலை யென்னினும் வருத்த மில்லையோ
வாய்தரத் தக்கதோ வமைப்ப தென்பிரேற்
சேய்சொலத் தெரிந்ததோ தேகம் போற்றுத
ருப்செய லல்லவோ தாங்கு சாலத்தை. (௩௧)

உடனுறை வில்லன வுருவ மைந்தன
படுபிணி யில்லன பருமி தத்தன
வடலின பருவமே வூட லில்லையேற்
கடைபடுங் குடந்தருங் கன்று மேற்படா. (௩௨)

இலக்கண மமைவில விளமை யேவிடை
விலக்குகோ விட்சண விகாரம் பிளுறும்
பலப்படக் கன்றுக்குப் பாலை யூட்டுவாய்
கலப்பயங் கறக்கினுங் கன்றுக் கீடன்றால். (௩௩)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஒள்ளிய கன்றை யீனு மொன்றினுக் கொன்ப தாக
வெள்ளிய வளர்க்குங் குற்ற மெருவினுன் மறைத்தா னெனும்
வள்ளிய புற்போ யோர்க்கு வரவும் போய்த் தொழிலுங் குன்றும்
வெள்ளரி விற்ற கூடை வேறல விற்ற கைகள். (௩௪)

கலித்துறை.

கொள்ளி லோவினை யுயிர்ப்புக ளாதிபார் கொடையி
றள்ளி யாயினும் பாதுகாப் பவர்க்குநீ தருக
வள்ளி யியினுங் கொலைஞருக் களித்திடே ளிக்கில்
விள்ளு மக்கொலைக் குடன்படு பாவமுன் மீதாம். (௩௫)

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஒன்றைந்து காலை யைந்து கதியெருத் தைந்து திண்மை
மென்றிடுங் கிழமவந்தாகு மிருந்ததுங் கிழத்திற் சேர்க்க
சென்றிடும் பல்லி லைந்துஞ் செறிமருப் போங்குந் தோறுந்
துன்றிடும் வடுவுங் கொன்றுத் தூக்கிநீ யாண்டு காணே. (௩௬)

கலிவிருத்தம்.

ஆட்டையு மாட்டையு மாற்று மட்டும்யா
னோட்டலிற் றிருப்பலி னூறுகண் செய்கிலேன்
வாட்டுறு சத்திய வாக்கு மூலம்பின்
காட்டுவை மேய்ப்பன்பாற் கடவுட் காலியை. (௩௭)

காலையின் மாலையி லாவைக் காணல்போ
லேனுமே யுச்சியு மிரவின் மத்தியும்
வேலையிற் பெரிதென விரும்பிக் காண்பனேன்
மூலம தாய்த்தொழின் முடுகு முள்ளமே. (௩௮)

கலிநிலைத்துறை.

தள்ளு கோசலங் கோமயம் பின்வழி தரவே
யுள்ளு யர்ந்தநற் றளத்தின துறைவழி சாடித்
தள்ளி னும்மெதி ரிறப்பின தீரமா திகளாங்
கொள்ளு குற்றங்கொண் டோடுகோல் வழியது கொட்டில் (௩௯)

நாமச் சீவன நானுஞ்செய் வோமறை நண்ணோர்ந்
தாமச் செய்கையிற் சற்றும்வேண் டாதவை தடைப்பட்
டியாமச் சேக்கையி னணையவுங் கொட்டிலோன் றமையா
வேமச் செய்கையன் காலையிற் பட்டியேன் பார்ப்பான். (௪௰)

காடி. கட்டிலாக் கொட்டிலோ தினியைக் கழிக்கு
மூடிச் சொல்வதென் விளக்கிலோ முதலுக்கே மோசந்
தேடிக் கொள்வதைச் சிந்தியான் பிறவற்றைத் தேடும்
பாடிச் சொல்வதென் னந்தோ பட்டியேன் பார்ப்பான். (௪௧)

மரமென் றெண்ணியோ மடமையோ வருடைக்கெக் காலு
மிரவி னுண்டியை யிட்டிலன் பசியினைக் கத்தால்
விரைவின் மேயுமா றுண்டியான் முன்மெலி வானேய்
பரவி மாய்வது கண்டுபின் பட்டியேன் பார்ப்பான். (௪௨)

சார்ந்த காலத்தி லுறுங்கட னவற்றினுற் றடிய
வேய்ந்து நின்றவ னெண்ணில் னிருப்பன மனத்தோன்
மேய்ந்த காலமும் வெறுமையாய்ப் பட்டியி னுள்ளே
காய்ந்த காலமுங் கணக்கிடான் பட்டியேன் காண்பான். (௪௩)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

இடையிலா யுக்கு ஞலர் தெண்வழிப் படுவோன் வண்டி
விடைகொளில் விரையு மன்றே விதியுளி பெண்ணி வீட்டைப்
புடையகல் வாகக் கட்டிப் பொலிவுற நோக்கும் பண்பா
னடைமழை நீக்குன் றியாப்படும் பாட்டை நோக்கான். (௪௪)

கலிநிலைத்துறை.

மென்ற ரத்தினன் விளைவுபுல் சமதரன் மேலாம்
வன்ற ரத்தினன் வருடையா வாய்பரி விலையி
னென்றி ரண்டுமென் றினிதி தேடினு னுறுக
ணின்று வேண்டின்மற் றிருவரு மெடுப்பள வெடுக்க (௪௫)

ஊட்டிப் பின்னரே யுதயத்தின் முன்னரேர் பூட்ட
வோட்ட லெற்றுத னிருத்துத லொழிகவேர் விட்டாற்
கோட்டின் மண்ணெடுத் திடினென் றுங் குறைவிலை மெய்யே
மாட்டின் வாழ்க்கையெவ் வளவதவ் வளவதாம் வளமே. (௪௬)

பூட்டு காலையோ புரிதொழிற் காலையோ பொறைநீத்
தோட்டு காலையோ வொன்றுமி லுறுகணை யுஞற்றிற்
காட்டு மேவலின் குறிப்பெலாங் கனபயங் கொள்ள
மீட்டு மப்பயம் விளைபொடு சுகுணத்தை விழுங்கும். (௪௭)

அமக்குந் துக்கமுஞ் சுகமுட னசுசியுஞ் சுசியு
முமக்கி லாதவே னும்மடைக் கலமென வுற்ற
வெமக்கி லாதவோ விழுதைகா ளெமிகத் தருக்கித்
தமர்க்கு நிற்குமென் றறிந்துவா யருளில னயனே. (௪௮)

விடைகொ ளாவினின் வேலைகொ ளளவினின் வெய்தாக்
கடிகொ ளேதிலர் மாட்டிடைச் சேர்தலைக் கண்கொ
ளிடர்செய் நோய்வரற் கேதுவை யிரவொடு பகலுங்
குடிகொண் மாட்டிடை வயிற்றினிற் குறையொன்று மிலையே. ()

செய்மை யோட்டத்தி னீருடைக் குற்றத்திற் றீனை
யாய்வி லாதுமிக் கூட்டலி லளவிலா வுளைப்பிற்
பேயு மாரிவன் கால்வெயில் பெரிதுறக் கிடப்பி
லோயு நோயதை யோட்டலி னுப்பிடா மையினேய். (௫௰)

புத்த கந்தரிற் புலம்பிடும் பிள்ளைக்கும் புத்தி
யொத்தி ருப்பதா னுணர்விலே னென்பதை யுணரா
தத்தி ருக்குள பிடகரை யாமுனர் விடாம
லெத்தி றத்தினும் புத்திகற் பித்திடி லினிதாம். (௫௧)

இரத நன்மணம் யாமனு பவித்தன வெனினுங்
கிருத நன்மது வெடையொக்கிற் கெடுப்பதா மேனு
மரும ருந்திய லறிந்திலா னமைக்கின்ற மருந்தா
லொரும ருங்குநோய் சூடொரு பக்கமோ வுபயம். (௫௨)

வீழின் மெய்யுறல் சிதறுதல் விழுசலம் பினிடல்
பாழு றப்பரு பருத்தலா யிடைநடுப் பரிதல்
சூழு ரோகந்தன் னுலிவை முதலிய சூழா
னூழின் மாவலி யுயிர்நிலை யூட்டிய மருந்தின். (௫௩)

பொன்னைக் காப்பதிற் புகுமிடர் யாவையும் புகாமன்
முன்னைக் காப்பது மூண்டிடி லவையற முன்னிப்
பின்னைக் காப்பதும் பெரிதல வுழுவிடைப் பெரியோய்
தன்னைக் காப்பவ னுவினைத் தாங்குனக தவிரான். (௫௪)

கலி விருத்தம்.

நெருக்குயர் குரமிதி நிலைமுக் கோணத்தோ
டுரத்தின துறுதிகா லுறுதி யொண்டொழிற்
பருத்திடு களமுமப் பண்பிற் பல்லுக
ளிரட்டைமெல் வதிற்றிற மிவற்றை யாய்கவே. (௫௫)

அத்தியி னுறுதியு மகன்ற வெந்நுமுன்
பொத்திய விழிக்கடைப் பொலிவுங் காய்கருத்
தொத்துயர் தட்டுமுன் றிமுப்புங் கோலுக்குத்
தத்துறு பயமும்பெற் றதுத குந்ததால். (௫௬)

மெய்விழி பருத்தது விலாநி றைந்தது
பொய்விழி மிகக்குழி பொருந்தி லாதது
மொய்பெறுங் கொம்புகண் மோடி லாதது
செய்விலை யும்பினர் சிறுக லாததாம். (௫௭)

அளவுறுந் தோற்பிணைப் பாகு மாஞ்சுழி
யுளசுழிக் கதிகந்தோற் கூன முந்தெரி
வளமுறு மயிலையுத் தமங்க றுப்பின
திளிவுறு மதமமா மேனி மத்திமம். (௫௮)

சிறுகுளி ருக்குமெய் சிலிர்த்த லோட்டத்தின்
மறுவுறு சுவாசத்தின் மயங்க லிர்ப்புழிப்
புறமது குனிதறின் புனல வாதது
வுறுகொடி தொங்குத லுறுதி யற்றதே. (௫௯)

தாடைவா றலைபருத் தள்ளுத் தாழ்ந்தது
கூடிய நீர்த்தளங் குறுக லாதது
நாடுமுன் பின்னரி னடுப்ப ருத்தது
பாடுரோ மத்தது பகரின் மந்தனும். (௬௰)

திருட்டுளத் தனுமிகச் சிறந்து தோன்றவே
வெருட்டுறு பார்வையின் விரைவென் றெண்ணிடே
விருட்டறத் தொழிலிடை யியைத்துக் காணுக
மருட்டின தென்றுபின் பதிவிற் சேன்றுபயால். (௬௧)

ஆள்.

கலி நிலைத்துறை.

பொய்யன் கள்வன்றன் றொழிற்புகிற் புலம்பறு வாயன்
கையன் மாமடி தலைவனைக் கருத்திடைக் கணியான்
வெய்ய நோயுளோ னடிக்கடி பிணங்குறும் வீணன்
செய்யு நற்றொழிற் காளெனச் சேர்க்குத றீதாம். (௯௨)

வரவு பாணிப்பு மனைக்கெனில் விரைவுமோர் தொழிலைப்
புரியும் வேலையி லிடைக்கிடை தன்பலன் போதிவும்
பரிதி பார்ப்பது மடியுடைப் படுதலும் புன்செய்
திரியும் வேலைவெற் றடியுமாட் டொழிலினைச் சிறுக்கும். (௯௩)

வினைசெய் வாரெலாம் வெள்விழி விழியிடைத் தெளிந்த
தனைய ளாகிலுங் கருவிழி மணிநுனி தானு
மனைய தாதலி னுள்செல லதமமத் திமமே
தனைய னுடைத லுத்தமந் தானிவை சரதம். (௯௪)

தார வெள்ளையே னின்விழித் தவளமே சாலுங்
காரு ளத்தனைற் கருவிழி நுனியுங்கட் டாவா
மேரொ ருத்தினை யியக்குமோ னேழையே யிவனைச்
சேரு மைத்துன னெனச்சொலிச் சிரிக்கவுஞ் செய்யும். (௯௫)

நாளி றந்தது தொழிலிடை யிறந்தது நாடி
னீள நல்வர விழந்தது கூலியை நெருக்கி
லாளி ழந்தது படையென்ப ரஃதறி யார்க்கு
மீள ச்செய் தொழிலினு லாட்டொகை மிகுதி. (௯௬)

ஒற்றை யாள்வினை யொழிவென வுலோபியா துற்ற
வற்றை யாண்மிகு மதிபனென் றொருவனை யமைக்க
வெற்றை நாளினு மியக்குமோ ருடனிருந் தியற்ற
மற்றை யாள்களுன் மதிபற்குத் தலைமையை வழங்க. (௯௭)

தூக்கம் விட்டருந் தொழினனி தொடங்குதற் கென்றும்
யாக்கை யால்வருந் தாட்களை யத்தொழிற் கடையி
லூக்க மெவ்வள வவ்வள வாயுயர்த் திடுக
வேக்க நீங்கிடக் கொடுப்பதி லவர்க்கஃ தினிமை. (௯௮)

கூடல் சன்னத்த மேற்றுதல் கொட்டுத னடத்த
லோடு முன்பின்கை நீட்டுத லொழுங்கினிற் பின்பி
னோடல் பாவனை யுடன்பல பயிற்சியு மொழுங்கே
கோடல் செய்வையே லாட்செயல் கோணல்வா ராதே. (௬௯)

நீர முற்றுறு தலைவரா லாட்சியைச் செலுத்தி
வீர ரொவ்வொரு வரையுமாள் வான்பெரு வேந்த
னேர வேசொலத் தகவிலா ரிடமெலா நேர்ந்தாற்
பார மேற்படு மாட்சியின் பயம்படுப் பதனால். (௭௰)

ஆவு மெய்ப்பவ னுண்மையி னளவதா யமையுங்
கூவு மாட்களு மாட்சியின் குணமெனத் திரிவ
ரேவு மாளுடை முயற்சியி லாதவ னென்ன
நீவ ழாசிற்பி லிமையவர் நின்னுடை யாட்கள். (௭௧)

படியை யன்பினீந் தவரவர் பண்ணுத லறிந்து
கடியுங் காலையிற் கடிந்துதான் கடுவயிர் தாயின்
விடியுங் கீட்டிசை நோக்கியே மேற்றிசைப் பரிதி
முடிவு நோக்கலர் தொழிற்றுறை முடிவினை நோக்கி. (௭௨)

உகவுண் டாக்கிடிற் சம்பள முயர்த்துவ னென்ன
மிகம வுட்டியங் கண்டல் வெண்ணகை செய்ய
வகம கிழ்ச்சியென் றதிகசம் பளமவன் கேட்பான்
பகரு மாசையிற் பெரியவெள் ளறிவினர் பலரே. (௭௩)

வரவுண் டாக்கிடு மாட்குமற் றாட்களு மறியத்
தருத லில்லையேற் றலைவனுந் தன்மையிற் சாரான்
குருடன் யுக்தியை மனங்கொள மதித்தகோ மகன்றா
னொருதட் டோர்படி கொடுத்தவக் காதையா லுணர்க. (௭௪)

புரிய வாண்முனர்ப் போதலும் புலரியிற் றொடங்குங்
கருமம் யாவையுங் கடையினிற் கழறலு மின்றித்
தெரிய வாணிகா தியினிடைச் சிந்தைசெய் வானே
லரியு மாள்கட்கு நாவரல் காட்டுத லனைய. (௭௫)

காலை பூக்குறும் வினைகளுங் கைசெயாட் குடும்ப
மாலசி யத்தி லலைகிலா தமைத்தலுஞ் சளுவில்
வேலை யாற்றலும் விடியுமுன் குருகென விழிப்புஞ்
சாலு மாளுடை யுண்டியுந் தன்னுடை யாக்கம். (எசு)

பதியின் செய்கையவ் வாட்டொழில் வேற்றுமை படாதேன்
மதியுஞ் செய்கையும் வரவுமா ளளவின தாமா
லதிக னுமெனி லாளரு கிடைவிடா தமையா
னெதுவும் பார்ப்பவ னுதலாற் றொழிலள வெண்ணும். (எஎ)

கலிவிருத்தம்.

ஆசையா லாட்டொழிற் கதிகஞ் சொல்வது
மேசியே யவர்களை யிகழ்ச்சி செய்வதும்
பேசியே யதுகடை பெறுது போக்கலும்
நீசெயா திருப்பையே லிலையி னிற்பரால். (எஅ)

நன்புலன் பகட்டினு னுடுஞ் செய்கையும்
புன்புல னெருத்தினுற் பொருத்துஞ் செய்கையு
முன்புலுண் கன்றென முளைத்து நீடிய
பின்புலுண் பசுவெனப் பெரிது நல்லவே. (எகூ)

சிறுசிறு துளிகளாய்ச் சேர்ந்து வெள்ளமா
யுறுவது காட்சியி லுணர்ந்து மாதலா
லிறுவதெங் ஙனமென வெண்ணிப் பின்னிடே
லறிவுமேற் பட்டது மறுஞ்சின் னுளினில். (அய)

உண்ணுவா னுகத்திடை பொருத்தல் பூட்டுவான்
பண்ணுவான் சன்னத்தம் பைய விழ்ப்பனுற்
கண்ணுவான் விசர்ச்சன நாடிச் செல்வனுற்
பண்ணையா ளிவரெனிற் பதியைச் சொல்வதென். (அக)

ஆர்வலி லாக்கண மழைப்ப வேபுகிற்
பார்வரு கண்ணனே பரிட்சை யாளிலென்
றோர்வற வொற்றிமற் றுள்ள வாட்களைச்
சோர்வறத் திருத்துதி சுமைமட் டாகுமே. (அஉ)

சமைத்தசங் கேதத்திற் றூழ்வி லாமலா
ளிமைப்பதன் முன்வர வியற்றி யின்னண
மமைத்திட வேண்டிய தமைய வாழ்வனே
விமைப்புள ஞயினு மிலேக னேயவன். (அ௩)

ஊனுடல் வருத்தமே யுளத்தி லில்லையாட்
காநல மென்னிரண் டலேச்சற் காட்படிற்
றூனசை வதுசெயத் தாம்பிற் கட்டிய
வேளைய நடைசெய வியையுள் ளானேப்பார். (அச)

கன்னற் காட்டியிற் காய நிழலினிற்
சொன்ன நேரந் துரிதத் தொருங்கினிற்
சன்னத் தாதி தருமுடி வீறதா
யுன்னி யூக்கி யொழுங்கி லொழுக்குவாய். (அரு)

குயிலின் வல்லனேக் கூழுணும் வல்லனேப்
பயிலின் வல்லனேப் பார்க்க வுறுதியா
மெயினின் வல்லனே மெய்ச்சத் தகுந்ததோ
செயலின் வல்லனேத் தேர்ந்துகொ ளேயநீ. (அசா)

கழுத்திடைப் புண்ணுறுங் காலிற் காருறு
மிழுப்பினிற் பிடிப்புறு மிடிவ டுப்பெறுங்
குழிப்புற வடிபடுங் கொடிய வாளிஞன்
முழுக்கணி லென்பயன் மூடிக் கொள்வையேல். (அஎ)

காலம்.

காலேநேர் மூவைந்து கடிகை யும்மெதிர்
மாலேநேர் மூவைந்து மாற லாகவே
சாலநே ரத்தணி தரச்செய் மூச்சுகள்
வேலேமேற் குளிர்சமன் வெப்ப மொப்பவே. (அஅ)

பொழுதினேச் சுமத்துதல் புத்தி யன்றதி
னழியுமா ளகத்துட ஞற்றுஞ் செய்கையுந்
தொழிலினேச் சுமத்தவாட் டோளின் மீதினி
லெழுமிரு முபற்சியு மியைந்த வாற்றலும். (அகூ)

சாற்றிய வினைகட்கே சார்பு காலமென்
றேற்றின ரிலக்கணத் தின்ன வாறுபோ
லாற்றுத லருந்துத லாற லாதியிற்
போற்றுவை வரையறை பொழுதைப் பங்கியே. (கூய)

எழுகையி னுறங்கையி லென்று மோர்முந்தி
யுழுகையிற் காண்கில னுதய சூரியன்
விழுகையி னளவவன் மேனி காய்கிறான்
பொழிதரு மஞ்ழயவன் பொருட்டிற் பூத்திட. (கூக)

போவதில் வருவதிற் பொழுதைக் கண்ணுறா
ஞவதி லழிவதை யணுவு மெண்ணுறான்
சேவதிற் சிறியதா வென்னச் சிந்தியான்
மூவகைத் தொழிலையு முடிக்கு மாற்றலான். (கூஉ)

திரும்பவும் பெறுவன செப்பின் மற்றைய
வரும்பெற லமையமோ வகப்ப டாதுகாண்
பெரும்பொரு ளஃதன்றிப் பிறிதொன் றில்லையால்
விரும்பிய படிவிடல் விவேக மன்றரோ. (கூங)

வந்தநாள் வராதநாள் வறிது போனநா
லெந்தவா ளென்றுணர்ந் தெழுதி வைப்பையே
லந்தவாள் வீண்பொழு தழிக்க லானிது
சந்ததங் காலங்க டவறு தற்கிலே. (கூச)

கருவி.

நெல்லுரித் தரிசியை நிறைக்க வேண்டினு
லெல்லவசா லெழுவரா யியற்றினும் மெவன்
கல்வியி னறிவினுங் கருவி யில்லையேற்
பல்செல வாம்புலி பற்றித் தின்றிடும். (கூரு)

கருவியுங் காலமுங் கருமமும் விடா
மரபென வலிமுகப் பிடியை மாற்றுதி
திரிதரு முழவினோர் திருத்தங் கண்டுநீ
பருமையி னுழுந்தொழி லாக்கிக் கொடியால். (கூசா)

ஆட்களைக் குறைக்குநீண் டகன்று போகின
நாட்களைக் குறைக்குநங் நலிவு நீக்குமே
தாட்களி னலைவையுந் தான்கு றைக்குமே
வாட்கண முதலிய கருவி வல்லவேல். (௯௭)

கூலியை நோக்கியே கொள்வர் கைப்படை
வேலையி னேக்கல மிகவ லிந்துநீ
சாலவுஞ் செவ்வையாய்ச் சமைத்த நின்படை
யேலவீ செலவினை யிறுக்கிப் பற்றிடும். (௯௮)

இரவலர்க் கிலையெனில் யாது போனதிற்
கருவியி னிரவலர் கருமங் காலங்கள்
பிரதிமுட் டினில்புகழ் பெற்றும் போவதால்
லிரவல ரிவர்களி லெவர்க ளேழையோர். (௯௯)

செலவிலை வரவெனச் சிறிதும் யாசியேன்
மலையென வதிலுனை மருவிக் கேட்பரா
லிலையெனி லிகழ்வொடு மிகவு மெய்துமால்
விலைமிக வென்னினும் வேண்டிற் கேடிலை. [௧௦௦]

மூலங் காரிய முற்றத் திருந்திறற்
சால நன்மை தருவதற் கையமோ
காலை மாலையிற் கன்மங்கள் போலவே
கூலி யாவையுங் கொற்றச்சி லுள்ளவே. [௧௦௧]

கலிநிலைத்துறை.

கரும்பொன் றந்தது களஞ்சிய நிறைவை யந்நிறைவு
பெரும்பொன் றந்தது வென்றுணர் பெற்றிய தாகி
யிரும்பொன் றங்கரு வித்தி ளெஞ்சிடா வண்ணம்
விரும்பொன் றங்குணத் தான்முடி யாதவெவ் விழையின் [௧௦௨

சேவிற் சேர்த்திடு கருவிக டிருத்தமில் லாவே
லேவு மாட்குமவ் வெருத்துக்கு மிடுக்கணை யிழைக்குங்
கூவு மாட்கர மங்஧னங் கருவியைக் கொள்ளின்
மேவு மாளுடை வினைபொழு தாற்றல்வீண் படுக்கும். (௧0௩)

மூன்று கோணமாய் முனைகொழு வடிவமா யடியி
லான்று வல்லிரும் புறுதியா யுறையிட்ட கலப்பை
யேன்ற வன்கொழுச் சரிதலே முதலிய விடுக்க
டோன்ற லில்லையா மாயுளு மதிற்கதி தூரம். (௧0௪)

மெலிவு குன்றிடத் திருத்திடின் மேம்பயிர் திருத்தப்
பொலிவு குன்றிடத் திருத்திடிற் புன்பயிர் திருத்த
வலிவு குன்றிடத் திருத்திடி லாள்களைத் திருத்தச்
செலவு குன்றிடத் திருத்திடிற் கருவியைத் திருத்த. (௧0௫)

பண்ணு கையிலன் பயில்வுறு கருவியில் லானே
லெண்ணு நன்னன விலன்கடி வனகடி விலனேற்
றிண்ண நல்லுணர் விலன்றெரிந் துந்திருந் திலனேற்
கண்ணி ரண்டிலன் கருவியா தியிற்கணக் கிலனேல். (௧0௬)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

கருவித் திருத்த மாட்டிருத்தங் காலத் திருத்தம் விடைத் திருத்த, மருமைக் கன்ம மெளிதாக்கு மன்றி வைவி னருகிருப் பிற், பிரியப் பொய்ப்பிற் பரபரப்பிற் பின்முன் னோக்காக் கொடு ங்கு ணத்திற், கரும முடியி னும்ப லங்கள் கழியு மதிபோற் காணுவே. (௧0௭)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஈந்தோர் பெற்ற கொற்றநக ரிறைவன் வேணு வுடையான்றன்
பூந்தோர் முதலாம் விருதருளப் பொலியுங் குறிச்சிக் கதிகார
னேந்தோர் முருக னுளக்காசி யுடையான் சின்னத் தம்பிமர
பார்ந்தோர் திருத்தக் கருவியைப்போ லமைக்கு மவரே தொழி
[ன் முடிப்போர் (௧0௮)

கணக்கு.

கலித்துறை.

கருவி கானடை சுயசுக விடயங்கள் வரிகள்
விரியும் விணிலம் விளைநிலம் பொழுதொடு விளங்கப்
புரியும் போக்கொடு வரவையு முன்பினும் பொருத்தி
வரைதல் செய்யுமேல் வரவுக ளெழிலினின் மலியும். (௧௦௯)

இவர்ந்து பார்க்கிலென் வேலிவிட் டெழுகின்ற பயிரைக்
கவிழ்ந்து பார்க்கிலென் கன்றைவிட் டுக்கழி பாலைச்
சிவந்து பார்க்கிலென் றன்குறைக் காட்டுறைச் செயலை
யுவந்து பார்க்கிலென் னெழுத்தின்றி யோடிய கணக்கை (௧௧௦)

முன்னைக் கேட்டினன் யூகமில் லாதவன் மொழியிற்
பின்னைக் கேட்டினன் செலவினைப் பிடிப்பவ னன்றை
தன்னிற் கேட்டினன் சோம்பலன் சருவதாக் கேடன்
பன்னிக் காட்டுறுங் கணக்கெழு தாதவோர் பதடி. (௧௧௧)

கலிவிருத்தம்.

ஒவ்வொரு வகையினு முற்ற திற்றதை
யிவ்வள விவ்வள வென்றெண் ணிட்டிடி
லவ்வள வேதெரித் தமைச்சிற் கூறுமாற்
செவ்விதிற் பெருக்குவ சிறுக்கத் தக்கன. (௧௧௨)

நேற்றுண வுங்கினைப் பரிது நெஞ்சிடை
யாற்றிடைப் போடினு மளந்து போடினு
மாற்றமு முளதுநீ மறப்பி னும்விழிக்
கேற்றுவிக் குங்கணக் கெழுதிக் கோடியால் (௧௧௩)

உழுதவன் கணக்குநோக் கிடினு முழக்குநெ
லெழுவதின் றென்பரா லென்க ணக்கெனிற்
பழுதற முடிப்பதற் குபாயம் பண்ணுவார்
கழிவதா லதின்வி ரையங்க ளாவதாம். (௧௧௪)

கருத்துடை யுணர்வினேன் கணக்கி லேர்ப்படு
முரைத்தன யாவையு மூன்றி னோக்குங்காற்
பொருத்தமுந் திருத்தமும் பொருந்தி நிற்குமேற்
திருத்தமும் வியர்த்தமாஞ் சிதடன் கைப்படில். (௧௧௫)

துதிதரு பிள்ளையின் சுற்று நீளங்கண்
மதிதொறு மளப்பவன் வளர்க்கப் பாலனு
ெதிதரு கணக்கினி னுணுகு வானவன்
மதியிடைப் படாதன மற்றை யாவையே. (௧௧௬)

தொடுத்திடும் வினைமுத றொடங்குஞ் செய்பொரு
ளடுத்தன தன்னுட னடலை யாய்தர
வெடுத்தலின் முகத்தலி னெண்ணி னீட்டத்திற்
படுத்தளப் பான்கணக் கதனிற் பண்டிதன். (௧௧௭)

ஆதலோ சுருங்கினு மழிவ தில்லையாற்
போதலோ விரியிலை யென்னிற் போகலு
மாதலுங் கணக்கிடை யமைத்துக் கொள்ளுக
வீதலால் வாழ்வதற் கேது வேறிலை. (௧௧௮)

வினைவினில் விடையினில் வேறு நேதுவிற்
கனையலா மெனக்கடன் கைக்கொள் வான்றன
துளிவர லயல்செல லுறுங்க ணக்கினாற்
றெளிகலான் கனைவது செல்வ முற்றுமே. (௧௧௯)

தந்தையி னுளுகை தன்ன தாட்சியில்
வந்தபோழ் துள்ளன வரைந்து கோடியேற்
பிந்துறப் பெருக்கிய பெருமு யற்சியால்
வந்ததும் போனதும் வரையிற் காணலாம். (௧௨௦)

கதிர்ச்சுட ரிரண்டினுங் கால பின்னத்தின்
விதைத்தலிற் றொகுத்தலின் மிகுதிகேடுக
ளுதிக்குமுன் னுணர்விடை யுன்க ணக்கினை
வெதற்கிலை கணக்கெனி விழுதைக் கில்லையே. (௧௨௧)

வெந்தனைத் தின்பதும் விதியிற் சாவது
மெந்தமா னிடருக்கு மியற்கை யாயினு
மந்தவன் கணக்குக ளாதியோர் வின்றே
லெந்தவன் மிருகத்துக் கிவனெப் பாவமே. (சஉஉ)

பருவம்.

திரிதரு மாளொடு செலவை யுங்குறைத்
துரியநற் றுணையென வுழவற் கொன்றிய
கருவியின் மகள்கன்மங் கனம நாயகன்
பருவமொட் டிலனெனிற் பயன்பி றக்குமோ. (கஉங)

கலிநிலைத்துறை.

வாலை யாயினு மதனனுக் கிரதியி னிசைந்து
சால லீலையிற் றக்கவ ளாயினுங் கருப்பங்
கோலு நாளன்றிக் கூடிலென் வித்திடு தற்குக்
கால மென்பதைக் கடைப்பிடி கனகநேர் நிலத்தும். (கஉச)

தேரி னூற்றிடைச் சிந்தைசெய் விளைவெலா முளையிற்
பாரு மென்பது பழமொழி யதுபழு தாமோ
பீர மாந்திபோற் பிடையே களைபிற வான
பார மேறினுந் தாங்கவு மடுக்குமப் பண்பை. (கஉரு)

முன்னம் பாதமோ பாலமை முற்றுநான் கான
பின்னம் பாதம்பீட் பெற்றதிற் பேரிளம் பெண்ணு
மன்ன நாப்பணி னிரண்டுகால் வளர்ச்சியா தலினாற்
சொன்ன நாற்றொரு பயிரையுஞ் சுகம்பெற வளர்த்து. ()

கலிவிருத்தம்.

பொதுவிதி மதியிரட் டாதி போற்றுத
லதுவல பருவத்துக் காதி யாயுங்கா
லிதுபரு வத்தினுக் கிதுவென் றோதிய
துதிதரு விலங்கினுட் டேதொ டக்கமாம். (கஉஎ)

அண்ணிய பருவத்துக் கான வித்தினின்
மண்ணுற வன்றியும் வருமங் கேழுளை
கண்ணினு மனுபவங் காண்டு மாதலாற்
பண்ணிய பருவத்தின் பலனை யோர்குவாய் (௧௨௮)

பருவத்தாய் முலைமதி பானி லாவிதைப்
பெருகத்தா னுணும்படி பேணி வித்தியேல்
வருசத்தால் வளர்பயிர் மகவுக் கூறில
வொருதத்தான் மாயுமிந் தொழிவுக் குட்படின். (௧௨௯)

பானில வளர்ச்சியிற் பருவ மொன்றினுற்
றேனிடைப் பழம்விழுஞ் செய்கை போலுமா
லானவை தெரிந்திலா வசடன் வித்திடல்
வானல வித்தினை வருத்து வித்தனேர். (௧௩0)

நன்மதிக் குச்சகி நாம நாட்டலான்
முன்மதி வித்துளே முளைகொண் மாண்பதாற்
பின்மதி வித்தினைப் பிரித்தெ டுப்பவர்
நன்மதி யாரவை நலிவு றாமையால். (௧௩௧)

துளிவெயில் பனிதிசைத் தோற்ற மாய்வரும்
வளியிவை மாய்க்கவும் வாய்க்க வுஞ்செயுங்
கொளுமதைக் கொள்ளவுங் குறையை நீக்கவும்
வளமுறு பருவமே வலியு மாறிலூழ். (௧௩௨)

பயிர்வினை யாவணிப் பருவ மாயினு
மயனபே தத்தினு லாடிக் குள்ளுமாம்
பெயுமழை யாதிநான் கும்பி றழ்ந்துகொண்
டியலிடம் வித்தினுக் கேற்ற வாறுசெய் (௧௩௩)

ஆனியின் கோடியி லறுத லேமுறை
மேனனி விளம்பற்கு வெள்ளை யல்லைநீ
தானமுங் காலமுந் தக்க வாறுகண்
டானநல் லுழுந்தொழி லமையக் கோடியால். (௧௩௪)

பருவத்தே பயிர்செயென் றௌவை பண்ணையோர்
தெரியத்தேற் றங்கொடு செப்பி னளதற்
குரிமைத்தே யாவையு மொப்பி லாதவேர்க்
கருமத்தே கனிந்தகா ராள னென்னும்பேர். (கநரு)

தலைவன்.

கலிநிலைத்துறை.

சாற்றும் யுத்திதா ளாண்மைபிற் றவறிலாத் தலைவ
னேற்ற தாயெரு நீரிடப் பக்குவங் கெடாம
லாற்ற லாற்பிதா களைக்குறை யடக்குரு வாங்குத்
தோற்றிக் காத்துப்பின் றுடைத்தலாற் றெய்வமாஞ் சூழின் ()

ஏர்க்கி ரட்டியாங் கருவிய னியற்றற்கு முன்னந்
தூக்கி ரட்டியன் சூழ்ந்தவன் றடைந்தவர்க் குதவி
நாக்கி ரட்டியாங் கையின னுடைற முகத்தி
னோக்கி ரட்டியன் சரிநேற் றையனில னுனுகில். (கநஎ)

காலிற் றேக்கமு நீர்நிலைக் கின்மையுங் கழறுங்
கூலிக் கேக்கமுங் குறைதொழிற் கின்மையுங் கோவின்
வேலைக் கூக்கமுந் தன்வசத் தின்மையும் விடியுங்
காலைச் சோம்பனு முச்சியின் முயற்சியுங் கடிக. (கநஅ)

கால வினைலாங் காரியத் தேற்றுக கழறு
மோல வினைலா மாட்சியி லேற்றுக வுதிக்கும்
ஞால வினைலா நயனத்தி லேற்றுக கிடக்கைச்
சால வினைலாந் தானியத் தேற்றுக தள்ள. (கநக)

ஏர்கண் டானென்க வினைகண்டா னிலங்கண்டா னென்க
நீர்கண் டாற்பலன் கண்டன னெனொரு நேரி
னோர்கொ ளான்கண்டா னென்கநன் னிலையினிற் பானேற்
பேர்கொண் டானென்க பிறந்திருந் தங்கண்டு பேணில். (கசய)

ஒற்று மைக்குண மொழித்தன ரொவ்வொரு வருமாய்த்
தொற்றுண் டாக்கலிற் சுகமுடன் பலன்களுஞ் சுருங்கு
மொற்றை யேருள ராயினும் பலரொடுங் குளுற்றி
லற்ற மில்லதோர் பெரும்பய னடைகுவ தரிதோ. (கசக)

மிதிகொ ளாதவ னுவறை விளைநில முடவன்
மதிகொ ளாதவன் செலவையும் வரவையு மண்ணை
விதிகொ ளாதவ னுளையும் வினையையு மூங்கை
பதியெ னுநிலக் களமின்மைக் கூவலிற் பாய்வாள். (கசஉ)

ஆட்டு மாட்டினி லன்பில னுளினு மனையன்
கூட்ட மாட்டினிற் கொளு முளன் வரலுளங் கொளாதான்
வீட்டி னீட்டிக்க விருப்பினன் வீண்வெற்றிப் பிரிய
னீட்டி யாள்வினை முடிப்பவன் குடும்பத்தி னெருப்பே. (கசங)

பயிரை நாற்றினிற் பசுக்களை யிளமையிற் பண்ணுஞ்
செயலை யூக்கத்திற் சிந்தையை நன்மையிற் சிறந்த
வுபர்வைத் தாழ்மையு ளுறுதுணி வைத்தெளி வதனி
லியலு மாட்களை வைகறைப் பொழுதினு மெழுப்பே. (கசச)

கலிவிருத்தம்.

தந்தையிற் றிருந்தலிற் றவறென் றெண்ணுவான்
சிந்தனை வேறொரு செயலி லோடுவான்
பிந்துர லறிகலன் பிடிப்பிற் செல்லுவா
னிந்தவன் றொழில்விடுத் தேக வல்லவன். (கசரு)

நாலுபேர் திருந்திலா நடைய ராயினஃ
தேலுவோ னிடர்களுக் கேது வேறெண்ணிச்
சாலவாட் டையும்பலிக் கிழந்துஞ் சால்வுறுன்
காலமே விடுவனக் கார ணத்தினை. (கசசா)

அறிகுவ தறிகவஃ தமையின் றேயெனிற்
பிறர்சொல வறிகவப் பேறு மின்றெனின்
மறுமையி னுவந்து வருங்கோ லென்றுகொண்
டிறையிடை மாய்கவிங் கிவனி ருந்தவன். (கசஎ)

போவதில் வருவதிற் புகுந்து வைதிற்
காவலிற் கணக்கினிற் கடிய வெய்பிலில்
வேவதி லலேவதின் மிகவி ராப்பக
லோவதி லாவதி னுணுக்க மில்லையேல். (கசஅ)

காவன்மட் டாகவே காவல் செய்வெயில்
வேவன்மட் டாகவே விடியு முன்னெழு
கூவன்மட் டாகவே குறிசங் கேதங்கள்
ளேவன்மட் டாகவே யிசைந்த கூட்டுச்சேய். (கசகூ)

நிலத்திடைச் செலவினை நெருக்கி நீளவே
யிலத்திடை யுடையிடை யினித்த வாட்டிடைக்
கலத்திடைச் செலவினை களித்துக் காண்பனே
னலத்தரை விட்டய ஙன்றி செய்தனோர். (கருய)

திருத்தமும் வினைகளிற் செலவிற் றேறிடும்
வரத்தொடு நிலத்தினின் மணக்கும் வித்தொடு
பரத்தினி லபாத்தின் பார்ப்பும் பண்ணையி
னருத்தமு மளவினி னதிகம் வேண்டுமால். (கருக)

புல்லொடு சேர்த்திடு பொலியும் வேலினைச்
சொல்லொடு சேர்த்திடு தொடரும் வாய்மையை
வில்லொடு சேர்த்திடு வணக்கம் வெய்யர்பாற்
கல்லொடு சேர்த்திடு மனதைக் காரறின். (கருஉ)

பயமுறுத் துவரெலாம் பட்டம் பெற்றவர்
நயமில ரேமிக நம்பும் பெற்றியர்
மயருநோய் மருந்தயியார் மருத்துவ
ருயர்வதெங் ஙனமிவ ணுணர்வி தாயினே. (கருங)

காட்டிய திருத்தத்திற் கண்வைக் கானெனில்
வீட்டிய காலத்து மிகவி னைக்குறை
பாட்டினும் பலன்குறை பலனி னூண்குறை
கூட்டிய வுணவினுங் குறைவி வேகமே. [கருச]

ஒருதா மிருதா முற்ற பஃறாம்
வருமெனி லுண்டியை மற்றைப் பானத்தை
யிருமையு மின்மையை யெய்த நோக்கியே
திருநில மவனுய றெரிந்து கொள்ளுமால். (கருரு)

பகற்கொள்ளச் சேவக விருத்திப் பாமரர்
முகக்கப டத்துநீ முன்னர் நில்லற்க
மிகக்கொடு மனமுடை மேவ லாரையுந்
தகப்படச் செய்குக சாமத் தன்மையால். (கருசு)

ஒருவனே யிடர்செயி லொருங்கு கூடிநீ
யருவருத் திடலின்றே லறிவி லாதவ
னிருவரைச் சிலவரை யினும்ப லோர்களை
வரவரக் கெடுத்தனே வந்தென் சொல்லெனும் (கருஎ)

எடுப்பதின் முடிப்பதி னேற்றத்தாழ்ச்சியி
னுடுப்பதி னுண்பதி னுறங்கி யாறலே
படுப்பதிற் குளிப்பதிற் பரும்ப டிக்குளான்
பிடிப்பது விடாமையிற் பெரிய ரூமைகள். (கருஅ)

கலித்துறை.

உழவுக் கஞ்சில னேருளா னுளோ னுஞற்றுந்
தொழிலுக் கஞ்சிலன் சுருக்கலான் வரவினிற் றேலா
னிழலுக் கஞ்சுவா னிலத்தினுக் குரியவ னீரை
விழலுக் குய்த்தலாம் வினையின்கட் போற்றலாம் வினையே (

இன்று செய்வன பின்றெனக் கோடலு மிழப்பாம்
பின்று செய்வன வின்றெனக் கோடலும் பிழையா
மன்று செய்வன செலவையர் வஞ்சிடா தன்றே
நின்று காண்பவன் வரவினி னெடியா னவன். (கசா௦)

வரவு மிக்குளான் வலிமன வெழுச்சிமிக் குள்ளா
னெருது மிக்குளா னேற்பன செலவுமிக் குள்ளான்
கருவி மிக்குளான் காதினுங் கட்புலன் மிக்கா
னிரத மூட்டெரு மிக்குளா னென்னுமே ருழவன். (கசாக)

மன்னு நல்லுழ வாம்பெணும் வாணிகப் பெண்ணு
மின்ன பன்னிய ரிருவருண் டேபெனி லிழந்தா
னுன்னு மன்னியர் செலவினும் பிடிப்பினு மொவ்வார்
பின்னும் பத்துக்கு மெட்டுக்கும் பேதமும் பெரிதால். (கசாஉ)

கலிவிருத்தம்.

சிற்றுழ வினன்காஞ் செயலைச் செய்குறு
மற்றுழ வினன்காம் வரையைக் காட்டுக
சொற்றவைக் கெதிர்மறை சூழு வானெனி
லற்றமில் பெரும்பய னடைத லில்லையால். (கசாங)

தோளினு ளளந்துசோத் திரங்கண் ணுமென
வாளுவா னவனியை யவனி பாலகன்
றாளினு ளளந்துகண் டனனள் ளாமென
வாளுவா னவனியை யவனி பாலகன். (கசாச)

ஏறும்பினுக் கோய்வுண்டே யெனினும் யாண்டையு
மூறும்பவ னத்துக்கோ ரோய்வுண் டாயினு
மறும்பக லபலமா யழிக்கலான் முற்றின்
வெறும்புலத் தினுமிக விளைவின் மேற்கொள்வான். (கசாரு)

ஊக்கமே போக்கிய மூதவும் யூகிக்கின்
போக்கியம் போகத்தைப் புரக்கும் போகந்தா
னூக்கிய பேர்த்தனுக் குதவு மாறுத
லாக்கிய மறதியி லயரு மட்டுமே. (கசாசா)

மனமிளைத் தால்வலி யிளைக்கு மவ்வலி
தினமிளைத் தாற்செயல் சிறுக்கு மச்செயல்
வினையிளைத் தாற்பலன் வெருவு மப்பலக்
கனிவிளைத் தாற்கடன் கைக்கொண் டோடுமால். (கசாஎ)

பக்குவம்

கலித்துறை.

அச்சம் போக்குத லாளரு கிடைவிடா தமைத
லிச்சை யாலவ ருடன்பல மேசுத லிகழ்த
னிச்சஞ் சீறுதல் பொய்க்குத னிபந்தனை விடுத
[illegible] சொலரெழிற்பிற மின்மையென் றிவையே. (கசாஅ)

அடிமை யாள்வதிற் படைப்பதி லாதரிப் பிற்று
யுடைய வன்கணைக் கிற்புத றொறுப்பதிற் சுங்க
னடையின் மாருதம் பார்வையிற் கழுகுநற் செய்கைப்
பிடியின் வானர மூர்த்தந்தை யாதிநீ பெரியோய். (கசகூ)

கைக்கு மிக்கதேல் வாய்பகை கையினுக் களவா
யொக்கு நிற்குமே லுறுசம றொடுங்கிடு லுறவாந்
தக்க ணத்திற்பல் பல்லக்குப் போதறன் றுலாற்
சிக்கு மென்பதோர் முதுமொழி யானுநீ தெளிக. (கஎ0)

ஆறி லொன்றுகொண் டைந்திணைக் குடிகளுக் கருளி
வீற றத்துறு பெட்பையு மனுக்கொண்டு மிருந்தாள்
காறு கொண்டுழுந் தொழிலதா தரித்தலைக் கருதின்
வேறு வேண்டுமோ தெய்வமே மேழிமே னிற்கும். (கஎக)

கடன்கொண் டான்கெடக் கருதுதல் கைசெயுங் கூலி
யிடனுண் டாமெனி னெருக்குத லெளியர்க ளேங்க
நடைகொண் டோங்குத றற்பொலி வேமிச நபத்த
றிடனுண் டென்றியோ தெற்கிறைக் கிந்தனை செயலே. (கஎஉ)

கள்ள ராக்கொலை யாளர்க்கை வசஞ்செய்து கண்டோ
ருள்ள முட்குற வணங்கலா லுயர்வென மதிப்போன்
றெள்ளி யோர்தெருட் டப்படு மோதெரி யுழுநா
லெள்ளு வானன்றி யிதன்கருத் தறியுமோ விழுதை. (கஎஙு)

பித்தன் பாத்திரம் பிள்ளைகைம் மணியலி யத்தம்
வைத்த வாட்டிறம் வலியிலா விசதமா னிடத்தான்
பத்த மில்லதா பறச்செயல் பகைசெயுங் குடிமை
யுய்த்து ணர்ந்திலா லுழவுமே பாரன்னவா யொழியும். (கஎச)

பிரிவில் கூட்டுநற் குடும்பத்திற் பெருப்பலன் பிறரின்
மருவு கூட்டுவன் பகைதரும் பலனையு மடக்குந்
திரியு மூரிரண் டிருமனைத் தன்மைசெய் பயிர்கள்
புரியிலி சனைப்போற்றிபத் திரைமுதற் புரிக. (கஎரு)

மேயு மாடுசெய் மனிதனு ளுழவுமேம் படவே
வாயு நட்பழு குங்குழை வளைத்தபூ வணங்கி
யேயு நற்குணங் கிளைபயிர் தளையுமே றெல்லா
மாயுங் காலையில் வலிதரு வதற்கைய மிலையே. (கஎசு)

எரு.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பாட்டினு லன்று வேறோர் பான்மையா லன்றோர் பூட்டு
மாட்டினு லன்று பூமி வளந்தர லெருவி னன்றே
யூட்டினு லன்றிப் பிள்ளை யுடற்பல நீவிப் பூண்கள்
பூட்டினுற் றொட்டி லாட்டிப் புகழ்வதா லாவ துண்டோ (கஎஎ)

கல்லொடு படுத்துச் செய்த களஞ்சிய மென்னுங் குக்கி
சொல்லெருச் சுவைகொ கள்ளச் சொன்றியா னிறைபத் தோன்
புல்லிய வுணர்வாற் பின்னர்ப் புகுவதை யரியதான [லும்
வல்லெரு மறதியென்னும் வாளத்தாற் கழியு மாதோ. (கஎஅ)

கலி நிலைத்துறை

பெறுவ ளந்தரு முழுநிலம் வேண்டிய பெரியோன்
கறவை யுண்டியே பாற்தரு மென்பது கருதி
யுறுநி லத்தெருக் கொல்கலான் செலவென வோர்ந்து
சிறுவ னுண்டியை யொழிப்பரோ செல்வவா ளுக்க. (கஎகூ)

உண்ணு முணுரோ வொன்றுவ்வோ ருடலினுக் கொவாது
கண்ணி னுற்கண்ட வனுபவங் கழறுவ தென்னே
மண்ணு மண்ணுடை விகாரங்க ளயமற் றுளவு
மண்ணு கின்றவா ரறிந்திடி னிலங்கொழுத் தனிக்கும். (கஅய)

பைத்தி ருப்பன வடிமன்சா ரத்தினைப் பறிக்க
வொத்தி ருப்பன மேன்மனை னுழவதே சானுஞ்
சத்தி ருப்பன வாய்ந்திடுந் தரமுடை யார்க்கு
வித்தி ருப்பன விருக்கவல் லார்களோ விற்க. (கஅக)

நீர்கொண் டோடவேர் நெறிபற வரம்பினை நிறுவி
வேர்கொண் டோடிய சாரமு மீண்டுமபோ தரவே
கூர்கொண் டோங்கறி வாலெருக் கூட்டில னென்றுற்
பேர்கொண் டோங்கிய பலனெலாம் பெருமதி நடையே (கஅஉ)

உணவின் ருயினு நீரினுற் சிலபக வுயிரை
யணவுங் கூடுமோங் காதப மழைவளி யாய
துணையி னுவியாஞ் சாரத்தைச் சுமக்கினு முடிவிற்
பிணிசெ யும்மெருப் பசியின்மாய் வானிலப் பெரியோன். (க௮௩)

களறு பண்பட மென்மண விடுகட்டுண் டாகத்
தெளிம ணற்குவன் களியணை யிடுசெடி கொடிகண்
முளியுங் கட்டைசக் கைகள்கழி யிலைமுள்ளு முதலா
வெளியி டேன்மட்கி விளைவையுண் டாக்குய்வி ணலவே (க௮௪)

தாது தாதுவிற் றுதொடு தன்னினுண் மூல
மோது சீவர்க ளிரண்டொடுந் தன்னிரு ணுயரு
மாதலா லஃ தறிசமூ லங்களுக் கான
சாதகங்க ளவ்விரண்டும்பஃ றிறப்படுஞ் சாற்றில் (க௮௫)

கலி விருத்தம்.

காலினுற் கோட்படாக் கார மாங்குழிப்
பாலவீ ரிப்பிடைப் பாக யோக்கியங்
கோலிலை தாண்முதற் குவித்த வோர்தர
மாலநீ யிடுமக்கி யதிற்சுதிகார மாம். (க௮௬)

இக்கினுக் கினிப்பெரு விடுவ ரில்லையே
யைக்கியம் பிரித்தற விளைவை யாயினு
மிக்கினிப் புட்டணம் விரவி யாதலாற்
றக்கால் லனுபவஞ் சரியென் றோர்வையே. (க௮௭)

நீர்.

வறப் பினுஞ் செழிப்பது மற்றைப் பாகத்திற்
பெறப்படும் பனியினும் பெரிது நீரின்வாழ்
திறத்தசீவிய ததுங்கேக்கிற் பள்ளநீத்
தறப்பெரு காததுங் கூவற் காமிடம். (க௮௮)

இருபுறத் தோடைக்கு மேற்ற மிக்கில
தருகுபாங் கிடினுந்தன் னருகுதாழ்வது
முருடுபாய் மரம்புலும் முளைப்பி லாதது
குறாமோக் கில்லது கூவற்கா மிடம். (க௮௯)

அவலினு மோடுசெய்த் தாய மைந்தது
சிவலயஞ் செல்லுகள் செப்புற் றுள்ளது
தவவிரு புறனுஞ்சே யதாய திட்டது
நவை தகர் நீரது நல்ல கூவலாம். (௧௬௰)

செலவுண்டேல் வரவுண்டு இனமு நீமுய
லலைவுண்டேற் குறைவின்று மாடு மாடுகள்
பலமுண்டேற் றெழிலுண்டு பாணித் தோதிறைற்
சலமுண்டே லுண்டதிற் றாழ்க்கிற் றாழ்மையே. (௧௬௧)

மாறிடும் பான்மழை வன்கையூ ட்டும்பால்
வேலைறப் பாய்ச்சுநீர் மிகினுங் குற்றமா
மேரினு மெருவினு மேதப் போக்கினு
நீரிடுந் திறத்தினை நினைத்தங் கூட்டுக. (௧௬௨)

காலைநீ ருத்தமோத் தமமதாங் கங்குல்
சாலுநீ ருத்தமந் தன்மை வெம்மையா
மாலைநீர் மத்திம மந்தி யானநீ
ராலுறப் பாய்ச்சுத லதம மாகுமால். (௧௬௩)

ஏற்றமுந் தாழ்வுமா யிருக்குங் குண்டில்க
ளாற்றையும் பருகித்த னரிய தாகத்தாற்
றாற்றலும் விரும்புநீர் சுருக்க வேண்டினுன்
மாற்றிடு நீர்செலற் குரிய மட்டத்தே. (௧௬௪)

கலி நிலைத்துறை.

மேலிற் கொள்ளுநீ ரகலமும் வெட்டுறு கூவல்
கோலிக் கொள்ளுநீ ராழமுங் கொளும்படி யியற்றிக்
காலிற் கண்வையக் காலின்றி நடப்பது காணேஞ்
சாலச் சொல்வதென் சீவனப் பெயரொன்றே சாலும். (௧௬௫)

துலைக்கும் வெட்டுக்குந் தாலுக்கு மாளுக்குஞ் சொல்லி
லலைக்கு மாட்டுக்கும் பிறவுள வனைத்துக்குங் கொடுத்து
விலைக்கு வாங்குநீர் கால்வழிச் சுவறல்வீ ணலவோ
பலத்த வன்றள மிடுவையேற் பாய்குத லெளிதே. (௧௬௬)

பொடிவ றந்தடி யிரங்கொள் புழுதி நற் புனலின்
றிடைவ றந்தசே றிரண்டு நட் டிடுதலுக் கிசையா
வடிவ றந்தவீர்ம் புழுதியோ விதைத்தலுக் கடாது.
நடவ ருங்குழி மறைபடு நீர்த்தொய்யி னன்றும். (௧௯௭)

சேத்தி ரப்புழுத லென்பவர் சிலர் சிலர் வித்தே
சாத்தி யம்மெனச் சாற்றுவ ரித்தருக் கத்திற்
பாத்தி யம்பட விரண்டையும் பக்குவப் படுக்க
வேத்தி றத்தினு மெருப்பலம் புழுதியை யுணக்கில். (௧௯௮)

கலி விருத்தம்.

மோடு தூளியா முன்னர்ச் செய்திடிற்
சாடு காற்றின்மண் டான்ப றந்திடுங்
கூடும் வண்டியக் குளிர்ந்து நோக்குவா
ளோடும் வண்டியை யுழவிற் போக்கலான். (௧௯௯)

அண்ணு பாகந்தா னமூலி னுதலான்
மண்ணி னீரந்தான் மாறு மாறுழு
மண்ணுஞ் சேறுகள் பரவும் வெய்யிலர்
லெண்ண ரும்பல மெய்து நீருண்டேல். (௨௦௦)

ஊன்றரத் தருமுண வோர்க்குஞ் சாரந்தான்
றூன்றர நீர்தரத் தரும்வெ யிற்றர
வான்றரக் காற ரவமைக்கும் பக்குவ
மீன்றிட வருமது வெண்ணிப் போற்றுவாய். (௨௦௧)

சாய்ப்பினி லெதிருழ விறுதி சாரத்தை
மாப்பில மழையினீர் வழிம றித்தலா
லேய்ப்புறு சாரத்தி ழீர முண்டிடுங்
காய்ப்புறப் புழுதியைக் கலக்கு பஃறரம். (௨௦௨)

மண்ணினைக் கழுவினுன் புணல்கன் மிச்சமென்
றுண்ணினைந் துழுதசே றுரியு டம்பைகீழ்
திண்ணெனத் தெளிவரை சிறைசெய் கிற்பையேற்
பண்ணொருப் பலனிலும் பலன்மி குந்திடும். (௨௦௩)

எருவினி லுழவினி லிசைய வேவரம்
பரிதலிற் றிருத்தலி னடவினக்களை
திருகலி னீரிற்சே வலிற்சி றுதவன்
வருகளஞ் சியமிக மந்தங் கொள்ளுமால். (உ0௪)

நிலமொடு பாகமு நிலத்துக் காம்வித்தோ
டிலகிய பருவமு மிவற்றிற் கொன்றிய
சலமிவை யாய்ந்தனன் றன டாத்துமேற்
பலமுறை சொல்வதென் பலனை யெய்துவான். (உ0௫)

பண்படா நிலங்களும் பருவங் காணிய
மண்படா விதைகளும் வலிமைக் கேற்பவே
யெண்படாப் பயிர்களு மென்று மொன்றுபோற்
கண்படாத் தொழில்களுங் கடினக் கூப்பிடும். (உ0௬)

முன்செய திருந்திடின் முறையி னுளினுற்
பின்செய திருத்தமாய்ப் பிறங்கும் பேதற
பின்செயலா மெனத் திருத்தம் பேணினுன்
முன்செய லழிப்புடன் முடிவி ரட்டிப்பே. (உ0௭)

ஒற்றையி லிரட்டையி லுளவி டைக்குறை
மற்றுமோர்க் கொழுகிடை வழுக்கக் கூடுமா
லிற்றதென் றுணர்ந்திடே லிருந்த ண்மையாத
லுற்றமுன் னிரண்டிழ வுறநெ ருக்குவாய். (உ0௮)

வித்திடல்

கலிநிலைத்துறை.

மேல கீழன படர்வன மூன்றுளால் விளங்குஞ்
சால நீள்கொடி செடிபயி ராமுதற் சமைத்து
வேலி யும்பலன் றரச்செயும் விவேகந் தன்பசிக்குப்
பாலுண் காலையின் மருந்துமா யிற்றெனும் பண்பாம். [உ0௯]

தூம பத்திர மபிணிகண் மு லிப துவவாப்
போம வற்றினைத் திரவிய மாக்குமா புரியி
னும வற்றினை யாக்கலா கனவகி யத்தாற்
சாம மென்பது குடிவருந் தானியக் குறைவால். [உ௧0]

மிக்க பண்ணையான் கரும்பொடு வாழைகள் மிகுந்து
துய்க்க நல்லிலை தொகும்பல னமைக்கவுந் தொடங்க
வக்க ருத்தினுக் காக்கலா வாக்குத லரச
னிக்கு விற்பதற் கிசைந்தவா விலாபத்தைக் கருதி. (௨௧௧)

எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மாறுவேண் டாம லுறுப்பெலாந் தனது மகன்மக ளுதியோ
ர்க் குதவி, யேறிடுதால மிடைக்கிடை கைநோக் கினியபெதங் கிவை
பல தரவு, மூமிடு புளியுங் கருவிக்கா னவு மூந்நிலத் தொட்டு
தற் குரிய, வேறுமுண் டாக்கிக் கணக்கிடை வைத்தான் மிகுதி
யுங் குறைவையும் விளக்கும். (௨௧௨)

எண்ணரு மரங்க ளில்லையே லுழவி லெளிதினில் வரும்பல
னில்லை, பண்ணுறு கருவி யரியவா மதனாற் பற்பல செலவிடை-
நேருங், கண்ணிய மிலரை யிரக்கவுங் கூடுங் கனிகளு மரியன
வதனான், மண்ணிடை மரத்தை வளர்த்திலா மடமை மடமையின்
மடமையாம் வழுத்தில். (௨௧௩)

கலிவிருத்தம்.

வலியவன் வாழையே முதல வன்றொழின்
மெலியவன் றிலதமே முதல மென்றொழி
லலகொடு செய்குந வமையு மேயெனிற்
பலபல செய்குவன் பலனை யெய்துவான். (௨௧௪)

உளைவொடு நீரிடுங் காலி னேரத்தின்
விளையுமுன் விளைதக்க விளைக்க வாற்றலன்
களைநிகர் புல்லெழக் களிக்குங் காதலா
னளைதரு நீர்நிலத் தருமை யோர்கலான். (௨௧௫)

புன்னிலத் திடுவிதை நெருக்கிப் பொங்கினு
லந்நிலத் துழுநெருக் ககல வாய்ந்துநீ
நன்னிலத் தொன்றலா நாற்றைப் பிற்றையி
லெந்நிலைக் நோக்குமந் நிலையி லேற்றுவாய். (௨௧௬)

தன்னிலந் தன்றனூற் றாத்த குப்பொரு
ளங்கிபட்ரிடம்விலை யளந்து கொள்வனே
லென்னவன் முயற்சியீ திழிவு மென்றெனான்
பின்னரு முன்னரும் பேதை யாயினான். (உகஎ)

நாற்றிடைப் பக்குவ னனிதெ ரிந்திலா
னூற்றிடைப் போட்டன னவன்கொ டானியஞ்
சாற்றிடிற் பக்குவஞ் சருவத் தூடுநீ
போற்றிடி னிறைந்தது புகுங்க ளஞ்சியம். (உகஅ)

அறுகம் வேரி னடர்ந்து நிலத்தினை
யிறுக லாக்கி யிளைக்குநற் சாரத்தை
யுறவ னேகமுட் கொள்ளலி னூலிடை
யறநெ ருக்க லகல விதைக்கவே. (உகசு)

களை.

உறுநில வளமொன்றே யுண்ணு மாம்பயிர்
செறிநில வளம்பயிர் சேர வுண்ணலால்
வெறுநிலத் தினுங்களை விடுத னன்கல
பறியுமு வேர்விதை பற்ற றுக்கவே. (உஉ0)

முளைதருங் களைமிக முதிரப் போக்குமேற்
களைகளை கலன்களைக் கருவி ளைக்கிறன்
விளைவிடைப் புல்லெழ விரும்பிப் பார்ப்பவன்
றெளிபறப் பொருளிடைத் தீது சேர்த்துவான். (உஉக)

இன்றமை யாதெனி லிருக்க வேலிதா
னன்றெனிற் களையதி னதிசம் வேறிலை
துன்றிடு மறுகுகாற் சுவடு கல்லுகள்
வன்றரை யாக்கலாற் பயிர்க்கு வாழ்விலை. (உஉஉ)

இளைதெனிற் கூலியோ டிலகு போக்கலும்
விளைகளை முதிர்ந்தபின் விபரி தம்படு
முளபடி சொன்னதை யுன்னி னூலது
களைபல பயிர்க்குநோ யென்னக் காணலாம். (உஉங)

காவல்

கலிநிலைத்துறை.

வீறு காவற்சே னாபதி விளைவெனும் வெற்றி
யேறச் செய்வனீ ரெருவுழுன் முதலிய படையாற்
கூறு மப்படைத் தலைவன்வீ வானெனிற் குறித்த
பேறெ னப்படை துணைசெயத் தக்கதோ பேசின். (௨௨௪)

கரண மென்பயா வற்றினுங் கைக்கொள வுயர்ந்த
வரண மென்பதே யரசனுக் காருயிர்த் துணைபோற்
சரண மாகவந் தடைந்தவை தன்றொழிற் குளவை
திரண மாயினு மழிவுறா தியற்றுக சேமம். (௨௨௫)

கற்பி லாதவள் போகமந் நியனுங்கொள் வான்கா
வற்பெ றாநிலப் போகமு மன்னதாய் மாறு
மிற்பெ றாருமோர் மாவுரி விட்டில ரென்றாற்
புற்பெ றாநில மாயினும் வேலியாற் புனைக. (௨௨௬)

ஆடு கோவுக்கு மருந்திட லாகும்வே லிக்குங்
கேடி லாததோர் துணையுமாங் கிருடியின் கருவிக்
கீடு மாகுமிந் தனமுமா மிளைக்கிழை குழியு
மூடு வேல்விதை செலவின்றி முளைப்பன முளைக்க. (௨௨௭)

எயிலை யொத்தது வேலியவ் வெயிலினைக் காக்கு
முயரும் வீரரை யொத்தன ராளுறு வீரர்க்
கியலு மப்படைத் தலைவனை யெய்வனிவ் வுழவ
னுயர்வி லத்தலை வற்கர சொக்குந்தன் றன்மை. (௨௨௮)

கட்டிக் கொண்டையோ கண்ணிணைத் திறந்துபார் கருதி
நட்டுக் கொள்கின்ற வேலியும் பலன்றர நாடி
பொட்டுக் காவன மேன்முதல் வித்தினை யுள்ளே
சுட்டிக் கோடியேற் றுணைசெயும் வேலிச்சுந் துணையே. ()

கலிவிருத்தம்.

வெளியொழி பூதங்கண் மிருக ராசிக
ளுளபல படிசிக ளூர்வ மற்றைய
தெளிவறு வஞ்சகத் தேனர் செய்திடுந்
துளவறக் காக்குமா காசுகக் கண்ணுளான். (௨௩௦)

களம்.

கூவலிற் காற்றினிற் கொள்ளும பண்டிதான்
மேவலில் விளைவிடை மேஷி மீளலிற்
றாவலிற் றங்கலிற் றிருகுப்பை யேற்பதிற்
காவலி லிடரில்வன் களமென் றுனலம். (௨௩௧)

கட்டடங் கடினமில் களமும் போக்கிலாத்
தட்டுறு நீர்நிலைச் சமைவு நேரின்றி
விட்டமண் வரப்புநீள் வெறிய வேலியுங்
கட்டுறு காளையுங் கருதி னன்கில. (௨௩௨)

மீதியா ளறுவடை மேற்கொ ளாயெனிற்
போதலு மலைதலும் புதுப்பித் தன்னவாங்
மாதலிற் பொறுத்தவ ணுறற் குப்பொரு
தூதுவ னறுவடை யுஞற்றவ் விச்சையின். (௨௩௩)

முதிர்விடைத் தானிய முதிரை யாதியு
மெதிர்மறைக் கேற்பன யாவு மேற்றவா
மதியுட னறுவடை வழிச்செ லாயெனின்
விதிதரு பாகமின் மிசைக்கொப் பாகுமால். (௨௩௪)

சந்திர பலத்தறு வடைச மைப்பையே
லந்துவண் டாதியை யதிதி யாக்கிறுய்
முந்திடை கடையொக்க முப்பங் காக்கிநீ
வந்தன விற்பையேல் வரவிற் கேடிலை. (௨௩௫)

வழுவிலாற் றைக்கெட்டி வாய்க்கு றுமெதனும்
பழமொழி யுண்டன் றோ பயிர்ச்செ ழிப்பிறைற்
கழிமகிழ் வெய்தினன் கண்ணை மூடினன்
முழுமையும் விற்பவன் மூட னவனல். (௨௩௬)

இடமொடு பொருளினோ டேவன் மூன்றினும்
நடுவண தோமழை நடந்த காலையுங்
கடையொடு முதலையுங் காக்க வல்லதா
மடைவொடு சேர்த்துவை யனைத்துந் தாங்கவே. (உகஎ)

முன்வர வாலிறை முடிப்ப தின்றியே
பின்வர வாலது பெயர்க்க வெண்ணிலோ
தன்வர வாங்கதிற் சமேலென் றோடலாற்
புன்வர வாகுந்தன் புந்தி முட்டியே. (உகஅ)

மேக்கையுங் கிழக்கையும் விரியும் பாலையு
நோக்கையவ் வறுவடை நுவன்ற வாறுசேர்த்
தாக்கையி னலங்கொளா வறிவி னூற்கழி
போக்கையுஞ் சேர்க்குதல் பொன்றுங் காலத்தாம். (உகக)

ஈனமி லறுவடை யெளிதி யற்றுத
லானவை காக்குத லரிது சேரினிற்
கூனையிற் குழியினிற் குதிரிற் கோட்டையிற்
பானையிற் குலுமையிற் பையிற் காப்பையே. (உசய)

மிகுஞ்சிறு விலைப்பத மேவற் கெண்ணிநீ
புகுஞ்சில பலவற்றைப் புதைத்து மூடியு
மகஞ்சுருக் கிடினுனக் கதோடி யாவையு
மிகஞ்சுருக் கிடும்விதி யியைந்த காலமாம். (உசக)

வருமவ சியமெனின் மண்ணும் வாங்குவார்
பெருமையி னடையினிற் பிறழ்க லாதவன்
குரைமுகன் விலைப்பொருள் குரைக்கு மோவெனத்
தரமல விற்பது தாழ்மைப் பாலதால். (உசஉ)

வலஞ்செயும் பொருள்செயு மாடஞ் செய்யுநீ
ணிலஞ்செயுங் கஞ்செயு நிகரி லாச்செயுங்
குலஞ்செயு மென்றுநீ கொள்ள னின்னடை
நலஞ்செயு நல்லினென் றுரைக்கு நாமத்தை. (உசங)

நன்மையை நாடியோ நலியும் வெங்கையை
வன்மைய தென்றுல கோர்வ முத்துவார்
புன்மைய தாங்குறும் புகழ்ச்சி பொன்றலாந்
தன்மைய திருமையுந் தான்கெ டுத்திடும். (உசச)

ஆலையி லான்கணை யாடு தாம்புளான்
காலுமுல் கறங்கின்கால் கடுப்பக் கிழிடை
மேலுள ரடிமையை வேலை கொள்ளுக
நூலொடு பயன்சுக நுணுக்க முண்டெனின். (உசரு)

அகழ்தரு மண்குழிக் காற்ற லாகுமோ
தகுமுனக் குன்றெழில் சாற்றச் சாலுமோ
மிகவுமுன் குலத்துக்கே மேழி யாதலால்
வகுதியின் லேத்தொழில் வருந்து ஞறுதும். (உசசு)

கிழமைப் படவா ழுகெடுப் பதொழி
கொழுவுக் கிவைகொண் டவுயிர்த் துணையா
முழுமக் கண்முதிர்ச் சியறிந் தவழி
நழுவிக் கொளுகவ் வலர்நக் கனையே. (உசஎ)

நாள்வித் தைநவின் றுபயின் றிடினும்
கேள்விப் பொருள்கிட் டுவதன் றெனவே
கோள்வித் தகுணு கரமா முனிவன்
ருள்வித் தகமென் றுதரித் தனனே. (உசஅ)

ஏர்ப்படலம் முற்றிற்று.
ஆ திருவிருத்தம் எகக.

பதினொன்றாவது
புண்ணிய பாவப் படலம்.

எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பூவரு மனிதர் புனிதமா தவர்தென் புலத்தவர் பொன்னுல குளவித், தேவர்க ளிறந்தோர் சித்தர்கண் மற்றைத் திசையுளோர் யோகிய ரேனை, ரேவருந் திருத்தி யெய்துமேர்த் தொழிலி னில க்கண முடித்தன மப்பாற், பாவபுண் ணியத்தின் பகுப்பினைச் சுருக்கிப் பகருவா னெடுத்தன மிப்பால். (க)

மண்ணியல் பினுமிவ் வானுலை கியற்கை மதிப்பதற் கரியது மகிழ்வே, புண்ணிய விருந்த தனுபவ மிரண்டுக் குற்றகா ரணமெனக் குணரத், தண்ணிய குணத்த மொழிகென விரந்து தன்முடியவனடி யாக்கப், புண்ணிய பாவ மிரண்டையும் வகுத்துப் புகலும்போ தாயன முனிவன். (உ)

புண்ணிய மிதனைப் பாவமோ நரகைப் புண்ணிய பாவம்பூதலத்தை, நண்ணிய விருந்த புண்ணியஞ் சுகத்தை யல்லதல்லதனைபுண் டாக்கு, மண்ணிய மணியிற் கங்கையின் வந்த மாதவனுதலி னீங்கு, நண்ணிய வடுக்கு மமரரு நின்மே னண்பினராதலு மதுவே. (௩)

பண்ணல்பண் ணுவித்த லுடன்பட லென்ற பகுதிமூன் றாகியபாவ, புண்ணிய வழக்கஞ் செய்திட வொருவன் புந்திசெய்திடிலொரு காலா, மெண்ணிய துரைக்கும் வாக்கிரு காலா மீங்கது தொடர்ந்துமே லூக்கி, னெண்ணுமுக் காலாங் கருமமுற்றியதே ஞட்டிய வொன்றென லாமால். (௪)

ஆகலி னிரண்டு மனமொழி யாக்கை யண்ணுறு மவற்றுட் புண்ணியந்தான், காதலே நீக்க லருணினை வோடு கனதவப் பற்றென மூன்றுஞ், சாதமோ டினிமை நல்லுரை பயன்சொல் சனித்தன நான்கும் வாக்கின்க, ணீதலா லயஞ்சூழ் வரறவச் செயலென் றியாக்கையி னெழுந்தவு மூன்றே. (௫)

அல்லவை யாங்கே மனமொழி யாக்கை யண்ணுறு மவற்றினுள் ளத்தே, கொல்லுத னினைக்கை காமப்பற் றுசை கூறுமூன் றுங்குடி கொள்ளும், வல்லியல் பொய்கோள் பயனில்சொல் கோப வார்த்தையிங் நான்கும்வாக் கடுக்குஞ், சொல்லிய மெய்யிற் றிருடுதல் வறிதே தொழில் செயல் கொலையென மூன்றும். (௬)

தானமே கல்வி தவமொழுக் கெனவே சனித்தவப் புண்ணியத் தோற்ற, மானநான் கிற்று னக்கலே யிடையோ டாங்கடையென்னமூன் றாகு, மூனநீங் கியநற் றவத்தினர்ப் பணிந்தே யுளங்கனிந் தேகுறை யிரந்து,வினநீங் கியநற் பொருளினைக் கொடுத்த லியல்பினு மதுதலைத் தானம். (எ)

ஆதுலர் கழாய ருறுப்பறை மாத ரந்தகர் மெலிவுறிந் திளியி யீதலா மிடைமை காரணமச்ச மினியகண் ணோட்டங் கைம்மாறு, காதமேல சுட்டப்பா டாம்புக ழெழிற்க ணிந்திடிற் றன்னையுங் கருத, லாதலாற் கடைமை யென்றன ரறநூ லமைவினை யறிந்தநன் முதியோர். (அ)

ஆனநற் கல்வி யிருக்கசுர் சாம மதர்வண மென்னுநால் வேத, பேனைய சிக்ஷை பெரு வியா கரண மிபல்கற்ப மொடுசந்தோ விசிதந், தானுயர் நிருத்தஞ் சோதிட மென்னுஞ் சடங்கமீ மாஞ் சையே தருக்க, மூனமில் புராணந் தருமநூ லெனுநா லுபாங்க மோ டொருபதி னான்கே. (கூ)

தவமெனன் மனமைம் பொறிவழி புகாது தகைத்திட வுண்டியைக் குறைத்து, மவமென விடுத்து மனமொழி யாக்கை யாட்டுவான் யாரென வுணர்ந்து, சிவமெனும் பொருளைச் சிவநேத் திரத்தைத் தெவிட்டிடா வானந்த வமுதை, யுவமையி லொளியைக் காண்பதற் கியற்று மூக்கமே யாமென வுரைப்பார். (க0)

ஒழுக்கமென் பதுதான் வருணமாச் சிரம மோங்கிய சமயமென் றிவற்றின், விழுப்பமா நெறியின் முப்பொறிச் செலவா மெய்யெனில் வேடமாஞ் சொல்லோ, பழுத்திடும் விநோத மனமெனி லிரண்டுப் பக்குவப் படுத்தலான் விசேட, மழுத்திய மூன்று மில்லவே லந்தோ வவர்தமை நோக்கவு மச்சம். (கக)

விரியறத் துறப்பெட் டவையையப் படாமை விருப்பின்மை சிரவணம், வருமயக் கின்மை பழியினை நீக்கன் மற்றழிந் தோர்த மை மிறுத்த, லாரியநல் லறத்தை விளக்குதல் யாண்டு முற்றமோ ரன்புடை மையுமென், றரியநூல் கற்று ராசறப் பகுத்த வமைவென வறிகுவை யன்றே. (க௨)

எண்வித வுறுப்பி னெழுந்தபுண் ணியங்க ளேழுவை யெனிகங் கிருதி, நண்ணிடு தானம் விரதமே சிநேக நன்னய போசனங் கமையே, பண்ணுமூற் சாக மிவைகளே யிந்தப் பகுதியி லடைந்தவை பலவாம், புண்ணிய மூளநீ கேளெனத் தொகுத்த பொலிவுள வற்றினைப் புகலும். (கங)

பிடிப்பொடு பிறர்க்குப் பொருள்வர வுவத்தல் பிறர்செல்வ ம்பொறுத்தலே பிறர்தா, நடத்திடு கருமக் குடன்பட றீமைக் கஞ்சலே நற்பிறர் கரும, முடித்திட விரைதல் பிறரையந் தீர்த்த ன் முதிர்நன்மை கடைப்பிடித் திருத்த, லெடுத்திடு பிறர்தந் துய ரினுக் கிரங்க லென்பவை யெண்டயா விருத்தி. (கச)

தருகல்வி பயிற்ற றுயாது தீர்த்த றண்டத்தி னீக்கலே யைய, மிரிதரத் தேற்றல் பிறர்குணத் தழுக்கா றின்றியே பொ றுத்தலே பிறர்தாம், புரிதருந் தீமை மறந்து கன்றினையே புந்தி செய் திடல்பிறர் கட்கா, வுரிமையிற் றெய்வம் வழிபட லிவை யே யுயிரினுக் கேழுபகாரம். (கரு)

உற்றிடு முணவே பானமே யுடையே யுறுமிட மடிமையைக் காத்தல், பெற்றிடு சிறைநோய் மூன்றையுந் தீர்த்தல் பிணமடக் குதலெனப் பேசு, மற்றிவை பேழு முடலினுக் காக வருமுப காரமீ ரேழுஞ், சொற்றயா விருத்தி யென்னவு மாகுஞ் சொல்லி ய புண்ணியப் பகுப்பில். (கசு)

காக்கையி னிமித்த மண்டமீன் றளித்த காரிளங் குயிற்பெ டை களிக்க, வோக்கிய கொக்கி னுடனுறை சேவ லுதவிய நெ ல்லுழக் கெட்டிற், பாக்கியம் பழுத்த வின்கொடைக் கையிற் பண்ணுக பயிரெனப் பகுத்த, போக்கிய மிருக்க மிகையறச் சா லை புரியெண்ணுன் கறமெவை யென்னில். (கஎ)

மண்டுமா துலர்க்குச் சாலையே யோது வார்க்குண வுறுசம யத்தார்க், குண்டியே பசுவின் வாயுறை சிறைச்சோ றேடையந் தீன்பண்ட முதவ, லண்டற வைச்சோ றேமகப் பெறுவித் தன்ம க வன்பொடு வளர்த்தல், சுண்டிய மகப்பால் வார்த்தலே யறவை த் தூரியம் பிணஞ்சுட லோடு. (கஅ)

சுண்ணநோய் மருந்து தூசர்நா விதர்கண் டுலங்கிய வாடிகா தோலை, கண்ணுடை மருந்து தலைக்கெண் ணெய் பெண்போ கத் தொடு பிறர்துயர் காத்த, லண்ணுநீர்ப் பந்தன் மடந்தடங் கா வே யாவுரிஞ் சிடுதறி விலங்கிற், குண்ணுண வேறு விடல்விலை கொடுத்தே யுயிர்கள்காப் புயர்கன்னி தானம. (கக)

விரித்திடச் சொன்ன புண்ணியம் போல வெறுத்திடு பாவ
மும் பலவாங், குறுத்திடு கொலை பொய் களவுகள் ளருந்தல் குரு
நிந்தை பஞ்சபா தகமாம், பருத்தகங் கார மூலோபமே காமம்
பகையொடு போசனப் பிரிய, மூருத்திடக் காய்தல் சோம்பலிவ்
வேழு முறுங்கண் பாதக மென்பார். (௨௦)

உறத்தகை யில்லா வுட்பகை யாறு முடையனே யிருமையு
முடற்றும், புறப்பகை யெல்லா மிம்மையி லுடற்றும் போக்குள
வாதலா லிரண்டு, மறக்கழி வில்லான் புண்ணிய மில்லா னைம்புல
னுகர்ச்சியி லிறக்குந், திறத்தன போலச் செனித்துமுத் துக்கச்
செறிவினி லழுந்துவ னன்றே. (௨௧)

புண்ணியம் விளைத்தோர் விளைத்திடுஞ் சுகத்தைப் பொன்
னுல கதனிடை யுண்பார், மண்ணிடை யுண்பார் பாவபுண் ணிய
த்தின் வருமனு பவமிரண் டனையு, நண்ணர கத்திற் பாவத்தின்
விளைந்த நவையுறு துக்கமே யுண்பா, ரெண்ணறு பவங்க ளிவற்
றினால் விளைந்த வெனமுனி யுழவனுக் கிறுத்தான். (௨௨)

ஈதமா றிவைக ளெனவுணர்ந் தறிய நேருமா றறிவுமுண்
டென்னி, லோதுமைந் தறிவின் மிக்கமா னுடமு முயர்ச்சியெ
ன்பது கணித்திடவே, போதமா மார்க்க மிகுத்திடுங் கேசி கன்
றுகை பொருந்தவே பொழிப்பா, யாது முள்ளிட மொழிந்த
னனுழவனுட் கொளீஇயடி பணிந்தான். (௨௩)

வஞ்சித்துறை.

என்னை யாளுடை
பென்னை யாதலா
லென்னை வன்குறை
யென்னையா வென்றான். (௨௪)

புண்ணியபாவப் படலம்
முற்றிற்று.

ஆ - திருவிருத்தம் - ௱௩௫.

பன்னிரண்டாவது

போதாயனர் தூதுப் படலம்.

கலிநிலைத்துறை.

மன்னு புண்ணிய பாவமற் றிரண்டையும் வகுத்துச்
சொன்ன வாறிது தொன்முனி யுழவனை நோக்கி
மின்னு மைந்திரி யெழிலினை விளம்பியிந் திரன்பாற்
றுன்னு தூதுசென் றுற்றவா றுரைத்தது சொல்வாம். (க)

சொன்ன யாவையுங் கடைப்பிடித் தாங்கனந் தொடரு
மின்ன வன்றனை யில்லத்தி னிசைவிப்பா னிசைப்பான்
முன்ன ரேகினக் காவனை முறையினின் மொழிந்தே
னின்ன காலையி னினக்கியா னிசைப்பதொன் றுளதால். (உ)

யாதென் பாயெனிற் சதமக மாற்றியிப் பதவிக்
கேது நேரல வென்னுமிவ் விந்திர பதவி
நாத னாகிய நான்மருப் பூர்திநந் தனையாய்
மாத வத்தினாற் கங்கையி னைந்திரி வந்தாள். (௩)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பொருப்பொக்குந் தனத்தி னுடன் பொன்னடி யுட்பாகத் துக், கிருப்பொக்கு மனிச்சஞ் செம்பஞ் சிளந்தளி ரிவற்றைநேர, விருப்பொக்கும் வெறுப்பை யென்னின் மெய்யொக்கும் பொய் யை யென்னிற், கருப்பொக்கும் வெளுப்பை யென்னிற் கழறு வ னுவமை யம்மா. (௪)

இயக்கிய பாவை போல்வா ளிரதி நிகர்நே ராகச்
செயச்செயக் கழித்து நின்றான் றிசைமுக னதனா லன்றோ
துயக்குறப் பலவா போராச் சுரங்கொண்டந் தாமரை யேயடி
மயக்குறப் புதன்ம றைந்து வருந்தி தல்லிற் கண்ணாய். (௫)

சத்தியந் திறம்பி லாத சான்றவ ரடியிற் றோன்றும்
பத்துள விரலிற் றாழ்ந்த பசுமஞ்சண முளைத்துப் பாதி
பொத்துள வென்று பொய்க்கொண் டுய்வரோவுவமை முன்னு
ளித்திரு மடவாட் கென்றே வியம்பினார் சூதித்துய்ந் தாரால். ()

ஊடலின் முனிந்து பாதத் துதைப்பதை விதிய தாகப்
பாடலிற் பதித்த தன்மை பண்புட னுயர்ந்த கலைத்
தேடலிற் கிடைக்க மாட்டாத் தெரிவையர் திலகி பாத
நீடழ கதனாற் பெற்ற நிகரிலா மேன்மை காட்டும். (எ)

காலடிக் குவமை காட்டக் கருதுமோர் பொருளி லாதேன்
மேலுள கணைக்கா லுக்கு வேறுமோர் பொருளு முண்டோ
வாலுளி யாமை கொண்டு வாய்வழி புலவன் கொண்ட
சூலுள வராலு மில்லை சொல்வதற் கொன்று மில்லை. (அ)

தெரிவையர்க் கச்சே யன்ன திருவனாள் காலி னுப்ப
ணருமையா முழந்தாட் கொப்பென் றல்வனே நிகழ்ந்த வென்வாய்
வருவதோ வரிது வந்தால் வம்பென மனத்தி னெண்ணுந்
தருவதா மதுவுங் கேபோய்ச் சார்ந்தது பயத்தின் மூழ்கி. (கூ)

உறுதவஞ் செய்தோர் நோக்கி னுயர்வுள காட்சிப் பேறு
பெறுவதற் கிழைத்த விந்தப் பேரெழி லுடையா ளூரைப்
பறைவதற் கிணை வாழைத் தண்டென்று பழித்த காலை
யறவர்க்கு மனமொவ் வாதே லயனுளார்க் காவ துண்டோ. (௧0)

காமுகர் மூழ்கி யேறுக் கடிமதுத் தடாக மென்கோ
வாமதன் றிருவோ லக்கத் தரசுவீற் றிருக்கை யென்கோ
வேமுறு மவற்கா லத்தி யேந்து பொற் றட்ட மென்கோ
வாமமே கலைமேல் வைத்த மையலாம் புதைய லென்கோ. (கக)

மன்னுமங் கையினா ரோமம் வானக மலர்க்காட் டேமே
துன்னிய முயலின் கோடு சூழ்ந்திடுங் கானல் வாரி
யின்னியன் மலடி சேய்க ளிவையெலாந் தொடர்ந்து பார்த்து
மின்னிடை பொய்யென் றேதில் வேறென்ன விளம்பற் பாற்றே

அரைமதி யுடையோ ரேனு மரைமதி தன்னை வீசு
விரைமலர்க் கூந்த னல்லாண் மெல்வயிற் றிணைசொல் லார்கள்
ஒருமயன் மடித்தாய் வைத்த வளைதரு மதியு மில்லை
பொருவுள வென்று சொல்லப் புகுகிற மதியு மில்லை. (க௩)

வலம்புரிங் தகேக காலம் னைத்திடை யிருந்தும் வாயிற்
புலம்பினு மதனால் வந்த பொருளொன்றுங் கண்ட தில்லை
குலம்புரி தவத்தின் வந்த கொம்பனா ளுந்திக் கீண்டு
வலம்புரி யொக்கு மென்பார் மயிரொழுங் குவமை சொல்வார்.()

அளக்கத்தா னாமோ விந்த வாயிழை யழகென் றெண்ணித்
துளக்கிலா மனத்தி னாருந் துளங்கிட வந்த மின்னின்
பிளப்பிலா முலைபோ லெங்கும் பெருமையுங் கடின மாண்பு
மிளக்கமுங் கண்ட பின்னை யியம்புவ னுவமை யம்மா. (க௫)

அச்சென வுலக மாதர்க் கயன்படைத் திட்ட மான்றோள்
பச்சிள வேயென் பேனீ பார்த்தபி னெழில்விக் கத்தாற்
பொய்ச்சொலென் றறைவா யல்லை புகலுரு வொழுங்கிற் காட்ட
விச்சொலை யறைந்தேன் பின்ன ரிதுபற்றி முனியல் வீர. (க௬)

முழுப்பெரும் பெண்மை யெல்லா முயன்றொரு படிவ மாகி
விழுச்சிறப் படைந்த தன்ன மெல்லியல் கண்ட நோக்கி
லழுத்திய வுவமை காட்ட வயன்படைத் தவற்று ளந்தக்
கழுத்தியல் பொன்றே யன்றிக் கருததினுக் கிசைந்த தில்லை. ()

வித்தக வறிவா லன்றால் விளங்கிய பயிற்சி யன்றா
னுத்தமக் கலையா லன்றா னுறுதெய்வத் தகையா லன்றாற்
சத்துவ மன்றால் வேதன் றனையறி யாது தானே
முத்தோடு மலர்ந்த கோதை முகவடி வமைந்த தன்றே. (க௮)

பெண்ணென்றா லிவளே யென்னப் பிறந்தவண் முகத்தில் வைத்த
கண்ணென்றார் கருத்து வெள்ளைக் கடலென்றார் கருத்து மஃதே
பண்ணென்றாற் பிரமற் கேலாப் பார்வையைப் படைக்கக் கையி
னுண்ணின்று வெவ்வேறு வேத னுற்றனன் வெறும்பே ரம்மா (க௯

பிள்ளைமான் றுவா நின்ற பெருங்குழைக் கயன்ப டைத்த
கொள்ளையி னென்றுங் காணுக் குழைகின்றே னுவமை காட்ட
வள்ளையை நினைத்தாற் பின்போம் மறுத்திடி லுந்தி முன்போ
முள்ளமத் தன்மை யாட வுறைதரு மூச லாயால். (உ0)

முகம்பது மத்தைவேர்வை முத்தத்தை முன்கை யாழை
நகங்கிளி மூக்கை யந்த நல்விரல் செளிற்று மீனை
யகங்கைசெங் காந்த டம்மை யணிவளர் தோளவ் வேயை
நெகிழ்ந்திடக் கடுக்கு மென்று னிந்தையும் புகழு மாமே. (உக)

முத்தமோ பல்லோ வென்று மொழிகின்ற வைய மும்வா
பொத்ததா காச்செவ் வாம்ப லொப்பென்னு வாத மும்பின்
வித்துரு மத்தே னுண்முன் விழியினுற் பார்ப்பார்க் குற்ற
பித்தமுந் தீர்க்க வல்ல பிடகரா ருலகி லில்லை. (உஉ)

குயில்கிளி பூவை யாழின் குழன்முத லாய வெல்லா
மயிலியற் கோதை மாதின் மழலைமென் மொழியைக் கற்கப்
பயில்வுறி னவைக்கு மிக்க பயிற்சியால் வரவுங் கூடும்
வியனுறு முயிவி னேடும் வேண்டிடின் வராதொன் றில்லை. (உ௩)

கண்தரு வண்டு முட்டிக் கடுகிட நடந்த காலைச்
செண்பக மென்று மீண்டு திகழ்வள்ளை துளைத்து நிற்கு
மெண்படப் பார்ப்பார் நெஞ்சி னெழுதிய மோக நூலைத்
தண்படப் பார்க்க வைத்த கண்ணடி யிருக போலும். (உச)

நாகம்வைத் தனைய வல்கு னங்கைகட் கடல்வி ரிந்தான்
மோகவெள் ளத்தின் யாரு மூழ்கிப்போ வார்க ளென்றே
சேகறத் தெரிந்த வந்தத் திசைமுக னவைக்குக் காவ
லாகவொண் புருவ மென்னு மருங்கரை யமைத்தா னன்றே. [ ]

வேணிக்கை மலரே வாக விளங்கிடு மதன னுயுன்
காணிக்கென் றமைந்து நின்று கட்டழ கொருங்கு கொண்ட
வாணிப்பொன் னனையா ளுற்ற திலதமு நுதலு மாயின்
மாணிக்கங் கொண்டு நின்ற மதிப்பிள வொக்கு மாதோ. (உரு)

ஞ்கயிட்டு வகுப்பங் கிட்டுக் காசறை யிட்டு வாச
நெய்யிட்டுப் புழுகங் கிட்டு நிமிருட் குடியங் கிட்டு
மையிட்ட வறலொப் பிட்டு மலரிட்டுப் பின்ன லிட்டே
யையிட்ட கூந்தல் மாண்பு யலகிட்டு மொழிவா ரியாரே. (௨எ)

பொன்னென்கோ பூங்கொம் பென்கோ பூரண மதிபென் கோவரி
மின்னென்கோ மஞ்ஞை யென்கோ வீரியணி மாலை யென்கோ
வன்னங்கோ ண்டையாட் பார்த்தார்க் காசைவைப் பென்கோ மா
யென்னென்கோ வென்னென் கோநின் னேரிணு சிசைந்த பூங்கி
ளியா. (௨அ)

கற்புக்கு வசிட்டன் றேவி கலவிக்கு மாரன் றேவி
பொற்புக்கு மாயன் றேவி பொறைக்குசிக் குன தாய் போல்வா
ளிற்புக்கி யறங்கள் செய்தற் கிவள்போ லிசைந்தா ளில்லை
யற்புக்குச் சொல்ல வந்தே னியலி தையைய வேண்டும். (௨௯)

அன்னையிற் றந்தை பேற்ற மவனிலுங் குருவே பேற்ற
முனிய வறிவி னென்று மொழிந்தவர் பெரிய ரன்றோ
வென்னுரை வழாது கொள்ளி லிந்திர னுழைநான் சென்று
சொன்னவா முடிக்கத் தக்க சூழ்ச்சியென் கடமை யென்றான். ()

என்னலு மெழுந்து தாழ்ந்தா னெழியனே னுதை னேசொ
னின்னுரை மறுப்ப னென்று நினைக்கையம் பிறந்த தென்று
னன்னதன் றறமி ரண்டா லரியவவ் வறம்போ காமற்
சொன்னதா மிதென் றந்தத் தூயமா முனியி றுத்தான். (௩௧)

ஆறிய முனிவன் சொன்ன வழிகெனுங் கடலு ளாழ்ந்தா
னேறிடுங் கரையுங் காணா னினைகுவான் முனிவன் பாதம்
பேறிடு புணையே யன்றற் பெருங்கரை யுய்க்கு மென்று
தேறினன் பற்றிச் சொல்வான் றேவர்க்குந் திருத்தி செய்வான்.

வெம்மய னெயுன் சொல்லால் விளைந்ததா லதனை நீக்கி
யம்மவுல் லாப னாக வமைப்பதுன் கடமை யன்றோ
செய்யையின் மொழிந்த வாறு சேர்ந்துநீ யிந்திரன்றன்
சம்மதம் பெருந்து கொண்டு சார்திடி லிங்கோய் தீரும். (௩௨)

ஆதலா் லைய நீயின் னறிவினு லறிவை நின்சொற்
போதனை வயத்து ளாக்கிப் புனைமணக் கால நீட்டா
தோதரு முகூர்த்தத் தோடு முறுதிசெய் திங்கு வந்தென்
மாதவம பலித்த தன்மை வழுத்துதி யெனவி டுத்தான். (ருச)

என்னுடை மகன்வாழ்ந் தானென் றெடுத்தபே ருவகை யான்
பொன்னக ராளி கோயிற் புகுமுறை யவையிற் புக்கா [போய்ப்
னன்னமென் னடையா ராட வரியணை யிருந்த தேவ
மன்னனைக் கண்டான் றாழ்ந்தான் மறைக்கிளைத் திருத்தங் கண்
[டான். (ருரு)

ஆங்கவன் பணித லோடு மாசிவாய் மலர்ந்தன் போடு
மோங்கிய முகமன் கூறி யொளிருமா சனம்வ ழங்கி
யீங்குரு வென்று வேள்வி யிருக்கத்தி யயனம் யாவு
மோங்கிய வலிய வோவிங் குற்றது முணர்த்தி யென்ன. (ருசு)

நின்னரு ளிருக்க யாரு நிகரிலா மரபா ளன்று
னென்னுடைச் சேடனுக விருக்கவோர் குறையு முண்டோ
தன்னிலே வழாமற் றுங்கச் சகலரு மரனை வேண்ட
வந்நதிக் கரையு தித்தா னரவை தெரிகி லாதார். (ருஎ)

மாயனங் கிசத்தில் வந்தான் வரனரு ளுடையோ னாகித்
தூயநின் சமுகத் தேறிச் சொல்லுநின் னாளும் பெற்று
ஞயவன் மரபு பல்கி யாரையுந் தாங்கி நிற்க
நீயருள் புரிவா யென்று நின்னிடம் புகுந்த தென்றான். (ருஅ)

என்னலு நல்ல னல்ல னிசையுளான் கல்வி யுள்ளான்
மன்னுமெவ் வரமென் றாலும் வழங்குவென் மறுக்க இல்லே
னுன்னுளத் தன்பு போலென் னுளத்தினு மிருப்ப தென்று
னந்நிலே யுணர்ந்த போதா யனமுனி யவலந் தீர்ந்தான். (ருகூ)

கலி நிலைத் துறை.

தந்த வாக்கினித் தவிர்கலான் றருணமு மீதால்
வந்த காரியம் வெளிசெயன் மாண்பென வெண்ணி
யெந்தன் சேடனுக் கிசைதர நின்மக ளாய
கந்த வார்குழற் கன்னியைக் கடிமணங் காண்பாய். (சு0)

என்று கூறலு மிவன்மொழிக் கெதிர்மொழி கூறிற்
கன்றி னானெனிற் கடிதினிற் காதுவாய் மூக்கு
மின்று பல்பல வடுக்கவுங் கூடுமென் றெண்ணி
யன்றெ னாததற் கமைந்தனன் முனிவனுக் கறைவான். (௪௧)

மறைசொன் மார்க்கனீ வழுத்திய மொழிகளி லொன்றுங்
குறைவ ராதெனக் கொள்கின்றேன் குறித்திடுஞ் சுபநா
ளறையென் றனதற் கைந்தங்க மோரையங் கிரகந்
துறைகண் மூன்றினுஞ் சொன்னநூற் றெட்டையுஞ் சூழ்ந்து.()

பிற்றை நாளுக்கு மற்றைநாள் பிறங்கிடுஞ் சுபநா
ளுற்ற தாமென முனிவர னோதலு முவகை
பற்று மிந்திரன் யாவர்க்கும் பகர்மண நிருப
முற்ற விட்டனன் முனிவரன் விடைகொடு போனான். (௪௩)

அன்ன காலையி லிராமனைக் குரங்கினை யரவைப்
பன்னு காக்கையைச் சேயினைப் பணியணி பரனை
மன்னு கோட்டினைக் கொடியினை வாரியை நதியைச்
சொன்ன மாமுனி யுரையினால் வெறுத்தனன் றோன்றல். (௪௪)

அந்த கன்சக வாசத்தா னினக்குமக் கொடுமை
வந்த தேதென்று லென்றனன் மதனவே டன்னைச்
சிந்த வென்றிடு செயத்தினை நோக்கினன் றிகைத்தான்
விந்தை யாமென வெகுமதி முற்றிலும் விடுத்தான். (௪௫)

இன்ன வாறிவன் மதியிழந் திம்முனி யென்முன்
சொன்ன வார்த்தையை மறுப்பனோ சொல்வலி யால்விண்
மன்ன னுங்குடன் படுவனோ மறைமுனி திரும்பி
யென்ன வாக்கொடு வருவனோ வெனவெதிர்ந் திருந்தான். (௪௬)

வக னுச்சென்ற விருடியி னிருமருங் கமரர்
யோகர் சூழ்தர வுவகையோ டுறுவதை யுணர்ந்தான்
போகும் போதினுஞ் சிறப்புடன் புகுவதா னன்மை
யாகுங் காரிய முண்டென வனுமித்தா னறிவால். (௪௭)

எதிர்கொண் டாணிமை யோரொடு மெதிர்வரு முனியை
விதிகொண் டாங்கவன் பணிதலு மாசிகள் விளம்பி
மதிகொண் டோங்கிய வதனத்தாற் சொன்னது மன்றிச்
சுதிகொண் டோங்கிய நாவிலுஞ் சொல்லுவான் றுலங்க. (௪௮)

பின்றைப் பின்றையி லிந்திரி யாம்பெரு மாட்டி
மன்றன் மாலையின் கழுத்திடு வாளென வெழுந்தி
பன்றை வேண்டிடி லாவதன் றுமதற் கமைய
வின்றை நாடுவ னெனமுனி யிருந்தன னிப்பால். (௪௯)

போதாயனர் தூதுப் படலம்
முற்றிற்று.
ஆ-திருவிருத்தம்-௭௮௪.

பதின்மூன்றாவது

நாரதர் சூழ்ச்சிப் படலம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கோரதன் கிரண முன்னர்க் கோகன தம்போல் யோகன்
பாரதந் திரவாக் கிற்கோ பதிதிரும் பினது சொற்றே
மாரத கீர வேத மகரயாழ் தடவிப் பாடு
நாரதன் சூழ்ச்சிச் செய்கை நவிலுவா மெடுத்துக் கொண்டாம். ()

இம்முனி விடைபெற் றேக விந்திர னிருந்தா னிங்கு
வம்மினென் றருகி ருந்த வானவர் தமைநோக்கிச்
செம்மைசெய் மணத்தா ணாளைப் பிற்றைநாட் செய்யத் தக்க
வெம்முறை யாவு நாடி யமைப்பிரா லயர்வீ ரல்லீர். (௨)

கலிநிலைத்துறை.

விலங்க லின்சிறை யறுத்தநாள் மேலைநாட் சசியை
யலங்கல் சூட்டுவா னணிநக ரலங்கரித் திப்போற்
பொலங்கொண் மாபணிச் சுவர்க்கத்தைப் புதுக்குக வென்று
விலங்கும் பணைமென் முரசினை யியம்பினன் றியம்ப. (௩)

யானை யென்மூர சடிப்பவ ரடித்தலுந் தம்மி
லான மங்கள மமைந்தன போலசுங் களித்து
வான ளாவிய கொடிமுற்ற மாடநீண் மறுகுந்
தான முன்புறந் தங்கலோ டலங்கரித் தனரால். (ச)

மரக தத்தினல் வாழைகள் கமுகுகள் வகுத்துத்
தரளப் பந்தரின் விதானங்க டயங்குறச் சமைத்துப்
பரவப் பன்மணித் தீபங்கள் பாங்குறப் பரப்ப
வருகிற் றாங்கிய வாடியு மெடுத்தகதவ் விளக்கை. (ரு)

தன்னு டைப்பெயர்க் கிசைதருத் தந்தசந் தனத்தாற்
பொன்னி லத்தினை மெழுகினர் பொலிவுற வதன்மேன்
மன்னு குங்குமக் குழம்பினுற் கோலங்கள் வரைந்து
துன்னு பூரண கும்பங்கள் வரிசையிற் றெருகுப்பார். (சு)

தூணெ லாமணி சுவரெலாஞ் சித்திரந் துவளும்
பூணெ லாநவம் புனைதெரு யாவுந்தோ ரணங்கள்
வீணெ லாமிலை வெளியெலாங் கொடிகளிவ் விதமா
யாணெ லாமதன் பெண்ணெலா மிரதியென் றாக்கி. (எ)

ஆடு வார்பலர் யாழொடு மளாவின தென்னப்
பாடு வார்பலர் கங்கையின் புலனைப் பார்க்க
வோடு வார்பல ருவகைமா நறவுண்டு தம்மைத்
தேடு வார்பலர் தெருவிடை யுலாவுவர் பலரால். (அ)

வாசி கைசெய்து கல்லணை மேல்வரு வாருந்
தேசு லாமணித் தேர்மிசைத் திரிதரு வாரு
மேசி லானையி னிலகடத் திருந்துல வுவரு
மாசின் மானத்தின் வருகுவ ரும்பல ராமால். (கூ)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஈண்டிஅ றிகழும் வேலை யிணங்குவ திணைங்கா வண்ணத்
தூண்டிடும் விருப்பன் யாக்கை சுக்கில மிறத்தன் யார்க்குந்
தாண்டிடு மிசையன் யாழைக் கதைவருங் கையன் முந்நூல்
பூண்டிடு மார்ப னூற்றன் பொன்னகை ராளி கோயில். (௰)

ஆவயின் மூன்று கோடி யந்தத்திற் பெற்ற மூப்பான்
றேவர்கள் கோமான் பாதஞ் சென்னியிற் சூட லோடு
மாவினின் றுதித்தான் யாக்கைக் காயிரங் கொடுத்தா னுண்மை
மேவின னென்ன வஞ்சி விதிமுறை யாசி கூற. (கக)

நன்குலங் கல்வி செல்வ நாடிவ தழகிந் நான்கே
தன்குலந் தந்தை தாயர் தனையைக் கொள்வ தேனும்
புன்குணக் குரங்கென் றாலும் பொருந்திய குலத்திற் கொள்க
வென்குந ரெவரு மையா வென்னினைந் தென்செய் தாய்நீ (கஉ)

இனத்தினும் பொருத்தந் தானு மிமைப்பினுந் தன்மை யானு
மனத்தினு மிணக்க முண்டோ வரும்பழி யமைக்க நேர்ந்தா
யெனைத்தருங் காண வோமத் தெரியிடை மூழ்கி நம்போற்
றனைப்பவித் திரஞ்செய் வானேற் றக்கதுன் மருமா னுதல். (கங)

இத்தையுங் கடந்து செய்யி லெழுவரி ரறுவ ரேனைப்
பத்தினோ டொருவர் மற்றைப் பரிவரு மிருவர் கூட்டத்
துத்தம ரிகழ்வ தொன்றே வும்பரின் றலைமை நீக்க
வைத்தனர் சிந்தை யென்று மகரயாழ் முனிவன் போனான். (கச)

வருவது வருக வென்ன மறைமுனிக் குரைத்த மாற்றந்
திருகுவ னேலென் கனனி செந்தழற் குளிப்பா ளந்தோ
கருதுவ தென்கொ லென்று கண்பெற்ற காலு மில்லாப்
பெருகிய துக்க னானன் பெருந்தரு நிழற்கோ மானல். (கரு)

பின்முனி யுரைத்த மாற்றம் பிற்பட விழுக்கத் தோரான்
முன்முனி யுரைத்த மாற்ற முற்பட விழுக்க நைந்தான்
சொன்முனிக் குறையைத் தீர்ப்போன் றாதன முனிவ னென்று
தன்முனிற் பவரை நோக்கித் தருகவென் சமுகத் தென்றான். ()

கூவின ருன்னை யெங்கள் கோவெனக் குறித்த லோடு
மாவயி னெய்தித் தாழ்ந்த வறவனுக் காசி சொல்லி
நாவயிற் கொடிய மாற்ற நாரத னவின்ற தன்மை
யாவையு முரைத்தான் போதா யனனதற் சமைவ தானன். (கள)

பூவயி னுதித்த மேழிப் புண்ணிய னொருவ னேயோ
தேவனென் றுரைப்ப தன்னான் றிருவர்க்குந் தேவப் பேரா
நாவயி னுரைப்ப தென்னே நான்கடி மணத்து ணேயந்
தூவெரி குளிப்பக் காட்டிச் சுராதிகட் கையந் தீர்ப்பல். (கஅ)

இவனுடைப் பெருமை காட்ட யாழ்முனி யெடுத்த சூழ்ச்சி
யவமதிப் பல்ல வைய வல்லவை மேற்கொள் வேனோ
டெவருமிவ் வதுவை காண வெய்துவ ரிதுமுன் சான்றென்
றுவகையின் மனந்தி ருத்தி யுழுவன்பா லுற்றான் மேலோன். ()

பிக்கிடுங் கலக்கந் தேற்றின் விரையினாற் றெளிந்த நீர்போ
லிக்கலை முனிவன் சொல்லா லெண்ணறத் தெளிந்த காலைச்
சக்கிரி மகிழ்ந்தா னுள்ளஞ் சம்மத மின்றேற் சாரா
ரிக்கடி மணத்து ளென்னா வெய்துவார்க் கெதிரி ருந்தான். (உ0)

நாரதர் சூழ்ச்சிப் படலம்
முற்றிற்று.
ஆ-திருவிருத்தம்-அ0ச.

பதினான்காவது

ஐந்திரி கடிமணப் படலம்.

கலிநிலைத்துறை.

சுழலுங் காலெலாங் கோளுடன் சுழல்பவன் சொற்ற
தழல விப்பது தழலெனச் சாற்றினஞ் சமய
வழலின் மூழ்கிய வமரருக் காண்டுறு சிந்தை
கழலு மாசெய்து கடிமணங் கண்டது கரைவாம். (க)

விதுவை வேணியன் விழியிட மாயினே னென்று
மதுவை நோக்கிலோ வவன்குல மதனினாங் கென்று
முதுவ யத்தின்மேற் சுவாகையா முதல்வியி னோடு
வதுவை காணுவான் வடக்குநோக் கினன்வந்து புகுந்தான்

மன்ன ழற்கணான் மலரடிக் கன்பனாய் வந்நா
னன்ன யந்தரும் வதுவையிற் செல்லநா ளினனான்
முன்ன மோர்குற்ற மின்றியு முழுவதை பட்ட
தின்னந் தீர்வில தழும்பெனத் தென்பதி யிருந்தான். (௩)

தங்க ளுக்குள குடிமையைத் தமக்குமாங் கேசெய்
கங்கை மைந்தனைக் காண்பதுங் கடுங்குலப் பகையாம்
பொங்கு தேவர்முன் போவதுங் கருத்தில னாகிப்
பங்கு போன்றன னயன்சல பதிக்கிடைப் பகர்ந்தான். (௪)

பண்டு பாணித்து மனிதனாற் பகைப்புண்டேன் மேலுங்
கொண்ட வென்பெருந் தேவியா ளொடவுங் கூடுங்
கண்டி ருந்துநான் காலநீட் டிப்பதோ வென்று
தண்ட யங்குதார்ச் சதயநா ளுடையவன் சார்ந்தான். (௫)

அன்று தேவர்க்காய்ப் புரமட வம்பிற காகி
நின்று நைந்துங்கைம் மாறவர் நினைக்கில ரென்னா
மன்றல் வண்மலர் மாலைகொண் மதன்றனைச் சுமந்து
தென்ற லாய்வந்து தேடினன் மாதரா டவரை. (௬)

தற்சி நேகித னாக்கியான் றலைவியாய்ச் சமைந்த
நற்சி ரோமதி நங்கைக்கு நற்றுணை மைந்த
னிற்சி ராக்கிய மிபைவதை யறிகுவ னென்று
பொற்சி ராக்கியன் புட்பக விமானமேற் போந்தான். (௭)

இரும ருத்துக்க ளியக்கர்கள் கின்னர ரொடுகொந்
தருவர் சித்தர்க ளுரகர்விச் சாதரர் தகுஙிம்
புருட ரந்தர ரெண்வகை வசுக்கணம் புகலுங்
கருட ரந்தர வாசிகள் கணக்கிலர் தொக்கார். (௮)

பிருகு வந்தனன் பதஞ்சலி வந்தனன் பெரிய
மரிசி வந்தனன் மறைகண்டான் வந்தனன் றதீசி
யிருடி வந்தன னிரணிய வன்மனெய் தினனாற்
பொருபு லிப்பதன் வந்தனன் புலத்தியன் வந்தான். (௯)

சித்த கோணினன் காசிபன் கௌதமன் சனக
னுத்த மத்தமிழ்க் கொருவனுங் கீரச னுரோம
னத்தி ரிப்பெயரோன்சுக னங்கிரன் குறளை
வைத்த நாவினன் முதலிய முனிவரர் வந்தார். (க0)

இரத மூர்ந்துவந் திறங்குவார் தொகைசொல வியைபா
துரக தத்திடை தோன்றுவார் தொகைசொலத் தொலையா
கரியின் மீதுவந் தார்களைக் கணக்கிடக் கழியா
வரிய வான்கண மனத்தின ரீட்டமு மனைய. (கக)

அடியின் வாவிய துரகத வார்ப்பொலி யண்ட
முடியி னீவுதேர் செலுமொலி மும்மத வோங்கல்
படியின் வீழொலி பலப்பல வாகன வொலிகள்
கொடியின் மும்மடி கோடணை கொண்டதந் நகரம். (கஉ)

வந்த வர்க்கெதிர் வணக்கமு மாசியும் வழியா
லந்த நன்முடி யசைத்தலு மபாங்கமு மருளித்
தந்த மக்குநல் லுறையுளுந் தந்திட முன்னு
விந்தி ரன்முடி பெற்றநா ளொத்ததென் றிருந்தார். (கங)

ஆய காலையி லிந்திர னுலகருள் கோயி
லேய கின்னரர் பிரானிட மெம்முனி யேகி
மேய வந்தனை புரிதலு மாசியும் விரவுந்
தூய வின்சொலு மிருக்கையும் பெற்றனன் சொல்லும். ()

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

எம்பெரு மானு முன்னை யின்னுயிர்த் தோழ னென்ற
வுன்பெரு மானு மான வொருதனி முதல்வன் றன்பா
லன்பொடும் யாருஞ் சென்றங் கடியிணை வணங்கி யேத்த
முன்பருள் வரத்தால் வந்தான் முடியொடு நதிதீ ரத்தில். (கரு)

வந்திருந் தன்னை யந்த வரநதி மகிழ்வி னூலை
சந்தவண் கையா லேற்றத் தவப்பல மகிமை யாலே
யிந்தபன் னுலகத் தூற்று னிந்திர னிருக்கை கண்டான்
சொந்தநன் மருகனென்னுஞ் சொல்லையும் பெறநிற்கின்றான். ()

ஆங்கதற் கடுத்த நாளிந் நாளிதி லவனை யாமே
யோங்கிய மணக்கோ லஞ்செய் தூர்வலஞ் செயவுஞ் செய்து
பாங்கியல் சிறப்பி னோடும் பயின்மண மண்ட பத்து
ளீங்கிருந் தழைத்துப் போத லியல்பென முனிவன் சொல்ல. [ ]

அன்னதே நலனென் றந்த வளகைக்கோ மானு நேர்ந்தா
னன்னள கூப ரப்பேர் நந்தனு மியக்கர் யாரு
மன்னிய பரிவா ரத்து மரபினர் யாருஞ் சூழ
வுன்னிய முனிவ னோடு முழவன்வாழ் விடுதி புக்கான். (௧௮)

வந்தவர் தங்கட் கேற்ற வணக்கமா லிங்க னத்தோ
டுந்திய முகமன் மற்று முறுவன வமையச் செய்த
வந்தவே ளாள னுக்காங் கடிமுகன் முடியுங் காறுஞ்
சுந்தர மணக்கோ லத்தைச் சூட்டுவான் சொல்ல லுற்றான். (௧௯)

மின்னுடைச் சடைய னென்கோன் மேலைநா ளென்னை வாயாற்
றன்னுடைத் தோழ னென்ற தனிவரந் தெரியார் யாவர்
பொன்னுடைச் செல்வக் கேற்ற புதல்வனி லிவனை யிந்நா
ணின்னுடைத் தோழ னென்ற சிலவர மிவனுக் கீந்து. (௨௦)

வளையிரு கஞ்ச நந்த மகாகற்பங் கமட நீலம்
விளைதரு முகுந்த மொன்பான் விழுநிதி யிறைவ னிந்து
னளைநின்று கொடுக்க வாங்கி யாவன பிறவுங் கூட்டித்
துளைபொன்ற லாயு தத்துத் தோன்றலைக் கைசெயென்றான் (௨௧)

ஆங்கவ னெழுந்து போதா யனமுனி சங்கற் பாதி
யோங்குமந் திரஞ்ச டங்க முதலிடக் கங்கை யாதி
வீங்கலை நீரா ஞனம் விதிமுறை யாட்டி நீற்றோ
டோங்குடை வரிந்து தாரோ டுத்தரி யமுங்கு லாவ. (௨௨)

மேவலர் பார்க்கிற் றங்கள் வீரங்கள் வெருவி யோடப்
பாவலர் பார்க்கிற் றம்மைப் பற்றிய கலிகைந் தோட
நாவல நாமப் பொன்னி னன்மணி யொளிகு லாவக்
கோவலஞ் செய்யுந் தாட்குக் குரைகழ லொலிப்பப் பூட்டி. (௨௩)

கொய்சகந் துலங்க வம்பொற் கோசிக மருங்கு சாத்திக்
கைசெயு மணியும் பைம்பொற் காசரை நாணு மார்த்து
மொய்செயும் புயாச லத்து முழுச்சுட ரிருந்த தென்ன
வைசெயுந் துவரை நாமத் தருப்பொனங் கதமுஞ் சேர்த்து. ( )

வேட்டலா னுந்தை யாயும் வேட்ப்பா னிமித்த மாயும்
வாட்டிய கொலையோ டேற்றன் பருகிய கைபோ லல்லேங்
காட்டுமா வெள்ளி யைந்துங் காசறச் செய்து தான
நீட்டுறு மேன்மை காட்ட நிகரில்கங் கணமுங் கட்டி. (௨௫)

இல்ச்சினை யமுது கொள்ள வெழில்விரற் பூட்டி மாதர்
பலைத்தமார் பகலங்காண வருப்விழி வழுக்குற் றுங்கே
சலித்தழுந் திடச்செஞ் சாந்தந் தண்பனி நீரும் பெய்து
நிலைத்தகண் டிகைமே லார நிமிரொளிப் பதக்க மிட்டு. (௨௬)

இருவரை மீது காணு மிருசுட ரென்னக் காதிற்
றிருமணிக் குழைக ளிட்டுத் திலதநீற் றின்மே லிட்டுப்
பொருவறு மகுடஞ் சூட்டப் புகுதலும் பொருது சொல்வான்
கரையிடை யுதிக்கும் போது கனமுடி யோடும் வந்தான். (௨௭)

என்வலி யாற்றுங் காம லெதிர்த்தவன் சினத்த போதே
பொன்முடி தாங்க லாற்றும் புகழ்மைய னல்லை னென்னத்
தன்னரு கிருந்த வந்தத் தனதனின் கையால் வாங்கி
மன்னரு மகுடஞ் சூட வரந்தந்தேன் கோடி கேணீ. (௨௮)

மந்திரி யாவாய் மன்னர் வளர்படைக் கதிப னானை
தந்திரி யாவாய் நின்கைச் சார்பின்றே னுலகில் யாரு
முந்திரி யளவும் வாழார் முத்தமிழ் தழைக்க வந்தா
யைந்திரி மகிழ்ந னாவா யென்னுனக் காகா தென்று. (௨௯)

புதுநவ மணியி ழைத்துப் பொன்னினு லியன்ற தான
கதிரொளி மகுடங் கையாற் கனகநேத் திரனே சூட்ட
மதுமலர் மாலை யாதி மற்றுள பிறவும் வேய்ந்து
விதியுட னியக்கர் யாதர் விழியெச்சில் கழிக்க நின்றான். (௩௦)

இச்சையிற் றனதன் மைந்த னிரத்தின கசிதத் தேரி
னுச்சிதப் பரிதி கோடி யுதயமீ தென்ன வேற்றி
நச்சியல் விழிவேற் கண்ணார் நாடக நடிப்பத தெய்வ
வைச்சிவி கையினிற் றானு மருகணை ந் தினிது சென்றான். (கூக)

உத்தரா திபனுந் தப்பா னுத்தம குணத்துக் கேற்ற
சித்திர ரேகை யென்னுந் தேவியோ டினிதி னேறி
மொய்த்தபுட் பகமா னத்தின் முதுகிருந் தருகுசெல்ல
மெய்த்தவ முனியுங் கோல மிருமிர தத்திற் செல்ல. (கூஉ)

பேரிகை முருடு பம்பை பெரியவாய்ப் பதலை மொந்தை
பூரிகை காளஞ் சங்கம் பொம்மென முழங்கி யெங்கச்
சாரிகை குயிலுந் தாழத் தழைந்திடுங் குதலை வாய்ச்சொற்
காரிகை யார்கண் ணென்னுங் கடலிடைக் கலந்தா னன்றே கூங

பாடுவார் பாட வந்தப் பாடலை விடாது பற்றி
யாடுவா ராட வந்த வாடலுக் கிசைந்த பேளங்
கூடுவார் கூட வந்தக் கொழுந்தெரு வலஞ்செய் கின்ற
வேடுவார் குவளைத் தாரா னெழில்கண்டா ரியல்பைச் சொல்வாம்

விஞ்சு வர்க்கத்து வேலை மேதினி புதல்வன் காண்பா
னஞ்சுவர்க் கத்துக் கோல மாங்குவார்க் கமையா தான்
வெஞ்சுவர்க் கத்துங் கோல மிவனுக்குத் தெரிப்ப வென்று
கொஞ்சுவர்க் கத்து நின்ற குயிலனார் குழுமி நிற்பார். (கூரு)

கலித்துறை.

திடந்த ருப்புயத் தேவர்தங் குடிமையைத் திறந்தாற்
கடந்ததோள்வலிக் காளையி னழகினைக் கண்ணான்
மடந்தை மாதர்தங் கணவர்தம் மணிவரைப் புயத்திற்
படர்ந்த வள்ளிபோ னிமிர்ந்தனர் பார்ப்பவர் பலரால். (கூசு)

என்னு ளத்திர வியமனை தனிலிவ னுறுப்பாம்
பொன்னை வைத்தனன் பூட்டினன் யானது புசிக்க
வின்ன வன்மனத் திறவுகோ லீகலை னீந்தா
லென்ன வற்கனு வளவளி யெனென்று மொருமின். (கூஎ)

சாள ரத்தினிற் சுருங்கையிற் றம்மனை வாயி
னீள மூங்கொடார் முடுக்கரிற் றிண்ணையி னேரின்
மாளி கைக்கொடி மருங்கினின் மாதரா டவர்க
ளாளி யன்னவ னுலாவரு மழகினைப் பார்ப்பார். (௩௮)

நற்பொற் காஞ்சியு நழுவிட நச்சுவேற் கடையை
மற்பொற் றூர்ப்புயத் தெடுக்கமாட் டிலள்வரு நாணை
விற்பெற் றூலென வனையினும் புதுமண முன்னின்
கற்பைக் காட்டில தனக்கனங் காட்டின காண. (௩௯)

பெருகு பேரெழி லழவர்கண் டாங்கொரு மாது
வுருவு காண்குவ னடிமுத லென்னக்கண் ணோடிச்
சரணில் வீழ்ந்தரங் காறுநீந் திச்சலித் தோய்ந்தவ்
வரனின் மூழ்கின கரைதெரி யாமலங் குழன்று. (௪௰)

அழகின் மன்மத னெனும்பெய ரரன்செப லதனாற்
கழிவின் றுமிது காறுங்காத் திரங்கொளு வானே
லழவன் காணழ கிற்கென வொருபெய ருறுவான்
வழுவிப் போனது பெரிதெனன் வாக்கின தியற்கை. (௪௧)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பாகன மாற்றம் போக்குப் பயிறர நின்ற நங்கை
மோகசம் மேல்வைக் காமன் முடிக்கலாற் றிரும்பிப் பாரான்
மாகன வாகன் முந்தை மன்மதன் போல்வா னேற
வாகனஞ் செய்த தெந்தத் தவமென வழுத்து கென்றாள். (௪௨)

கடுவயத் தேறிற் செல்லுங் காளைதன் வடிவு நோக்கி
விடும்வழி யெனவி லக்கி மீண்டுறை யில்லிற் சென்றா
ளடற்மணி விளம்பிற் றைந்த வாடிகண் டாடற் காணா
வடிவயான் றேரிற் சென்றான் வடிவுகண் டனளா யர்ந்தாள். (௪௩)

சேகனை யவனை யுள்ளந் தினையிரங் காள்பு றத்தே
போகனை யவனை மாடப் பொற்பல கணியி னூடே
மாகனை யவனை கொங்கை மாதுவா னவர்கோ னேரா
மேகனை யவனைக் கண்டா ளிருந்தன ளிரங்கு கின்றாள். (௪௪)

அருங்கலை யன்றி மற்றொ ராணைகொண் டதைக்கைக் கொள்ளா
நெருங்கலைக் கண்டால் யாவர் நெஞ்சுறப் பொறுத்து நிற்பா
ரொருங்கலை நிர்த்த சோதி யொவ்வொருத் தியுங்கா ராளன்
மருங்கலை யனத்தா ளாகி மற்றவ ளைக்காய் கின்றாள். (சரு)

மதுமலர்க் குழலார் யார்மேல் வைத்தனர் மனமன் னென்றான்
மொதுமலர் நோக்க மாகி னுணுகணு வும்பொ றார்கள்
கதுமென வொருத்தி வந்தாள் கண்டனள் கடலன் னானுட்
பொதுவெனச் சென்று னென்று புலப்பினள் புலந்து நின்றாள் ()

வாளிணை வைத்த தன்ன வரிவிழிக் கயலின் கண்ணி
தாளிணைக் நோக்கிச் செல்லுந் தசமையை விடுத்து நின்றாள்
வேளிணை யான விந்த வீரன்றன் விலங்க லன்ன
தோளிணை பாரென் றாட்டுன் றணைமுலை சிறிய வென்றாள் (சஎ)

அரும்பவி ழலங்கற் றோளா னகமுமென் னகமு மான
விரண்டினி லொன்றை யேனு மெனவயப் படுத்திப் பின்னர்த்
திருப்புவ னெனநி னைந்து சேயிழை யொருமென் கோதை
யருந்துயில் போககி நாளை டணிவளை கேபாகி மீண்டாள். ()

தன்மகன் றுடைய விந்தத் தலைவிபா லிணக்க மானா
நன்மன முடையா னின்ற நங்களுக் கிசையா னென்பார்
கன்மன முடைய விந்தக் காளைபின் விரைந்து போன
வென்மனந் திரும்பி னாலு மிவன்மனந் திரும்பா தென்றாள். ()

கொங்கையக் கோங்கை வெல்லக் குவிந்தெழுந் துயர்ந்து நிற்கு
மங்கையர் மடந்தை மார்கண் மறுகிடை யிருபக் கத்துந்
தங்கைய மோக மாகத் தரைமக ளழுகை வாரி
யங்கய னழி யாக வளந்தளந் தளந்து நிற்பார் (ருo)

பெண்முத்த பணைய வாங்கோர் பேதையில் வள்ளல் வாயா
லுண்முத்தம் பெறவி ரும்பி யுறுபித்தத் தோடு வந்தாள்
வெண்முத்தத் திதலைக் கொங்கை யேன்முத்த மிட்டா லென்னக்
கண்முத்த மிட்டு நின்றாள் கைவளை கழலுங் கிட்டாள். (ருக)

பண்மகள் புதல்வ னிந்த வாறுதன் மணத்துக் காகக்
கண்வழுக் குறுகண் சோதிக் கவினுற மயனாற் கண்ட
வொண்மணி மண்ட பத்தி னுயர்ந்தவா யிலின் முன் னெய்த
வெண்மக னூறு செய்தோ னெதிர்ந்தனன் றேவ ரோடும். (ருஉ)

வானரம் பையர்கள் வந்து மங்களாஞ் சனமெ டுப்ப
மேனகை நடன மாட வேறுளர் கவரி வீச
வானவா கனத்தி னீங்கி யரனுடைத் தோழ னாதி
யேனையர் பிறருஞ் சூழ வேகியாங் கிருந்த காலை. (ருங)

அவ்வம யத்தில் வானோர்க் கரசனைந் திரியை யிங்குச்
செவ்விய மணக்கோ லத்தைச் செய்தனிர் கொணர்மி னென்ன
வவ்விய களிப்ப ரம்பை மாதரா யங்கொண் டேகி
வெவ்விய மாரன் போரான் மெலிகின்றாண் மருங்கு சென்று. ()

மாரனுங் காணக் கோத மன்றநுஞ் சாபம் வேண்டு
பேருளன் கரத்தைப் பற்ற வேத்தவஞ் செய்தா யெம்மொய்
பாருறுங் குறையைத் தீரப் பணுமணக் கோலங் கொள்கென்
றீரடி வணங்கி யேத்தி யினியசீர் நனை யாட்டி. (ருரு)

ஒற்றைநூற் கநேக நூலா லுயருடை மந்தா ரத்திற்
பெற்றனர் தற்றி நீவிப் பிறங்குமுன் றானை போக்கிக்
கற்றையங் குழலை வாசங் கனிபுகை கவிய வாற்றி
மற்றரி சந்த னத்தின் வந்தகா சறையும் பெய்து. (ருசு)

பின்னிட முடிக வந்தப் பெருங்குழ லரணிற் சேர்ந்து
முன்னிரு ணின்ற தென்று முடிகின புகுந்த போலும்
மின்னிய பரிதி மின்பூ வெண்பிறை பேலெ தீர்த்து
புன்னணி வகுப்பிட் டாங்கே வாகைபோன் மாலை வேய்ந்து. ()

சேர்ப்பதற் கியைந்த வாள திப்பிய பிறவும் பூட்டிப்
பார்ப்பருந் தேவர் தெற்கோர் பகரதி தியமோ டொக்கல்
கோர்ப்பில ரில்லோர் மாண்டோர் கொண்டமுந் நிலைய ராயோர்க்
கார்ப்பவ னீயே யென்று கலைநுதற் பட்டங் கட்டி. (ருஅ)

விளிதகோத் திரங்க ளாயம் பெல்லிய ரிடத்திற் றோன்றும்
புலிகொள்புத் திரர்தங் காதிற் புலவர்கள் சூட்டா நின்ற
குழியுமெட் டுழுநி னோடுங் குறையில்பல் பொருளின் மேலாங்
கவியணி யுயர்வைக் காட்டக் காதணி தொங்கக் காட்டி. (௫௯)

நத்தத்தன் மலரோ னாட நணுகிலாப் பெருமான் பாத
புத்தத்தன் யாரும் வாழப் படையென வலத்தைத் தாங்கு
மத்தத்தன் சுகிக்குங் காலை யருப்பெறற் றமிழ்வா யாற்செய்
முத்தத்தின் முன்ன தாக முத்தத்தை மூக்கிற் றாக்கி. (௬0)

துலங்கிய துளவன் றாங்கிச் சூழ்தர விட்ட வார
மிலங்கையன் றாங்கித் தாங்கி யிருஞ்சுமை யாற்ற மாலைக்
குலங்களும் பிறவும் பூட்டிக் குங்குமச் சாந்து மட்டிச்
சிலம்பின்மேன் மின்னுஞ் செற்பொற் றிகழ்மணிக் கச்சுஞ்
[சேர்த்தி. (௬௧)

பிரபல ரெல்லாம் யாமே பிரபல ரெம்பா லஞ்சா
திரவலீர் கவியீர் மற்று மேனையீர் வாரு மென்று
கரவளை வாய்விட் டார்ப்பக் கைவிரற் காழி மின்ன
வரைநிகர் தோட்குப் பொன்னின் மணிவளை யிலங்கப் பூட்டி. ()

சில்லரிச் சிலம்பு தண்டை சிலம்பக்கே சாதி பாதத்
தெல்லைமட் டலங்கா ரங்க ளேற்பன விசைத்துத் தீபத்
தெல்லொளி சுழற்றி நோக்குத் தெச்சிலுங் கழல வீசி
வல்லியர் பூவி னோடு மங்களப் பொரியுஞ் சிந்த. (௬௩)

அன்னநேர் திலோத்த மைப்பெண் ணஞ்சன வட்டங் கொள்ளத்
தன்னைநேர் சசியின் பாதந் தாழ்ந்தன ளவளும் வாழ்த்தி
மன்னிய வாயத் தோடு மயிலனை யாளைக் கூட்டிப்
பொன்னியன் மணஞ்செய் கோயில் பொலிதரப் புகுந்த காலை. ()

அவ்விடத் தெழுந்து போதா யனமுனி யாருங் கேண்மி
னெவ்வில துரைத்தா ரேனு முயர்ந்தவர் வாக்கு நன்மை
செவ்விதிற் றருமலாது தீமையைத் தருவ தில்லை
யவ்வித நார தன்சொ லனைவருங் காண்மி னென்று (௬௫)

கலி விருத்தம்.

தேவரி னொருவ னென்பது தெளிந்திட
மேவருங் காவலன் மெலிவ ளார்த்தினன்
பூவரு புதல்வனைப் புகுகென் றேத்தினன்
பாவரு புரோகிதப் பரம யாமுனி. (௬௬)

கடல்விழி யிந்திரக் கொப்பிலா னந்த
முடிமிசை முழங்கொண்டு முடுக வேயிவ
னடமெரி சூழ்கின னறலி லாடல்போற்
கடைமணி யெனவொளி கவின்று தோன்றினான். (௬௭)

யாவரு மகிழ்ந்தன ரிவனுக் கன்றியும்
பூவரு மிவன்குலப் பொலிந்து ளோர்க்கெலாந்
தேவரென் றொருபெயர் சிறக்க வென்றனர்
காவருங் வேந்தர்க்குக் கழறு வாரரோ. (௬௮)

அழலினும் வேறுசான் றறைத லில்லையா
லெழுவரி யாழ்முனி யிசைத்த கோள்பழி
கழுவுதற் கேயெனக் கடைப்பி டிக்குக
விழுமிது மணஞ்செய விரைக வென்றனர். (௬௯)

மணவறை மகளுடை வதன வேதியி
னணிதருந் திலகமே ராச னத்தினி
னிணரணி யுழுவனை யிடத்தி ருத்தினான்
மூணுமுனெ னிருக்குரை முதன்மை நாவினான். (௭௦)

அன்னவன் வலப்புறத் தமர மாதர்தன்
பொன்னடி வணங்குறப் பூசங் கோட்டிய
கன்னியை யிருத்தினர் கண்ட யாவரு
மின்னியன் மதனொடு மிரதி யென்னவே. (௭௧)

செய்ம்முறை யாவையுந் திருந்தச் செய்தபின்
மெய்ம்முனி மந்திரம் விளங்கு மாகுதி
நெய்ம்மிக வுட்கொடு மிமிர்ந்த தவ்வழ
லுய்ம்முறை வலஞ்சுழித் தோங்கிக் காட்டலும். (௭௨)

சன்னிதன் காந்தளங் கைப்பிடித்தனன்
மன்னெரி வலம்வரன் முறையின் வந்துதன்
பன்னியி னடியிணை பற்றி யம்மிமேற்
றன்னவைத் தருந்ததி தோற்றங் கண்டபின். (௭௩)

செய்வன யாவையுந் திருத்திப் பின்னரு
ளைவளர் கண்டத்தா னடியை வாழ்த்திநற்
றெய்வதக் குருவினைத் தேவ ராசனைச்
சைவலக் குழலுடைச் சசியைத் தாழ்தலும். (௭௪)

பூமினு மாலும்போற் பொலிந்து பூமியைக்
காமினென் றுரைத்தனர் கனிந்த வாயினு
லாமுறை மற்றுளோ ரடியிற் றாழ்தலுந்
தாமுரைத் தனர்மிகத் தழைத்த வாசிகள். (௭௫)

சயந்தனுந் தோழன்றோ டன்பு யத்தினு
னயந்தர வளந்தன னவில்பு ரோகித
னிபைந்திமே வதுவரற் கிற்றை நாண்மிகப்
பயன்றரு நிடேகமென் றுரைத்துப் பள்ளியுள். (௭௬)

வேதியன் விதிப்படி விண்ணின் மேவிய
மாதர்கள் விதிமுறை வாழ்த்தி விட்டனர்
றாதன போகங்க ளுகர்ந்தி ருந்தனர்
பூதலஞ் செய்தபுண் ணியத்தின் வந்தவர். [௭௭]

மாகத்தின் மின்னனுண் மற்று றப்புடன்
னாகத்தின் படமுநல் லின்ப நல்கலாற்
போகத்தின் புண்ணியம் பொருந்தி னேர்க்கெலாம்
யூகிக்கின் யாவையு முதவு மின்பத்தை. [௭௮]

ஐபத்திற் புகுந்தவ ரருளு மின்பத்தை
வையத்தி னுகத்தின் வரம்பிட் டாரிலை
மையத்திற் பிறந்தவன் வானநாட் டுறை
தைபற்சம் போகத்தைச் சாற்றக் கூடுமோ. [௭௮]

ஐந்திரிகடிமணப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௮௮௩.

பதினைந்தாவது

குபேரன் விடைபெற்றபடலம்.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

படிவருந் தீயின் மூழ்கியே வானோர் பழியினைக் கழுவிவே ளாளன், கடிமணம் புரிந்து கடவுளர் ஈந்த கண்ணிய வரமபெற்ற திதுவர், மடியவர்க் கெல்லா முடியவ னான வளகைய னிந்திரன் பாலின், விடைபெறு வான்வந் தடையவவ் விருவர் விளம்புஞ்சம பாடணை விரிப்பாம். (க)

நிதியெலாந் தனது பதியெனக் குடிகொ ணிசரிலா வளகை மாயோக, னதிமகா போக னிடைவிடை பெறுவா னணுகினை னமரர்தங் கோவே, துதிபெறு நின்ற நானிலத் தொன்றுஞ் சுவா தின மதுபினுந் துலங்க, வதின்வரா நின்ற காளையை மருக னாக் கினை யதினுமா திக்கம். (உ)

பாரிடத் தன்றோ குஞ்சர மகளைப் பன்னிரு புயமுடை யா னுக், கேருறத் தந்தெவ் வுலகமுங் காத்தா யின்றுநீ யுதவியி னுயர்ந்தாய், மேருபொன் னெனன்பார்க் குறுபய னில்லை வீணெனை மேதினி யுள்ளோர், நேருறத் தனத்திற் புகழுவ ரதனு னிகழ்த் துவார்க் கொருபய னில்லை. (ங)

ஆதலா லென்னூற் புவிக்கொரு பயினின் றதினிடை யென க்குமன் னதுவாம், வேதநூன் மார்க்க மகப்பல னிக்கு வேண் டுவ தரவெதிர் நின்ற, மாதவ முடையா யெனப்புகழ்ந் தைய வழ் ங்குதி விடையென வவனுக், கோதரும் வீர வலனைவென் றுயர் ந்த வும்பர்கோ னீதுரை செப்பும். (ச)

மருகனும் பௌமன் மகனுடைத் தோழ னெனவர மகிழ்ந் தரு ளியதும், பெருமைசொல் வான்போற் றன்முகத் துரைத்த பெற்றியு முணர்ந்தவ னாகி, யரனுடைத் தோழ வொன்றுனக் குரைப்ப துள்ளதை யாமெனக் கொள்ளி, னிருநிலத் துனக்கு முறுதியுண் டெனைலயக் கின்னுயிர்த் துணையுமுண் டாமால். (ரு)

என்னுரை பழும லருளுவை யென்னின் யானஃ தனைப்பி னேற் கா யேல், சொன்னதிற் பயனின் றுமெனச் சுருக்கச் சுராதி பன் கருத்தினை யறிந்தா, னின்னுரைக் குறைவே றில்லையென் றுலு நீள்விழிக் கருங்கய லெந்தன், கன்னிகொள் விரதங் கருத் தினிற் புகுந்து கலக்குவ தென்றிது கழறும். (௬)

வருமணப் பருவம் புக்கிட வெனது மரபினுக் கிசைந்துளா னொருவற், குரியநன் மணஞ்செய் துதவுவா னுற்ற தறிந்தன ளாய்பொரு ளாகிக், கரியசெவ் வரிய கடன்மடை திறந்து கலு ழ்ந்தென துள்ளத்துக் கிசைந்த, வொருவனை யானே வரிப்பனீ ருரைப்பி னுயிரொடு முடிகுவ னென்றாள். (௭)

என்றன ளிருந்தாள் கற்பினுக் கொருத்தி யென்மக ளிவ் விர தத்தான், மன்றலுக் கிசையும் வலியெனக் கில்லை மகேச்சுர னருள்கடாக் கந்தா, னென்றுமே லொன்று மென்றனன் கைக்கோ னுரைத்தலு முண்மையீ தென்று, வன்றிறல் வைர வாளினன் விடுத்தான் மரகதன் போயினா னளகை. (௮)

ஆங்கவன் றனையை யுழுந்தொழில் விருத்திக் கமரர்தங் குடி மைசேர்ந் ததுவு, மோங்கிய சகச னும்பர்தஞ் சபையி லுயிருடை த்தோழனென் றதுவும், பாங்குடன் கொடுபோ யிந்திரி சுகிக்கப் பண்ணிமீள் கையிலரி வினவத், தேங்கிய மனத்தா லிசைகலான் றந்தை திரும்பின துப்பிற யாவும். (௯)

தன்னுடைப் பாங்கி காயிகை மொழியாற் சகலமுந் தெரிந் தனள் கமல, மன்னிய பிரம னன்னவற் கென்றே வகுத்ததான் மாற்றவ ளிடத்திற், சொன்னதின் வரன்போ யிருந்திடச் சூழ்ச்சி சூழ்ந்தனர் தந்தைதா யுற்றோ, ரென்னவந் தெழுந்த சினவழ லுப்ப வெழுந்தது காமவெந் நெருப்பே. (௧௰)

தஞ்சொலைத் தட்டுந் தகைமையே னதனாற் றந்தைதாய் சகோ தரர் முதலாய், வஞ்சனை யியற்றி யுளைவரு வானை மாற்றவ ளுளை யுய்த்தா ளென்பா, னஞ்சன விருளின் வெள்ளத்தை நீந்தி நாவு யிர் பிழைத்திட லரிதென், றஞ்சுமான் மீது காயப்பட் டெழுந்த வப்புலி பாய்கின்ற தன்மீதா. (௧௧)

குபேரன் விடைபெற்றபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் அகக.

பதினாறாவது

சந்திர தூடணப் படலம்.

கலிவிருத்தம்.

இன்னண மிணங்கிய மியங்க ளொன்வட
மன்னவ னேகிய வாறு சொற்றன
மன்னவன் மகளிரு ளராசி னுச்சியின்
மன்னிய மணிகண்ட வாறு கூறுவாம். (௧)

ஒருபிர வரவுமந் தரமப் பூசினி
புரைதரத் தன்னுளங் கடையப் போதரு
மிருளெனு நஞ்சினோ டெழுந்து மேக்குயர்
சுராகலை நிலவினைத் தூட ணிப்புனால். (௨)

மருவிய களங்கத்து மதியெக் காலுநீ
யிரவினில் வருவதை யின்று தேர்ந்தனன்
பெரியநற் றுணையிலாப் பேதை யார்மதி
திருடவே யென்றநின் செய்கை காட்டலால். (௩)

முற்பகல் விளைத்திடின் முடுகி யன்னது
பிற்பகல் விளைவதா மளவை பேச்சது
கற்பனை யல்லநான் காட்சி யோடஃ
துற்பவ மிருபக்க மொத்துக் காண்கின்றேன். (௪)

மழைமத வாணிப மருப்பிற் குத்தியென்
னுழையுள சுவையிலா வுயிரை யுண்கின்றாய்
கழைமதன் வில்லினைக் கடித்துத் தின்னையேல்
விழைதரு சுவையுள வெறிய தின்னிலென். (௫)

கங்கையென் மாமியாய்க் கண்ட பின்னுனைப்
பொங்குவெள் ளங்கொடு போகச் செய்குவன்
சங்கரன் சூட்டலாற் றப்பங் கொண்டனை
யிங்கிது னொக்குமென் றெண்ணகிற் பிலை. (௬)

மருவினர்க் குச்சுகம் வழங்கப் பெற்றனை
பொருவினர்க் கிடர்தர வோங்கி னின்றனை
பெரியையாய்ப் பிள்ளையாய்ப் பிறங்கிப் போர்சிறு
யிருமதி யுன்னிட மிருத்தல் கூடுமால். (௭)

தலைவர்கள் புயமெனும் புனைத ராவிடிற்
கலைமத னரசுக்கோர் கவிகை நீழலா
யுலகமூன் றையுந்தன துள்ள டக்கிய
நிலவின்வெள் ளத்தையார் நீந்தி யுய்ந்தவர். (௮)

தண்படப் பெண்ணொடு சனனஞ் செய்தனை
யெண்பட வுயர்நெறி யேகு கின்றனை
பண்படு கலைபல பற்றி னின்றனை
பெண்பழி கோடியோ பிள்ளைத் தன்மையால். (௯)

வெள்ளைக்கோ வேறிலை கள்ளச் சிந்தையென்
றுள்ளிய ருரைத்தபோ துன்னைச் சேர்த்திலர்
தள்ளலில் கறையுனைச் சார்ந்து நிற்றலா
லுள்ளமு மவ்வித மொத்துத் தோன்றினாய். (௧௦)

மனத்திடை யுளதென்பேர் மதியென் றுனுமு
னினத்தவர் புத்தியி னேற்றங் காட்டினை
யுனைச்சுடர்க் குட்படுத் தோத லூழியிற்
றினச்சுடுஞ் சுடரெனச் சினைக்குந் தன்மையால். (௧௧)

கொண்டவுன் னூடருங் கொதிப்பு மாறநீ
நண்டுறை யுளிலிருந் தரசு நாட்டுவா
யெண்டருஞ் சிங்கமொன் றெதிரி னுஞ்செலீஇப்
பெண்டுகைப் பற்றுவை பேச வஞ்சினேன். (௧௨)

தூயவ ரன்மையோ ரென்கை தோற்றுந்தன்
சேயினி லென்றனர் தெரிந்த துன்வயி
னாயவுன் மகனிற மதனைக் காணவே
மாதிநின் சினைதனைத் தெரித்துக் காட்டுமால். (௧௩)

எண்ணுநீ யிரங்குநீ யெந்தை நாமத்தை
நண்ணுநீ காலெழு நலஞ்செய் தேவியின்
கண்ணுநீ யயிர்தொடு கலந்து தோன்றுநீ
பெண்ணினை வெல்வதிற் பேறென் சொல்லுநீ. (கச)

உக்கிர னிடத்தினி லொளிர்ப தங்களிற்
புக்கதே ளிடத்தினிற் புகழ்மை மாமனுந்
தக்கனி லரவினிற் சமர்த்தைக் காட்டிலை
மைக்குழ லாரிடம் வலியை போனுமால். (கரு)

தேய்கிறாய் வருகிறாய் செல்கி றாயம்பாங்
காயமும் படர்கிறாய் கலையி ழக்கிறாய்
பாயலை யுடுக்கிறாய் படவெ ளுக்கிறா
யாயவென் போனுனக் கயர்வு மிக்கதோ. (கசு)

பண்டையே யையத்தைப் பற்றி நின்றனை
கொண்டநின் கலையெலாங் குறைவின் றேகொடு
பெண்டிர்கண் வாதநீ பிடித்துச் செய்யினுங்
கண்டிடு மூன்னுளக் களங்க மாறுமோ. (கஎ)

தனித்தநின் றேவியர் தம்ம னத்தையும்
பணித்தனை யடைந்ததென் பலர்க்கு மன்னையா
னினைத்திருந் தாய்வதி னிகழ்வ தொன்றிலை
நினைத்திருந் தாயென நினைவு முற்றினேன். (கஅ)

அருட்டிற மின்மையி னல்ல னஃலிருள்
வெருட்டலு மமையவே விளங்கு மப்பெய
ரிரட்டுறும் பொருளஃ தியைய நோக்கலார்
மருட்டிர வலனென வழங்கும் பேரென்றாள். (கசு)

இன்புடை யரிவையிங் கிரிக்க ணேகிலாய்
துன்புடைத் தாழ்வினேன் சூழல் போதியால்
கன்புடைத் தாழ்வினிற் கடுகிச் செல்லுறும்
வன்புடைத் துலையினு வன்ன மாட்சியாய். (உ0)

அத்தடை யிரண்டுக்கு மாக்கி வெள்ளடை
வைத்தனர் மதியென வழங்குங் காலையிற்
சுத்தமி லுடலினாற் சொல்லத் தக்கதோ
புத்தியைக் குழித்து போனு மவ்வடை. (உக)

கண்டமட் டேகடற் கரிய வெவ்விட
முண்டமட் டலமயிர் முடியு மேறின
வெண்டள விடமதின் வெம்மை யாலிறை
கொண்டன னுலகுய்யக் கொள்ள வாற்றலன். (உஉ)

வெப்புமேக் கெழாதது மிகவுந் தண்ணிய
வப்பினு லாற்றவு மமைய லாதது
செப்பிடு மிந்தனஞ் சேர்க லாததிவ்
வொப்பருந் தீயையா ரொழிக்க வல்லரே. (உங)

காமனைச் சுடவொளி கண்ணு தற்கணு
நாமமுப் புரஞ்சுட நகையி ரண்டுமே
யாமனைத் தையுஞ்சுட வாற்ற லில்லெனச்
சோமனைத் தலையிடைத் தூக்கி வைத்ததாம். (உச)

நுதியினி னுறல நகைகி லாவழல்
பதிதரப் பற்றியே பால னுப்பணி
னுதல்விழி யென்றுபேர் நுவல வேயெழு
மதனழல் யாவரே யாற்று கிற்பவர். (உரு)

குடையெவன் செயுமதைக் கொண்ட கோச்செய
னடையினி னிற்பதா நான்வெ றுப்பதென்
றுடையவ னிருக்கவெய் தொடையை நோவது
மடமையென் றனங்கனை வயிர்த்து நோக்கினுள். (உசா)

சந்திர தூடணைப் படலம்.
முற்றிற்று.
ஆ திருவிருத்தம் கூஉ0.

பதினேழாவது

மன்மத தாடவணைப் படலம்.

கலிவிருத்தம்.

இன்னண மிந்துவை யிழித்துக் கூறிய
கன்னியின் விரகத்தைக் கழறி னாமினி
யன்னவன் குடைநிழ லமரு மன்மதன்
றன்னுபா லத்தினைச் சாற்று வாமரோ. (௧)

வில்லது காழ்ப்பினிழ் விடுக்கும் பூங்கணை
புல்லிய தன்னதே பொருதும் வாளிவை
வல்லமே ழியனிடம் வலிய வல்லெனை
மெல்லிய லாருயிர் வேட்ட மாடியோ. (௨)

சித்தச மருளர்நூல் சேர்வ ருள்ளம்போர்
உத்தம ருள்ளத்தா னுணர்வ ரோர்கிலை
மத்திமர் பிறர்சொலால் வரைய றப்பரா
லெத்தனை சொல்லினு மிரங்க கிற்கிலாய். (௩)

வில்லையவ் விருடிஞ் விதமு மென்கணை
வல்லகாண் குடைகலா வகையும் வெண்கொடி
யல்லனாற் காய்கலா வமைவு மாயலைந்
தொல்லெனக் கருங்கியுன் னுடலு மோய்ந்ததால். (௪)

மரங்கொடி நீர்களூ மலய முங்கரி
யிலண்டமுஞ் சகரரு முததிப் பானும்வெண்
முரண்டரு முடங்கனு முனக்கெ னக்குமுன்
டிரண்டக நந்த்வி ரோத மீந்தவால். [௫]

பென்னிலை யச்சபென் றிரண்டு மேவிய
வென்னைநீ வெல்லலா லேற்ற மில்லையாற்
கன்னிபான் மீனத்தைக் கடுகிக் காட்டுவா
ருன்னலா னூலிடை யொருவர் யார்கொலோ. (௬)

பின்னையின் கேள்வனின் பிதாவின் செய்கையின்
வின்னமா யெளியனை யீப்ப தாலெவ
னின்னையந் நேரிலா னெறிக்க நீதிவிட்
டென்னைநீ முனிகின்ற தெளிமைப் பாலதே. (௭)

இன்பகா ரணமென விருக்குஞ் செல்வத்தாற்
றுன்பகா ரியத்தினைத் தொகுக்கு மாதர்போன்
முன்பினைக் காதுநீ முனியத் தக்கிலா
நன்பொருள் கொண்டெனை நலிய கிற்றியால். (௮)

இந்திரர்க் கிறைஞ்ஞா றீந்து முன்குடைக்
குந்திய வீரெட்டு முதவி யின்னணந்
தந்திடு பெரியைநீ தைய லாயெளி
வந்தவென் னெடுபொரன் மாட்சி யன்றரோ. (௯)

வல்லமே ழியின்பயன் மற்றெ லாருக்கு
மல்லவை செய்கில் தனங்கன் கையிடைக்
கொல்லிய வளைந்தது குறையென் சொல்வது
நல்லவுந் தீயவா நாடி னூழினே. (௧௦)

தங்கிய குயில்களே தரும நோக்கினோர்
பொங்கிட வுரைக்கினும் புகுத னன்மையே
வெங்கொடி யாரிட மிகவ ளர்ந்ததா
லிங்கிதங் கூறல்போ லிடர்ப்ப டுக்கிறாய். (௧௧)

மிடற்றொலி துளையொலி வேறு பட்டுமு
னிடர்த்தொனி யிரட்டுறும் பொருளை யெய்துறத்
தொடுக்குமத் திரியுமோர் துளையு மெண்ணவே
கடைப்படச் சேர்த்தினர் காள வாயினே. (௧௨)

முன்னூறு குணமெலா முடிவிற் பற்றியே
பின்னூறு பிறப்பினும் பிறங்கு மென்றனர்
சொன்னது சரிதிட்டி தோடத் தான்மடிந்
தன்னது புலப்பட வமைந்து தோன்றினை. (௧௩)

தந்தையின் செய்கையே தனயற் சாருமென்
றெந்தநூ லகத்தினு மெளிதிற் றோன்றவு
மந்தநூ லளவையி லடங்க லின்மையாற்
றந்திர நின்மிரந் தவிரச் சாற்றுமால். (கச)

கன்றிடுங் கங்குலாங் கான கத்தில்வன்
றென்றலா மொருபுலி சிற வேடன்கை
யொன்றிய பாணைப்பட் டுருவ வொண்ணிலா
வன்றிறல் வலைப்படு மானெவ் வாறுய்யும். (கரு)

பிறக்கவே யாரையும் பேணிச் செய்பவன்
சிறக்கவே மதனெனத் தேசஞ் சொல்லுமா
லிறக்கவே போர்ந்திடி னும்மை யெச்சமா
யிறக்கவே செய்வது மிவனென் றெப்பரை. (கசா)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வாளுக்கு நக்கீள் கோட்டு வல்விலங் குக்குத் தீபங்
காளக்குங் கைகொ டைக்குக் கனகவில் லுள்ளு மாயுள்
கோளுக்குத் தப்பி னாலுங் கொழுவினு லுலகங் காக்குந்
தோளுக்குத் தப்புகில்லேன் றோன்றன்முன் றோன்றலாலே. ()

திருவள ருழவன் பின்னர்ச் சென்றவென் மனமோ வின்னும்
வரவிலை யுன்னை மேலோர் மனுபவ னெனச்சொல் வார்க்
ளரியவென் வறிய கூட்டை யலைக்கின்று யலைக்கின் றுய்நூ
றெரிவுள்ளார் மொழியு நின்முன் றிறவில் பெறமாட் டாதே. (கஅ)

கலிவிருத்தம்.

தூன்று நாணைத் துயிலை யிரவினைத்
தென்றலைக் குயிலைத் திரை யாழினை
யன்றிலைக் களபத்தினை யாரத்தை
யென்றி வேள்குடை யைவெலுந் தாளரோ. (ககூ)

வளைக முன்றன மாலையு மாரமுங்
களப மோடு கருகிடக் காமத்தீ
மிளிரு மேனி மெழுகி னுருக்கலா
லுளையு முள்ள முழுவன்க ணுற்றதே. (உ०)

வேயும் வீணையும் வென்றது மென்மொழி
சாபல் வென்றது சுந்தர கச்சிகி
போய வுள்ளம் விடாது தொடர்ந்துபோய்ப்
பாய சிந்தொலி பற்றிப் பிடித்ததால். (உக)

இந்த வாறு மயங்கி யிடர்ப்படுங்
கந்த வார்குழற் கன்னியைக் காயிகை
நொந்த தேது னக்கு விருப்பமா
மந்த வாறு முடிப்ப னறையென்றாள்- (உஉ)

மன்மத னூடலைப் படலம்.

முற்றிற்று.

ஆ-திருவிருத்தம் கூசஉ.

பதினெட்டாவது

காயிகை தூதுப் படலம்.

கலிவிருத்தம்.

விடைதரு பாகனும் வெம்பி விழிக்கும்
படைதரு வாளிடு பாடு விரித்தாங்
தொடையணி மேழியன் கண்டொரு தூது
நடைதரு காயிகை செய்தி நவிற்றும். (க)

இந்திரன் மாமக ளென்னுயி ரைத்தன்
சொந்த மெனுவவ டொட்டு மறித்தா
டந்திடு வாபொரு சந்தென நீபோய்ப்
பிந்துவை வேண்மத னெஞ்சு பிளப்பான். (உ)

அன்னையு மையனு மன்னவ ளுக்கென்
மன்னை வழங்கினர் வந்தன ரன்றோ
பின்னை யுரைப்பது பேதமை யன்றோ
சின்னை யலாதில நேர்துணை யம்மா. (ந)

திப்பிய மேழி செறிந்த கயற்கீக
யொப்புறு கால மிடங்களு மோர்வா
யிப்பொழு தேசடி தேகி விரைந்தென்
கைப்படு மாறு கரைந்தனை மீள்வாய். (ச)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

என்னனுந் தூதி சொல்வா ளிபக்கர்க்கு மனித ருக்குண்
மன்னிய மணம்பொவ் வாது மறைதர மணத்தல் செய்யி
லென்னிலைக் கிழிவு நின்சொ லெறிந்திடத் தக்கே னல்லேன்
பின்னினைந் தாவ தன்று பிரித்துணர்ந் துரைத்தி யென்ன. (ரு)

நிருதரின் வந்த மாதை நெறியினின் றுயர்ந்த நீத்தோர்
மரபினி னெம்மு னோர்கண் மணந்ததை மறத்தி போலுந்
தருமுறை தோழ னென்றென் றமையனு னுழவ னுக்குப்
பெருமைபா ராட்டி நின்ற பிதாவுரை கேட்டி லாயோ. (சா)

தூதியல் வழியிற் சொல்லித் தோன்றலி னுள்ளத் தன்பென்
மீதுவைத் திடச்செய் வாயேல் விதியொடு மணப்பன் பின்னை
யாதுநீ யயர்வா யல்லை யாமிடங் கால நோக்கி
லேதுவி னெடுத்துக் காட்டி யென்னுயி ரெனக்க ளிப்பாய். (எ)

பலசத வம்பு யத்தன் பயந்தபின் மாரன் மைந்தன்
சிலைநிக ரம்பு யத்தைச் சேர்த்தவ டுதி யன்றே
வலமுறு படையாய் நீயின் னருடரா விடிலென் கன்னி
நிலவழ லாற்ற கில்லா ணெடுந்தழல் முளிப்பா ளென்பாய். (அ)

[யாண்டைப்
வெறுப்பது மேற்கொண் டாலும் விவாகத்திற் கியான்போ
பிறப்பது பிரீதி யென்னும் பெற்றிமை யேனுந் தேர்ந்தி
மறப்பில னினைப்பு மில்லாண் மனமெலா நீயே யாகி
யிறப்பிலள் பிழைப்பு மில்ல ளென்பதை யியையக் காட்டாய். (கூ)

அனத்தையும் விரும்பா ளாடு மாயத்தை விரும்பா ளூற்ற [லாந்
வினத்தையும் விரும்பாண் மற்றை யெவற்றையும் விரும்பா ளூ
கனத்தையும் வெளுக்கச் செய்த கருங்குழ னின்பால் விட்ட
மனத்தை யெவ்விடத்து வைத்து மறைத்தனை யென்று கேட்ப ;

பொன்மதி புகழ்க்கு பேரன் பூங்கொடி யிணைய கூறி
பென்மதிக் கிரட்டி யாய வேந்திழாய் நினக்கி யான்சொ
னன்மதி யுண்டோ வென்று நனிவிடை கொடுத்து நின்று
ளன்மதி முதல வாய வனைத்தினு மாற்று ளாகி. (கக)

அவ்விடைக் கூனப் பேரா ளயர்வொழி யரிக்கு மெட்டாச்
செவ்விடை யான மர்க்குச் சீரருள் செய்ப நின்று
ளெவ்விடை யூறுற் றாலு மெண்ணியாங் கியற்று கிற்பே
னிவ்விடை பெற்றே னென்று வேகினு ளினிய தூதி. (கஉ)

கலிநிலைத்துறை

மதும லர்க்கனி பால்கொடு சுமங்கலை மறுகிற்
கெதிர வானிடை மின்கொடி யோடுவ தென்னக்
கதுமெ னக்கக னத்தம ராபதி கண்டா
டுதியி ராகத்திற் காயிகை பெணுமொரு தூதி. (கங)

ஈண்டை யோரிடத் திருந்திளைப் பாறியா னேகி
வேண்டி நின்றது புரிவலென் றெண்ணினள் விண்ணோ
ராண்ட கைக்குரித் தாயின தாழியின் வந்த
மாண்ட ருக்குல நந்தனத் துற்றன ளவதிந்தாள். (கச)

மரக தத்திலை மாணிக்க வண்கனி வைரந்
தரள மற்றுள மணியெலாந் தன்கிளை யான
ருவை நோக்கினள் சிரமத்தி னொழிந்தன ளுலவித்
திரித ரும்பொழு துழவனவ் விடைசெல்சிந் தையனை. (கரு)

அல்லி டத்தனு ராகமு மல்லிடத் தரன்சீர்
புல்லு கல்வியும் பொழுதுபோக் கப்புவி வருவான்
வல்லை தூண்டிய விதிவழி மனஞ்செல மகிழ்ந்து
நல்ல நந்தனக் காட்சியைக் காண்பதி னயந்தான். (கசு)

திரபு ரத்தினி லபரவே ளமிசத்திற் சிறந்து
திரஞ்செய் ஞானசம் பந்தனா ரிக்குலத் தேவர்
வரஞ்செ யீராறு திருமுறை யெனுந்திரு வருட்பா
வரன்ற னல்லருள் வழங்கல்போ லார்தருக் கண்டான். (கஎ)

ஏல்லி யெல்லிவை யின்றியந் நிலத்தொளி யெறிப்ப
வல்லி தாங்கிய தருச்சினை வளர்நிழ லில்லே
செல்லு வார்பறி பணிமலர் குழையொடு சிதறி
யில்லு மிழ்ந்திடு நிழலென விடைக்கிடை மிளிரும். (சஅ)

இலையம் மாநிலத் திடையுயர் மேருவென் றிசைக்கு
மலையும் வான்றிரை யவையமு மாறினு மிகுந்த
விலைய வாதலி னளகையி னியக்கர்தம் வேந்தன்
றலையின் மேலுள செல்வமுந் தருச்சினைக் கீடோ. (சகூ)

புருட ரிற்பெரும் போகவான் பூமியைத் தாங்கி
வருட மாயிர நோக்கினும் வரையறைப் படாத
திருட காட்சியென் செப்புவ தியார்தெரி சனையுங்
குருட னுடுறுங் கூத்தினைப் பார்ப்பதற் கொக்கும். (உ௦)

இழுக்க மேற்பதென் றஞ்சிலர் பணிந்திடி லேனை
வழக்கி னிற்பவ ரஞ்சினர் பணிவது மரபே
கொழுத்த தண்சினைப் பொன்மணி யுடைகொள்வார் சொள்ளப்
பழுத்து மேலவர் பான்மைபோற் பணிந்தன தருக்கள். (உக)

கலிவிருத்தம்.

எள்வரை யறிவின்றி யியங்கு மைம்புலக்
கள்வர்க ளேசத்துங் கருணை செய்கிலா
ருள்வை ரங்கொளு மொருபு லத்தரு
கொள்வருக் கொழிவின்று கொடுத்த ளிக்குமால். (உஉ)

அஞ்சுமோ வருளுடை யாளன் றன்பொருள்
கொஞ்சமே யாயினுங் கொடுத்த ளிப்பனாற்
றஞ்சமே யென்றடை தரினத் தாழ்தரு
பஞ்சமே யாயினும் பலர்க்கு மீயுமால். (உங)

கடியன வெறியன கவடு கொண்டன
கொடியன வைரத்த கோண லுள்ளன
வடுவின வென்னினு மாட்சி பெற்றவா
விடுகொடை யாளர்க ணேதந் தோன்றுமோ. (உச)

ஓங்குரி சந்தன முயர்மந் தாரமே
பாங்குள் கற்பகம் பாரி சாதமே
யோங்குசந் தானமென் றுரைக்கும் பைந்தரு
தாங்கிய வளத்தினைச் சாற்று வாரெவர். (உரு)

ஏவரு மிறைஞ்சியேத் தெடுக்குஞ் சால்புடைத்
தேவருந் தருவினாற் சிறப்புற் றாரெனிற்
பூவரு முழுந்தொழில் போற்றுங் காலையிற்
றுவரஞ் சமைப்பது சரியென் றெண்ணினன். (உசு)

உயிர்நிலை யறிவொன்றே யுடைய வற்றினுஞ்
செயிரறு குணங்களைத் தேடிக் கோடலாம்
வியனுறு சாகைகண் மிகக்க விந்துகொண்
டுயர்வினர் பணிவரென் றுண்மை காட்டின. (உஎ)

சிவையுற லாலரி சேரோ ணுதநற்
செவியினாற் சாகையிற் செப்பி டந்தொறு
மவிருறத் தெரியிலை யாத லாலுமூற்
பவமறு பரம்பொருட் பகவ னேயுமால். (உஅ)

அணியிலை தூங்கலா லாக்கங் கோடலா
றணிவில்பச் சொளிநிறந் தான்வி ளங்கலா
லிணையினி கையினுடை யேற்றங் கோடலான்
முணிநிற வண்ணனை மானு மாலரோ. (உகூ)

தேனையும் வாக்கியச் செழித்த சாகைகொண்
டானுநா லாமுகத் தமைத லாலும்பூத்
தானும்வா சம்பெறச் சமைத லாலுமோ
ரேனமா வைன்சுத னேயு மாலரோ. (௩0)

ஆம்பல கண்மல ரமைந்து தோன்றலா
லாம்புறு மகப்பல முன்னுற் றேன்றலாற்
றேம்புரை சுகம்பல சேர்த லாற்சுரார்
தாம்பணி வேந்தெனத் தயங்கு மாலரோ. (௩க)

எதிரில் லியாதலா லிகை சேர்தலாற்
றகைதரு பூவரு தன்மை யாற்பணை
யதனிட மலதலால் யாரும் பேணல ன்
மதிதரு முழுவனை மானு மாலரோ. (௩௨)

கலிநிலைத்துறை.

மேலிக் காட்சியை விளம்புவ தென்னைமு விலைபாஞ்
சூலிக் கேற்றநற் றேழுமுன்றன் சுகசைத் திரத்தோர்
வேலிக் கேனுமா காதவாம் வேறுள வனங்கள்
கோலிப் பார்த்திடிற் கலைபெனக் கூறவுங் கூடா. (௩௩)

இன்னநந் தனவ னத்திடை யிளைப்பொழி தரவே
முன்னம் வந்தகா யிகைக்கிவன் முற்படுங் காலைக்
கன்னல் வேளெனிற் காட்சிய னவன்மற்றத் தேவ
னென்னி லோவிமைக் கின்றனன் மனிதனென் றெணுவாள்.

கண்ட காட்சிமத் திகையினல் வளைப்பரி கடுகுஞ்
சண்ட வேகத்தைக் கற்பெனுங் கறுழது தடுத்த
தொண்டொ ளிர்க்கையா ளுரைத்தது திசைப்பதற் கிடமுங்
கொண்ட காலமு முட்டலாற் கோல்வளை வெடித்த. (௩௫)

கலனு லாமணக் கோலத்திற் காண்கின்றான் கருதுந்
தலைவி கூறிய தாரத்தனே தரைமிசை மாந்தர்
வலமை யாலிங்கு வரக்கட வாரலர் கையி
னலமி ருப்பதென் றையத்தி னீங்கின ளணங்கு. (௩௬)

கலிவிருத்தம்.

புகழுலங் கையினிற் பொருந்தி நிற்பதான்
மகிதலத் தனந்தனு மெனம திக்கிலோ
துகினிறங் குண்டலஞ் சூழுங் காலையின்
விகிர்தமா கின்றன வீட்ச ணத்தினே. (௩௭)

சொல்லினு மறிகுவ னென்று தோகைபோய்
மெல்லெனக் குமுதவாய் விண்ட தேனெனக்
கல்வரி படையினன் கன்னி சூட்டிய
நல்லதா ரிருக்கதந் தனத்தி லென்னென்றாள். (௩௮)

என்னது மென்மனைக் கினிய னாகிய
வின்னிசை மொழியினு யாரை நீயெனச்
சொன்னிலை யறிந்தவ னெனிந்து ணர்ந்தபி
னன்னயந் தருவதை நவில்கின் றுள்ளோர். (௩௯)

கலிவிருத்தம்.

இங்கண் மாமுக விரதிக்குத் தேவதா ரில்ப்போற்
பொங்குமன்புடைப் பொற்கொடி போன்மெனப் போந்த
மங்கை காயிகை வரப்பிர வாமையின் வந்த
வங்க சற்குமாண் டானுதன் கிடைத்தனை யன்றே. (௪௰)

கலிநிலைத்துறை.

வேந்தநா யகனுக்கு மிளிரும் பாயலா
மோதநா யகனுக்கு முணர வொண்கிலாப்
பாதநா யகனுக்குப் பாவை பாற்செலுந்
தூதநா யகனுக்குத் தோழ னாயினான். (௪௧)

இருநிதி யன்றியு மேழுங் கேட்டதைத்
தாவெதிர் பின்றிடத் தழைத்த செல்வத்தான்
மருளிலா விச்சிர வாவ ரோதயன்
புருடவா கன்றுடன் புட்ப கன்முளான். (௪௨)

வியத்திடு மளகையின் வேந்தன் றன்மகன்
மைந்திர னெனும் வாக்கை நாட்டினு
னுயிர்த்துணைச் சித்திர ரேகை பொப்பிலாள்
வயிற்றிடைத் தாருண்யா வதிவந் தாளரோ. (௪௩)

ஆர்ந்திடு சைவல மஞ்சணி சோலை
கூர்ந்திடு குன்முகில் கூடின போலு
நேர்ந்து குழைந்து நெறிந்து மணந்து
வார்ந்து வகிர்ந்த மலர்க்குழ லம்மா. [௪௪]

உயர்ந்து வளைந்து வொண்பிறை நெற்றி
வயந்தரு வாள்விழி வாளுறை பூரு
வியைந்திடு மெண்மலர் நாசி யிடிக்கு
மயந்திகழ் கல்லிணை யானக போலம். [௪௫]

கரும்பு பழங்கிளி கண்டமு தஞ்சொல்
விரும்பு நகைக்கிணை வெள்ளை நிலாவே
யரும்பிடு முல்லை முருந்துப லையா
திருந்திய வாயொரு செங்குமு தப்பூ. (௪௬)

இந்திர கோப மிதழ்க்கிணை வட்டச்
சந்திர னேமுக மேனி னைதண் முத்தம்
வந்திடு மான்புரு வாயிரு காதே
யுந்திய மென்கமு கொத்தது கண்டாய். (௪௭)

நகங்கிளி மூக்கிணை நல்விரல் கிட்டி
யகங்கை சரோருகம் யாழணி முன்கை
பகர்ந்திடு மின்புய பஞ்சணை தோள்கண்
மிகுந்து திரண்டன மென்முலை வெற்பே. (௪௮)

மால்கிடை யாலிலை மைய நரம்பு
போல்வயி றாடு பொருந்து முரோமங்
கோல வலம்புரி மொட்டிணை கொப்பூ
ழால விளங்கனி ரேவயி றப்மா. (௪௯)

பிடிகொடி மின்றுடி பேணும ருங்குல்
கடிதட மோவது காம னிருப்பு
வடி துடை வேண்மனை வாயின் முகத்தாண்
கிடுகி னிருங்குமிழ் கேழ்செய் முழந்தாள். (௫௦)

தாங்கிய தூணி சமைந்த கணைக்கா
லோங்கு தராசினை பொண்கர டையா
மாங்கனி சங்கு வதிந்த குதிக்கா
லாங்க மடத்தி னடிப்புற மாமால். (௫௧)

பஞ்சண் முளைக்கிணை மால்விரல் வானின்
விஞ்சிய தாரகை மின்னக மத்தின்
பஞ்சிய னுள்ளடி பங்கய மையா
கஞ்சம லர்த்திரு கன்னியர் திடம். (௫௨)

கன்னியர் திலகிதன் கருத்தி லேயுறை
யின்னலா தொருவரை நினைத்த போதினும்
வன்னனி கூபரன் மணிக்கி ரீவனென்
றுன்னுவான் கற்பினுக் கொருத்தி யுத்தமி. (௫௩)

நாரிபா கத்தையு நள்ளி மார்பையுங்
கீரமா னவையுங் கிடைத்து வாழ்தலி
னீருட லொற்றுமை யுற்று மின்றென
வோருட லாய்க்கரைந் துருக வுன்னுவாள். (௫௪)

இந்திரி யிடப்புற மிவள்வ லப்புறம்
வந்துநீ பார்த்தபின் வைக்க வெண்ணுவாய்
சுந்தர பாதர்கள் சுகிக்க வேண்டிடிற்
பிந்துத லிலையென வறமும் பேசுமால். (௫௫)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மெல்லியன் மனத்தில் வேட்டோய் மீட்டுமிந் திரியை வேட்டும்
வல்லுயி ரிருந்த வாற்றான் மங்கைதன் பொறையுங் கற்புஞ்
சொல்லுதன் மிகையே யன்றோ சுருக்கத்தி னுணர்வோய்க் கைய
வொல்லையிற் சுகிப்பாய் நீட்டி னுதாசனன் சுகிப்பா னிண்ணம். (௫௬)

வியத்தகு செல்வக் கன்னி யின்னருள் பொன்னந் தேமற்
குயத்திடைக் குவிந்து யர்ந்து கொற்றவிற் றிருககு நின்பொற்
புயத்தினைச் சேர்த்த காலைப் புகல்வதெ னுவிற் பெற்ற
பயத்திடை வழுவி வீழ்ந்த பழத்தினை நிகர்க்கு மைய. (௫௭)

விதுவொளிர் வதன மாக விரிந்தசெங் குமுதம் வார்த்த
மதுவினைச் செவிவாய் மாந்தி மயங்கினன் வணங்கா வீரன்
கதுமெனத் தூதி பாதங் கைப்பற்றிக் கிடைக்கு மோசொ
லிதுவரை தெரிந்தி லேனங் கென்னுயி ரிருந்த வண்ணம். (௫௮)

வரும்விதி பின்னின் றுந்த மதனதற் கருகி லெய்ப
வுருவெளித் தோற்றஞ் சூழ வுரைவலித் தூதி யாலே
தெரிவருங் கால முட்டச் சிதைந்திடு முளக்கோட் டைக்கு
ளருமதி யிராச னைசக் கயிற்றினா லார்க்கப் பட்டான். (௫௯)

பள்ளத்தி லோடு நீர்போற் பான்முனைப் படிசென் றேடு
முள்ளுறு தன்மைத் திருப்ப லாற்று ணங்கினன் வருந்தி நின்றான்
கள்ளத்து மாரன் போரிற் காத்தெனைக் கடைக்க ணிப்ப
தெள்ளொளத்த முக்கி நின்று வியற்றிடுங் கடமை யென்றான். ()

அன்னவ ளுரைப்பாள் யான்போ யரனுடைத் தோழன் றேவிக்
கிந்நிலை யுரைப்பல் கேட்ட வியக்கர்கோன் மணமு டங்கல்
பொன்னக ராதி யுள்ள புரமெலாம் விடுப்பா னுண்டு
துன்னுவா ருடனீ தோன்றிற் சூட்டுவா னுனக்கு மாலை. (சாக)

என்றவ ளனைக போனு ளிவனுமிந் திரியாற் சென்றான்
சென்றவள் வரவு நோக்கித் திசைவிழித் திருந்த கோதை
யின்றென தெண்ண யேயோ வென்னுயி ரேயோ கேட்க
வொன்றமீ தமுடியு மென்னு முள்ளத்தாண் முன்வந் துற்றாள். ()

இன்னவா றென்று போன வியல்பெலா முணர்த்தி யானின்
னன்னபா லுரைக்கி னுந்தைக் கறைகுவா ளவனு மாங்கே
நன்னய வதுவை செய்ய நாடுவான் றுமா தென்று
பொன்னடி வணங்கி நின்றாள் புனைகுழற் கற்றைப் பாங்கி. (சாஞ)

காயிகை தூதுப் படலம்.
முற்றிற்று.
ஆ - திருவிருத்தம் சஂ௦௦ரு.

பத்தொன்பதாவது

தாருண்யாவதி சுயம்வரப் படலம்.

கலிநிலைத்துறை.

காது முற்றிய கடைவிழிக் காயிகை யணங்கு
தூது முற்றிய தன்மையைச் சொல்லின மியாற்
போது முற்றிய புட்பக புரோசன யான
மேது முற்றிய மாளுடை யாதுவை யிசைப்பாம். (௧)

ஆங்கு காயிகை கன்னிகைக் குறைத்தவவ் வாறே
வீங்கு மென்முலைச் சித்திர ரேகைபால் விரைந்து
வாங்கு நுண்ணிடை மையலும் மதன்செயும் பகையு
மோங்கு கங்கையின் மைந்தன்ற னுள்ளமு முணர்ந்த. (௨)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அங்கிலை யுணர்ந்த வந்நா ளண்டவாற் குரைக்கத் திக்காண்
மன்னவ ராதி யோர்க்கு மன்றலின் முடங்கல் போக்கி
நன்னக ரணியச் செய்தா னன்னாள நாளை யென்று
இன்னரர் பிரானி ருந்தான் கிட்டாத தவனுக் கியாது. (௩)

இருந்தவன் றன்னைத் தோழ னென்றவெம் பெருமான்
யான்செய், பெருந்தவப் பாவை மன்றல் பிறங்கிட வந்தா னன்றி,
யருந்தவ மென்னும் யான்செய் யடிமையு மென்ன மெல்லா, மிரு
ந்தவ மாகு மென்று வெள்ளினை னைத்து நின்றான். (௪)

அவனசை யாம லங்கே யனுவசை யாதென் றோதுந்
தவமுது மொழியா ளடிற் றனையையின் மணமின் செய்கை
யவலமே றுடுவேனுக் காட்டு கின்றாய்நீ பைய
சிவபரம் பொருளே யிங்குச் சேருக தேவ தேவே. (௫)

பருப்பிர பஞ்ச மாவிற் பாங்கருட் கலணை பூட்டி
யுரப்பெருங் கலின மாட்டி யொழுக்கமா திகத்தி லோட்டித்
திருப்புமா வலனை நாயேன் செயவலை வேறொன் றுண்டோ
வருட்பனுந் தேவ தேவே யடியனை யாள வாவே. (௬)

கரமுண்டின் னடியார்க் கிக்கக் காலுண்டு வலஞ்சூழ் தற்குச்
சிரமுண்டு வணங்கித் தாழச் செவியுண்டுன் பெருமை கேட்க
வரமுண்டு நினைநினைக்க வுண்டோ வுன்னை யேத்த
வாயுண்டு நீகொடுக்க வாங்குதற் கடியே னுண்டால். (௭)

சங்கரா வருக ஞான தபபரா வருக நாக
கங்கணா வருக வெங்கள் கண்ணொடு கருத்தாய் நின்ற
புங்கவா வருக வன்முப் புராந்தகா வருக வேணிக்
கங்கையா வருக வித்தக் கடிமணம் பெருமை யாக. (௮)

ஆணொடு பெண்ணு மாகி யருவுரு வாகி யான்மாப்
பூணுமுப் பாசந் தேற்ற பொசிப்பினை யருத்திப் பின்னைக்
காணுமா றிபற்றி மிக்க கருணைய னாகி மூன்று
மேணுவா சுடர்க்கண் ணாகி மிக்கெழுந் தருள்க வெந்தாய். (க௦)

தாக்குண்டு பிரபஞ் சத்திற் சலித்திடா வண்ண முன்னாட்
பூக்கொண்டு புரிந்த வைதப் புண்ணியம் பலித்த காலை
நாக்கொண்டு நாயி னேனை நாயகர் தோழ னென்ற
வாக்குண்டென் றெண்டு மூண்டு மனமுண்டு வருதற் குண்டால்.

ஐயனை யென்னைப் பெற்ற வன்னையே போற்றி நான்காங்
கையனை யடியேன் வைப்பாங் கருதரும் பொருளே செந்தீ
மெய்யனே யடியார்க் காக வெளிவரு முதலே போற்றி
துய்யநீ யிலாமற் செய்யுஞ் சுபமிக்குண் டாமோ வென்று. (கக)

உச்சிமேற் கரங்கள் கூப்ப வுடல்புள கிப்ப வுள்ளங்
கிச்சிடு மெழுகி னெக்குக் கிளர்பர வசத்த னாகிப்
பிச்சரிற் பிதற்று கின்ற பேரன்பின் றுதியை யந்நாட்
கைச்சிலை மலையான் கேட்டான் கன்றினுக் கிரங்கு மாபோல்.

இன்றுநா மேகி னம்பா லெழுந்திடு மன்பி னாலே
துன்றுவார் வரவைப் பாரான் றுன்றுவார் யாருந் துன்றப்
பின்னுநாம் போவே மென்றெம் பிரானிருந் தருள விங்கு
மன்றல்கா ணியவந் தார்கள் வரவினைச் சொல்ல லுற்றும். (கங)

எண்ணில்யா கஞ்செய் வோர்க்கு மின்றுணை யாவா ரேனும்
பெண்ணுடை வழியா ரென்றும் பெட்புமிக் கூர்த லாலே
யுண்ணினைந் தஞ்சான் மேக வூர்தியு மீட்பா ரென்னா
விண்ணவர் கோமா னல்வாய் வெள்ளிப மேல்வந் தானால். (கச)

போகவ்வி றியதன் னாட்டிற் புகுந்துதன் மகளைக் கொண்ட
யோகமா னதுபிலைக்க வொப்பறும் பொருளாள் சேர்வா
னாகபா தலத்து நாப்ப ணனிமிக வாழ்வா னென்னா
வேகமா மகன்பின் செல்ல விந்திரா ணியுமவந் தாளால். (கரு)

தான்சுகித் திடப்போ கத்தைச் சட்டமாய் நினைத்து நான்கொ
ளூன்சுவை கொலையென் றோது முத்தம சைவ வேதத்
தேன்சுவை நாவன் பாலிற் சேர்வது தாழ்வோ வென்று
வான்சுசிக் கிறைசு வாகா மயிலுடன் மறிமேற் போந்தான்.

தந்தவ டன்னை நோக்கிற் சகோதர னென்னக் காத
லுந்திட வியக்கர் வேந்த னெண்ணகர் பிருதி வந்தான்
வந்திடும் பருவ நோக்கி மாமியின் றனுப்ப னேனுந்
தந்திடும் பருவ நோக்கான் சகாயனென் றறற்கோன் சார்ந்தான்.

வாலியைச் செற்றான் கொண்ட வதுவைகாண் கிலன்சு மந்தேன்
மேலுமா னிடனுக் கொள்ளும் விதியுளி காணப் பெற்றே
னலமர் கடவு ளீயு மருளுண்டே லுண்டென் றெண்ணிக்
காலிலி நாணன் வந்தான் கண்ணிலி நகர்க்கம் மான்மேல். (கஅ)

கும்பம்வந் தானுங் கானிற் குரங்கமீன் றானு முன்னைச்
சம்புகந் தானும் பாலைத் தருபசுத் தருமே லோனு
மம்பின்மண் டேகச் சேயும் வந்திகைச் சேயுங் கத்தும்
வம்பியல் வலியான் சேயும் வலைச்சியின் றானும்வந்தான். (ககூ)

தன்பெய ராலுப நிடதந் தந்தவன்
வன்பெரு மறையையே வழிதி ருத்தினோ
னன்பெரும் புரோகித னயந்த சிந்தையா
னென்பெரு முனிவனே ரிரதத் தேகினான். (உ0)

அரும்பொனி னவிர்மணி யணிதி ருந்தினன்
வரும்பனி வரைத்தவில் லணைய வத்திரன்
பெருங்கொடை கொடுத்தவன் பிரிய மாயரு
கிருந்தவிந் திரியினோ டிரதத் தேறினான். (உக)

ஆவயி னுலகெலா மளகை யிற்குடி
போவது போற்குழீஇப் போகுங் காலையிற்
றேவர்கோ னூர்முதற் செல்வ னூர்வரைப்
பாவிய கொடிகுடை பந்த ரானவே. (உஉ)

ஐந்தொலி யானையி னொலிபச் சூன்றுமே
ருந்தொலி கலினமா ஞரத்து நந்தொலி
தந்தம தார்தியிற் றழைத்த வேமொலி
சிந்தொலி யடக்கவான் செவிடு பட்டதே. (உங)

துவரித மியர்நடத் தொழிலி லேலொடு
கவரிக ளசைப்பவர் கணக்கி லாதவர்
செவரிவாள் விழியவர் தேவர் கூட்டத்திற்
பவரியா ருவதைப் பரவ வீசுவார். (உச)

விழுமண் கிழ்விழ விடாது துன்னிய
குழுமிய கொழுந்துபோய்க் குபேர ஞர்புகத்
தொழின்மிகு கோபுரத் துவச மேந்துவா
யழகனு மழகியு மளகை காணலும். (உரு)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மற்றெறழுக் கடலும் பொங்கி வடதிசை பெழுந்த தென்னப்
பெற்றிடு மகிழ்ச்சி பொங்கிப் பிரிவற வெழுவா ரோடு
முற்றுறு மாட கூட முகடுகள் விளங்கித் தோன்ற
வற்றபங் கோதி யாளுக் களகையி னெழிலைக் காட்டும். (உசு)

பணிந்தவ ருபர்ந்தார் தற்பம் பற்றியின் றிறந்து நிற்பார்
தணிந்தவ ராவ ரென்னுந் தன்மையைக் காட்டு மாபோற்
றுணிந்தன போன்று தாழ்ந்துஞ் சொல்லருங் குமர கண்டந்
திணிந்தென நிமிர்ந்து மாடுஞ் சேண்கொடி பலவும்பாராய். (உஎ)

விற்கிணை யம்பைப் போல் விளங்கிய கயற்க ணல்லாய்
தற்கிணை யிலாத செல்வந் தழைத்தவிந் நகர நாப்ப
ணிற்கிற வீதய் வெற்பி னிமிர்ந்தகோ புரத்தினும்பர்ப்
பொற்குடஞ் சுடர்க ளாகப் பொலிவன பலவும் பாராய். (உஅ)

அந்தவண் சிபிச் சார்பி னளகைச்சைத் திரர தந்தான்
றந்தவண் கழிய டுத்துத் தம்பதி காம மைத்த
பந்திய குடம்பைப் பார்ப்பும் பசியற வூட்டுங் காலைக்
கந்தர மதனிற் றேன்றுங் களகள வொலிப்பப் பாராய். (உகூ)

மாபுரத் தெரியை வைத்தோன் மலரடி பற்றி னார்போற்
பூபுர யந்தெ டுத்த புனிற்றிளங் குட்டி பற்றக்
காபுரப் புடைவான் முட்டிக் கவிதருஞ் சினைதள் ளாடக்
கோபுரத் தும்பர் நின்று குரங்குகள் குதிப்ப பாராய். (௩௰)

நாரணன் காணாப் பாத நாயக னிருக்க வில்லாக்
காரணம் விரிதந் தாமென் றகணக்கத்தம் விரித்த காலை
யாரணன் காவி லந்நா ளருந்தலை வெளிட் டார்போற்
றோணநந் தலைய நின்ற துசத்தம்பம் பலவும் பாராய். (௩௧)

உண்பலி மழுந்தூ ஙைகப்ப வலர்மர முயிர்பெற் றோங்கப்
பண்படு கிளவிச் செவ்வாய்ப் பைந்தொடி யளகைச் செல்வி
கண்பல கணியிற் பார்த்துக் கடிமுர சொலியிற் கூவி
விண்படு கொடிக்கை நீட்டி விளிக்கின்ற தன்மை பாராய். (௩௨)

வம்புயர் சைந்தி ரந்தேர் வளர்தருச் சினைக்குள் ளாக
வெம்புயக் கிசைந்த கொங்கை யிடையிடை தோன்ற லாலே
யம்புயத் திருந்த மாவா ழுளைமா நகர்வெண் மாடம்
பைம்புய லிடையிற் றோன்றும் பசுங்கதிர் நிகர்ப்ப பாராய். (௩௩)

பொங்குகண் ணேறு றாமற் புனையணி சுமக்கப் பெற்றோய்
தங்கர வாலொன் ஞர்க டனதனைச் சேரு றாமல்
வெங்கய மிகுதி யென்கோ விரிவென்கோ வன்மீ னென்கோ
வங்குவன் ஞாயிற் காக்கு மகரூயி னமைவைப் பாராய். (௩௪)

உள்ளிய வெல்லா மெய்த வுயிர்விரி வழியுண் டாக்கி
வள்ளிய செலவி னன்றி மற்றடைத் திடநிற் பார்போற்
றெள்ளிய மணிகு யிற்றிச் செம்பொனின் மயனாற் செய்த
வெள்ளிவெண் கபாட வாயில் விளங்குகோ புரத்தைப் பாராய். (௩௫)

ஈங்கிவன் மயிலந் நாளோ டிந்திரா தியர்தம் மோடு
மோங்கிய நகர வாயி லுற்றன னென்னக் கேட்டான்
றேங்கிய நிசாளம் பேரி திமிலைந் ளொலிப்பச் செல்வம்
வீங்கிய தனதன் மிக்க விசித்திரத் துடனெ திர்ந்தான். (௩௬)

முடியினல் வாயான் மார்பான் முன்பொனோக் கின்கு நிப்பாற்
படிவினற் றழுவ லான்ற பகர்ச்சியர்ன் முகங்க ளிப்பா
லடைவினு லுப்சா ரங்க ளவரவர்க் கினிதி னாற்றிக்
கடிநகர் கொடுபோங் காலைக் காட்சியை முன்போற் காட்டும். (௩எ)

வைத்தபைங் கமுகு கண்டம் வாங்கிய கொடிம ருங்குல்
பைத்தவண் கதலி யூருப் பந்தர்வாய் முத்த மூரல்
புத்தலர் மாலை வேய்ந்த பூரணக் கும்பக் கொங்கை
யித்தெரு மங்கை மேனி யெழுதிய கோலம் பாராய். (௩அ)

மின்முகத் தெதிர்த்து நீங்கா விசயவல் வாகை வேய்ந்த
வன்முகக் கூந்த லாய்நின் னலர்முக வழகுத் தேனைப்
பன்முக நெருங்க நின்ற பையர வல்கு னல்லார்
பொன்முக வண்டு வீழ்ந்து புதிதுண் ணும் பொலிவைப் பாராய். (௩௯)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வானத்து மதியை யெண்ணின் மாடத்து மதியுங் கூடத்
தானத்துக் குழைகள் கொண்ட தகைமையிற் சங்கை தீர்ந்த
தேனத்தும் புருவர் வார்க்கத் திருவனு ரதனுக் கேற்பக்
கானத்து நடனந் தூக்குங் கண்ணடி யுள்ளும் பாராய். (சo)

பளிங்கினுன் மணியாற் பொன்னுற் பணியெலா முற்றச் செய்த
துளங்கொளி மாடச் சோதிச் சுவரெலாந் தோற்று மின்னே
யுளங்களிந் தமரர் வேந்த னுதவிய மகளென் றோர்ந்தே
யளந்திடற் கரிய வாங்காங் காஞ்சன மெடுப்பார்ப் பாராய். (சக)

ஆளரு கன்னம் போலு மன்னத்தி னரசைப் போலும்
வாளமர் கண்ணி னுரு மைந்தரும் பார்க்கா நின்றார்
சாளக டங்க டார்க்குத் தாயமா னுலு மாதே
யாளுடைச் செல்வந் தன்னுல் யாக்கையே ரெய்துங் கண்டாய்.

விழிகண்டா டன்கை கண்டாண் மெய்கண்டா லணிபொன் கண்டாள்
குழல்கண்டா ளிமையை மூடிக் கொண்டுகண் டாணின் மூர
லெழில்கண்டா ளாரங் கண்டா ளிடைகண்டாள் பிடிகண் டாளா
னுழைகண்டார் வியக்குங் கண்ணு யுவமித்தி யுவமே யுத்தில். ()

காண்டனு மென்னே யோடிக் கனமணி யணிபு னைந்து
மீண்டனள் கண்டா ணின்னே விரைந்தன ளோடி னுளா
லாண்டவ ளனுமா னத்தா னனுமிதித் தறியுந் தன்மை
யாண்டனு மானந் தன்னு லேரிழாய் தெரிய நோக்காய். (சச)

வாணின்ற வள்ளை பீறு மலர்முகக் கமலக் கோதாய்
தோணின்ற மகவுங் கையிற் றுலக்குண்ட மயிலுங் கூட
வாணின்ற கும்பற் குள்ளா யவரிடைக் கொடியிற் பூத்த
பாணின்ற சுரும்ப ராடும் பங்கயப் புதுமை பாராய். (சரு)

கருமண லோதி யாட்குக் காட்சியைக் காட்டிப் பன்னீர்ப்
பெருமண வலைகள் வீசும் பெருந்தெருக் கடல்க டந்து
குருமணி யிழைத்துச் சோதி குலவிய மயனுற் செய்த
திருமண மண்ட பத்துட் சேர்ந்தனன் றேவ ரோடும். (சசு)

மைந்தநன் முத்து ராய மகிபதி முன்னூ ராள்வோ
னைந்தெனு மிலக்க ணத்தோ டமைபல கலையுங் கற்றோன்
சந்ததி தம்பாற் செல்லுந் தமிழ்க்கவி வாணர் போல
வந்தவந் தவர்கு பேரன் வரிசைகள் பலவும் பெற்றா. (சஎ)

நண்ணினூர் முகத்தைப் பார்த்தா னவிலுவான் றனதன் கஞ்சக்
கண்ணினன் முதலா யுள்ளோர் கண்ணினல் வாக்கான் மற்றை
யெண்ணினு லரியா னென்னை யின்னுயிர்த் தோழ னென்று
தெண்ணிலா வேணி பாதந் தெரிசித்தே மணம்பின் காண்பேன்.

பரந்தமுப் பாசந் துய்க்கும் பருவத்துஞ் சகுட கீர்போற்
றிருந்தியிச் செல்வ மெல்லாந் தினைத்துணைத் திருத்தி யின்றி
யிரந்தடி யாரி னின்னூர்க் கெளிவருந் தாத்த னனை
வரன்றரு வரனி லாதென் மகட்குமோர் வரனுண் டாமோ (சகூ)

அன்னையு மன்னு னெங்க ளத்தனு மன்னுன் ஞானஞ்
சொன்னநற் குருவு மன்னுன் றுணைவருந் தெய்வ மன்னு
னென்னுள வவனி லாம லீங்கொரு சுபம்யா தென்று
கின்னரர் பிரானி ருந்தான் கேட்டனர் பத்தன் பற்றை. (ருo)

இந்திர னஞ்சு கின்று னென்கண்போ லின்னு நான்கும்
வந்தன பலவென் றூனும் வரும்பயன் முடிவி லில்லை
சந்திர சேக ரன்றன் றுளிணைக் கிவனைப் போலும்
புந்திகம் பாலில் லென்னும் புன்மைகண் டன்பிற் சொல்வான்.

எண்ணிலா விழியி ருந்து மெனக்கவ னுறுதி போலத்
தண்ணிலா வேணிக் கன்பு சமைந்தில தாயுங் காலை
விண்ணிலார் கலிசூழ் மண்ணில் விரவுபா தலத்தி லெல்லாங்
கண்ணிலா ரறிவி லாரே கண்ணுளா ரறிவி னூரே. (ருஉ)

என்னைக்காப் பதுவென் றெண்ணி யேழிரண் டுலகி னுள்ளார்
பொன்னைக்காப் பதுவு மன்று பூட்சிகாப் பதுவு மன்று
பின்னைக்காப் பதுமண் ணன்று பெண்டிர்க்காப் பதுவு மன்று
தன்னைக்காப் பதுவே பத்தி தனதனிற் காண்மின் காண்மின். ()

நம்முடைப் பதங்க ளெல்லா நாயகன் பதத்தா ளுக்கோ
ரிம்மியு மாவ தல்ல யாம்பல பவங்க டோறும்
புன்மையி னீங்கிச் செய்த புண்ணியம் பலித்தா லன்றி
யெம்மனோர்க் கறிப டானென் றிருந்தன னேதா மென்று (ருச)

பரவைபாற் றாது செல்வோன் பார்மகன் மணத்தைக் காண்பான்
மரகத னூர்க்குச் சென்று வாய்மையை நாட்ட வெண்ணிற்
சுருதியங் கடல்சூழ் வைப்பிற் சுவர்க்கநாட் டிடத்திற் கீழாய்
விரவுபா தலத்த கத்தின் மெய்யன்றி விழுமி துண்டோ. (ருரு)

மூவர்தஞ் சிரங்கை யேற மூரிமாக் கொடிவா னேற
வாவயிற் கங்கா தேவிக் கானந்த மவள்போ லேறக்
கூவரு மேழிச் செல்வர் குலத்திற்புண் ணியங்க ளேறத்
தேவர்க டேவன் வெள்ளைச் சேவெரி நேறுங் காலை. (ருசா)

முருடோடு திமிலை பேரி முதலிய முயங்கி னுலுங்
கரியுரிக் கடவுள் பக்கங் கல்லென வார்த்த வாற்றாற்
றெரிவரக் கூறறி னுலுஞ் செம்பொரு ளதினு முண்டென்
றரிதினிற் கொள்ளி னுண்டென் றறிஞர்தங் கொள்கை காட்டும்.

ஆதாரம் வந்த காலை யாதேயம் வந்த தென்று
காதார வூட்ட வேண்டிக் கழறுதன் மிகைய தன்றோ
வேதாமாற் கரியான் போத விரிசரா சரங்க டம்மிற்
போதாத தில்லை வெள்ளிப் பொருப்பும்வே ருய்ப்போந் தன்றே.

மாவலி தொலைத்த சிங்கம் வண்ணக்கண் மஞ்ஞை தாங்கப்
பூவலி தொலைக்கும் வன்றாட் போரெலி யானை தாங்க
வாவலி னன்னை தந்தைக் கருகவ ரெழுந்த காட்சி
வாவலி னின்றா னேனு மலரயன் விளம்பற் பாற்றோ. (ருசு)

அரவணை யான்கண் போவ வயன்பலர் மலர்க போவ
வுருகுமா னந்தக் கண்ணீ ருடன்பலர் செபங்க போவப்
பரமனைப் பாடு வார்வாய்ப் பங்கய மதுவுந் தூவச்
சுரபதி தருப்பூத் தூவத் தூவென முழங்குஞ் சின்னம். (சா0)

மூவரு மடிமை தாந்தா மூவரின் கீழு யர்ந்த
தேவரு மடிமை தாந்தாந் திகழ்சன காதி யான
யாவரு மடிமை தாந்தா மவனியு மற்று முள்ள
வேவரு மடிமை தாந்தா மென்பன மத்தளங்கள். (௬௧)

கூட்டுவா னுடலைக் கூட்டிக் கொண்டமுப் பாச வாயி
லூட்டுவா னுறக்கி யெற்றி யூட்டிய தெவிட்டுங் காலைக்
காட்டுவான் றன்னை யந்தக் காலத்தின் வரை யிவ்வாறு
யாட்டுவா னவனே யென்ன வரம்பைய ராடல் கொள்ள. (௬௨)

வருகின்றா னெங்கள் கோமான் மங்கள மலிந்த காட்சி
தருகின்றா னெங்க ளீடவன் றண்ணருட் கடைக்க ணம்பாற்
புரிகின்றா னமவென் றோதும் புருவநா ரதர்தேங் கான
மருவுந்தே னெழாலிற் கூட மகரயாழ் தடவிப் பாட. (௬௩)

கலிநிலைத்துறை.

முடியைக் காண்கிலான் முடிகண்டான் முழுமதி வட்டக்
குடையைத் தாங்கினா னொருகைவாய் மறைதரக் குனிவா
னடியைக் காண்கிலா னடிகண்டா னனந்தங் கொண்டான்
முடியிற் றாங்கினான் பூமினா ளிடப்பத முட்ட. (௬௪)

ஏத்தெ டுத்தமா மறையவ ரேழ்கடல் வானத்
தீர்த்த பூரண கும்பம்பல் லாண்டொடு திகழ
மூர்த்தி மூவர்க்கு முழுமுத லவனுடை மொய்ம்பி
னாத்தி மாலையோ டசைந்தன வரம்பையர் கவரி. (௬௫)

குறையி ரந்திடு கமலங்கள் குழைவினோ டிறைஞ்சுந்
துறையி னிற்கின்ற கமலங்க டேயவன் கடாக்க
முறுவ தால்விரிந் துமையவள் கடாக்கத்தான் முகிழ்த்துஞ்
செறியுந் தேவர்தங் குழாத்தடா கத்திடைச் செறிந்த. (௬௬)

அறுசீர்க் கழிநெடி லடியாசிரிய விருத்தம்.

வடநிழல் வேதங் கேட்ட வல்லவர் நால்வ ருற்றார்
சடனுகர் முனிவ னுற்றான் சற்பங்கள் கழிந்த காலை
யுடலுறு கூனு ரோம மொவ்வொன்று கழிவோ ருற்று
ரிடமிலை யெட்டு மென்ன வெண்ணற்றார் விண்ணுற் றார்கள்.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

உருத்திரர்கள் பதினொருவர் வசுக்க ளெண்மரொன்பதுட னொன்பதான, பரப்புடைய கணங்கண் மற்றை முனிவரர்கண் மருத்தெழுவர் பரியின் வந்த, தரத்திருவர் முதலானோர் தனதனு டைத் தவம்வியந்து சருவ தேவன், றிருப்பதத்தின் மனம்வைத் தார் சிரத்தின்மிசைக் கரம்வைத்தார் செல்லு வார்கள். (சுஅ)

எம்பெருமா னணையினுற் சிவகணங்கண் முன்னோடி யியம் பக் கேட்டான், றம்பெருமான் றனையலைத்த தவறுவிடத் தரை யுண்டே சார்வே னென்று, பைம்பொன்விழிப் பத்தனிவன் பந் துருண்ட தெனவிரையும் பான்மை கண்டார், நம்பியிவன் காற் புழுதி நம்முடலிற் படிலறிவு நண்ணு மென்று. (சுசு)

இந்திரனு மருமகனும் யாவர்களு மிவ்வாறே யிசைந்து சென்று, சந்திரசே கரனடியிற் சங்கரசம் போசிவசாம் பவவெ ன் றேத்தி, வந்தபெரு மானடியில் வணங்கியம்மை தனைப்பாடி வணங்கி யாருந், தந்தமது வசநீங்கிப் பரவசத்தி லாடினார் தவ முன் செய்தார். (எ0)

அருவாகி யறியானு யுருவாகி யெளியானு யடியார் தங்கள், பெருமானுய் வேளாளன் பிறந்தபெறும் பேறடைய பிறங்கு காட்சி, தருவானுய்த் தோழனென்ற தன்மையையார்க் குந்தெரி க்கத் தனத னூர்க்கு, வருவானு யெழுந்தருளு மகதேவ னடி கண்டார் வருந்தா ரம்மா. (எக)

கண்ணிட்ட விருவருக்கும் வலமுஞ்சக் கரந்தனையுங் களி ப்பி னீந்த, பெண்ணிட்ட சரிபாகன் றோழனுக்காய் வந்ததினுற் பிறருங் கண்டா, ரெண்ணிட்ட கொளிஞ்சிநகர் வேதியன்சுப் பிரமணிய னெந்தாய்க் காகத், தண்ணிட்ட மழையிட்டுச் சகல ருந்தா மகிழ்ந்திட்ட தன்மைத் தாமால். (எஉ)

தனதனுக்கு வாய்மலர்ந்தா னுழவனுக்குக் கண்மலர்ந்தான் றுயோடர்ந்த, வனசதவத் தேவருக்குக் கடாட்சவிட் சணியந்தந் தமல ஞான, முனிவரர்க்குச் சிவஞான முதவுபரஞ் சோதிவந் தோர் முற்றுஞ் சூழ, வணையுமணி மண்டபத்தில் வந்திங்கு மண முடிக்க வாக்குத் தந்தான். (எங)

மணமகட்கு நானமுடை மணியணியான் மணக்கோல மரு வச் செய்து, துணர்மருவு பூந்தொடலை கையிற்கொடுத்து காயி கையாந் தூய தோழி, கணமருவு பெருஞ்சபையிற் கௌபேரிக் காங்கிருந்த கணக்கி லாரு, வீணையிலிவன் பெயரிதென வெடு த்தெடுத்தோவ் வொருவரையு மியம்பு வாளால் (எச)

கலிவிருத்தம்

முருந்தெனச் செறிந்தவெண் முத்த மூரலா
யருங்கன கத்தரி யாச னத்தினிங்
கிருந்தவன் பதவியி லிணையி லாதவன்
பொருந்திய போகத்திற் பொருவி றந்தவன். (எரு)

நச்சிலை யரிவிழி நலங்கொள் நங்கையே
கைச்சிலை யுடனிங்கு காணு கின்றவன்
மெச்சிலை யருமிவன் விழுங்கிக் கக்கிய
வெச்சிலை நுகர்தர வீயும் வள்ளலே. (எசு)

எண்டத்தை மொழியினு யீங்கி வன்விட
கண்டத்தை யன்சுழல் கருதி னரன்பு
கொண்டத்தை மறக்கிலன் கொள்கி லார்க்குவன்
றண்டத்தை யீயும்வை தரணி யாற்றினன். (எஎ)

ஈங்கிவ னிருதியிங் கிவன தூக்கிறை
யாங்கவன் வாயுவுக் கரச னுமென
வோங்குநன் மண்டபத் துற்ற யாரையும்
பாங்குறக் காட்டினள் பாவைக் கேற்பிலை. (எஅ)

மாமயி லேயிங்கு வதியுங் காளைதான்
பூமகன் கங்கையின் புதல்வன் காப்பதற்
காமர பாளனென் றவனைக் காட்டலுங்
காமுற மாலையைக் கழுத்தி விட்டனள். (எகூ)
தேவரு மகிழ்ந்தனர் திசையி லுள்ளவர்
யாவரு மகிழ்ந்தன ரிலாப நோக்கினர்
தாவரும் புரோகிதத் தவனக் காலையில்
மாவது வைவிதி மார்க்க முற்றினன். அ0)

மணமகண் மனமண மகளி லோடவு
மணவவன் மனமர னடியு லோடவுங்
கணமொடு பல்லியங் கலிப்ப வெம்பிரான்
றுணையடி வணங்கினர் சூழு வாரொடும். (அக)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பராபரனற் பதம்பணியத் தம்பதிக்குப் பழவினைப்பற் றறுக்கும் பற்பம், விராவுதன்கண் மாலையீந் தவனைமுக நோக்கியே மேவுந் தெற்கில், தராதலத்திற் சந்தான பரம்பரைக்குஞ் சமயாசா ரியத்தன் மைக்குந், திராவிடத்தி னுன்குலத்தின் முதன்முதலி லருள்செய்வேன் சிறக்கவென்றான். (அஉ)

அரியயனை முழும்பார்த்தான் யான்றந்த வரத்துதித்தானடையத்தக்க, தருவனதந் துமதுபத மடைதிரெனத் தோழனெனத் தந்தவாக்கா, லிருநிதிக்கோ னிடம்வந்தே னெனவிருந்த படிமறைந்தா னெங்கள் கோமான், மரகதன்றன் மகளோடு மருகனையும் வானவரும் வாழ்த்தினரால். (அங)

தாருண்யாவதி சுயம்வரப் படலம் முற்றிற்று
ஆக திருவிருத்தம் அங.

பத்தொன்பதாவது

தசாங்கப் படலம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆரணனு நாரணனு மடிமுடியை யறியாத வமல னெங்கோன், பூரணமித் திரனென்ற புண்ணியன்மா மகள்வதுவை புணர்ந்தா மிப்பால், நாரணனு ்கியரீந்த தசாங்கமிது விதுவென்று நாடு வார்க்குக், காரணமோ தழும்வரநூல் காட்டுகின்ற படியெடுத்துக் கழறுவேனால். (க)

மலைநதிநா டூர்முருகன் மகிழ்ந்தளிக்க மாலைசெங்கோன் மறையோ னீய, விலகுகரி பரிமகவா னீயமுர சியானைமுக னீய வேந்தும், நிலவுகொடி யரியளிக்கப் புட்பகமும் வெண்குடையு நிதிக்கோ னீயக், குலவுபசுக் கணநந்தி யருள்புரியக் கருவியெ லாங் கொல்ல னீய. (உ)

அன்னவர மவர்தரலு மற்றுள்ள வமரர்களு மாங்கு கூறிப், பின்னையவ ரவர்பதத்திற் பெயர்ந்தார்கள் பெண்ணிருவர்ப் பெற் றூ ரான, வன்னவொரு நால்வரையுந் தம்பதிமூ வரும்பணிய வவர்த வத்தில், மன்னுசெள யரியென்னச் சந்தான முங்களுக்கு மலிக வென்றூர். (௩)

மாகனக செல்வத்தி லெனைப்போல்க வெனத்தனதன் வா ழ்த்த வென்போற், போகமலி குகவென்று புருகூத னுசிசொ லப் புக்கி ருந்த, யோகமுனி வரர்வியந்து தசாங்கத்தை யூகித் தங் குற்றோர்க் கெல்லா,மோகைவியப் பதிகரிக்க வவற்றினையே துக்களுட னுரைக்க லுற்றூர். (௪)

வேறு.

கரசர ணாதி சாங்கங் கலையணி முதலு பாங்கம்
தருபயன் குறித்தே யன்றோ சமைந்தன வவைபோற் பதத்தில்
வருணமாச் சிரமந் தாங்கி மாட்சிகொ ணிலைமா றாது
திருவுற நிலைத்த லாலே திகழ்முத லங்க மேரு. (௫)

வறுமைவே றோடும் வாங்கி வளம்பல பரப்பித் தூய
வறநெறி நிறுத்தி யிம்மை யம்மையு முதலி யெல்லாத்
திறனிலும் புனிதஞ் செய்யுஞ் சீரினாற் பெற்ற தாமே
யெறிதிரைக் கடல்சூழ் ஞாலத் திரண்டாவ தங்கங் கங்கை. (௬)

சிந்தொடு பிறநதி துப்பாந் திகிரிவேங் கடமென் றோது
முந்திய வருணத் தெல்லை யொண்மொழி யெண்ப தாகக்
கந்தநெல் விரையைப் பிள்ளை காள்கொண்மி னென்று சத்தி
முந்திட வுரைத்த தான மூன்றுவ தங்கந் தொண்டை. (௭)

மேலான வர்க்குஞ் சான்றோர் மெய்யடி யார்கள் வேத
நூலாதி கலைகள் சைவ நூனெறி முதலிற் றோற்றம்
பாலாறு வளஞ்செய் கின்ற பண்பொடு சமைந்த தான
நாலாவ தங்க நூறு நட்டமீ ராயி ரத்துள். (அ)

காலமும் பொழுது மேற்ற கருவியுந் தெரித்து செய்கென்
றாலநூல் கற்றார் சொன்னா ரவற்றுளம் முதலை யாயின்
போதுமா னுழவ ருக்குப் பொழுகள வறுப்ப தாலே
மாலியா ரைந்தா மங்க மலர்ந்தசெங் குவளைப் போது. (௯)

பேறான வெல்லாந் தேவர் பெருவர மென்கை யும்வான்
பாராடு களத்தில் வெற்றிப் பண்பையுங் குறிப்ப தன்றோ
காறானே எண்ணாக் கொண்ட கவின்பிறைக் கோட்ட தான
ஆறாவ தங்கங் கூறி லணியயி ராவ தந்தான். (௰)

தேறிய சுழிய தோசை செவ்விது வெண்ணி றத்த
தூறிய கதிய தெல்லா வுத்தம விலக்க ணத்த
தாறென வரவைச் செய்வ தாழியிற் பிறந்த தாமால்
கூறுமே ழாவ தங்கங் குசையுச்சைச் சிரவக் கோரம். (கக)

இன்னவே ளாண்மை மாந்த ரியல்பொடு பத்தி னுள்ளாற்
கன்னனின் மிகுதி யாகக் கசிவகத் துண்மை யாலே
தன்னுடை வருணப் போர்க்குத் தக்கதா கியகு றிப்பாம்
அன்னவெட் டாவ தங்க மருட்கொடை முரசப் பேறு. (கஉ)

விரிபண்ணில் விசேடம் வேதம் விளம்பிடு களமு மூக்கிப்
புரிகின்ற தொழிற்றீ ரத்தின் பொலிவுமத் தொழிலுக் கேற்கக்
கரநின்ற கருவிப்பேறுங் கணித்திடுங் குறிப்பாய் நின்ற
வருமொன்ப தாவ தங்க மாங்குயில் சிங்க மேழி. (கங)

சீருமுன் னாட்டு மற்றுஞ் சேனையைக் கூட்டுங் காமன்
போருமுன் காட்டும் யாக புண்ணியந் தனையு மீட்டும்
ஏருமுன் னோட்டு மெல்லா வுலகையு மூட்டுங் காட்டிற்
சேரும்பத் தாவ தங்கஞ் செங்கோலை நடத்துந் தார்க்கோல்.

கலிவிருத்தம்.

பெற்றபத் தங்கத்தின் பிசியெ லாமெடுத்
துற்றவங் கியாவர்க்கு முணரக் கூறிய
நற்றவ முனிவரர் நானி லந்தனுற்
பெற்றவவ் வுழவற்குப் பிறவும் பேணியே. (கரு)

மயிர்பொன்கன் குயமர மவலைபூ வாணிகம்
அயம்வெளுப் பிடைபள்ளுச் சிவிகை யாரங்கள்
பயிலுநர் வெட்டியான் பாண ரோடரெண்
றினையமூ வாறெனுங் குடிமை யீந்தனர். (கசா)

தேவரு மதிதியுந் தென்பு லத்தரும்
மூவருங் கிளைஞரு முஞ்சி னர்களுங்
காவல ரில்லருங் கைக்கில் லார்களும்
ஏவரும் பிழைப்பதற் கேது நீயெனு. (கஎ)

ஆகையி னின்கிளை யதிக மாகுக
நீகையிற் றொட்டது நிலத்தில் பல்குக
வாகையின் மன்னரு மதிக்க வாழ்கவென்
றோகையி னுசிக ளுரைத்துப் போயினர். (கஅ)

மண்டருங் கங்கையின் மரபு ளோர்கவி
எண்டரத் தாபித்த விக்கு றிச்சிபோல்
கண்டயா வருமனங் களிக்க மேழியன்
ஒண்டபோ தன்னுரை யொழுகு வானரோ. (ககூ)

தசாங்கப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௰கூ.

21-வது.

ஒழுக்கப்படலம்.

கலிவிருத்தம்.

பூவரு முழவற்குப் பொருந்த வேபல
தேவர்செய் தசாங்கத்தின் சிறப்பைக் கூறினு
மேவரு முயர்வதற் கேது வாகிய
தாவரு மொழுக்கத்தின் றன்மை கூறுவாம். (க)

இணையபத் துற்றனை யெனினு மூப்பொறி
வினைபடு மொழுக்கமே மேன்மை யாமென
அணையகா ராளனுக் கமைவ தாகவே
தணைநிகர் முனிவரன் சாற்றன் மேயினான். (உ)

கல்வியின் முனிவரர் கடன்பி றந்திடுஞ்
செல்வரிற் பிதிரிறை செய்யும் பூசனை
புல்வதிற் கடவுள ரிருணம் போக்கினாற்
பல்வகை யொழுக்கத்தின் பலனுங் கூடுமால். (௩)

இருணம்=கடன்

கைக்கடன் முதலிய கடனுக் கஞ்சியே
அக்கடன் முதலலைந் ததனைத் தீர்ப்பரால்
முக்கடன் முளைத்தன முளைத்த காலையில்
இக்கடன் றீர்க்கிலா ரெதனைத் தீர்த்துமென். (௪)

முக்கடன்=தேவர்கடன்-முனிவர்கடன்-பிதுர்க்கடன்.

புந்தியிற் படுமுனம் பூப்புத் தீட்டமில்
லுந்திகொய் வதற்குமுன் னுருகத் தீட்டமில்
லந்தியத் தீட்டமில் லழனுக் காங்குறி
தந்திடு முன்னெனச் சாற்று நூல்களே. (௫)

பூப்பு=தூரமாதல், உருகம்=சனனம்.
அந்தியத்தீட்டம்=மரணசூசம், அழன்=பிரேதம்.

பிறந்திடி லிறந்திடிற் பெற்ற தீட்டுகள்
பறந்திடு நாள்பதி னுறிற் பண்ணினு
லறந்தனை விட்டுநீ யல்ல செய்யினு
மிறந்தவர்க் கிடுங்கட னிறுக்க வேண்டுமால். (௬)

இயலும்வை திகத்திடை யேற்ற நூல்பினை
பயிறருங் கடையொடும் பழக வேண்டலால்
செயிர்தரு மிடைக்கிடை திருத்தக் கூடுமோ
அயலிடை யுத்தரீ கங்கொ ளாறதே. (௭)

எச்சிலிற் றெய்வமா னெரிபி ராமணர்
உச்சியைத் தையுந்தொட லுமிழ றட்சணம்
அச்சல நானத்தி லமுது கோடலி
லுச்சித பூசையி லொன்றுங் கெடுத்திடேல். (அ)

உன்னுதல் சொல்லுத லுஞற்றன் மூன்றினு
நன்னடை தன்னுடை நலனென் றோதலாம்
பின்னைய விரண்டுமோ பிறருக் காவன
மன்னிய வீற்றிலே மதிப்புப் பேதைக்கே. (கூ)

மூக்கையும் யாக்கையும் மொழிகொள் காதையும்
வாக்கையு நோக்கையும் வரன்ப தத்திடத்
தீக்கையும் பெற்றுநீ திருந்து ஞானக்
காக்கையக் கடவுளின் கருணை யாமன்றே. (௰)

பூசையி னுண்டியும் புகழில் வாழ்க்கையு
மாசறப் பிரர்க்குறை யாத கல்வியு
மேசுற விரக்கமி லிரும்பு நெஞ்சமுஞ்
சீசியித் தகையன தெரிந்து தள்ளுக. (கக)

அரசர்தண் டனையுளா னரச ரேவலான்
வருமண வாளன்மூப் பான்வ ழிக்கொள்வோ
னரியநோ யாளமிக் கிளைஞ் னஞ்சினோ
னிரவல னெழுக்கத்தி னெஞ்சி லாசிலே. (க௨)

அருந்திடி லொளிகெடி லமுதி லங்கைவைத்
திருந்ததை யொளிவர வெடுத்துண் பின்கொளேல்
திருந்துமாண் டதிகரோ திகழ்வ லப்புறம்
பொருந்தவாண் டிருந்துநீ புசுப்ப தேமுறை. (கங)

பகைமுனை பரத்தையர் சேரி பலபலர்
தொகுநதிக் கரைகளித் தாடுஞ் சூழல்சால்
முகமணி லிடம்பொற்கண் மூடி யோங்கிட
வகமகிழ்ந் தவ்விடத் ததிக நீட்டியேல். (கச)

ஆலயம் பாழ்மனை யல்லி லேமரங்
காலவன் னிலத்தினிற் கண்வ ளர்ந்திடேல்
மேலுறு தேவர்முன் வேந்தன் முன்னினுஞ்
சாலுறப் பெரியவ ரேனுந் தாழ்ந்திடேல். (கரு)

நீசனென் றிகழ்கிற நீச னன்னவன்
றேசிகம் பறிப்பதிற் சிந்தை மிக்குள்ளா
னேசினன் குலத்தினே னென்கை வாயதே
சீசியித் தகையன தெரிந்து தள்ளுக. (கசு)

போசனப் பிரியன்வன் பொய்ய னன்னியர்
தூசனைப் பிரியன்வன் சோம்ப லான்பிறர்
பாசறைப் பிரியன்மேற் பாற்கு லத்தனே
நீசனி னீசனீ ராடி லென்பயன். (கஎ)

பாசறை=பொன், தூஷணை=துசணை. யென மருவியது.

மதிமுதல் முப்பொறி மாண்ட சுத்தநேர்
கதியுட னிருமைக ளொருமை கைதரும்
எதுவுமிம் மூன்றினி லெய்து மாங்கடை
அதுமுத லவ்வற் றடுத்த காரியம். (கஅ)

முந்தவா சூசத்தின் முடிவிற் குட்டுஞ்சூ
மந்தவா சூசமு மதனி லேயறு
மிந்தவா சூசமெய்க் கிதனி னுங்கள் பொய்ப்
பந்தவா சூசனேர் பசுவைப் பற்றிடும். (கசு)

ஆஞ்சக வாசத்தா லாமொ ழுக்கங்கள்
போஞ்சக வாசத்தாற் போகு மாங்கந்த
பாஞ்சக வாசமோ பசுவைப் போலவே
மேஞ்சக நாடுறும் விவேதத் தாற்கட்டு. (உ0)

கந்தபாஞ்சகம்=ஐம்புலன்.

வெளிச்சுசி மெய்ச்சுசி யிதனி னுட்சுசி
உளச்சுசி பத்தியுண் டாக்கும் பத்தியின்
னளப்பரு ஞானந்தா னகு மாதிய
திளைத்திலை யெனிலிலை யடைவி லென்பவே. (உக)

அவனது மனத்தின தார வாரமே
சிவசிவ வென்றல்திரு நீறு கண்டிகை
தவவதம் புவனுருத் தானும் பெற்றனன்
குவயரி நிரைநிரை முன்னர்க் கூடுமோ. (உஉ)

குவயரி = குயவரி, நிரைநிரை-குயவரி = புலி.

சிவனிசி திங்களுந் திகழி ரட்டியாந்
தவபிர தோடமுந் தளிவி சேடமாம்
மிவைமுத லொழுக்கத்தை யெடுத்துக் காட்டிய
தவமுனி வரனடி தாழ்ந்து போற்றினன். (உங)

ஒழுக்கப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் உங.

22-வது

பேர்பெற்ற படலம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தொழத்தகு முனிவ னந்தத் தொன்மர பாளற் கோதுந்
தழைத்திடு மொழுக்கந் தன்னைச் சங்கிர கித்துச் சொன்னும்
வழக்கியன் முறையிற் பெற்ற மண்மகள் புதல்வ ராதி
விழுத்தகு பெயரி னேது விளங்கிட விரிப்பா மிப்பால். (க)

வழவின்மண் மகள்சே யாதி மற்றுள நாமத் தாலும்
விழைதர விளித்துச் சொன்னீர் வேண்டிய நன்மை யெல்லாங்
கழறுமப் பெயர்கட் கொத்த காரணம் விளக்கு கென்று
தொழுதலுமரபா ளற்குத்தொன்முனி யுரைப்ப தானுன். (உ)

கலித்துறை.

உரத்தின் மேம்படு மும்பரு மிம்பரும் பிறருஞ்
சிரத்தின் மேற்கொண்மூ வேணிசங் கமமெனுந் தீரங்
கரத்தின்மான்மழு வபயநல் வரதஞ்சேர் கடவுள்
வரத்தின் வந்தநாட் பெற்றபேர் மண்மகள் புதல்வர். (௩)

கதலி யாதிமுக் கனிமது வமிர்தெனக் களித்து
சிதலி யைந்தவோத் தியைதிருத் தொண்டர்மா புராணம்
நுதலி மன்றரங் கேற்றவு நோன்மனு வியந்தெம்
முதலி யோர்களா வென்றலிற் பெற்றபேர் முதலி. (௪)

ஏவ ராவுகண் ணிணைந்திரிக் கெரியிடை மூழ்கி
யீவரா நின்ற பழியினைக் கழுவலும் விண்ணோர்
பூவரா நின்ற காளைநின் புதல்வரு நீயும்
தேவராம்பெயர் பெறுகெனப் பெற்றபேர் தேவர் (௫)

மெய்கண்டதேவர் அருண்மொழித் தேவர்முதலிய
பிரசித்தப்பேர்களானும்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

ஆழித் தேவர் கடலானு ரல்லாத தேவ ரம்பலத்தார்
ஊழித் தேவர் தாங்கூடி யுலகங் காக்க வல்லாரோ
வாழித் தேவர் திருமக்கள் வையம் புரக்கும் பெருக்காளா
மேழித் தேவர் பெருமைக்கு வேறுந் தேவர் கூறேனே. (௬)

ஏரெழுபதி லிப்படிச்சொன்னமையானும் தேவரென்னும்
பெயரேற்றமை காண்க.

தெய்வ வேள்களி னாதியச் செறிப்பினு உருசெய்
உய்ய வேதனக் குரிமையிற் படுத்தலா லுதாரம்
செய்யு மாற்றினுற் றீரத்தாற் செப்புவ தெல்லாம்
மெய்ய தாதலால் விளங்குபேர் வழங்குவே ளாளர். (௭)

வேள்-முருகர்-மதன்-நிலம் - கொடை - தீரம்-உண்மை முதலிய பல
பொருளொருசொல் ஏரெழுபதில் அழுங்குழ விக்கன்புடைய தாயே போ
லனைத் துயிர்க்கும். எழுங்கருணைப் பெருக்காள ரெளிய ரோயாம்புகழ
உழுங்கொழுவிற் கருவீறி யுலகமுதற் கருவாகச் செழுங்கமலத்த யனி
வரைச்செய் துலகஞ் செய்வானேல்.

சீர்த்த வேர்க்குநற் பெரும்பொழு தாகையாற் றென்னன்
ஆர்த்த வன்றனை யறுத்துமை காத்தலா லறலைக்
கோத்த கால்வழி யாளலாற் குவலைய மதுபோற்
காத்த லானுறப் பூத்தபே ரேத்துகா ராளர். (அ)

காளெபது=கார்ப்பருவம், மேகம், நீர்.

நீரைக் கொண்ணில் மாளவி நெடுங்களப் பரப்பில
போரைக் கொள்ளலிற் புரிபடை யானைப்போற் றுதலிற்
சீரைக் கொள்ளலிற் கோட்டையிற் செறிப்பன செறிப்பில்
ஏரைக் கொள்பவர்க் கேற்றபோ போற்றிடு மிராயர். (கூ)

அரசனுக்கும் வேளாளருக்குஞ் சிலேடை உத்தமசோழ பல்லவராய ரென்னும் பிரசித்தப்பெயரானுங் காண்க.

பழைய ராம்பிற ராமெனும் பகுப்பினைப் பறித்தவ்
வுழவி னுங்குறு முன்பன தின்பன வெவற்றும்
விழுமி தாம்பிள்ளை சிறுவர்க ளெனுமபொருள் விடவே
கிழமை தாங்குத லானும்வந் ததுபெயர் கிழவர். (க0)

ஞாயிறுகிழவர்=சங்கிலிநாச்சியார் தந்தை கிழவரென்னும் பெயர் சேக்கிழார் கூடல் கிழாரென மறுவினது. ஔவையார் கிழமைப்படவாளெ ன்றூர் நாயனூர் செல்லாங்கிழவ னிருப்பினிலம் புலந் தில்லாளினூடிவிடும்,

ஓங்கு தோழனுக் குற்றவ ரெனக்குமுற் றவரென்
றுங்கு மாமர பாளனுக் கரனரு ளளிக்க
வீங்கு தேவர்செய் தசாங்கத்தி லொன்றென விளங்கத்
தாங்கு மேழியாற் றந்தபே ரிந்தமே ழியரே. (கக)

திருக்கை வழக்கம்.

மேழிக்கொடி சிங்கவெற்றிக்கொடிகுயிலின்
வாழிக்கொடியே மருவுங்கை.

உழுவெ னோர்மொழி யினங்கொளற் குறித்தஃ தொன்று
பொழுது பூவுடனுய்தலான் போற்றுதல் வித்தல்
அழிவில் காப்பறுப் பொடுதொகுப் பதுவிற்ற லாதி
முழுது முள்ளுறு முறைமையான் முளைத்தபே ருழவர். ()

இதனல்=உழவர் என்பது உபலக்ஷணை யென்பதாம்.

"உழுவாருலகத்தார்க் காணியஃதாற்று
தெழுவாரையெல்லாம் பொறுத்து."

சொற்ற வான்மதிப் பான்மிகு சுற்றங்கள் போற்றும்
பெற்றி யாற்சலப் பெருக்கினைப் பேணலா னுலகந்
துற்றி யான்மிகத் தோற்றுதற் கியற்றலாற் சுதர்மங்
கற்று ளோர்சொலப் பெற்றிடும் பேர்பெருக் காளர். (௧௯)

பெருக்காளர் என்பது=கம்பர், வில்லிபுத்தூராழ்வார் முதலியவர் பெருக்காளரென இவருக்கே மிகுத்துச்சொல்லியவதனால் இவருக்கே சிறந்தபேராம்.

வெள்ளை மாமதி யிலைந்தவன் பெற்றமு முலகக்
கொள்ளை யின்றவன் நெல்லையு முலகுளோர் குக்கிச்
சள்ளை யேறிட வூட்டுமி னுந்தொழிற் சார்பாற்
பிள்ளை காளெனக் கொள்ளலாற் பெற்றபேர் பிள்ளை. ()

வேளாண்மரபியலில்= மனிதரிற் றேவராதலின், முதலாம்வருணர்தா
மையரேயாதி யினியபேரதுவும், வேந்தர்மணவிளக்கு மியற்கையானி
ராஜரேயெனவும், புனிதை சிர்காமபீடத்தெம்மன்னை புதல்வராய்
நென்முதல்பெற்றுத் தனியறமதலையாதலான் வேளாண்டலைவர்தாம்
பிள்ளையே யெனவும்.

எண்மை யோட்டிய சௌக்கியப் பொலிவினா லியைந்த
ஒண்மை காட்டுப காரத்தா லுயர்ந்தமாட் சிமையால்
தண்மை நாட்டிய நன்மையிற் செழிப்பினாற் றட்டா
வண்மை நீட்டலிற் பெற்றிடு பேர்வள மையரே.

ஔவையார்.

சீரைத்தேடினேரைத்தேடு
மேழிச்செல்வங் கோழைபடாது=என்றார்.

இடங்கொ ளாக்களி னிரட்சணை வாணிக மிரண்டும்
திடங்கொ ளப்புகுந் துழவிடைச் சேர்ந்தன வெனினும்
கடன்கொ ளத்தொழில் கருவிகா ரியங்களா யமைய
உடன்கொ ளித்தொழி லாற்பெய ருற்றபூ வைசியர். ()

பிங்கலந்தை,

உழவர்—மேழியர், காராளரிளங்கோ புகழ்,
பூபாலர், பூவைசியர் பெயரே.

தொல்காப்பியம் வேளாண்மாந்தர்க் குழுதூணல்ல
தில்லெனமொழிப் பிறவயி னிகழ்ச்சி

கிளையி னோர்தலாற் படிந்தவர்க் கருளலாற் கிளைக்கும்
விளைவு தாங்கலா லிறைமுடி யெடுத்தருள் விரல்
ஒளிர்ப சுங்கரை முட்டகலா லுலகையூட் டுதலால்
தளர்வி லாவபி தானங்கங் காகுலத் தவரே. (௧௭)

இறைமுடி யெடுத்தருள் விரல்என்பது = சிவபெருமான் முடியிலெடுத்து வைத்திருக்கும் பெருமையாலெனவும் வேளாளர் அரசருக்கு முடியெடுத்துக் குடுக்கும் பெருமையாலெனவுங் கொள்க.

வெண்ணெய்நல்லூரான்றங்கள் மரபுளோர்கொடுக்க
வாங்கிவதிஷ்டனே புனைந்தான்மௌலி

கரைமுட்டலால் என்பது = கரையைமோதலாலென்பது.

படிக்கும் வேதம்வள படைபல மணிக்குவை பாவிற்
றெடுக்கு மாடைவன் மரமுறஞ் சுவணம் பாத்திரங்கள்
அடிக்கும் வல்லிரும் புண்டில் ரவரவ ரிவரேர்
எடுக்கு நெல்லுண லாற்பெய ரேரின்வாழ் நர்களே. (௧௮)

அனையி தேபிற தொழிற்கெலா மருத்தலா லமையும்
மனையெ லாந்தரு மக்களெ லாமினும் வழுத்தும்
பிணையெ லாமவ ரவருடல் பிழைத்திடப் பேணும்
வினையெ லாமிதின் விளைதலாற் பெற்றபேர் வினைஞ்சர். ()

பிங்கலந்தை =

ஆணைவழிநிற்றன் மாண்வினைதொடங்கல்
கைக்கடனாற்றல் கரிலகத்தின்மை
யொக்கல்போற்றலோவா முயற்சி
மன்னிறைதருத லொற்றுமைகோட
திருந்தியவொழுக்கம் விருந்துபுறந்தருதல்
வேளாண்மாந்தர் செய்கையீரைந்தே.

என்பதினாலுங்காண்க.

விண்ட தேகமு மிவர்களத் தரிசிவாய் விரும்பிக்
கொண்ட தாற்சுடு களத்தினு மெனிற்சொல்வ தென்னே
மண்டு போர்செயக் களம்புக லாலுந்தென் மறையிற்
கண்ட பாண்செயுங் களத்தினும் பேர்கள மர்களே. (௨0)

தொழிற்றிறம் = உழுகளங்கருவி தாவறக்காட்டும் தனிச்சூறிக் கொடியாம் சிங்கங்குயிலொடு திகழ்தருமேழியும். என்பதில் கண்டம் பண்ணுக்கிசைந்த தென்பதாம்.

கலிவிருத்தம்.

கூவுமட் டாதசக் குழுவு மான்களும்
ஏவிய வண்ணமே யிசையச் செய்தலால்
பூவின்வே ளாளர்க்குப் பொருந்தி நின்றது
நாவின்வார்த் தைத்தொழி லாள நாமமே. (உக)

உழுதுண்டு வாழ்வதே யுயர்வு மற்றையோர்
தொழுதுண்டு வாழ்வரென் றறிஞர் சொல்லினர்
பழுதுண்டு பிறதொழில் பரவுந ன்மைதான்
முழுதுண்டென் றறியலாம் மொழிந்த பேரினல். (உஉ)

இத்தொழி விருடிக ளிவர்க்கி யம்பலா
வர்த்தகங் கோத்திறி வரவுள் ளாயதாம்
அத்தகு தன்மையா லமைந்து நின்றது
முத்தொழி லோரெனு முறையி னீள்பெயர். (உங)

உன்மத்தங் கொண்டுல கத்து ளோசிலர்
வன்மத்தி லொன்றைமா றுவ மூத்துவர்
சன்மத்தில் வாதந்தான் சாருஞ் சீவன்
கன்மத்தில் வைசியனே களங்க மில்லையால். (உச)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

இடையிடை யொருவ ரன்றி யெவ்வகுப் பினரி லெனும்
அடையவுங் கொடைப்பேர் பெற்று ராருள ராயுங் காலை
உடைதடந் திரைசூழ் ஞாலத் துயிர்க்கெலா முதவ நின்ற
கொடைமடங் குறித்த தைய குலவும்வே ளாளப் பேரே.

கலித்திலைத் துறை.

முன்னு மாசையின் வான்பறந் திடுதற்கு முடியா
தின்ன மற்றுள பேர்க்கெலாங் காரண மியம்ப
வென்ன சுற்றதோ வென்பன மிங்ஙன மியம்பும்
அன்ன பித்தத்தி னுளல நாவடங் கினதால். (உரு)

பேர்பெற்ற படலம்.

முற்றிற்று.

ஆ திரு விருத்தம் உரு.

23-வது

நீர்விளையாட்டுப் படலம்.

அறுசீர்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

ஏராடக் குழலசைய விருகையினும் வளையாட விலங்கா
நின்ற, தாராடத் தனதன்மக டணைமணந்தோன் பேர்பெற்ற
தன்மை சொன்னும், சீராடச் சித்தசனும் போராட மனைவியருந்
தெருவை மாறும், நீராட வுழவனடு நின்றுடுந் திறத்தனையா
னிகழ்த் தலுற்றும். (க)

பூமதிக்க வான்மதிக்க புகலுமெம்ம னோர்மதிக்க போந்தா
யிங்கு, தாமதிக்கப் பூவுலகிற் சர்வர்களு மனமிரங்கித் தவிக்கை
யாலே, ஈமதிக்கங் கதைநோக்கி யிரங்கினர்க ளெனமொழியை
யிகவா தய்யா, கோமதிக்க வாசிதண்ட கங்குறுகிக் குலம்பெ
ருகிக் கூவில் வாழ. (உ)

ஐந்தீரைந் திடங்கிரக நிலைசூலம் யோகினியம் மாதி யாய்ந்
து, சிந்தாடை யுடுத்தபுவி ஐந்தாநாட் செல்வதற்குத் தினநன்
றென்னுள், சந்தான வழிகளுக்குந் தனசாகை தனைக்காட்டுந்
தகைமையாளன், நைந்தாருக் குதவிசெய்து நாணிலந்தாங் குந்
தொழிலை நாட்ட வல்லோ. (௩)

கலிவிருத்தம்.

அன்னதே நலனென வவனு முட்கொண்டான்
மென்னடைப் பிறழ்கயல் விழியி னன்மலர்ப்
பொன்னிகர் புதுமணப் பூவை மென்முலை
துன்னியின் புற்றனன் சுகந்த மெல்லணை. (௪)

எஞ்சலி லன்பினு யானெக் காலையும்
நெஞ்சகத் திருத்தினே னின்னை யென்றலும்
தஞ்செனப் பிறவுருந் தனக்கின் றுமென
மஞ்சென வுதிர்த்தன் மழைக்க ணலியே. (௫)

ஆனவ னாடல்கண் டாற்று வானெஞ்சுக்
கேனைய வுறுப்பெலா மேவல் செய்வன
கானுனக் கேவலாய் நயந்து கொள்கென
பூநவி லடிபணிந் தூடல் போக்கினான். (௬)

தங்கரத் தாற்றிரை தாவுந் தாரணி
வெங்கலி யிருடொலை மேழி யாரென
செங்கரம் பரப்பிவெந் திமிர மோட்டிவெம்
பொங்கொளி யுதயகிட் டிசைபொ லிந்தனன். (௭)

பிரசையி னுதித்தவர் பேணிச் செய்கடன்
வரசையி லத்தப்பான் மகிழ்ந்து செய்தனன்
பரசையின் முதலிய படைக ளேந்திய
அரசையின் மதவுரி யாதிக் கன்பினான். (௮)

இன்னணஞ் சுகித்திருந் திரவொ ழிந்தபின்
அன்னக ராடவ ரணங்கு போல்பவர்
தன்னுடைத் தேவியர் தாமுங் கூடியே
மன்னிய சைத்திச ரதத்தின் மாடரோ. (௯)

பிடியுடை நடையுடைப் பிறங்கும் பெற்றியர்
விடையுடை நடையுடை விளங்குங் காட்சியர்
மடையுடை கடலென வந்து கூடியே
தடமடுக் குடைதலிற் றலைவைத் தார்களே. (௧0)

கார்தனைப் பிறிய மதியிற் காந்துறும்
வார்தனைப் பிறிய குயத்தொர் மாதின்மேல்
ஏர்தனை நடத்துவோ னிறைத்து மீந்துறும்
நீர்தனை முன்வந்த நிலவிற் காய்ந்தது. (௧௧)

தொடையணி குவளையான் றுருத்தி கொண்டநீர்
மடைதிறந் தொருத்திமேல் வழியம் பெய்தலும்
இடையிலா மணமக ளியக்கர் பாவையின்
கடைவிழி இதழையும் வெளுக்கக் காட்டின. (௧௨)

வானுசை யுடையிடை மழையின் வீசுநீர்
பூநனைந் ததுவெனப் புறத்திற் றோன்றலால்
வேனகு கண்ணியோர் மின்ன னாளிரு
பாளன்மேல் மலர்ந்தன பங்க யங்களே. (கங)

கடையுலாம் பனியெனக் கவின்கொ டேசிப
நடையினான் வீசுநீர் நனைந்தங் கொட்டலால்
இடையிலா ளென்பதற் கியைய வேயவள்
உடையிலா ளென்னவு மொத்துத் தோன்றினாள். (கச)

முன்னெதிர் வருபவன் முட்டும் வேறொரு
கன்னிமே னீர்விளை யாட்டைக் கண்டனள்
அன்னவன் முகத்தையும் புயம கிழ்ந்து
தன்னெனத் தாழ்தரத் தருணம் பார்ப்பர்போல். (கரு)

கொஞ்சமு மாட்டிகிற் கொற்றம் வேண்டிவள்
கெஞ்சினாள் போல்வந்து கிட்டு மோர்மினாள்
விஞ்சுநீர் கொண்டுமே ழியனைப் போர்த்தலால்
வஞ்சனைக் கெதிரொரு வலிய தில்லையால். (கசு)

வங்குவளை யும்பெறு வரால்க ளாடவே
கங்குவளை யுந்திருக் கவின்கொள் வாவியில்
கொங்குவளை யுங்குழல் குலைய வாடலில்
செங்குவளை யும்மவர் திருட்டிக் கொத்தவே. (கஎ)

கண்டரு கொண்டையைக் கயத்துக் கண்டநன்
கெண்டைகள் கருக்கொடு கிளர்ந்து துள்ளின
புண்டரீ கம்முகம் பொலிவொன் றாதலால்
வண்டர்கண் மயங்கின வாவி மாட்டரோ. (கஅ)

எல்வைத்த மணியணி யுழவெ னேந்திய
மல்வைத்த புயமெனு மந்தரப் பெருந்த
கல்வைத்துக் கலக்கையிற் கடலி லேதிருச்
செல்வப்பெண் செனித்தல்போற் றெரியத் தோன்றினார் ()

இழைவளர் முலையின ரினிக்குஞ் சொல்லினர்
குழைவளர் முகத்தியர் கூந்தற் காடுகள்
மழையென நிறத்தினோர் வகுத்த வாயினுந்
தொழிலினு மொத்தன சொரியு நீரினால். (உ0)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

படபடென் றிரைத்துப் பொங்கி பார்ப்பொடு குருகுஞ் சாய
கடன்மடை திறந்த தென்னக் கவத்திடை யாடுங் காலை
விடும்விடு மென்ற போதும் விட்டிலா விளையாட் டெய்தி
மடமடென் றிரைக்கக் கூசி மைந்தரைத் தழுவு வாரும். (உக)

கழுமணி யனைய மேனிக் கைரவ மலர்ந்தா லென்ன
விழுமதுக் குதலை வாயார் மென்மலர் கொடியி னெல்கி
செழுவரைப் புயத்தைப் பற்றி தேமலர்க் கயத்தில் வீழ்ந்து
கொழுநரைச் சுற்றிக் கொங்கைக் குடத்தினு னீந்து வாரும். ()

தண்டெளி பிரச மென்ன சர்க்கரை யெனப்பா லென்னப்
பண்டரு குதலை வாயா பங்கய வனத்தி னுள்ளால்
கண்டெமைப் பிடிப்பீ ரென்று கணவனுக் கைய் மூள
வண்டெதிர் மலைந்து நின்ற வனசத்தைக் காட்டு வாரும். (உங)

தேன்மறைந் ததர மானச் செங்கனி வாயா ரெம்மை
யேன்மறைந் திருந்த காலை யிசைதரக் காணீ ரென்று
தான்மறைந் திடத்தன் பாவை தனைமறைந் துண்ணும் பூனை
போமறைந் திடமுன் பாகம் புறமெலாங் காட்டு வாரும். (உச)

சோடிய முகவேய் சங்கஞ் சுரும்பொழுங் கதுகி டந்து
கூடிய வானு மூழ்கக் குழுக்குண்ட வதனக் காட்டில்
ஆடிய வண்டி னோடு மாரமுங் கொண்டு நின்ற
சேடியர் வதன மென்று செங்கம லம்பார்ப் பாரும். (உரு)

பவளக்கொப் பிதழ்கு மிழ்க்குப் பணிவளர் முலைகள் பூத்த
குவளைக்கொப் பரிகள் பாய்ந்த கொடுவிழி வலஞ்சு ழித்த
அவளைக்கொப் பணிகொள் கண்ட மாழ்க பிதன்னச் சிறி
யெவளுக்கொப் பென்று சோபித் திகழினை யதுக்கு வாரும். ()

தாட்டத்துங் காத்து வேனிற் றலைவனைப் பாருங் காம
வேட்டத்து மானை யொத்த விழியுடை யாரு மாடும்
ஆட்டத்து மனம்வை யாம லரும்பெறற் கணவர் பெண்கள்
கூட்டத்தை நோக்க நோக்கிக் குளிக்குநீர் வெதுப்பு வாரும். ( )

இடையொரு கயன்மீன் முட்ட வென்னைவந் தொருத்தி முட்டிப்
புடைதனி லொதுங்கி நின்றாள் போன்மெனப் புகன்ற காலை
உடையினை யொருகை தாங்கி ஒருகையிற் குழலைத் தாங்கி
கடைவிழி சிவக்கச் சீறிக் கரையிடை யேறு வாரும். (௨௮)

கலிவிருத்தம்.

அமலத்தன் வாவியி லன்னம் போன்றவர்
கமலத்தி லேறல்போற் கரையி லேறினர்
துமிலப்போர் வில்லியோர் துறையி லேறினன்
இமமொத்த வாடையா பரண மேந்தினர். (௨௯)

இந்திரன் பரிவழி வந்த திந்திரன்
றந்தது சர்வலட் சணமுஞ் சார்ந்தது
முந்துவே ளாளனை முதுகிற் கொண்டவன்
சிந்தனை யெவணவண் சென்று நின்றது. (௩0)

நீர்விளையாட்டுப்படலம்
முற்றிற்று.
ஆ திருவிருத்தம் ௩௰.

24-வது.

அசுவபரிட்சைப் படலம்.

கலிவிருத்தம்.

பசுவைத்தெய் வதமெனப் பணியும் பூமகன்
சுசிவைத்த நீர்விளை யாட்டைச் சொல்லினும்
குசைவைத்த பிடர்மயிர்க் குடுமி சேரெழில்
அசுவத்தி னிலக்கணம் அறைகு வாமரோ. (க)

ஆயிடைப் புரோகித னடையக் கண்டனன்
தூயநன் மலரடி தொழுது சொல்லுவான்
ஏயவென் கருத்தறிந் தியானி ருக்குமில்
வாயிலி னடைந்தது மதிக்கற் பாலதால். (உ)

ஆகையி னிவுளியி னருமை யாவையும்
ஓகையி னுணர்த்துக வுணர வென்றலும்
வாகையி னுயதை வழுத்து வேனெனச்
சாகையின் மறைக்கதி காரன் சாற்றுவான். (ங)

கலிநிலைத்துறை.

விளைபு ணம்பிநீ மிகைசெயேல் மேவறுபா லனமும்
உளவ றப்பினுந் தொகுபுனு முறைவெயி லாதி
யளவ னிக்குமந் திரமுமங் கருந்துநற் சலமுங்
கொளுமி சைத்தலுங் களிப்பொடு தேய்ப்பதுங் கொள [லால். (ச)

வித்த நல்விடை யால்வரு மென்றனம் விலக்கிற்
பத்து நல்விடை யின்பலன் பரியொன்றிற் பலிக்கும்
வைத்தி ருக்கிற மகிமையான் மணிவிலை யேறும்
அத்த கைப்படத் தோற்றமுண் டாம்படி யமைக்க. (ரு)

தோற்றங் காட்டுமாங் காடிபச் சாடிக டொடுத்துத்
தேற்றி டுமுக மிட்டுடன் செறிமயிர் புனைந்தும்
ஏற்றங் காட்டுமுன் னுயர்தலத் துடற்பட மெடுத்தாற்
சாற்று நல்விலை தருந்தகு மெனமனஞ் சாரும். (சா)

காணுஞ் சொன்னல்கள் கடலையூட் டிடிலதிற் கலக்க
வேணு முப்பழுப் பத்தெட்டுப் பணவெடை விரும்பி
ஆணைப் பார்க்கிலும் பெட்டையின் பாலன மதிகம்
பேணு பாலொடு பிரசலத் தாலுடல் பிழியும். (எ)

தானி யந்தரு முன்னரை முகூர்த்தத்திற் றுனே
பானங் காட்டுமுன் றுண்டின்மேற் பலன்படும் வயதாம்
ஆன பக்குவ மடிக்கடி வாலடி யமுரி
தீனி சட்டையாட் டங்கணைப் பல்குல்வீழ் கோழை. (அ)

இவை வசந்தத்தி லுத்தமம் பரிக்கெழு மீன்ற
திவசம் பத்தினின் மாக்கண்டா லிக்குறி சிறக்கில்
அவைய றிந்துநன் மாவிடங் கோளியை யணைக்க
நவில்க ருக்கொளி லாவறீர்ந் தாணைநா டாது. (கூ)

சிக்கி ரந்தனுத் தேறிடு மடியடி வயிறும்
போக்கி லேபருத் திடுங்கருப் புரள்வதேழ் மதியாம்
வாக்கு நீருணுங் கான்மிக வயிற்றினிற் றேன்று
மாக்கொ ணீரினும் பெட்டைக்கு வார்பல தரமே. (க0)

இழுவை யூர்தலின் மிக்கிளைப் பாண்செயு மிமிசை
விழுதல் கீழ்வயிற் றிரணங்கா லுதையடி விசனம்
அழிக ருப்பத்திற் கண்மைகின் றிடல்கருக் கழிவாம்
ஒழியு மேயெனின் மறுகருப் பமுமிடை யொழியும். (கக)

ஆத லாலைந்து நாலுமா தங்களிற் கருவுக்
கேத முற்றிடல் வழக்கமக் காலத்தி லிமிசை
யாதொன் றுஞ்செயே லதிகவுற் சாகமுண் டாக
மேய்த லாதியில் விரும்பின படியதை மேய்க்க (கஉ)

விழைச்சைத் தாய்மிக வேண்டுமேற் குட்டியின் வயிறு
கழிச்சற் காணுமாக் கஞ்சியை யடிக்கடி காட்டு
தழைத்த கர்ப்பமே வாறுமா தம்வரை தாய்ப்பால்
செழிப்ப தேதரு மேற்படி யிரண்டுக்குந் தீதாம். (கங)

தட்டு வாணிபோ னினைத்திடே றகுவிலைப் பரியை
யிட்டு வாய்த்திடு புதையலென் றெண்ணினு லெய்தும்
மட்டி லாதபொன் வளர்க்குமா வளர்த்திடிற் குணமுங்
கட்டி லக்கண வுருவமுங் கேடின்றிக் காணும். (கச)

கலிவிருத்தம்.

ஈன்றதின் பாலன மீனப் பட்டதின்
ஆன்றமை பாலன மருத்த மாகுமால்
மூன்றுசம் வற்சரம் முழுவி லக்கணந்
தோன்றிடச் செய்யவ தொழியிற் றேன்றமோ. (கரு)

இளமையி னிளமையை யெண்ணுங் காலையின்
முளையிள மையின்பத முச்ச மைக்கணும்
அளவுநீ பாலன மமையச் செய்பினல்
விளைவுமுற் றேற்குறை மீளச் செய்வதென். (கசு)

ஈன்றணி மையிற்கரு வெய்து விக்கலாம்
தோன்றிடு கருப்பலஞ் சுகத்தி னலன்றே
ஆன்றிடு விளைபயிர் முளையி னற்றலே
போன்றிடு மென்பராற் போற்று சூலினை. (கஎ)

தன்பயிற் சியைவிடாத் தன்மைத் தாதலால்
பின்பதைத் திருத்துதல் பிழைக்கு மாதலால்
மின்பயிற் சிபலது நிலைக்க வேண்டினல்
நன்பயிற் சியின்மிக நயந்தொ ழுக்குவாய். (கஅ)

நாலெட்டு வயதென நவில்வர் தோற்றத்தின்
மேலெட்டு வரையினும் வெண்பல் லாலறி
மாலெட்டு நால்வய த்தின்வ ளர்ச்சியாஞ்
சூலெட்டிற் பதினெரு திங்கட் சொல்லுக. (கக)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

குரகதங் கோணங் குரங்குளை தேனுக் கொய்யுளை குரை யொக்குக் கோரம், துரகதங் கோடை தூசிகத் தருவந் துரங்க நற் கோடரந் கற்கி, பரிவயஞ் சடிலம் பத்திரி வாசி பாடலங் சோடலம் பாய்மா, அரியய மிவுளி யத்திரி கிள்ளை யச்சுவஞ் சயந்தவங் கன்னி. (உ0)

கந்துகம் புரவி நானுகங் காண்டங் கண்ணுக முத்தரி மாவே, குந்தமண் டிலமே கனவட்டம் வன்னி குதிரையின் பொதுப்பெயரேனும், சிந்தினிற் பிறந்த சைந்தவஞ் சேரன் றிருப்பரி பாடலஞ் சோழன், கந்துகங் கோரங் கைதவன் குதிரை கனவட்ட மெனப்பெயர்காட்டும். (உக)

யாகமா வின்பே ரசுவமே தீய மாம்பெருங் குதிரையோ
தேசி, சேகுறு குறும்பர் குதிரைகந் துகைமாந் தேவர்கோக் குன
க்குச்சைச் சிரவம், வேகவிண் மணிக்கு முருமுரன் முதலாய் விள
ம்புவர் விரியராப் படப்போ, வாகம்வன் கழுத்தோ டுயர்ந்தவன்
குரமு மணிதர நீள்சம்ப பல்லும். (உஉ)

சிவந்துநெய்த் திடையி னரம்பெழா நாவுஞ் சேர்ந்தது பா
டலந் திருமான், உவந்தவி லாடம் கன்றுரு நிறத்த வுளைத்திரி
கோணத்தி னுருவிற், குவிந்துயர்ந் திருந்தாற் கோடக மென்பர்
கொடும்படை முகமஞ்சாத் தோல்புல், இவர்ந்தவெண் காற்பு
ணரிமுயல் குரங்கி னிருங்கதி யுடையதே விவுளி. (உங)

பின்னமா கியவோர் நிறமுடைத் தேனும் பெருகுமைந் நிற
முடைத் தேனும், பன்னிற விலாளி யொழுகிட னின்றுற் பகரு
வா வன்னியென் றதன்பேர், மன்னுகண் டத்திற்றெய்வத மணியு
மாசறு மட்டமல் கலமும், இன்னிய நிறத்த பஞ்சகல் யாண மெ
ன்பதுங் கூடிலோ குதிரை. (உச)

குங்கும பளிதஞ் சந்தகி னரந்தங் கொண்டவா சனையுடன்
மேகம், சிங்கம்வன் சரபஞ் சங்கென முழங்கிற் செப்புவ ரரி
யென வதன்பேர், தங்கிய கொள்ளி வட்டம்போற் சுழல்வுஞ்
சாணையிற் கடைந்தபோற் காலும், அங்குறு வீரன் காலுக்கு
ளடங்கு மமைவது மாதல்கந் துகமே. (உரு)

துருக்கமு நதியுந் தாவுறும் பலத்திற் சொலுமுழு விலக்
கண மமைந்தே, இருக்குதல் புரவி யிவ்விரு நான்கு மெண்வித
வயதுள வென்பர், தரைக்குளுற் பவித்த குதிரையின் வயது
சாற்றிடிற் பொதுவெண்ணுள் காண்டாம், உரைத்திடுமசுவ பரிட்
சைநூ லெண்ணெண் ணுயர்கலைக் கியானத்தி லொன்றுப. (உசா)

ஆண்குண்டு சேவன் மாவென்பர் பெட்டை யதனொடு வட
வைகோ ளிகையெண், காண்குட்டி கன்று மறியென்பர் கலினங்
கவியமே கறுள்குசை மூட்டு, மாண்கடி வாள மதனுடைப் பூண்
பேர் வைத்திடு மிருளையக் கறுள்வாய், நாண்குசை வற்கம் வாய்
வட்ட மேலு நல்வடி கயிறென்று மதன்பேர். (உஎ)

பல்லணம் பாரம் பருமமாக் கருவி படையரம் பண்ணிவை யேழும், கல்லணைப் பேராங் கழுத்தணி மயிர்க்குக் கழுவ ருணையென வதன்பேர், வல்லிய குரச்சை குரமிரு பேரே வளர் குளப் புக்கென வைப்பர், ஒல்லுமத் திகைகோ லிரண்டுமா வடிக்கு முயர்ந்தசம் மட்டியென் றுரைப்பர். (உஅ)

மந்திரஞ் சாலை பணையதன் பந்தி மாவலர் வாதுவர் மதுவர், உந்துபண் ணுவர்மா வடிப்பவர் குதிரை யுகைத்திடும் பாகர் தன் பேராம், குந்தநன் மயிர்கே சஞ்சுவல் கூந்தல் குசையெனு வாய்நுரை விலாளி, வந்திடுங் கச்சம் படியங்க வடியா மாதிக மதுசெலு மார்க்கம். (உகூ)

மண்டிய குதிரை யார்ப்பது தூளி மாவின்வை யாளிவீ திக்குச், செண்டொடு செண்டு வெளிதிரு முற்றந் திகழ்ந்திடும் புரவிவட் டமுமாம், கண்டிடுங் கவனந் தாவொடு கதியே காறுநடையிணைக் காட்டும், கொண்டமென் னடைதெள வுரிதகம் விரைவு கூர்நடை யாக்கிரந் திதமே. (௩0)

சாலி ரண்டெடுத் தாடிய நடைக்குக் காட்டும்வல் கிதமெனும் பெயரே, கோலிய சுற்ற விரேசித நடையாங் கூர்முழு வோட்டமோ புலிதம், வாலிய முத்துப் பாணிலா வெள்ளி வளையென நிறத்தது வெள்ளை, கோலமா துளம்பூச் செம்பஞ்சுக் குழம்பு குந்தியி னிறந்தது சிவப்பாம். (௩க)

குயிவளி காரி னிறந்தது கருப்புக் கொண்டகோ ரோசனை பொலனும், மயர்வற மொழியிந் நானிறங் கலத்தல் வந்தமிச் சிர நிற மாகும், வியன்முக முரம்வால் காலுச்சி யெட்டும் வெளுத் திடி லட்டமங் கலமாம், செயமுறு நாற்கா யானனம் வெளுக்கிற் றிவிய பஞ்சகல் யாணி. (௩உ)

வருகள முன்னால் விரலள வொளிய வலஞ்சுழித் ததுதெய்வ மணியாம், திருமுகந் தலைமுக் குரத்திவை் விரண்டுந் திகழ்ந்திடு நெற்றியி லொன்றும், உரைசெய்பின் பக்கத் தொன்றுமிப் பத்து முடையதே லுத்தம் மேலும், பெருகிய மார்பி லைஞ் சுழிப் பெயரே பிறங்கிய சிவர்க்க மென்பர். (௩௩)

நெற்றியி லிரண்டு மூன்றுநான் கேனு நிந்தையிற் படாமு னந் தாளில், உற்றிடு மிரண்டு மூலத்தி லிரண்டு முத்தம மெனவுரைப் பாரால், எற்றிடுங் கண்ட நடுவின்மார்க் கண்ட மிரட்டையே யுடையவ னேழை, துற்றிடுங் கணைக்கா லவையுறிற் றுன்பந் தொடர்தலைக் காலன தூங்கன். (௫௪)

ஒட்டமுன் கால்சா ணுடுகன்னச் சுழிக ளுடையவ னுயிரினை யுண்ணும், நாட்டிய தண்டை யடியிற்சந் திரனு நவிலண்டாவர்த்தமு முடலின், மூட்டுமோர் பக்கக் கௌவகங் காகா
, டோட்டுகே சரிகாற்கேசா
வர்த்த முறுகச்சப் பட்டடை யொண்ணு. (௫௫)

திருகினு மிகநீ ளினுஞ்செவி யாகா திரண்டமுக் கால்வெளுத் தொன்று, கருகினு மாறிக் காணினு மாகா கண்வெள்ளை கருங்கண்ட மாகா, பெரியவே லொன்றே லூர்ந்திடி லுள்ளே பிறங்கிய ஒலியு முண்டாதல், வருமண்ட வின மெனவுரைப் பார்கள் வாசியி னியல்பை யாய்ந்தோர்கள். (௫௬)

காக்கைபே யோரி நாய்நரி பூனை கடும்பன்றி யொலிகொளேற் கழிப்பா, மாக்கடன் மேகம் பேரிகை யிடபம் வளையொலி கொள்ளிலோ வண்மை, தீக்குய வரிசெங் நாய்புகை பூனை சிறையுடைக் காகமெண் கோரி, நீக்குகத் தபமிந் நிறம்விலக் கென்பர் நிருமல வெள்ளையோ சிரேஷ்டம். (௫௭)

சந்திரன் முத்து நீனிற மணியே தாமரைத் தாதுபொன் காயா, வந்தசெவ் வரத்தம் பசுங்கிளி மூக்கு வளவிய வண்ணமுத் தம்மாம், உந்திய வயிறு யினுமுர மேனு முறச்சிவந் தால் வெற்றி யோங்கும், அந்தவீ ரிடஞ்சுக் குலமெனி லதுவா மதன் பெயர் வாருண மென்பர். (௫௮)

பிடர்வெளுத் தாற்சந் தானமா மார்பேற் பெருகுசந் தோடமா மணிக்கால், உடன்வளை கண்டம் பொருடரு முகமே லுயர்செயம் பின்புறஞ் சுகமாம், படருடம் பாதி சிவந்துபின் வெளுக்கிற் பகற்செயம் விபரீத மிரவே. (௫௯)

அடிவிசைத தெழும்பந் தெனவடி பெயர்த லாடுவார் போ ணடித் திடுதல், துடியபடி சிங்கத் தோற்றத்தி னட்த்த ரோகை யர் மனமெனத் தோன்றல், மடமிடு கற்பின் மகளிர்போல் வத னம் வளைதன்மண் ணுதற்க்கங் களித்தல், திடனுறு நிலைமை பெருமித மாதல் சேட்டமாம் பரியின தியல்பே. (ச0)

கருநெய்தன் மணத்தின் மாந்தளிர் நிறத்திற் காணுநா வக் கரு நெய்த, லுருவினு ளிரத்தக் காட்சியி னோக்கமுறுநரம் பெ ழமலே தசைந்து, தருநெளி வின்றியிருந்தவன் முழந்தா டசை ந்தொளி பழுத்தவல் லூரு, திரடர நீண்டு சிறந்தநன் னிறத்துத் திகழ்தண்டைக் காலுண்டேற் சிரேஷ்டம். (சக)

தூரிதத்தாற் றுரகந் துரகதந் தூரங்கஞ் சுற்றலாற் கோட கஞ் சுமப்பாற், பரிவியா பிப்பா லசுவம்பீ டிக்கப் படுவதா மத னிற்கந் தருவம், விரைவினி னடப்பா லயஞ்சல னத்தால் விரும் பிப வடவைவே கத்தால், உரவிய வாசி யாசுவீ னந்தா ளொருதி னஞ் செலுதொலை யாமால். (சஉ)

வெள்ளையாம் பரியும் வேறுள நிறத்தில் வெள்ளையூ டிருந் திடி லதுவுங், கொள்ளலாம் வயதி னவத்தைபத் தவற்றிற் கூறு மூன் றுண்டிரு மதியோ, டுள்ளுமீ ரர்று தினமொரோ வொன் றுக் குரைப்பருத் தமஞ்சதஞ் சமமோ, விள்ளுமெண் பானன் கறுபத்தொன் றதமம் விரலள வெனும்பரி வேதம். (சங)

மகமயர் பிரமன் கண்ணிருந் தத்தம் வழிந்தநீ ரிடத்திலன் னவன்செய், தருமக வழலி னிலக்குமி சாபச் சதுர்மறைக் குடி ஞை யண்டத்தில், திகைவரும பாலரிடத்திற்றெள் ளமிதிற் றிக ழமூன் றுமறை நாவின், மிகுகருப் பையிவ் வேழிடம் பிறந்த வெம்பரி யென்பதவ் வேதம். (சச)

வியனில த்தின்மே னீரின்மேல் வான்மேல் விரைகுவ தொ ன்றுக்கொன் றுயர்வாம், வயமல மயூர வியாக்கிரம் விடபம் வா னர மெனக்கதி யைந்தாம், கயிறதை மாறல் விலைகொள லிந்தக் கலையினுங் கணிப்பரி தெவைக்கும், உயர்வுள வதனு ளுடைய வன் மனமெங் கோடிடின் றதுதெரிந் தங்கு. (சரு)

மன்னர்தஞ் சேனு பதியுமந் திரியு மாதலுன் வருணத்தி னியல்பாம், என்னவர் லுனக்கிப் பரியுமேற் றதுவா மேற்றதே யேற்றவர்க் கியைந்தால் பின்னையெண் ணுவமென் வெற்றியும் புகழும் பிறங்குசந் தானமும் பிறவுந், துன்னிட வாழ்தி யென்றனைனந்தத் துரகத விலக்கண மகிழ. (சசு)

கலிவிருத்தம்.

ஆம்பசுக் காத்தலா வறையத் தக்கன
வாம்பரி வருடைமற் றுளவி ருத்தியும்
ஓம்புத லுன்றொழிற் குள்ள தாகவின்
நாம்புகன் றனமினி நாடிக் கோடியால். (சஎ)

சுருக்கியான் சொல்லினு சொலுமி லக்கணம்
பெருக்கிறி யறிந்திடும் பெற்றி யாயென
விருக்கிலே னசுவநூல் விரிவி லேன்கண்டு
பிரித்துநீ யறிகுக பெரிது வாழ்கென்றான். (சஅ)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

காளைமூன் றையுமு ணர்ந்த கலைமுனி யுரைத்த வாறே
சோலையின் வளங்க ளோங்குந் துய்யகண் மலியூர் வாழ்வோர்
சீலமா முனிவன் சொன்ன திகழ்வயப் பரியை யன்னோன்
காலினில் வீழ்ந்து வேகக் கடும்பரி விருத்தி செய்வாம்.

அசுவபரீக்ஷைப் படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் சசு. மொத்தம் கஉ௲ச.

25-வது,

மீட்சிப் படலம்.

கலிவிருத்தம்.

மாட்சியின் வளக்கையும் வாகிக் குள்ளநற்
காட்சியி னிலையுங் கழறி னுமினி
ஆட்சியி னுயர்கங்கை யருமை மாமகன்
மீட்சியை யெடுத்தினி விளம்பு வாமரோ.

சொன்னநன் னாள்வரத் தூய மாமுனி
பொன்னடி வணங்கினான் பூமின் புத்திரன் .
என் னுடை மாதவ ரிருவர் மாமியர்
பின்னொடு விடைதரி னிலத்திற் செல்வனால். (௨)

ஆகையி லவர்களுக் கறிவித் தேயுளஞ்
சேகறத் தெருட்டியென் சிந்தை முற்றுவான்
போனாகநன் றென்றலும் புனிதன் போயவர்
ஊனையுற் றிடப்பிரி வுறுக ணீக்கியே. (௩)

மண்ணிடை யவரவர் வருண நீதியின்
எண்ணிய முறைகளை யியற்ற வேண்டினிப்
புண்ணிய லாமலூண் பொருளி லாமையால்
பண்ணுத வரிதெனப் படர்கொள் கின்றனர். (௪)

அன்றியு மவன்மர பாதி யெம்பிரான்
றென்றிசைத் திராவிடஞ் சிறக்கென் றோருரை
நின்றது தடுப்பதங் கெடியார்க் காயினு
மொன்றுமோ வினிப்பல வுரைக்க வேண்டுமோ. (௫)

ஆதலின் முன்சொன்ன நாளு மாயது
போதலுந் தந்தையும் போற்றுங் காஞ்சியை
ஆதரஞ் செய்கின்றா னரன ருட்படி
மாதவ மல்லவோ வைய கஞ்செலல். (௬)

தேவரும் யாவருஞ் சென்று வேண்டினார்
மூவரின் முதல்வனை முன்னோர் காலையில்
ஆவியி னவிமுத வமைய வாக்கற்கு
நீவிர்நீட் டிப்பது நீத மன்றரோ. (௮)

என்னலு மின்சொலுக் கெதிருண் டோவென
அன்னவர் மனமகிழ்ந் தமைந்து தன்னுடைப்
பொன்னணி முதலிய புகலுஞ் சீதனம்
என்னுள வவையெலா மியல்பி னீந்தனர் (௭)

இந்திரன் மந்திரி யென்று மாதுலர்
பந்தியி லவர்செயும் பயண பேரிகை
தந்தமாக் கறிவுறச் சாற்றச் செய்தலும்
வந்தனர் பெருங்கடல் வளைய வந்தென. (௯)

கரிசெலப் புயல்செலக் கவன வேகக்காற்
பரிசெலத் திரையெனப் பரந்து நீண்டதோ
கிரியெனச் செலவொளி கிளருந் தேவர்கள்
விரிதிரைக் கடலென விரைந்து மொய்த்தனர். (௧0)

இந்திரன் வெள்ளிப மிவற வீகைசேர்
மந்திரி புட்பக மான மேறினன்
தந்திருத் தேவியர் தாமுங் கூடினர்
அந்திவ்வன் முனிவன்வான் கமன மாயினன். (௧௧)

மங்கைய ரிருமிருங் கிருக்க மானத்திற்
செங்கையி னலாயுதன் சிறந்து சென்றனன்
துங்கநன் மேழியைத் தொடர்ந்து பக்கத்தில்
சிங்கநன் குயிலொடு திகழ்ந்து செல்லவே. (௧௨)

சீதர னறிகிலாத் தேவ னீந்தவும்
மாதுல ரிருவரும் வரிசை தந்தவும்
வேதனு தியர்தரும் வேறுங் கொண்டவன்
காதல்கூர் காஞ்சியைக் கண்ணிற் காண்டலும். (௧௩)

இறங்கினன் முடியிசை யெடுத்த கையினன்
அறந்தரு தாளிணைக் கடிய னன்பினன்
பிறங்கிய தோற்றத்தைப் பிறருங் கண்டனர்
இறங்கினர் துதித்தன ரிறைஞ்சி மொய்த்தனர். (௧௪)

வந்துயர் காஞ்சியெம் மானை யன்னையை
தந்தம தன்பினுற் றண்டஞ் செய்தபின்
இந்திரன் மயன்றனு லியற்று மாளிகை
தந்தனன் மருகனைத் தழுவிச் சாற்றுவான், (௧௫)

உழுதுண்டு வாழ்வதா லுயர்வை மற்றையோர்
தொழுதுண்டு வாழ்வதிற் சுகிக்குந் தன்மையார்
பழுதுண்டென் றெண்ணலை பயிர்செய் வாயுனல்
றழுவுண்ட பதினெண்மர் தமையுந் தாங்குதி. (௧௬)

வலனையுண் டானிவை வழுத்தக் கின்னரர்
குலனென்று கீர்த்தியான் கூறு கின்றனன்
அலனுண்டு வரனுண்டு னுண்மை யுண்டுநா
னிலனுண்டு னுழவுண்டு நெடிது வாழ்தியால். (௧௭)

என்றுரை தரமுனி யிவனை நோக்கிநின்
சொன்றியின் றேலுயிர்த் தோற்ற மின்மையால்
ஒன்றிய போக்கியம் பலவுண் டாயினுஞ்
சொன்றிய விட்டொடு சுகமுண் டாகுமோ. (௧௮)

எற்பணி வானரு ளோர்க ளாயிரம்
அற்புடைச் சாம்பவி யருளும் வித்துள
பற்பல செலவிற்புட் பகத்தி னுனுளன்
சொற்பல வென்னுழூந் தொழிலில் வாழ்கென்றான். (௧௯)

போகவான் மகளையும் பொருந்து புண்ணிய
யோகவான் மகளையு மொருமை யாக்கினன்
ஈகையான் சுகமுளா னிவருக் கன்பினன்
ஆகையா லுழவனுக் கரிய தில்லையால். (௨0)

மாமியர் வாழ்த்தினர் மற்று மக்களைப்
பூமிசை வாழ்கெனப் புகழ்ந்து போயினர்
ஆமவ ரவரவர் பதத்தை யண்மினர்
கோமுனி வனுஞ்சில கூற நின்றனன். (௨௧)

திங்கண்மும் மாரியுஞ் சிறக்க வேர்த்தொழில்
பொங்குமுப் போகமும் பொலிய நான்குபொற்
கொங்கையின் போகமுங் கொண்டு வாழ்கின்றான்
தங்கிய முனிபதந் தாழ்ந்து கேட்கின்றான். (௨௨)

மீட்சிப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௨௫௬

26-வது

சதுர்த்திவிரதப் படலம்.

கலிவிருத்தம்

சிறந்த மேழியன் றேவுல கம்மொரீஇப்
பிறந்த மாதிலம் பெற்றது கூறினும்
நிறைந்த நோன்பி னிகழுஞ் சதுர்த்தியை
அறந்த வாம லறையலுற் றுமரோ. (௧)

இட்ட மாகிய யாவையும் பெற்றனன்
அட்ட போக மனைத்து மருந்தினன்
முட்ட நோக்கினன் முன்னத்தி னோர்முள
பட்ட தன்னது பையப்ப ரந்ததே. (௨)

திறைகொ ளும்முடிச் செல்வத் திறத்தினும்
குறையி லாதவர் கூவினி வில்லையால்
நிறையு நன்மக வின்றி நினைந்திவன்
இறையு மேகளிப் பின்றியி தெண்ணுவான். (௩)

புத்தை நீக்கிடு புத்திரப் பேறுக்கே
வித்தென் றூர்கண்மின் னுரெனுங் கேத்திரம்
ஒத்துத தோன்ற வுலகில் வதுவையை
வைத்த தாகு மாசான்களின் சம்மதம். (௪)

கலிநிலைத்துறை.

மண்ணும் பொன்னுமே மனைவிவேண் டினார்க்கந்த மனையு
எண்ணுங் காலையின் மகவினைப் பெறவென வெண்ணி [ம்
யுண்ணும் போதவ னுறங்கும்போ தொப்பிலா வுழவு
பண்ணும் போதிது மனத்திடைப் பாரமாப் பதியும். (௫)

போத்துங் கண்ணையும் பொருந்திய பாதிரி சனனம்
நீத்தும் பெற்றபே றுளத்துநி கர்க்கிவ னந்தோ
ஏத்தும் பூதலத் திசைதரு மூவைந்து மொருங்கே
பூத்தும் பாதிரி யொத்தனன் புத்திர னில்லேன். (௬)

முக்க டன்கொடு மூனோத்தயான் முதிர்ந்ததென் புலமாந்
திக்க டங்கிய கடன்றனைத் தீர்க்குமா செலுத்து
மக்க டம்வர விவேனெனில் வருமுழ வில்லை
எக்க டன்களை யெவ்வலி யாவரர் தீர்ப்பார். (எ)

தாயி லானுண்டி தம்பியில் லான்வலி சபையில்
வாயி லான்கலை மறமிலான் கையடை வழுத்தும்
நோயி லாதவன் வாழ்க்கைநா லில்லவ னுணுக்கம்
சேயி லாதவன் செல்வமுஞ் செவிடர்தங் காதே. (அ)

கதலிக் கீழ்வரு கதலிபோ லெனக்கொரு காளை
உதவி யில்லதேற் பாக்கிய முதவுவ தெவனோ
குதலை வாய்மகார் விழுதவர் மேற்கோளு மன்பு
பதியும் வேரிவை யில்லதோர் மரம்பலப் படுமோ. (கூ)

பேரைச் சொல்வதும் பெருங்கதி யுய்த்திடத் திலஞ்சேர்
நீரைப் பெய்வது நெடுந்தவன் பிதாவென நிகழ்த்துஞ்
சீரைச் செய்வதுங் குலமணித தீபத்தைச் சிவண
ஏரைச் செய்வது மகவன்றோ வெனநினைந் தெண்ணுப் (க0)

சுருதி நாயக நிசியுயர் சோமவா ராதி
விரதஞ் சாலியர் நாளொடும் விதிமுறை நோற்றும்
அருளளித்தில னரனென வயர்கின்றான் முனிவன்
வரவு கண்டனர் தம்பதி மூவரு மகிழ்ந்தார். (கக)

போய மாதவன் வலம்வந்து புவியிடைப் பலகால்
காயம் வற்றிட நோற்பவர் காண்பதே யன்றித்
தூய சேவடி யெனிவரத் தரிசனை தொடரச்
சேயி லாதவன் செய்ததெத் தவமெனச் செப்பி. (கஉ)

மகவி லாமையின் றுயரமும் மலரடி கண்ட
அகம லர்ச்சியு மெதிரெதிர் யலைத்திட வரன்பால்
நெகுமி ரக்குமுங் கனிவுமாய் நிகத்திடுந் துதியும்
தகவு கண்டனன் புரோகித ரைமுனித் தலைவன். (கந)

கல்வி கற்றனை யரனடி பற்றினை கரவாச்
செல்வ முற்றனை திருக்குக ளற்றனை திருந்தும்
இல்வ ளாதநற் பாரியை யுற்றனை யினிமேற்
சொல்வ தென்னவுன் மனப்படி தோன்றுவர் சுதர்கள் (கச)

ஓது மூவரு மொன்றினைத் தொடாங்கிடு முன்னே
தீது தீர்ப்பவன் கணேசனென் றரிச்சிப்பர் தெரியாய்
ஈது காறுநன் மகவினை விரும்பிநீ யியற்று
மாத வாதிகள் பயன்படா திருக்கின்ற வாறு. (கரு)

சித்தி புத்திகள் வல்லபை யாதிதே வியர்க்குக்
கர்த்தன் விக்கின விநாயகன் கழறுபா சித்து
மத்த தக்கர்க்கும் வேதவல் லிக்குமோர் மகளாம்
சத்தி யாமுமை யம்மைசெய் சதுர்த்திமா விரதம். (கசு)

விரைந்து நற்பய னருள்வது மிகவுமேன் மைத்து
புரந்த ரன்பெறு சாபமோ சனித்தது புகலும்
வரந்த ரும்படி நின்றது வானவர்க் கிறைமை
சுரந்த மூவர்க்கு முத்தொழில் பயந்தது தொன்று. (கஎ)

பிருகு சொன்னதாற் பார்க்கவ மெனப்பெயர் பெற்று
வருபு ராணத்திற் சதுர்த்திமா விரதத்தின் மகிமை
பெருகி நின்றதவ் விரதத்தை யனுட்டித்தும் பேணில்
அருள்சு ரந்துநற் கணேசனுன் மனம்படி யருள்வான். ()

என்ற காலையின் மகப்பெற்று னெனவெழுந் திறைஞ்சி
நின்ற மேழிய னந்தனோன் பின்னெறி முறைமை
என்ற னக்கரு முள்ளனனு மீசனை வணங்கி
முன்ற போதனன் யொழிப்படி மொழிந்தன் முறையால். ()

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சிங்கமா தத்திற் பூருவ பட்சஞ் செறிந்திடு சதுர்த்தியி லுதயம், பொங்குமு னெழுந்து நீரிடைப் படிந்து புகலுநித் திய வநுட் டானம், பங்குறப் புரிந்து பான்முத வாகப் பகரபி டேக நற் பொருளும், தங்குபச் சறுகு முதலருச் சனைக்குத் தக்கதாம் பத்திர மலரும். (உ0)

கதலிதேன் கனியே முதனிவே தனத்திற் கருதிடு பதார்த்தமுங் கவரி, விதமுறு கீத வாத்தியா திகளா மிகுமுப சாரவத்துகளும், துதிதரு சூட வாசனை திகளாந் தூபதீ பந்தொடர் பொருளும், மதிதரு பூசா விதிக்குவந் தனவா மற்றுள பொருள்களுந் தொகுத்து. (௨௧)

வகுத்திடும் பூசை மண்டப மவரில் வாழையிற் கரும்பினிற் புதுக்கி, மிகுத்திடு சுத்த மிருத்திகை கொணர்ந்து வேர்செலுக் கல்முதல் குற்றம், பகுத்திட வாய்ந்து சிற்பநூல் விதியில் பண்ணுவர் விநாயக முகூர்த்தம், மருத்துவப் பொன்னின் மற்றொரு முகூர்த்தம் வளமைக்குத் தகுங்கனம் வகுப்பார். (௨௨)

பின்னரா சிரிய ரருள்வழி சுத்த கங்கையி னனத்தைப் பேணி, மன்னுவெண் ணீற்றை யணிந்துயர் சென்னி மார்புகணிடங்கரஞ் செவிக, ளென்னுமிவ் விடத்தி லுருத்திராட் சங்களெண்ணுற நூனெறி தரித்துச், சொன்னபூ சனைமண் டபத்தினிற் குறுகித் துகளறு தண்டுலம் பரப்பி. (௨௩)

இதனின்மே லிழைசூழ் பூரண கும்ப மிருத்திமுன் னிரண்டுமூர்த் திகளும், அதனரு காக வெழுந்தரு ளச்செய் தாகம விதிப்படி பூசித், திதவிய வொன்றி ரண்டுநான் கென்னு மெடுத்துள கந்திர மிலக்கம், பதவிய வுருவேற் றிடுகவொண் ணுதேற்பாதியா யினுஞ்செபித் திடலாம். (௨௪)

ஐந்தினோ டாரெட் டுரைந்து பனிரண் டக்கர மந்திர மிலக்கம், பிந்திடி லயுத மாயினுஞ் செபிப்பர் பெரும்நா லேழெனு மெழுத்தின், மந்திர மயுதங் குறைவிலா தோம் வணங்குவ ரித்தொகைப், படியே, இந்தமந் திரங்க டம்மிலொன் றனையே யியல்பெற வுருச்செபிப் பாரால். (௨௫)

இவ்வழி செபிக்குங் காலயிற் பத்துக் கொருதரந் தருப்பண மியற்றி, ஒவ்விய பத்துத் தருப்பணக் கொருகால் ஓமமுஞ் செய்திடல் வேண்டும், அவ்விதம் பத்தோ மத்தினுக் கொருக்கால் அறுசுவைப் பதார்த்தங்க ளோடும், செவ்விதி னன்ன தானமுஞ் செய்து செய்கின்ற பூசையின் முடிவில். (௨௬)

அன்பொடு பொன்பூ முதலிய தான மவரவர்க் கியைந்தன வாற்றிப், பின்படு திங்கட் சுக்கில பட்சம் மிறங்கிய சதுர்த்தி யின் வரையில், முன்படு முறையிற் பூசனை செய்து மொழிமி ருத் திகையிறு லாய, இன்பது பெருகும் விநாயக மூர்த்திக் கிய ன்றவர் டம்பர மியற்றி. (௨௭)

எழுந்தரு ளச்செய தாற்றினின் மடுவி விசைதடா கத்தினி லாதல், தழைந்திரு நிருத்த தீதவாத் தியங்க டழங்கிட வைத்தி டல் வேண்டும், ஒழுங்கிலிப் பூசை முப்பது நாளு முணவுநித் திரைகளு மின்றி, வழிந்தசத தாதி விஷயமு நீக்கி வந்தநாண் முப்பத் தொன் றதனில். (௨௮)

உத்தம வத்தி யெளியவ ரொக்கன முதலின ருடனுன்ப ரொணுதேல், அத்தின நீக்கி மறுதினந் தொடங்கி யவிசுபால் பழமருந் திடலாம், சத்துவ மிலதே லாரம்பத் தேனுஞ் சாற் றிய முறைநின்று செயலாம், எத்திறத் தேனு மூவேழு மாந்தர்க் கியற்றுவ நன்னதா னங்கள். (௨௯)

ஒருரு வத்திற் பூசிக்கிற் றனதா னியசுத சம்பத்துண் டாகும், சீரியபந்து வர்க்கங்க ளநேகஞ் செறிந்து வாழுந் திருப் பர்செய் முறையில், ஈருரு வத்திற் பூசிப்பர் தங்க ளிட்டகா மிய த்தினை யடைவர், நேருமூன் றுருவிற் பூசிப்பர் நவரத் தினங் களை நிறைத்திடு வாரால். (௩௦)

ஆனநான் குருவிற் பூசிக்கிற் புருடார்த் தங்களா மறமுத லடையும், ஏனையைந் துருவிற் பூசிக்கிற் சார்வ பௌமரா யிருந் துல களிப்பர், மோனவா றுருவிற் பூசிக்கிற் சிருட்டி முதலிய முத்தொழிற் கிறையாம், மானவே ழெட்டொன் பதுவெனிற் சார்வக் கியத்துவ மருவிவாழ பவரால். (௩௧)

நாடிய பத்தி லாந்திரி கால ஞானத்தை யுடையவ ராவர், நீடுமவ் வுருவாற் சனகரா திகளு நெடியனு றியர்களு முயர்ந் தார், தேடிய பதினொன் றுருத்திரர்க் கதிகாரிக ளைவர், ஈடறு பனிரண் டுருவிற் பூசிக்கி விடரெலா மகன்றினி திருப் பார். (௩௨)

பன்னிரண் டாதி நூற்றெட்டு வரையிற் பரவுவோ ரொன் றினுக் கொன்று, நன்னயம் பெறுவ ராயிர வுருவில் ஞானமுங் கல்வியு மடைவர், உன்னிய வீரேழ் தலைமுறை வரையி லுளா ரையு முத்தியிற் சேர்ப்பர், பன்னிய சத்த மூர்த்திமுப் பகலிற் பரவுவோர் பிணியிட நடையார். (33)

ஒன்பது தினத்தி லனந்தசித் திகரை மோரைந்து வருட மே யாயிற், துன்பபா தகங்கள் யாவையுந் தீருஞ் சொல்லுமந் தியமட்டும் பரவில், அன்பருக் கருள்செய மலன்வே தத்தி னரு ம்பிர ணவப்பொரு ளாய, முன்பரா பரமாங் கணபதி யுடைய முதன்மைச் சாயுச்சிய மடைவர். (34)

கலிவிருத்தம்.

அவ்வவர்க் கியன்றிடு மளவின் மூர்த்திமை
இவ்வழி மூலமந் திரமே காட்சரம்
ஒவ்விய சடாட்சர மென்ப வொன்றினிற்
செவ்விதிற் செபிப்பரித் தேவ மந்திரம். (35)

முடிவினிற் றருப்பணு திகள்மு டித்துமேல்
அடைவுட னறம்பதி பூசை யாற்றுவார்
தொடர்தரு விரதத்தைச் சுருக்கிக் கூறினேன்
படிமிசை யியற்றிநீ பயன்பெற் றுய்தியால். (36)

என்றவ னுரைத்தலு மெழுந்தி றைஞ்சினன்
கொன்றையன் வாக்கெனக் கூர்ந்து கொண்டனன்
அன்றவ னுசிக ளுறையத் தம்மனை
சென்றனன் றன்றவத் தேவி யாருடன். (37)

கலிநிலைத்துறை.

விண்ணி ணெண்மணி சிங்கத்தில் விரைகின்ற திங்கள்
எண்ணி யெண்ணியீண் டிருக்கவெண் மதியமுங் கடந்து
புண்ணி யம்பெறு சதுர்த்திமா விரதத்தைப் புரிய
கண்ணி யம்பெறு சிராவண முதித்தது களிக்க. (38)

வெற்றி நோயின்மை வாழுநா ளழகுநல் விதிபொன்
உற்ற கல்விவண் புகழ்வலி நுகர்ச்சி நெல்லுணர்வு
மற்றை வாலிபம் துணிவொடு பெருமை மூவைந்தும்
பெற்ற னேனினி மகவொடீ ரெட்டையும் பெறுவேன். ()

எனமகி ழுந்த வனகரெலா மலங்க ரித்தெம்மான்
மனமகிழ்ந் திடுபூசனைக் கினியன வருவித்
தனைய முற்பகற் சதுர்த்தியே யாதிமுப் பதுநாட்
டனையொ வாதவன் பூசனை செய்தனன் சரியாய். (40)

திரிச லங்கந்தம் புட்பம்நை வேத்தியஞ் சிறந்த
கருது தூபதீ பங்களா லத்திகண் ணாடி
அரிய சாமர மாலவட் டங்குடை யாதி
பரவு நற்பதி னாறுப சாரமும் பண்ணி. (41)

ஆய பூசனைக் கியன்றன பற்பல வாற்றி
நேய மோடந்த விரதத்தை நெறிப்பட முடித்து
தூய வல்லிய ருடன்சுக போகமும் சுகித்து
நாய கன்கரி முகனருள் பெருகிட நடந்தார். (42)

சதுர்த்திவிரதப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் சஉ.

27-வது

சந்ததிப்படலம்.

கலிவிருத்தம்.

திறம்பெறு கண்மலி செல்லப் பேந்திரன்
சிறந்தநற் சதுர்த்திமா விரதஞ் செப்பினும்
முறம்பெறு செவியனம் முடி கத்தினால்
பிறந்திடு சந்ததி வளனும் பேசுவாம். (1)

இன்னண மொழுகையி லெம்பி ரானடி
துன்னினர் பெருமையைச் சொல்வ தன்றியே
அன்னியர் பெருமையி லாவ லாரென
பொன்னனு ரிருவர்நாப் புளிப்பை நாடின. (2)

கருப்பினுங் கருத்தன கடத்தின் சூசுகம்
விருப்புறச் சிவந்தவித் துருமம் வெள்ளின
உருத்திரிந் தனகய னுள்ள மூந்தின
பருத்தன கனிந்தன பாந்த பொன்மலை (3)

அருந்ததி மூரந்தைகோத் திரர்க ளூட்டிய
விருந்தினர் வயறென வயிறு விம்மின
திருந்திய திங்களீ ரைந்துஞ் சென்றன
பெருந்திரு நாளிடை மகாரைப் பெற்றனர். (4)

கோப்புக்கவ் விருவரைக் குற்ற நீங்கவே
தீப்புக்கு மணந்தவன் சிறக்கப் பூசைக்கும்
காப்புக்கு முன்னுடைக் கடவு ளன்பினல்
பூப்புக்கு வந்தனர் புண்ணி யத்தவர் (5)

ஒக்கநூற் றறுவரென் றுரைக்கும் பாலரில்
தக்கணம் பரவிடத் தரணி யாவதி
குக்கியி லுதித்தவர் குபேரன் பேராம்
மக்களெம் பத்தைவர் வகுத்துக் கூறினேன் (6)

ஓரையங் கிரகமைந் தங்க மோங்கிய
சீருடை நூற்றெட்டிற் சிறந்த காலையில்
பேருடை மைந்தர்கள் பிறந்த போதினை
பாருடைத் தந்தைசௌ பரியொப் பாக்கினன். (7)

நச்சிய விகடசக் கரனை ஞதனை
மெச்சினன் செய்முறை விதியிற் செய்தனன்
இச்சைக ளாம்படி யெவர்க்கும் வீசினன்
கைச்செறி பாலர்கண் முகமும் கண்டனன். (8)

துன்பறத் தோன்றிய தூய மைந்தர்க்கு
நன்பெய ரன்புட னுட்ட வெண்ணலும்
அன்பினும் புரோகித னுதலா னுங்கொன்
முன்பினுந் தெரிகிற முனிவன் றேன்றினன். (9)

வந்தவ னடிமலர் வணங்கி வாழ்த்தினன்
எந்தவம் பயத்தலா லிங்கு வந்தனை
முந்துமுன் னுரையெலா முடிவில் வேதமே
மைந்தர்க டகுபெயர் வழங்கு வாயென. (10)

ஆனவா தானமே யாதி யாவையும்
ஈனமி லென்விதிக் கிசையச் செய்தனை
ஊனமில் சோடசத் தொன்றி தாகையால்
கானவர் நாமங்க ணவிலு வேனெனு. (11)

உறுவெண்ணெய் கிழார்முத லோங்கு நாகந்தை
இறுவிரண் யாவதி யெச்ச நாமங்கள்
பெறுசெயங் கொண்டவ ராதி பேணிய
அறிகன தமிழினு ரறுதி யல்லவர் (12)

பிள்ளைமார் தேவரே பிறங்கு நாயன்மார்
வள்ளிய முதலிமார் மகிழி ராயரே
உள்ளிய உடையரே யுயர்கி ழார்முதல்
எள்ளிலாப் பொதுப்பெய ரீற்றி லேற்றினன். (13)

பொய்வழி யொழித்தநற் புரோகி தத்தவன்
செய்வன யாவையுந் திருத்தி மைந்தருக்
கைவய தாம்பொழு தறிவு றுத்தினன்
உய்வழி யாகமா திகளு மோர்ந்தனர். (14)

கற்றிடுங் கலையொடு காய மற்றைக்குப்
பிற்றையி லுயர்வெனப் பெரிது மோங்கினர்
நற்றவன் பிதாவென நானி லத்தவர்
சொற்றன ரிதனினுஞ் சுதர்கள் செய்வதென் (15)

பசுபதிக் கன்பிலர் பகைஞர் பற்றலார்
அசைதர வஞ்சுவ ரபய ரார்வமோ
டிசையறும் வறியவர்க் கிரண்டு தாவன்னர்
திசையெலாஞ் செலுத்திய தேசி லாதவர். (16)

இடபநன் குலுக்கினில் யானை யாடலின்
அடலரி மதர்ப்பினி லடிபெ யர்ப்பவர்
கடனறிந் திருப்பவர் கடவு டாட்கவி
யடைதிறந் தெனவரு வாயர் வல்லவர். (17)

புதல்வரைப் பார்த்துத்தன் புயங்கள் வீங்கினன்
வதுவையாற் றுதற்கவன் மனத்தி னெண்ணினன்
துதிநள கூபரன் சொன்ம றுமென்ன
விதிமுறை மணமொழி விளங்கப் பேசியே. (18)

கலிநிலைத்துறை.

தன்னை வானிடைத் தோழனென் றவன்றவத் துதித்த
கன்னி மார்மைந்தர் தொகையினர் கடிமணஞ் சிறப்ப
வன்னி யூழ்முறை வதுவையை முடித்தனன் மாரன்
அன்ன மைந்தர்க்குத் தோன்றின ரளப்பரும் புதல்வர், ()

சகரர்க் கைந்திலொன் றாகிய சந்ததி யானோர்
பகரத் தக்கன கோத்திர மற்றையப் படியாய்ச்
சிகரத் தெண்டிரைப் புவியெலாம் பரந்தனர் செறிந்து
நிகரற் றோங்கினர் யாரையுந் தாங்கிடு நிலையர். (20)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பெருமலர்ச் சோலை சூழுமுன் னூர்ப்பாற் பிறங்கிய வேலப்பே ரூரில், மருவிய வாங்கை கோத்திரம் விளங்க வந்த வேலாயுதன் புதல்வர், பொருவறு பழனிச் சாமியும் புகழைப் போற்றிய முத்துச்சாமியும்போல், இருநில மதனைத் தங்கொடி காக்க விசையொடு வளர்ந்தனர் பரவி. (21)

சந்ததிப்படலம் முற்றிற்று.

இரண்டாவது உத்தரகாண்டம்.

ஆக திருவிருத்தம் உக.

28-வது

தொண்டமானழைத்த படலம்.

கலிநிலைத்துறை.

நற்சரிதந் தனினடக்கு மாந்தைகோத் திரத்தார்கள் நயந்துதங்கண், முற்சரிதந் தனையெடுத்து மொழிந்தகவி ராயர்முகமுன்னிநோக்கி, பிற்சரிதந் தனையுமுடன் பேசுகெனப் பெருந்தமிழிற் பெரியராமீனுர், சொற்சரியென் றுருங்குகொளப் பலவளவை யாற்சுருக்கிச் சொல்வதானன். (1)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சான்றோருக் கிருப்பிடமாய்ப்பலகவிஞர் பிறப்பிடமாய்த் தாயா யெல்லா, மீன்றாளுக் காலையமா யோர்வளத்துக் கேற்றதுவா யெந்நாட் டுக்கும், தான்றானே முதன்மையதாய்த் தருமமெண்ணுன் காடிடமாய்ச் சற்றே னும்பொய், தோன்றாத சைவநெறி துலங்குகொளு வீற்றிருக்குந் தொண்டை நாடு. (2)

சுக்கிரனங் கெழுந்தருளத் தண்டகனென் றொருவேந்தன் றொழாது தாழ்த்த, அக்கிரமத் தாலுனது நாடெட்டி வனமாகவதனின் வாழு, மிக்கிருந்த குடியோடி வெவ்வேறு நாட்டகத்து மேவ வென்று, சக்கிருந்து பொறிபறக்கச்சபித்திடலுந் தண்டகனுந் தாழ்ந்து கேட்பான். (3)

எக்கால மிதுநாடா மெனதுகுல வரக்கிதை யென்றாள்வார்கள், முக்காலங் களுமுணர்ந்த முதியோனே முனிவகன்று மொழிதி யென்ன, கொக்காலு மிந்நாட்டை யாதொண்டைச் சோழனென்றோர் கோக்கைக் கொள்வான், அக்காலம் பழங்குடிக ளனுகுவருங் குலத்தினர சற்றுப் போமால். (4)

பிருகுமக னிடசாபம் பிடர்பற்றிப் பிடித்துந்தப் பெருக்காளர்க்கு, ளொருவன்மக ளெழில்கேட்டு வதுவைசெய முயல்வுமவ் வுழவர் கூடி, யிருளிலொரு முடிவல்லங் கரித்துனது மனைவியென வெழுதிக் கண்டத், தொருமுடங்க றுங்கமன்ன னுறையுண்முகத் தருகுகட்டி யுடனெல்லாரும், (5)

ஈழமுத லியதமிழ்நா டெங்குமவர் குடியேறி யேரின் வாழ்ந்தார், வாழுவோரு வழியுண்டோ மற்றவரு மப்படியே வலசை வாங்க, பாழடைந்து தண்டக நாடெட்டிவன மாய்ப்பலநாட் படர்ந்து செல்லச், சோழன்மக னுதொண்டை மாலையணி தொண்டமான் றோன்றி னானால். (6)

கலிவிருத்தம்.

சாதியாச் சிரமநற் சமய மாதியின்
நீதியு முயற்சியு நிமலன் பத்தியுங்
கோதினற் குணமுங்கொள் குருசி லாகையால்
ஆதியிந் நாட்டுடை யருமை யோர்ந்தனன். (7)

அங்கத்தி லொன்றுமற் றங்க மைந்தையும்
பங்கத்தி னீக்கியே பாலிக் கத்தகும்
கங்கையின் புதல்வர்கா ராள ராங்குடி
பொங்கத்தின் டிறல்வலி பொருந்து வேனெனு. (8)

தன்பெயர்த் தொண்டை மண்டலந் தழைக்கவே
முன்பெயர் குடிகட்கு முடங்கல் போக்கினன்
அன்பொடு முழவரு மலாரும் புக்கனர்
மன்பிரித் துணரமாட் டாது மாழ்கினன். (9)

நீரொடு சேர்ந்த பாலென நிறைந்தனர்
யாரும்வே ளாளரென் றறைகின் றூரிதிற்
றீரும்யோ சனையினித் தெய்வத் தாமென
நாரிகா மாட்சியை நயந்து போற்றலும். (10)

ஆரணி யருத்தபா கத்தி லேயுறை
காரணி யுலகெலாங் கருவிற் றங்கிய
பூரணி செயலிச்சை புலமென் றேவிரி
தோரணி யுருவொரீஇத் தோன்றி வானிடை. (11)

எவ்வெர் சிரத்தினி லிம்முகூர்த் தத்தில்
செவ்விய வானதித் திவலை வீசிடும்
அவ்வவ ருழுவரென் றறிக வென்றலும்
எவ்வரீங் கினன்குல விரவி மன்னனே. (12)

விண்டல நீர்மிசை வீழ்ந்த மாந்தரைக்
கொண்டனன் கங்கையின் குலத்த ராமெனப்
பண்டைநுந் தேயத்தைப் பலன்ற ரும்படி
மண்டுறத் திருத்திநீர் வாழ்மி னென்றனன். (13)

உதவும்வே ளாளர்க ளோர்பத் தொன்பது.
சதமெனச் செய்தனர் தரைதி ருத்தினர்
துதிதரு முழவர்க டுணைமை யாகவே
பதியெனத் தொண்டமான் பார ளித்தனன். (14)

சோழமே தூளுக்கொங்கு சூழ்ந்த சேரநாட்
டீழமே பாண்டிய மிவற்றி ருந்தவர்
வாழுநாட் டின்பெயர் மருவி வாழ்ந்தனர்
மேழியார் பெருக்கையார் விளம்பத் தக்கவர். (15)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

செகம்புகழ் வேல னூர்ச்சின்னத தம்பி சேய்கள்செல் ல
பனுஞ் சிறந்து, மகிழ்ந்திடும் பழனி மலையும்வல் வேலாயுதனும்
போல் வாழ்ந்திருந் தனரால், அகன்றிடு தொண்ட மண்டல மீண்
டோர் அவ்வத்தே சத்திடை யிருந்தோர், இகம்பர மிாண்டுக்
கேதுவாய் விளங்கு மேருடைச் சீர்ப்பெருக் காளர். (16)

தொண்டமானழைத்த படலம் முற்றிற்று.

29-வது

புகழ்ச்சிறப்புப் படலம்.

கலிநிலைத்துறை.

இன்ன வாறுநும் பண்டைநாட் டியைந்தன ரென்ன
மன்னு மாந்தைகோத் திரத்தர்க ளொக்கியிவ் வருணத்
தென்ன காரணத் தாலெவ ரெப்புக ழேற்றார்
அன்ன வாறுணர் தரமொழி கென்றலா லறைவேன். (1)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சொன்னாலுந் தவறாத தூயகுண வேளாளர் தொகுதி யாசப், பன்னாளும் பயில்கீர்த்திப் பரப்பையொரு வாறுகம்பன் பாரித் தானால், பின்னாளு முன்னாளும் பெருங்கீர்த்திக் களவுண்டோ பெரிய ரானார், என்னாளுஞ் சங்கிரகித் தெண்பனிரண் டென்பமிரண் ணுக் குறையிட் டாப்போல். (2)

அளைவாரிக் கலியபர னடியருக்கன் பியற்றிவரு மமைதி யின்கண், வளைவாரி யன்ன செல்வ மடிந்துபசி யுழந்திரவின் மழையும் பெய்ய, உளைவாரிக் கருத்தறிய வெம்பெருமா னடியரைப்போ லுற்ற காலை, முளைவாரி யமுதிட்ட விளையான்றன் குடிமாறர் முதுவே ளாளர். (3)

திருவாரூ ரினிற்றேவர் சிரயத்து ளிருந்தசிவ னடியார் தம்மை, வருமாறு வணங்காது செல்கின்றா ரையும்மவரை வலிய வாட்கொள், பெருமானும் புறகென்று திருத்தொண்டத் தொகையினிற்பின் பிரீதி யுற்றார், விரைமேவு மலைநாட்டிற் செங்குன் றூர் விறன்மிண்ட ரொருவேளாளர். (4)

தொழுத்தவந் தாற்பிறந்த தோகையன்னாள் குழல்பஞ்ச வடிக்கா மென்ற, முழுமுதலாம் விரதியர்க்கு முற்றுமறுத் துக் கொடுத்து முதன்மை பெற்றார், வழிவழியாய் மள்ளர்படைத் தலைவரியோ கத்தில்வருங் குடியில் வந்த, உழவர்செறி கஞ்சா றூர் மானக்கஞ் சாறனா ரொருவே ளாளர். (5)

அயிலுமுண வொழியவிலைக் கறியுமரி தாய்ப்புனலை யார்ந்துங் கூலிச், செயலினிலிங் கம்பாவச் செந்நெல்லி னரிசிமா வடுசெங் கீரை, கையிலெடுத்துச் செலமெலிவால் வீழ்ந்தனர்சிந் தினதென்று கழுத்த றிந்தார், உயருகண மங்கலத்துள் வருமரிவாட் டாயனா ரொருவே ளாளர். (6)

கொழுத்ததிரு முனைப்பாடித் திருவாமூர்க் குறுக்கையர் தங் குடியில் வந்து, விழுத்திலத வதியாராற் றிருப்புண்டு நீற்ற றைவெவ் வழலு மாவும், எழித்தொருகற் றாணின்மிதந் தப்பூதி யடிகண்மைந்தர்க் குயிருந் தந்து, செழித்தகத வினைத்திறந்த திருநாவுக் கரசரொரு திருவே ளாளர். (7)

அநகனடி பெயர்ப்பித்த தரும்பாவம் வன்றொண்ட ரடையப் பாரேன், எளவருமுன் சூலையைவிவ் வகட்டினுட னீர்வனென் வீர்ந்த வெங்கோன், புனலமூவத் திருப்பெருமங் கலந்தன்னிற் பொருநர்சியோ கத்தைப் பூண்ட, கனமருவு மேயர்குடியினில்வந்த கலிக்காம ரொருகா ராளர். (8)

எண்சீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.

தொண்டையதிற் றிருவேற்காட் டதனிற் றோன்றி தூயமகே
சுரபூசை துறைவ ழாது
கண்டுவரும் பொழுது பொருள் கைக்கில் லாமற்
கழனிவிற்று மடிமைவிற்றுங் கடைசெ லாமல்
பண்டுபயில் சூதாடத் தவங்க டோறும் படர்த்ததிலே
மறுத்தாரை வாளாற் குத்திக்
கொண்டபெயர் நற்சூதர் மூர்க்க ராங்கே
கொள்பொருளைத் தானுண்ணார் குலவே ளாளர். (9)

தருத்தணியில் சங்கை மங்கை பிறந்தார்நின்ற
சன்னதி துன்பத்தைத் தாண்ட வேண்டி
பிரித்துணர்வர் பௌத்தவடி வருக்கத் தானே
பெயர்ந்தமனத் தினராகிப் பிறவு மோர்ந்து
திருத்தமுள சிவசமயஞ் சிறந்த தெல்லாஞ் சிவனருளே யென் றுகல்லா லெறிவ ரோர்நாட்
கருத்தினமறந் துணப்போவார் மீட்டி லிங்கங்
கருத்தில்வரக் கல்லெறிசாக் கியர்கா ராளர். (10)

மணிகொழிக்கும் பொன்னிவள நாட்டின் மிக்க
வளமைபெறு வரிஞ்சையூ ரவத ரித்தார்
பணிமுடித்த செஞ்சடையெம் பரமன் பாதம்
பற்றுமடி யாரடியைப் பற்றி நிற்பார்
தணிவிலடி யாரையிகழ் பாவ னுக்கைத்
தண்டாயத் தாலடிக்கிற் றன்கை வாளாற்
றுணியவரி தருஞ்சத்தி னய னருஞ்
சொல்கின்ற கங்கைகுலத் தொருகா ராளர். (11)

திருப்பதிக முடைத்தான வெண்ணான் கென்னுஞ்
சிவாலயங்கள் சிறந்திலகு தொண்டை நாட்டில்
விருப்பமிகு திருமயிலாப் பூரிற் றோன்றி
மெய்ப்பரமன் றனைமன லயத்தி ருத்தி
யருட்பெருகு ஞானவிளக் கதனைப் போற்றி
யானந்த மஞ்சனநீர்த் தங்கொண் டாட்டி
வரித்தவன்பா கியவமுதை நிவேதிக் கின்ற
மானதத்து வாயிலா ரொருவே ளாளர். (12)

அன்னமுறு பொன்னிவள நாட்டிற் செல்வ
மாந்திருநீ டூரதனி லவத ரித்தார்
பன்னுசிவ னடியார்மேற் பத்தி யுள்ளார்
பகைவராற் சாய்ந்தவர்க்காய்ப் படுபோர் செய்தே
அன்னதிறற் கூலிகொண்ட பொருளை யெல்லா
மரனடியார்க் களவின்றி யளித்த லாலே
தன்னைமுனை யடுவாரென் றெவருஞ் சொல்லத்
தக்கவருஞ் சாதியிலே யொருவே ளாளர். (13)

பெரும்புகழ்சேர் புனனாட்டின் மருகா நாட்டிற்
பெருந்தஞ்சை நகரத்தி லவத ரித்தார்
விரும்பியவ ராரூர்வன் மீகநாதர்
மெய்த்தொண்டின் வழிநின்ற ரொருநா ளங்கு

வருங்கழற்சிங் கப்பெருமான் மனைவி வாச
மாலைகட்டு மண்டபத்தில் விழுந்திருந்த
அரும்பியபூ வொன்றெடுத்து முகக்க நாசி
யரிந்தசெருத் துணைநாத ரொருவே ளாளர். (14)

திகழ்வளவ மண்டலத்தி நாட்டியத்தான் குடியிற்
சேனாதி பத்தியத்தாற் றிட்டவரு நெல்லை
மகிழுசிவா லயவமுதாய் வைத்துற்று ரெடாமல்
வற்புறுத்திப் பகைமேற்போய் வாகைபெற்று வருமுன்
தருகடனாய்ப் பஞ்சத்தா லெடுத்துணுந்தன் கிளையைத்
தன்மனைக்கு ளழைத்திடுவார் தன்பெயரான் றடுத்து
மிகையலநெல் லுண்ணியின்பா லுண்ணியிவ னென்று
வெட்டுகின்ற கோட்புலியா ரொருவே ளாளர். (15)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்,

மருவுதொண்டை மண்டலங்குன் றத்தூரிற் சேக்கிழார் மரபில் வந்தார், அரியவருண் மொழித்தேவ ரநபாய சோழன்முதன் மந்திரி யாவார், உரியவன்பி நம்பியாண் டார்நப்பி யந்தாதிக் குரைவி ளங்கப், பெரியபுரா ணஞ்செய்தார் கங்கைகுலத் துதித்தவொரு பெருங்கா ராளர். (16)

ஆதிநந்தி சீடர்சனற் குமாரமுனி யவர்சீட ரரிய நூற்றோர். சேதனசத் தியஞான தரிசனியாங் கவர்சீட ராய்த்தமிழ்க்கட், போதுபரஞ் சோதிக்கு மெய்கண்ட தேவரென்பார் புகழ்மைச் சீடர், ஓதுகிற சந்தான சாரியர்நால் வர்க்குமுத லொருவே ளாளர். (17)

மெய்கண்ட தேவர்கண்ட முதநூற்கு விரிவாகத் துறைசை மேவிப், பொய்கண்ட மாபாடி யந்தருக்க தீபிகைநற் புகழ்க் காஞ் சிக்கோர், ஐகண்ட மான்மியந்தொல் காப்பியச்சூத் திரவிருத்தி யமக மாதி, கைகண்ட சிவஞ்ஞான சுவாமிசிங்க புரப்பாண்டிக் கங்கைச் சேயே. (18)

நாக்கொடுத்த செந்தின்முரு கடிபாடி நவில்குருவை நாடிச்
செல்லும், போக்கிடத்து மதுரையணங் கிளந்தமிழை வடுகனொடு
பொருந்தக் கூறி, வாக்களித்த தருமபுரத் தேசிகன்பா லுபதேச
மருவிக் காசி, ஊர்க்கணுற்ற நெறிவிளக்கக் குமரகுரு பரசாமி
பொருவே ளாளா. (19)

இருநாட்டி னுறைகாட்டி யென்னாட்டின் வறள்காட்ட லெ
ன்னு மென்று, வருநாட்டி கிரிமீதூர் வண்புயலைத் தளைபூட்டிச்
சிறையின் மாட்ட, தருநாட்டி னிழலாளி தனக்காகப் பாண்டிய
யன்றன் சமுகத் தேறி, ஒருநாட்டின் பிணையுரைத்துச் சிறைமீ
ட்டஉத்தமனு மொருவே ளாளன். (20)

தானமிகு வெண்ணெய் நல்லூர்ச் சடையன்கண் ணப்பன்
மிகு தயையிராமன், ஆனபெயர் மூவர் பன்னீ ராயிரத்தி லெழுந்
திருக்க வளவிலாத, யேனையவே ளாளர்களு மெழுபதினி லடங்
காம லிருகை யேற, வானையளா வியபுகழ்சேர் கவிச்சக்கர வர்த்
தி புகழ் மரபினுளர். (21)

மகவொன்று கைக்கொண்டு வருநீலி வழிச்செல்லும் வணி
கற் பற்றி, யிகலொன்று வழக்குரைக்க வேதுவினா லிவன்மனை
யென் றிசைத்தார் முன்னைப், பகைகொண்ட மனநீலி யுயிர்கொ
ள்ள வவ்வணிகன் பழிக்காத் தீயிற், புகுதந்தின் னுயிர்கொடுத்
தார் பழைய னூரினில்வந்த புகழ்வே ளாளர். (22)

பொருள்குறையப் புகழ்வளர்த்த வயனம்பாக் கச்சடையன்
புலவர்க் கீய, வொருபொருளு மில்லாம லுயிரைவிட வன்மீகத்
துயர்கை நீட்ட, அரவருளு மாணிக்க மன்றிரவி லளித்தவனுக்
கன்பு செய்த, பெரியபுகழ் வேளாளர் குலந்தனக்கோர் தீபமெ
னப் பிறங்கு மாதோ. (23)

உமையவட்குச் சேடியனிந் திதையென்பாண் ஞாயிறெனு
மூரும் பேருஞ், சமைவுடையான் மகளாயச் சங்கிலிநாச் சியாரெ
ன்னுந் தருணக் கண்ணி, அமைவுடைய திருவொற்றி யூரணைந்
தவ் வரனருளா லாரூ ரற்குக், கமைவுதரு மனைவியெனக் கைக்
கொடுத்தா ளிவளுமொரு காரா ளப்பெண். (24)

உளங்கத்த னிடஞ்செலுத்துங் கோட்புலியா ரடிமையென வுதவப் பெற்றும், விளங்கத்தம் புத்திரியா ரிவரென்னத் தமிழ் வேதமென்மை யூடு, களங்கத்து நிசியிலெந்தன் கத்தனைத்தூ தனுப்பினவர் கருணை யாலே, விளங்கச்சிங் கடியப்பனெனச் சொல்ல வந்தவளும் வேளா ளப்பெண். (25)

தம்பிரான் றோழனுக்காப் பரவைக்கு நெல்லனுப்ப சாம மெய்த, எம்பிரான் கனவுடனே தனதனு நெற்குவிக்க வெழு ந்து கண்டான், நம்பியா ரூரர்க்குச் சொல்நீள வெனப்பதிக நவி லப் பூதம், பைம்பொழிலா ரூர்நிறைக்க மகிழ்குண்டை யூர்நிகழ் வர் பழவே ளாளர். (26)

பூர்வமுறு சைநம்விட்டுப் பாசுபதம் புகுநீறு பூசி வே ளாண், டீரன்வரு தில்லைநல்ல தம்பியருள் கவியருணு சலன்சீர்க் காழிப், பேருடைய பள்ளம்மான் மியங்கோவை பிறமொழிந்து பிள்ளைக் காக, ஓரனும னிளந்தமிழோ டிராமநா டகஞ்சொன்ன ளொருவே ளாளன் (27)

மாகம்ப னிடங்கற்றோ னேகனுயிர் வழங்கநிதி மறைத்துக் காத்த. சோகம்பொன் றந்தேவற் சொற்கேட்ப மூவரசுந் துதி க்க வந்நாண், மேகம்பண் டுறுஞ்சிறையை விடுத்தமைபோல் விடுத்தபுகழ் விளங்கித் தோன்றும், ஏகம்ப வாணனென்பா ணுறைநகர் சனித்ததமி ழெழில்வே ளாளன். (28)

ஒருமுனைப்பா கங்கொடுப்பி யெனக்கனிட்ட ஹுரைத்த வுரை யோரா னென்பால், வருமுனைப்பா டியவுரைத்தே னது தெளிய வெனச்சனியூர் வாணன் மீண்டப், பெருமுனைப்பாண் டியன்பெயரைப் பெயர்க்கவுந்தன் பெயரதனிற் பேண வுஞ் செய், திருமுனைப்பா டியில்வக்க பாகையிலாட் கொண்டானோ திகழ்வே ளாளன். (29)

தேடலரி தாமுழவிற் றிருவடியார்க் களித்துவரச் செல்வந் தேய, வடலருந் துள்வனுக்கெட் டாவடியிற் குறைகூறி யிரங்கி யேத்த, ஆடலறு பத்தொருநான் கவற்றினொரு விளையாட்டி னன்பி னீந்த, கூடனுல வாக்கோட்டை பெற்றவனும் பாண்டியி லோர் குலவேளாளன். (30)

எள்ளளவு மகிழ்நனுரை மருமன்மண லட்டும்விளக் கேலா வெல்லின், நள்ளளவி லஃதெடுத்து முலக்கைவிட்டும் பின்று யின்று நனுமுன் செய்தும், உள்ளளவி லுணருவதற் கொருவழியு மின்றியுமவ் வுரையெ டாமல், விள்ளளவி லூகிசலப் பொருளழியே னென்றவளும் வேளாளப்பெண். (31)

விள்ளங்கா லக்குமுன்னே விரைந்தகவி சொல்காள மேகமென்போன், புள்ளங்கா லத்துகளு மீனரா மூர்முதலிப் புகழுன் றன்பால், உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்றவெனக் கவிபாதி உரைக்கு முன்னே, வெள்ளங்கா லம்புகழுத் தருமந்தக் களப்பாளன் விறல்வே ளாளன். (32)

பாவையொரு பங்கன்மன்றப் படிக்காசைந் தருளவந்த படிக்கா சென்போன், கோவைதிகழ் மணியனைய தன்னூட்டுச் சதகத்தைக் கூறக் கேட்டு, காவைநிகர் கொடைகொடுத்து பல்லக்குஞ் சுமந்துகன கண்ணி யங்கொள், மாவைவளர் கத்தூரி மகனுய கருப்பணனோர் மதிவே ளாளன். (33)

வல்லவரும் வனம்புகுந்து வந்தடுபோர் செயிப்புரைசெய் வடகா தைக்கே, எல்லவரும் படியருளும் பெருந்தேவர் வாக்குமிக விறந்ததென்று, தொல்லுவருங் கதையடக்கிச் சொல்லுநல்லா னென்பவற்குத் துணையாய்ப் பாடு, முல்லைவரு முருகப்பனெனும்பாண்டி நாடனுமோர் முதுவே ளாளன். (34)

தண்பாய்நீர் வளநாட்டுக் குலோத்துங்கச் சோழனுடைச் சமுகந் தன்னில், ஒண்பாவி லெதிர்த்தவரை யுலவிவெட்டு முரசடையா னொட்டக் கூத்தன், எண்பாடு படத்தமிழி லெதிர்த்து வெல்லுந் திறமுடையான் யாரு மேத்தி, வெண்பாவிற் புகழேந்தி யெனவியக்கத் தக்கவனோர் வேளாண் சேயே. (35)

கேடின்மது ரைத்தமிழா சிரியர்செங்குன் றூர்க்கிழார் கேள்வி சான்ற, பீடுபெரு கியகளத்தூர்க் கிழார்கோவூர்க் கிழார் தமிழிற் பிறங்கி நின்ற, ஈடிலரி சிறகிழார் முதலானோர் சங்கத்தி லிருந்த மேலோர், தேடரிய புகழ்படைத்த கங்கைகுலந் தனி லுதித்த திறல்வே ளாளர். (36)

அண்ணுதொல்காப் பியக்கடலி னகப்பொருளா மணியை நிரை யலங்க லாகப், பண்ணுநம்பி யகப்பொருளுக் கிலக்கிய மென் றேயுல்கோர் பலருஞ் சொல்ல, எண்ணுபொய்யா மொழி தனைப்போ லிறவாத கோவையிடை யெழுதிவைத்த, வண்ண மதிற் றஞ்சைநகர் வாணனுமோர் கங்கைகுல மருமான் றானே.

எத்தனையோ இலக்கணங்க ளெத்தனையோ விலக்கியங்க ளெண்ணுக் கெட்டா, எத்தனையோ புராணங்க ளெத்தனையோ பிரபந்த மெவற்று மேலாம், எத்தனையோ சித்தாந்த மெத்தனையோ கலைஞான மெல்லாஞ் செய்த, எத்தனையோ பேரவரை இத்தனைபே ரெனவிபம்ப என்று லாமோ. (38)

வாழி.

தார்கொண்ட காராளர் வாழியாதன் றந்தைமரூஉ குறிச்சி முன்னூ ராந்தை யான, பேர்கொண்ட பெரியோர்கள் வாழி வாழி பெருமான்செங் கோலோடு தவமும் வாழி, கார்கொண்ட மழைவாழி சைவஞான கலைவாழி யுழவுதரும் பலனும் வாழி, ஆர்கொண்ட சிவனடியார் வாழிவாழி யறம்பொருளின் பங்களுடன் யாரும் வாழி.

மங்களம்.

இராகம்-அடாணா. தாளம்-அடதாளசாப்பு.

பல்லவி.

எங்கள் சடையபரமேச பண்டிதர்க்கேற்ற (ஜெயமங்களம்)

சரணம்.

இங்கரங் கேற்றிட, ஆந்தைகோத்ரத்தவ,
ரியாருஞ் சபைகளேற்பட்டு—மிகு
செங்கரும்பாதி, கமுககதலிகள்
சித்திரித்தா லெனநட்டு—வளம்
தங்கியமுத்துகள், தொங்கியபந்தலிற்
சம்பவிதானங்களிட்டு—நல
சற்கரைப்பந்தலிற், றேன்மழைபெய்தென
அக்கரையாயிவ, ரிக்கவிகைக்கொள
ஆடையாபரணங்களு மீய்ந்தனர்
கூடைகூடைகளாய்ப் பொனுமீய்ந்தனர் (எங்)

வாத்தியகோஷ்டங்கள், சேர்த்தியதாகவே
வானமட்டுஞ்சென் றுலாவ—ஆந்தை
கோத்திரத்தார்தங்கள், மேழிக்கொடிதிசை
கோணங்களெட்டுங்குலாவ—கல்வி
பாத்தியமெங்களுக், கேயென்றரங்கேற்றும்
பகர்புகழெங்குமிலாவ—கன
பற்பலயூக ச, லக்ஷணவற்புத
சற்குணயோகவி, லக்ஷணவிற்பன
பாந்தபாத்திரநேச னலத்தொடு
ஆந்தைகோத்திர போசர்குலத்தொடு (எங்)

அந்தராமாயணங், கேட்டுச்சடையனங்
கேபுகழ்கொண்டது தேற்றம்—ஆனல்

இந்தப்புராணம ரங்கேற்றிக்கொண்டதாய்
யார்க்குமிவர்களே யேற்றம்—வரு
கந்தசாமிக்குவி, மரிசைசெய்ததிற
கற்பத்தரு வெனுந்தோற்றம்—கவி
கற்றவர்க்கருள், உற்றநற்றமிழ்
பற்றும் வெற்றிகொள் சுற்றம்நற்றிய
காதலாலவரே யரங்கேற்றின
தாதலாலிதுவே புகழ்தோற்றின (எங)

வேளாளபுராணம் முற்றிற்றது.

ஆக மொத்த திருவிருத்தம் கஙஎங.

12.

ஈஸ்வரன்
வெ.கு. செல்லப்பகவுண்டர்

ஈரோடு, நித்திய கல்யாண சுந்தரம் பிரஸ்,